கழக வெளியீடு-சகூஅ.

உரிமையின் பரிசு?

காந்தியடிகளின் பிரிவு

ஓர் அரிய
தொகுப்பு நூல்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி & சென்னை.

முதற் பதிப்பு: ஆகஸ்டு, 1948

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., THIRUNELVELI & MADRAS

1948.

Printed at the Sri ... rathi Press, Choolai, Madras.

நினைவுச் சின்னம்

❀

அன்பு நெறிநின்று ஆருயிர் நீத்த காந்தியடிகளுக்கு நினைவுச் சின்னம் அமைப்பதுபற்றிப் பற்பல கருத்துக்கள் நிலவுகின்றன. அனைத்தினும் சிறந்ததாக, அவலச்சுவை ததும்பும் இலக்கியச் சின்னமாக இந்நூலை உலகுக்கு வழங்குகிறோம்.

மக்களின் துன்பமாலை; உலகின் கண்ணீர்க் கடல்; உள்ளத்தின் பெருங் குமுறல்; கவலைக் கையறு நிலை; உணர்ச்சியின் எழுத்தோவியம் என்றெல்லாம் போற்றுதற்குரிய தொகைநூல் இது.

காந்தியடிகளின் முடிவை உலகமுள்ளளவும் உண்மை பிறழாமல் பிற்கால மக்கள் உணர்ந்து நல்வழிப்பட, இந்நூல் பெரிதுந் துணையாக மிளிரும்.

அண்ணலின் புகழ் நிலைபெறுவதற்கு ஏற்ற அழகிய இந்நினைவுச் சின்னம் அமைப்பதற்குத் துணை செய்த திருவாளர்கள் கவிஞர் புத்தனேரி ரா. சுப்பிரமணியம், சி. மு. கோவிந்தராச முதலியார், புலவர் அரசு, ஓவியர் துரைசாமி ஆச்சாரியார், பாரதி அச்சகத்தார் ஆகியோருக்கும் கருத்துரையாளர்களுக்கும் எம் உளங்கனிந்த நன்றி.

சை. சி. [illegible]ப்பதிப்புக் கழகத்தார்.

(15-8-[illegible])

பொருளடக்கம்

[எண்கள் பக்கங்களைக் குறிப்பன]

சென்னை மாகாணம் :

உரிமையின் பரிசு?

[மகாத்மாவின் வாழ்க்கை]

"நாமார்க்கும் குடியல்லோம்!" என உரிமை உணர்ச்சியின் சிகரத்தில் நின்று முழங்கினர் நாவுக்கரசர். ஆயினும் இடைக்காலத்தே மக்கள் கண்ணிருந்தும் குருடர்களாய், வாயிருந்தும் ஊமைகளாய், மனம் இருந்தும் சிந்தனையற்றவர்களாய் ஒற்றுமை யிழந்தனர்; உறுதி குலைந்தனர். எனவே, நம் நாடு அரசியலில் ஆங்கிலேயருக்குக் கடைசியாக அடிமையுற நேர்ந்தது.

அடிமை வாழ்வில் இந்திய மக்கள் அல்லலுறும் போது, முதன்முதலாக உரிமை உணர்ச்சியை இந்நாட்டில் விதைத்தது 1857-ல் நடந்த புரட்சியே யாகும்.

"பொழுதெல்லாம் எங்கள் செல்வங்
கொள்ளை கொண்டு
போகவோ?—நாங்கள் சாகவோ?"

உரிமையுணர்ச்சி சிந்தனையைத் தூண்ட, சிந்தையில் இத்தகைய கொந்தளிப்பு ஏற்பட்டு விட்டது. கப்பலோட்டி, ஆங்கிலேய அரசாங்கத்தைக் கலக்கிய தமிழ் வீரர் வ. உ. சிதம்பரனார் போன்ற ஒப்பற்ற தலைவர்களின் உள்ளத்தில் எழுந்த பெருங் குமுறல் இத்தகையதே யாகும்.

இக் குமுறலினால் எண்ண அலைகள் சுழன்று சுழன்று இறுதியில் உள்ளத்தில் உண்மையொளி பிறந்தது.

"நாமிருக்கும் நாடு நமதென்ப தறிந்தோம்—அது
நமக்கே உரிமையாம் என்ப தறிந்தோம்"

என்று முழங்கும்படியாக வாக்கினிலே தேற்றமும் தெளிவுங் கலந்த ஒளி சுடர்விட்டது. உரிமை வேட்கை உள்ளத்தின் அணையாப் பேரொளியாக நிலைபெற்று ஓங்கியது.

இவ்வண்ணம் நிலைபெற்ற உரிமை வேட்கையிலே தான் இந்திய விடுதலைப்போர் உருவெடுத்தது. கங்கு கரையின்றிப் பொங்கி யெழுந்த வேட்கையைக் கட்டுப் படுத்தி 'அகிம்சை'யினால் அறப் போராக முறைப்படுத்தி, மாந்தரின் உள்ளத்தைக் காந்தம்போற் கவர்ந்து, அவர் களைப் பற்றிக்கொண்டு முன்னேறி, இறுதியில் நாட்டின் விடுதலை கண்ட மாவீரர் மகாத்மா காந்தியடிகளே யாவர்.

இவ்வுலகில் காந்தி பெற்ற புகழை "உப்பைப்போல் இருப்பான் !" என்ற தத்துவமாகச் சொல்லலாம். 'உப்பு' என்னும் பொருளை அறியாதார் இலர். அதைப்போன்றே காந்திப் பெயரை அறியாதார் எவரும் இலர். பட்டி தொட்டிகளிலுள்ள பச்சிளங் குழந்தைகளுக்கும் "காந்தி" யின் பெயரை வாழ்த்துவதில் ஒருவகைக் களிப்பு உண்டு. எல்லோருமே, "இவ்வுலகை வாழ்விக்க வந்த காந்தி மகாத்மா !" என்றுதான் எண்ணினர். உப்பைப் போன்றே இன்றியமையாதிருந்த பெரியார் காந்தி யடிகள். (உப்பு வரிச் சுமை குறைக்க அறப்போரிட்ட வரும் அவரே யன்றோ ?

சிக்கலறுத்து மக்களின் பிறப்புரிமையை மீட்டு வழங்கிய வள்ளலுக்குக் கிடைத்த பரிசு மூன்று துப் பாக்கிக் குண்டுகள் ! உலகிற்கு அவர் காட்டிய அகிம்சை யின் அரும்பயன்—அன்பின் திருநெறி—சத்தியத்தின் தத்துவம்—இந்திய நாடு பெற்ற உரிமையின் பரிசு—இது தானா ?....இதுதானா ? என்று உலகமெல்லாம் நிலைகுலைந்து கலங்குகின்றது ! தனக்குக் கிடைத்த உரிமையைத் தவ றாகப் பயன்படுத்தி, உலகப்பெரியாரையே கொலை செய்து விட்டான் ஒரு கொடியோன் !

உரிமை பெற்ற நாட்டிற்கு உயிரையே பரிசாக ஈந்த உத்தமரின் வாழ்க்கையே இந்திய விடுதலைப் போரின் உருவகம் என்று (அதன் துவக்கமும் முடிவும் என்று கூடச்) சொல்லிவிடலாம் ! அவரது வாழ்க்கை வரலாறு

உரிமைப் போருடன் அவ்வளவு தூரம் பின்னிக் கிடக்கிறது.

மோகனதாஸ் கரம் சந்த் காந்தியைத் தன்னகத்தே பிறப்பித்து உலகுக்கு வழங்கிய பெருமை, குஜராத்தில் 'கத்தியவார்' தனியரசிலுள்ள போர்பந்தர் என்னும் சிற்றூருக்கே உரியது. அவ்வூரில் 'பனியா' என்னும் வணிகர் குடியில் செல்வாக்குள்ள காந்தி பரம்பரையில், காபா காந்தி என்னும் செல்வருக்கும் அவரது நான்காவது மனைவியான புத்லிபாய் என்னும் அம்மையாருக்கும் கடைசி மகனாக 1869-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் நாள் (சுக்கில ஆண்டு, புரட்டாசித் திங்கள், 18-ம் நாள்) சனிக்கிழமை தோன்றினார், இன்று மக்கள் போற்றும் மகாத்மா.

அவருடைய தந்தையார் போர்பந்தரிலும் இராஜக்கோட்டையிலும் சிற்றரசரிடம் அமைச்சராக இருந்தார். காந்தியின் தாயார் நுண்ணறிவும், அருள் உள்ளமும், பேரன்பும், நேர்மை யுணர்வும் பூண்டு விளங்கினார். அன்னையிடத்து அவருக்கு அளவற்ற அன்பு உண்டு. அவர் சிறுவனாக இருந்தபோதே ஒருசில பையன்களோடு விளையாடக்கூடாதென்று பெற்றோர் கண்டிப்புச் செய்திருந்தனர். காரண மென்னவென்று காந்தி கேட்டபோது 'அவர்கள் தீண்டத்தகாதோர்' என்று கூறினர் பெற்றோர். மனிதனுக்கு மனிதன் வேற்றுமை பாராட்டுவது மடமை என்று காந்தி உணர்ந்தார்; 'அவர்கள் ஏன் தீண்டத்தகாதோராகவே இருக்கவேண்டும்?' என்ற கேள்வி அவர் உள்ளத்தைக் குடைந்தது! எனவே, அவர்களை முன்னேற்றும் பணியில் ஈடுபாடு உண்டாயிற்று. 'கடவுளின் மக்கள்' (ஹரிஜன்) என்னும் பெயரை அவர்களுக்குச் சூட்டினார். தம் இறுதிநாள் வரை அவர்களது முன்னேற்றத்திற்காகவே அரும்பாடு பட்டுவந்தார்.

காந்தி ஏழு வயது வரை போர்பந்தரிலும், பின்னர் இராஜக்கோட்டையிலும் கல்வி கற்றார். கல்வியில் அவருக்கு ஈடுபாடு மிகுதியில்லை. ஏதோ பெற்றோர்களின்

தூண்டுதலினாலேயே வேண்டா வெறுப்போடு பாடப் புத்தகங்களைப் படித்தார். கல்வியிற் கற்றுணர்ந்ததைவிட நாடகங்களின் மூலம் கருத்தை ஏற்பதில் அவர் உள்ளம் மிகுதியாகக் குழைந்திருந்தது. பெற்றோர்மீது அவர் கொண்டிருந்த பேரன்புக்கும், சத்தியத்தில் ஏற்பட்ட அசைக்க முடியாத நம்பிக்கைக்கும் சில நாடகங்களே காரணமாயிருந்தனவாம்.

கத்தியவார் உயர்நிலைப் பள்ளியில் 'மெட்ரிகுலேஷன்' வகுப்பில் தேறுவதற்கு நான்கு ஆண்டுகளுக்கு முன் பாகவே காந்தியின் பெற்றோர், அவரது 13-வது வயதில் கஸ்தூரிபாய் என்னும் சிறுமியை அவருக்கு மணஞ்செய்து வைத்தனர். பச்சிளம் பருவத்திலேயே தமக்குத் திரு மணம் செய்துவைத்ததைப்பற்றிக் காந்தி பிற்காலத்தில் மிகவும் வருந்தினர்.

உயர்நிலைப் பள்ளியில் தீய நட்பினரின் கூட்டுறவால் புலால் உண்பதையும், புகை பிடித்தலையும், ஒரு சமயம் மேற்கொள்ள நேர்ந்தது. பின்னொரு சமயம் தம் தமை யன் பட்ட கடனைத் தீர்க்க அவரது கைக் காப்பிலிருந்து ஒரு துண்டுப் பொன்னைத் திருட்டுத்தனமாக வெட்டி யெடுத்து விற்கவும் முற்பட்டார். இத்தகைய குற்றங்களை யெல்லாம் பின்னர் உணர்ந்து தம் தந்தைக்குக் கடிதம் மூலம் அறிவித்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். அது முதல் அவர் உள்ளம் புடமிட்ட தங்கமாயிற்று.

காந்தியின் பதினைந்தாவது வயதில் அவருடைய தந் தையாரான காபா காந்தி உயிர்நீத்தார். 1887-ல் மெட்ரி குலேஷன் பரிட்சையில் தேறியதும் புத்லிபாய், காந்தியை மேற்படிப்புக்காக இங்கிலாந்துக்கு அனுப்பினர். அவர் புறப்படுமுன் அவருடைய தாயார், மகனிடம் 'புலால், மது, பெண்ணாசை ஆகிய மூன்றையும் நாடுவதில்லை' என்ற வாக்குறுதியைப் பெற்றுக்கொண்டார். இவ் வாக்குறுதி யின் பயனாய் லண்டனில் அவரைச் சூழ்ந்த தீச்செயல் களின் வலையில் வீழாமல் அவர் நல்வழிப்பட முடிந்தது.

இலண்டனில் 'பாரிஸ்டர்' பட்டம் பெற்றபின் 1891-ம் ஆண்டு, ஜூன் மாதம் பம்பாய்க்குத் திரும்பிய காந்தி, தம் அருமை அன்னையார் முன்பே உயிர்நீத்து விட்ட தீச்செய்தியைக் கேட்டு உளம் நொந்தார். அதன் பின்னர் ஒன்றரை யாண்டுகளாக அவர் பம்பாயிலும் இராஜக்கோட்டையிலுமாக வக்கீல் தொழிலில் காலங் கள்ளினார். அத்தொழில் அவருக்குச் சிறிது மருட்சியே தந்தது. பெருவெற்றி அவரை நாடவில்லை.

இந்நிலையில் போர்பந்தரிலிருந்த தாதா அப்துல்லா கம்பெனியின் தென்னாப்பிரிக்கக் கிளை நிலையத்திற்கு வர வேண்டிய 40,000 பவுன்களுக்காகத் தொடுக்கப்பட்டிருந்த வழக்கில் துணை செய்வதற்காக, 'பாரிஸ்டர்' காந்தி அழைக்கப்பட்டார். அழைப்பிற்கு இணங்கி 1893-ல் தென்னாப்பிரிக்காவுக்குப் புறப்பட்டார்.

டர்பன் துறைமுகத்தில் அப்துல்லா சேட், காந்தியை வரவேற்றுத் தங்குதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

காந்தி டர்பன் வழக்கு மன்றத்தில் நீதிபதியின் நேர்மையற்ற கட்டளைக்கு இணங்காமல் தலைப்பாகையைக் கழற்ற மறுத்து வெளியேறினார். தம் உரிமையை விளக்கித் தென் ஆப்பிரிக்கப் பத்திரிகைகளிலே உணர்ச்சிக் கட்டுரைகள் எழுதினார். அதுமுதல் அவரது பெயர் அங்கே செல்வாக்குப் பெறலாயிற்று.

தம் வழக்கிற்கு வேண்டிய ஆயத்தஞ் செய்வதற்காக, டர்பனிலிருந்து 'பிரிடோரியா' என்னும் இடத்திற்குப் புறப்பட்டார். அவ்விடத்திற்குப் போகுமுன் காந்தி பற்பல இன்னல்களுக்கும், அவமானத்திற்கும் ஆளாக நேர்ந்தது. கறுப்பர் என்ற காரணத்தால் அதிகாரிகள் நிறத் திமிரினால் கேவலப்படுத்துவதை அநுபவ வாயிலாக உணர்ந்து உள்ளம் கொதிப்படைந்தார். போக்குவரத்துக் கண்காணிப்பாளர் கட்டளைப்படி, தாம் ஏறிவந்த குதிரை வண்டியின் படியில் உட்கார மறுத்து உரிமை முழக்கம்

செய்ததற்காக அக் கொடியோன் காந்தியின் கன்னத்தில் ஓங்கி அறைந்துவிட்டான்! இதைப்போன்று எத்தனையோ கொடுமைகள்! இவற்றால் அடிகளின் உள்ளத்தில் தென்னாப்பிரிக்க இந்தியரின் கேவல நிலைமை தெளிவாயிற்று. எனவே, தம் உள்ளக் குமுறல்களையெல்லாம் பிரிடோரியாவில் பல பொதுக்கூட்டங்களில் விளக்கி இந்தியர்களின் உணர்ச்சியைத் தூண்டினார்.

பிரிடோரியாவில் தங்கிய ஓராண்டில் அவர் வழக்குகளின் உண்மையை ஆராயும் நுண்ணறிவும் அநுபவமும் பெற்றார். தமக்குக் கொடுக்கப்பட்ட வழக்கையே அவர் சமரசமாக முடிவுசெய்து இருகட்சிக்காரரையும் மகிழ்வித்தார்.

வழக்கு முடிந்து இந்தியாவுக்குத் திரும்ப முற்படுகையில் இந்தியர் வாக்குரிமையைப் பறிக்க நேட்டால் சட்ட சபையில் கொண்டுவரப்பட்ட ஒரு சட்டம் காந்தியடிகள் புறப்படுவதைத் தடைப்படுத்திவிட்டது. நிறத்திமிர் கொண்டு இந்தியர்களைக் கூலிகளாகக் கேவலப்படுத்தித் துன்புறுத்தும் கொடுமையை ஒழிப்பதென்று அவர் கங்கணம் கட்டிக்கொண்டார். உரிமைப் போராட்டத்தை நடத்துவதற்காக நேட்டால் இந்தியக் காங்கிரசை நிறுவினார்.

பின்னர் மனைவி மக்களை அழைத்துவரும்பொருட்டு 1896-ல் இந்தியாவுக்குத் திரும்பினார். தென்னாப்பிரிக்காவில் இந்தியர் படும் தொல்லைகளை எல்லாம் தெளிவாக விளக்கிக் கட்டுரைகளும் துண்டு அறிக்கையும் வெளியிட்டார். இடையே டர்பனிலிருந்து அவசர அழைப்பு வரவே, தம் மனைவி மக்களை அழைத்துக்கொண்டு மீண்டும் தென்னாப்பிரிக்காவுக்குப் புறப்பட்டார்.

கப்பல் டர்பன் துறைமுகத்தை அடைந்ததும் வெள்ளையர்கள் காந்தியும் அவருடைய குடும்பத்தாரும் கப்பலிலிருந்து இறங்க வொட்டாமல் ஐந்து நாட்கள் கலகம் செய்தனர். ஆறும் நாளில்தான் கப்பலிலிருந்து இறங்க

இசைவு கிடைத்தது. இறங்கிய பின்னரும் துடுக்கான வெள்ளையர்கள் காந்தியின்மீது கற்களையும் அழுகிய முட்டைகளையும் எறிந்து அட்டூழியம் செய்தனர். இச் சமயத்தில் தற்செயலாக அவ்வழியாக வந்த போலீஸ் கண்காணிப்பாளர் ஒருவரின் மனைவியார் இதைக் கண்டு வெறியர்களுக்கு நடுவே புகுந்து, காந்தி தாக்குறுமல் காப்பாற்றிப் பத்திரமாக அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்தார். மீண்டும் வெறியர்கள் ஆர்ப்பாட்டம் செய்யவே, காந்தி ஓர் இந்தியப் போலீஸ்காரன்போல் வேடம் புனைந்து தப்பினுர். இச் செய்தியறிந்த பிரிட்டிஷ் அமைச்சர் சேம்பர்லேன் வெறியர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு நேட்டால் அரசாங்கத்துக்குத் தந்தியடித்தார். காந்தியோ அவர்களைத் தண்டிப்பதற்கு இணங்கவில்லை. இன்னு செய்தார்க்கும் இனியவே செய்யவேண்டுமென அவர் எடுத்துக் கூறினுர். இதனுல் பொதுமக்களுக்கு அவரிடம் பெருமதிப்பு உண்டாயிற்று.

1899 - ம் ஆண்டு போயர் யுத்தத்தில் காந்தி பெரும் பங்குகொண்டு பணியாற்றினுர். போரிற் புண்பட்டோருக்கு மருத்துவஞ் செய்யும் செஞ்சிலுவை 'அம்புலன்ஸ்' படையொன்றும் நிறுவினுர். இதனுல் அவரது புகழ் மேலும் கமழ்வதாயிற்று.

1901-ல் மீண்டும் காந்தி இந்தியாவிற்குத் திரும்பினுர். சர். டின்ஷா வாச்சா தலைமையில் நடந்த கல்கத்தா காங்கிரசில் கலந்துகொண்டார். தென்னுப்பிரிக்க இந்தியர் நிலைமைபற்றி ஒரு தீர்மானமும் அவரால் கொண்டுவரப்பட்டது. கோகலேயின் ஆதரவுடன் தீர்மானம் நிறைவேறியது.

பம்பாயில் சின்னுட்கள் 'பாரிஸ்டர்' தொழில் நடத்திய பின் காந்தி மூன்றுவது முறையாகத் தென்னுப்பிரிக்காவுக்குச் செல்லவேண்டியதாயிற்று.

காந்தி தென்னுப்பிரிக்காவுக்கு வந்தபின் டர்பன் நகருக்கு அருகில் ருஷ்யப் பேரறிஞர் டால்ஸ்டாயின் பெய

ரால் ஒரு பண்ணையை நிறுவிப் பொதுப்பணி யாற்றினர். அவருக்கு ஓரளவு தமிழறிவும் உண்டு. அதைக் கொண்டு பண்ணையிலிருந்த பையன்களுக்குத் தமிழ் கற்பித்தார்.

தென்னுப்பிரிக்கா இந்தியர்களின் உரிமைக்காக அரசினரை எதிர்த்துப் பல ஆண்டுகளாகப் பெருங்கிளர்ச்சி நடத்தினர். 'இந்தியன் ஒபீனியன்' என்னும் பத்திரிகை ஒன்றையும் துவக்கினர். 'சத்தியாக்கிரகம்' என்னும் அறப்போரினல் அவர் வெள்ளையரின் நிறத்திமிரை ஒடுக்க முயன்றார். இதனல் ஏழு தடவைகள் சிறைக்கூடம் புக நேர்ந்தது. இறுதியில் வெற்றியும் கண்டார். அடக்கு முறைக்குக் காரணமான ஜெனரல் ஸ்மட்ஸ் தம் பிடிவாதம் தளர்ந்து இம் மாபெருந் தலைவரைக் கண்டு அளவளாவி இந்தியருக்கு எதிரான சட்டத்தை ரத்துச் செய்வதாக வாக்குறுதியும் தந்தார்.

காந்தியடிகள் தென்னுப்பிரிக்காவில் நடத்திய அறப்போரில் முன்னின்று உயிர் துறந்தவரிற் பெரும்பான்மையோர் தமிழ் மக்களே. அடிகளின் ஆணைப்படி அறப்போர்க்களத்தில் முன்னேறி உயிர்த் தியாகம் செய்த நாகப்பனும் வள்ளியம்மையும் அவரது பேரன்பிற்குரிய தமிழ் மக்களே யாவர். போரில் தமிழ் மக்கள் ஆற்றிய பேருதவியைப்பற்றி அடிகளே தம் தென்னுப்பிரிக்காச் சிறையநுபவத்திற் சிறப்பாகக் குறித்துள்ளார்.

அகிம்சையின் வெற்றிக்குத் தென்னுப்பிரிக்காவில் அடிகோலியபின் காந்தியடிகள் 1916-ல் இந்தியாவுக்குத் திரும்பி, மே மாதம் 25-ம் நாள் சபர்மதி சத்தியாக்கிரகக் குருகுலத்தை நிறுவினர். பீஹார் மாகாணத்திலுள்ள 'சாம்பரான்' என்னுமிடத்தில் ஆங்கிலேயரின் தோட்டத் தொழிலாளிகளின் குறைபாடுகளை நீக்குவதற்காக 1917-ல் போராடிச் சிறைக்கோட்டம் புகுந்து வெற்றி கண்டார். அந்நாளில் பாபு இராஜேந்திர பிரசாத், ஆச்சாரிய கிருப

ளானி முதலியோர் அடிகளின் அந்தரங்கத் தொண்டராயினர்.

பின்னர் ஆமதாபாத் தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையே ஏற்பட்ட தகராறைத் தீர்க்க உண்ணு நோன்பிருந்தார்! கெய்ராவில் உழவர்களின் குறை நீக்க அறப்போர் ஆற்றினர். இதனுல் உழவர்களின் வரிப்பளு குறைந்தது.

1918-ல் உலகப் பெரும்போருக்கு ஆள் திரட்டி உதவினுர். போர் முடிந்தது; ஆனுல் புகைச்சல் தீரவில்லை. அதை யொட்டி எழுந்த கொடிய 'ரௌலட்' சட்டம் இந்தியரின் உரிமையைப் பறிப்பதாக இருந்தது. பொதுமக்கள் இதனுல் ஆத்திரங் கொண்டனர். இச் சட்டத்தை எதிர்த்துக் காந்தியடிகள் பொதுவேலை நிறுத்தமும், சத்தியாக்கிரகமும் துவக்கினுர். இதன் விளைவாக அமிர்தசரசில் பேரமளி உண்டாயிற்று. அகிம்சைக்கு மாருன அமளி கண்டு அடிகள் அறப்போரை நிறுத்தினுர். கலகத்தின் காரணத்தை அறியப் பஞ்சாபுக்குத் தடையை மீறிச் சென்றபோது கைது செய்யப்பட்டார். சட்டத்தை எதிர்த்து, 1919 - ஏப்ரல் 13-ல் 'ஜாலியன் வாலா' தோட்டத்தில் லட்சக்கணக்கான மக்கள் கூட்டமிட்டுக் கண்டித்தனர். கூட்டத்தைக் கலைப்பதற்காக வெறி பிடித்த ஜெனரல் டயர் தன் துப்பாக்கியில் ரவையுள்ள மட்டும் ஆசை தீரச் சுட்டுத்தள்ளினுன்! ஒன்றுமறியாத மக்கள் படுகொலைக்கு ஆளாயினர். வெறிபிடித்த வெள்ளை ஜெனரல் டயருக்கு அரசாங்கத்தின் பரிசுகூடக் கிடைத்ததாம்! இந்நிகழ்ச்சிகளால் இந்திய மக்களின் உள்ளம் கொந்தளிக்கலாயிற்று.

1919-ல் 'நவஜீவன்', 'யங் இந்தியா' என்ற பத்திரிகைகளைத் துவக்கி உரிமை முழக்கம் செய்தார். இவ்வாண்டில் கூடிய காங்கிரசில் சமரசத் தீர்மானம் ஒன்றைக் காந்தியடிகள் கொணர்ந்து நிறைவேற்றினுர். 1920-ல் 'கிலாபத்' இயக்கத்தில் ஈடுபட்டார். வேல்ஸ் இளவரசர்

இந்தியாவுக்கு வந்தபோது மக்களின் எதிர்ப்பால் நேர்ந்த இம்சையையும் பெருங் கலகத்தையும் கண்டு வருந்தி அகிம்சைக்காக ஒருவார உண்ணு நோன்பும், ஒருநாள் மோனமும் கைக்கொண்டார். 1921-ல் ஒத்துழையாமை இயக்கம் உருவெடுத்தது. மோதிலால் நேரு, சித்தரஞ்சன தாசர் முதலிய வீரர்களின் துணை கிடைத்தது. மக்களை யெல்லாம் ஒரு கொடிக்கீழ்த் திரட்டித் திலகர் பெயரால் நிதி திரட்ட முற்பட்டார். இந்தியா முழுதும் சுற்றுப் பிரயாணம் செய்தார். பட்டம் பதவிகளை உதறித் தள்ளுதல், சட்ட சபைகளை வெறுத் தொதுக்குதல், மாணவர்கள் பள்ளிகளிற் புகாதிருத்தல், அயல்நாட்டுத் துணியை விலக்குதல், வரி கொடுக்க மறுத்தல் முதலிய வகைகளிலெல்லாம் ஒத்துழையாமை இயக்கம் ஓங்கச் செய்தார். திலகர் நிதிக்கு ஒரு கோடி ரூபாய் திரண்டது. ஒத்துழையாமை இயக்கத்தில் லட்சக்கணக்கான குடும்பங்கள் பங்கு கொண்டன. அடிதடிக்கும் அடக்குமுறைக்கும் ஆளாகி நேரு குடும்பமும், சி. ஆர். தாஸ் போன்ற தலைவர்களும் சிறையிடப்பட்டனர்.

இயக்கத்தை மேற்பார்த்துவந்த அடிகள் 1922-ல் சத்தியாக்கிரகத்தைத் தொடங்க முற்பட்டார். அவ்வேளையில் 'சௌரி சௌரா' என்னும் இடத்தில் ஒத்துழையாமை இயக்கம் நடத்திய சிலர் சத்தியந் தவறி நடந்ததால் ஏற்பட்ட கலகத்தால் அறப்போரை நிறுத்த நேர்ந்தது. ஆயினும் அரசாங்கத்தார் காந்தியடிகளின்மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளவே, ஆமதாபாத் நீதிபதியினல் 6 ஆண்டுகள் சிறைத்தண்டனை ஏற்றார். அவருடைய உடல்நிலை காரணமாக 1924-ல் அன்னால் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட்டார். உடல் தளர்ந்த நிலையிலும் அடிகள் இந்து-முஸ்லீம் ஒற்றுமைக்காக டி.ல்லியில் 21 - நாள் உண்ணு நோன்பிருந்தார்.

அடிகளின் இயக்கப் பெரும்பணியின் பயனாக, அவர் 1924-ல் நடைபெற்ற 'பேல்காம்' காங்கிரசின் தலைவரானார். வேலைத்திட்டங்களில் புகுத்திய 'கதர்ப்பெருக்கம்',

'தீண்டாமை ஒழிப்பு' இவற்றை நிறைவேற்ற 1925 முதல் 1928 வரை இந்தியா முழுதும் சுற்றுப்பயணம் செய்து பொருள் திரட்டினர். 1927-ல் தமிழ் நாட்டிற்கும் வந்தார். சென்னையில் நடைபெற்ற காங்கிரசு மாநாட்டிற் கலந்து கொண்டார்.

பின்னர் லாகூரில் நடைபெற்ற காங்கிரசில் விடுதலைத் தீர்மானத்தை நிறைவேற்றி அறப்போர் துவக்கினர். ஒத்துழையாமைப் போராட்டமே அவரை உலகறியச் செய்தது. பொறுமைப் புரட்சியை உண்டாக்கி ஆங்கிலேய அரசாங்கமே திணறச் செய்தார். 1930-ம் ஆண்டிலும் 1933-ம் ஆண்டிலும் நடந்த உப்புச் சத்தியாக்கிரகமும் சட்டமறுப்புப் போராட்டமும் மிகுந்த கிளர்ச்சியுண்டாக்கின. தண்டி யாத்திரை செய்து உப்புவரிச் சுமை குறைக்க முயன்ற அவரது திண்மையினல் உப்புச் சத்தியாக்கிரகம் காட்டுத் தீப்போல் பரவி எண்ணற்ற தலைவர்களையும் தொண்டர்களையும் பெண்களையும் சிறையில் நிரப்பியது. இந்நிகழ்ச்சி உலகையே உலுக்கியதால், அரசாங்கம் 'எரவாடா' சிறையிலிருந்த மகாத்மாவுடன் சமரசம் செய்துகொள்ளவேண்டியதாயிற்று. எம். ஆர். ஜெயகர், டேஜ்பகதூர் சாப்ரூ இவர்களது தூதின் பயனுக 1931-ல் காந்தியடிகளும் ஏனைய தலைவர்களும் விடுதலை செய்யப்பெற்றனர். அக்காலத்தில் வைசிராயாக இருந்த லார்டு இர்வின், அடிகளை அழைத்துப் பேசி ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார்.

பின்னர்க் கராச்சிக் காங்கிரசின் தீர்மானத்தின்படி முதலாவது வட்டமேசை மாநாட்டிற்கு இந்தியாவின் சார்பாகச் சென்றார். ஆயினும் எதிர்பார்த்த வெற்றி கிடைக்காமல் வெறுங் கையுடன் திரும்பினர். இதற்குள் லார்டு வில்லிங்டன் வைசிராயாக வந்தார். அவர் காங்கிரசை அடக்கமுயன்று, காந்தியடிகளை 1-1-1932-ல் சிறைசெய்து அரசாங்கக் கைதியாக வைத்தார். காந்தியின் உடல் சிறையிலிருந்தாலும் உள்ளமோ நாடெங்கும் சுற்றி வட்டமிட்டுக்கொண்டிருந்தது. ஹரிஜனத் தனித்தொகுதிச்

சூழ்ச்சியை ஒழிப்பதற்காக சிறையில் இறக்கும்வரை உண்ணு நோன்பிருக்க முற்பட்டார். இதன் விளைவாக எல்லாக் கட்சியினரும் சேர்ந்து பேசிப் பூனுவில் ஒப்பந்தம் கண்டனர். இதன்பின் அடிகளும், மற்றையத் தலைவர்களும் விடுதலையாயினர். இடையில் மனத்துக்கண் மாசிலனுகும்பொருட்டு மகாத்மா 21 நாள் உண்ணுவிரதமிருந்தார்.

பின்னரும் அரசாங்கத்தின் போக்கிலே கசப்பு ஏற்பட்டு, 1933-ல் சட்டமறுப்பு இயக்கம் தொடங்கிக் கைது செய்யப்பட்டார். தாம் மேற்கொண்ட தீண்டாமை விலக்கு வேலையைச் செய்வதற்கு வசதியளிக்கப்படாத காரணத்தால் சிறையில் மீண்டும் உண்ணுவிரதம் தொடங்கவே விடுதலை செய்யப்பெற்ருர். 1934-ல் சட்டமறுப்பு இயக்கத்தை நிறுத்தினர். அரசியலிலிருந்து ஒதுங்கி நிற்க விரும்பிக் காங்கிரசிலிருந்து விலகினர்.

1939-ல் இராஜக்கோட்டையில் ஏற்பட்ட தகராறைத் தீர்க்க உண்ணுவிரதம் மேற்கொண்டு அரசரின் உள்ளத்தைத் தம் வயப்படுத்தினர். 1940-ல் பேச்சுச் சுதந்திரத்திற்காக தனி ஆள் சத்தியாக்கிரகம் தொடங்கினர். பலர் சிறைப்பட்டனர்.

பின்னர் பம்பாயில் 8-8-1942-ல் நடைபெற்ற காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் 'இந்தியாவை விட்டு வெளியேறுக !' என்ற தீர்மானம் குறித்து உணர்ச்சி மயமான சொற்பொழிவாற்றினர். இதற்கு மறுநாளே காந்தியடிகளும் ஜவஹர்லால் நேரு போன்ற தலைவர்களும் விசாரணையின்றிச் சிறையிடப்பட்டனர். அரசியல் நெருக்கடியிராததனுல் சிறையில் மீண்டும் 21 நாள் உண்ணு நோன்பிருந்தார். அடிகளின் சிறைக்கூடமாக அமைந்த ஆகாகான் அரண்மனையில் அவரது மனம் அமைதியுறவில்லை. அவருக்கு வலது கை போன்றிருந்த மகாதேவ தேசாயும், மனங்கவர்ந்த மனைவி கஸ்தூரிபாயும் சிறையில் உயிர் நீத்ததனுல் அவரது அருந்துயர் பெருகியது. கடும் பிணிக்கு ஆளானர். இதுகண்டு ஏற்பட்ட மக்களின் கிளர்ச்சி

யால் 6-5-1944-ல் அடிகள் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட்டார்.

விடுதலை பெற்றதும், முஸ்லீம் லீக் தலைவர் ஜின்னா வின் பாகிஸ்தான் திட்டத்தினால் இந்து-முஸ்லீம் பிளவு விரிந்திருப்ப துணர்ந்து மனம் வருந்தினார். ஒற்றுமைக் காகப் பாடுபட்டார். லீக் தலைவர்களின் விடாப்பிடியான திட்டத்தால், ஆங்கிலேய அரசாங்கத்தார் 'கிரிப்ஸ் திட்டம், வேவல் திட்டம்' முதலியவற்றின் வாயிலாக வழங்க முற் பட்ட புதிய அரசியல் கொள்கைகளை யெல்லாம் ஏற்றுக் கொள்ள இயலாமற் போயிற்று. எவ்வாறேனும் இந்து-முஸ்லீம் ஒற்றுமை ஏற்பட்டாற் போதும் என்ற ஒரே மன அமைதியுடன் அடிகள் பணியாற்றினார்.

இடையே, மீண்டும் ஒருமுறை 1946-ல் காந்தியடிகள் தமிழ் நாட்டிற்கு வருகை தந்து, சென்னை, மதுரை, பழநி முதலிய திருநகரங்களைக் கண்டு மகிழ்ந்து வெகு வரவேற் போடு திரும்பினார்.

மீண்டும் வடநாட்டில் ஆங்காங்கே எழுந்த வகுப்புக் கலகங்களினால் மனம் நொந்தார். கலகம் நடக்கும் இடங் களிலெல்லாம் சுற்றுப்பிரயாணம் செய்து, அன்பு நெறியை விளக்கி மக்கள் மனத்தைத் திருத்துவதற்கு முயன்றார். நவகாளி, திப்பாரா, டெல்லி முதலிய இடங்களில் நடை பெற்ற அட்டூழியங்களினால் மனம் உடைந்து, அந்தந்த இடங்களுக்குக் கால்நடையாகவே சென்று மக்களுக்கு அறவுரை புகன்றார். நாள்தோறும் வழிபாட்டுக் கூட்டங் கள் நடத்தினார். அக்கூட்டங்களில் நாட்டு நிலைபற்றியும், அரசியற் சிக்கல்களைப்பற்றியும் உடனுக்குடன் தம் கருத் துக்களைப் பொழிந்தார். உண்ணாநோன்புகள் மேற் கொண்டார்.

இந்திய அரசியலில் ஒரு முன்னேற்றம் ஏற்பட்டது. இந்திய விடுதலைக் கோரிக்கையை ஒருவாறு ஆங்கிலேய அரசினர் ஏற்று, இந்தியாவை 'இந்தியக் கூட்டரசு', 'பாகிஸ் தான்' என்ற இரண்டாகப் பிரித்துக் குடியேற்ற நாட்டு உரிமை வழங்கினர். அடிகளின் அரசியல் மைந்தரான

பண்டித ஜவஹர்லால் நேரு இந்தியாவின் முதலமைச்ச ராகவும், லூயி மவுண்ட்பேட்டன் பிரபு கவர்னர் ஜெனா லாகவும் பதவி ஏற்றனர். 15-8-1947-ல் இந்திய விடுதலை விழா கொண்டாடப்பட்டது.

எனினும் நாளடைவில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக் கும் இடையே பகைமை வளர்ந்து முற்றுவதறிந்து மனம் புழுங்கிய அடிகள் 1948 ஜனவரி மாதம் மீண்டும் ஓர் உண்ணுவிரதம் துவக்கினர். அவருடைய முதுமை இந் நோன்பைத் தாங்காது என்றுணர்ந்த வீரர் நேரு போன்ற பொறுப்புள்ள தலைவர்கள், அடிகளின் திட்டங்களை ஏற்ப தாக வாக்குறுதி தந்ததனுல் ஏழாம் நாள் அடிகள் விர தத்தை நிறுத்தினர். இதனுல் வகுப்புக் கலகங்கள் சற்று ஒடுங்கி வருவனபோல் தோன்றின.

இங்கிலையில், மகாத்மாவின் திட்டங்கள் முஸ்லீம் களுக்கே நன்மை பயப்பன என்று பகைமை யுணர்ச்சி யால் சினங்கொண்ட ஒருவன், வழிபாட்டுக் கூட்டத்தில் அடிகளைக் கொல்ல எண்ணி ஒரு வெடிகுண்டை வீசினுன். ஆனுல், குறி தவறியதால் அடிகளின் உயிர் தப்பியது. அவ்வாறு குண்டு வீசிய கொலைஞனையே மன்னித்துக் காப்பாற்ற வேண்டுமென்றுர் கருணை வள்ளல்.

கடைசியாக 1948-ம் வருடம் ஜனவரி மாதம் 30-ம் நாள் மாலை, வழிபாட்டுக் கூட்டத்தில் அண்ணலின் பொன்னுடலை வெறியன் ஒருவன் சுட்டுக் கொன்றுவிட் டான்! இந்திய நாட்டின் தனிப்பெருந் தலைவர், உல கெலாம் புகழும் உத்தமர், அன்புநெறி நின்ற அண்ணல், சத்தியம் பிறழாத் தறுகண். ஆண்மையோன், கள்ளமில்லா உள்ளத்தோன், மக்களெலாம் நல்வாழ்வு வாழ வழி காட்டிய வள்ளல்—காந்தியடிகள் மறைந்தார்! "உரிமை பெற்ற இநதியா, மகாத்மாவுக்கு வழங்கிய பரிசு இதுவா ?" என்று உலகமெல்லாம் குமுறுகின்றது! வாழ்நாளெல் லாம் மக்களுக்காகவே செலவிட்ட மகாத்மாவின் பரு வுடல் மறைந்தது! அவரது புகழுடல் ஒவ்வொருவ ருடைய உள்ளத்திலும் கோயில் கொண்டுவிட்டது.

பு. ரா. சு.



அஞ்சலி நிலையில் துஞ்சிய அண்ணல்

அடிகள் விரும்பும்

அரசு

நான் விரும்பும் அரசை மதத் தொடர்பாகக் குறிப்பதானல் 'புவியில் நடைபெறுங் கடவுளாட்சி' எனலாம். அரசியற் சொற்களிற் கூறுவதானல் 'பணமுள்ளவன் பணமில்லாதவன் என்ற வேறுபாடுகளினுல் உண்டாகும் ஏற்றத் தாழ்வுகளும், நிறம், இனம், சமயம், ஆண்-பெண் என்ற எவ்வித வேற்றுமைகளும் இல்லாத முறையான குடியாட்சி' என்று சொல்லலாம்.

அதில் விளைநிலங்களும், அரசாட்சியும் மக்களின் பொதுவுடைமை; குற்றமும் செலவுமின்றி உடனுக்குடன் முறைமை வழங்கப்படும்; விரும்பிய தெய்வத்தை வணங்கவும், கருத்தைப் பேசவும் செய்தித் தாள்களில் வெளியிடவும் உரிமையிருக்கும். இந்த உரிமைகள் மக்கள் தாங்களே இயற்றிக்கொள்ளும் சட்டங்களுங்கு உட்பட்டிருப்பதால் ஒழுங்கும் அடக்கமும் உள்ள உரிமைகளாக விளங்கும்.

இந்த அரசு, செழிப்பும், நிறைவும், மக்களுக்குத் தேவையான வசதிகளனைத்தும் நிறைவாகவுடைய சிற்றூர்களும், சிற்றூராட்சிக் கழகங்களுமே அடங்கியதாகவிருக்கும்.

[ஜூன் 1945].




காந்தியின் தந்தை
உத்தம சந்த்



மாணவர் காந்தி



மணமகன் காந்தி




தென்னாப்பிரிக்காவில் சட்ட வல்லுநர்



போயர்
போரில்


•

இந்தியாவிற்கு
மீண்டதும்





ஆப்பிரிக்காவில்
அறப்போர் வீரர்





வாழ்வரசியாய் மறைந்த
அன்னை கஸ்தூரி



கருணைக் காந்தியும் கவி வேந்தரும்

★


ரொமெய்ன் ரோலந்தும் காந்தியண்ணலும்






அடிகளும்
இராசகோபாலாச்சாரியாரும்

அரசியல் மைந்தருடன்
அண்ணலின் களிப்பு










"பொறுமையிலே கருணையிலே புத்தனாகிப்
போதமறையில் வள்ளுவனார் போற்றும் உண்மை
நெறிநின்ற காந்தி........"

(எதிர்ப்பக்கம்)

"அறிவொளியாம் சாக்கிரட்டீஸ் ஏசுநாதர்
ஆபிரகாம் லிங்கனொடு காந்தியண்ணல்"

இறக்கும் போது கொடு போவ தில்லை !"




(அண்ணலுக்குப் பயன் பட்டவை)



யாருக்கு யார் ஆறுதல் கூறுவது ?

(தேவதாஸ் காந்தியும் நேருவும்)





உரிமையின் பரிசு?

காந்தியடிகளின் பிரிவு

உள்ளம் கலங்கிச் சுழல்கிறது! உரைகள் குழறுகின்றன! கைகள் எழுத நடுங்குகின்றன! 1948-ஆம் ஆண்டு **சனவரித் திங்கள், முப்பதாம் நாள், வெள்ளிக்கிழமை** மாலை 5 12 மணிக்கு இந்திய நாட்டின் அருளுருவை—உயிரொளியை—உலகம் புகழும் உண்மை நெறியை—தெய்வநாட்டமே செழும்புணை என்னும் செல்வத்தை—வையம் உய்ய வழிகோலும் வாழ்வை—வாய்மை தவிராத் தாய்மையை—எளிய வாழ்க்கையில் இன்பங்காணும் எந்தலை—எல்லோர்க்குந் தொண்டு செய்யும் நல்லோனை—ஒரு சிறு மதவெறிப் பாம்பு கவ்விவிட்டது! காந்திப் பெரியாரை அவர் நாட்டிலே அவருடன் பழகிய ஒரு மராட்டியன் சுட்டுக் கொன்றான்! டில்லியிலே—பிர்லா மாளிகையிலே—வழிபாட்டு மேடைக்குச் செல்லுகையிலே—பிரஞ்சு சுழல் துப்பாக்கியாலே சுட்டுக் கொன்றான்! ஐந்நூறு மக்களின் இடையிலே—அருமைப் பேர்த்திகளுடன் போகையிலே—ஆறடித் தொலைவிலே

நின்று—சுட்டுக் கொன்றான்! நன்னெறியிலே அளவுக்கு மீறிச்சென்ற நம்பியைக் கொலை நெறியிலே அளவுக்கு மீறிய கொடியன் கொன்றான்!

அறத்தை மறம் அழிப்பதா? கதிரை இருள் விழுங்குவதா? அன்பை வன்பு மாய்ப்பதா? அருள்வயிரக் குன்றைக் கோழைக் கொசுகு தகர்ப்பதா? கேளாதது கேட்டோம்! பாராததைப் பார்த்தோம்! இந்து சமயத்தைத் தூய்மை செய்யத் துணிந்து பணியாற்றிய ஏந்தலை இந்துசமயமே விழுங்கியதே! இந்து சமயம் மாசுற்றதே! கறைபடிந்து விட்டதே! அதைத் துடைத்துக் கழுவுவது எங்ஙனம்?

"அல்லல் அருளாள்வார்க் கில்லை வளிவழங்கும்
மல்லல்மா ஞாலம் கரி"

"அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை"

என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கு இலக்கான இணையிலாப் பெரியாரைத் 'தன்னுயிர்போல் மன்னுயிரை' நினைத்ததற்காகப் பழிகொண்டது இந்தியா! உலகமெலாம் இந்தியாவைத் திசைநோக்கி மதித்து வாழ்த்த வைத்த தன் தவமகனையே விழுங்கிவிட்டது! அடிமைத் தளையிலிருந்து விடுவிக்கத் தம் வாழ்வை வழங்கிய ஒப்பற்ற தந்தையின் குருதி(இரத்தம்)யைக் குடித்து விட்டது!

வல்லரசுகளை நடுங்கவைத்த மனவலியையுடைய மாபெரு வீரரைப் புல்லிய மராட்டியன் கொல்வதா? அவன் புனாவில் 'உறைபவனும்! முப்பத்தாறு ஆண்டுகட்கு மேற்படாத வயதுடையவனும்! 'இந்து மராட்டா' என்னும் இதழின் ஆசிரியனும்! நாதுராம் விநாயக் கோட்சே என்னும் பெயரினனும்! எவனாயினும் என்? தன் பெயராலே நாட்டிற்குக் கழுவலாகாக் கறையை உண்டாக்கிவிட்டான்! நாட்டின் அடிமை நோயை

நீக்கிய அருளமுதத்தைக் களரிலே கவிழ்த்துவிட்டான்! உயிரளித்த மலைமருந்தைக் கிள்ளி யெறிந்துவிட்டான்! நீண்டகாலமாக உருவான நாட்டின் தன்மானக் கட்டடத்தைத் தூளாக இடித்துவிட்டான்! இனி என் செய்வோம்?

காப்பார் இல்லையா?

உயிர்க்குயிரான வீர ஜவஹர் இருக்க, அருமை நண்பர் படேல் சிங்க மிருக்க, நாடெங்கும்—ஏன்?—உலகெங்குமே தெய்வமாகக் கொண்டாடும் கோடிக்கணக்கான மக்க ளிருக்க, உண்மை மொழியும் அமைதிப் பார்வையும் அன்பு நெஞ்சமும் இறைவன் அருளும் காந்தியடிகளிடமே தற்காப்புப் படைகளாக—ஏன்?—போர்ப் படைகளாக இருக்க, உலகம் விழித்திருக்கும்போதே நாட்டின் செல்வத்தை வெறிபிடித்த கள்ளன் கவர்ந்து விட்டா னென்றால் இனி எதுதான் நடவாது? கதிரவன் குளிரலாம்! நிலவு வெதும்பலாம்! உண்மையைப் பொய் வெல்லலாம்!

நான்கு நாட்களுக்குமுன் சதிக் கூட்டத்தாரில் ஒருவன் வெடிகுண்டு வீசி எச்சரித்திருந்தும் அடிகளின் தன்னம்பிக்கையால் நாடு தன் உயிரை யிழந்து ஒடுங்குகிறது! மதிப்பை யிழந்து மங்குகிறது! காவலை யிழந்து கலங்குகிறது! பொருளை யிழந்து புலம்புகிறது! கொள்கை பறிமுதலாகிக் குமுறுகிறது! நம்பிக்கை நசித்து நடுங்குகிறது! எண்ணத்தை யிழந்து ஏங்குகிறது! பற்றுக்கோடு இன்றிப் பதறுகிறது! கலையை யிழந்து அலைகிறது! வாழ்வை யிழந்து வாடுகிறது! வழிகாட்டும் துருவமீனை யிழந்து திசை தப்புகிறது! இனி எங்ஙனம் இக் குறை தீரும்?

அந்த நாள் !

அன்று—இந்த நாட்டின் ஒளி மங்கும் அன்று—மாலையில் சர்தார் வல்லபாய் படேலுடன் நம் வள்ளல் உரையாடிக் கொண்டிருந்தார். வழிபாட்டுநேரம் வந்துவிட்டது. படேல் நம் வள்ளலுடன் வழிபாட்டுக்குரிய இடம் வரையில் வந்து வழியனுப்பி விட்டுத் தம் மோட்டாரிலே வீடு நோக்கிச் சென்றார். பெரியார் தம் பேர்த்திகளுடன் வழிபாட்டு இடத்தைநோக்கிச்சென்றார். அன்று ஏறக்குறைய ஐந்நூறு மக்கள் வந்திருந்தனர் ; காந்தியாரைக் கண்டதும் இருபுறமும் விலகி நடுவே வழி விட்டு நின்றனர். நம் நாட்டுக்கு மெய்க்காவலான நம்பி தம் பேர்த்திகளின் தோள்களையும் தம் அன்பையுமே மெய்க் காவலாகக் கொண்டு, தம்மை உள்ளன்புடன் நோக்கிக் கொண்டிருக்கும் ஆயிரங் கண்களின் இடையே, தம் முடிவான நெறியைப்பற்றி நடந்தார். அருள், அன்பு, சமநெறி முதலான மெய்ந்நெறியை மக்களின் மனத்திலே மலர்விக்கச் சென்றுகொண்டிருந்தார்.



ஆயிற்று, அவர் அமைதியை அடையுங் காலம்—தன்னலக் கொடுமை விளைந்த உள்ளங்களிலே பிறர்நல அன்பைத் தூவித் தூவிப் பயன்பெறுமற் கலங்கும் நிலை கடக்குங் காலம்—நாடு தலைவரையிழக்குங் காலம்—நெருங்கியது ! வழிபாடுசெய்ய அமரும் மேடைக்கு நாற்பத்தைந் தடி தொலைவில் நெருங்கினார்.

அந்த 'நாதுராம் விநாயக் கோட்சே' என்பவன் படையொடுங்குங் கைகளாலே தொழுதான்; அண்ணலும் அஞ்சலி செய்தார். 'இன்று வழிபாட்டிற்குத் தாங்கள் காலங் கழித்து வருகிறீர்களே !' என்றான் அந்தக் கயவன்.

'ஆமாம்! காலங் கழிந்துவிட்டது,' என்று புன்முறுவ லுடன் புகன்றார் புண்ணியர். இவ்வாறு மறமும் அறமும் உரையாடின ஆறடி இடைவெளியில் நின்று!

மறம், சுழல் துப்பாக்கியை யெடுத்தது. மூன்று ரவைகளைப் பொழிந்தது! அறத்தின் இதயத்தின் கீழும் வயிற்றிலும் தாக்கின குண்டுகள்! 'ஆ! ராம்! ராம்!' என்று முதலடியிலே மெல்லென ஒலித்து அண்ணலார் இரு கைகளையுங் கூட்டத்தினரை நோக்கிக் குவித்த வாறே, மற்றும் இரண்டடி பட்டதும் சாய்ந்தார்! தூய உள்ளத்தைத் துளைத்த துளையிலிருந்து குருதி கசிந்து தூய கதராடையிலே—இந்து மதத்திலே—படிந்தது! சாயும் சான்றோரைப் பேர்த்திகள் நடுங்குங் கைகளால் தாங்கிக் கதறினர். அந்தோ! அறம் அழிந்ததே!

ஆங்கிலப் படையின் வெடிகுண்டுகளாலே தகர்க்கப் படாத சத்தியக் கோட்டையை அந்தப் பஞ்சை மராட்டி யனது சுழல் துப்பாக்கி தகர்த்ததே!

துப்பாக்கி வெடித்த ஒலி கேட்ட சிலர் ஓட்டம் பிடித்தனர்! சிலர் உண்மையுணர்ந்து அந்தக் கீழ்மகனை— மராட்டியப் பார்ப்பான் எனப்படும் வல்லரக்கப் பேயனைப்—பற்றிப் புடைக்கத் தொடங்கினர். சிலர் ஓடிவந்து புன்முறுவல் தவழும் அமைதி நிலவும் முகத்துடன் பேச் சற்றுச் சாய்வுற்றிருக்கும் அடிகளைத் தாங்கியவாறு பிர்லா மாளிகைக்கு எடுத்துச் சென்றனர். மாலை 5-12 மணிக்கு நாட்டின் உள்ளத்தில் செந்நீர் பெருகியது!

உடனே தந்திகள் பறந்தன! அப்போதுதான் காந்தி யடிகளைப் பிரிந்து சென்ற வல்லபாய் படேல் வீட்டில் நுழைந்ததும் தொலைபேசி மூலம் இக் கொடு நிகழ்ச்சி யைக் கேட்டுத் திகைப்புடன் ஓடிவந்தார். அடிகளை அரு மைத் தந்தையாக வழிபட்ட நேரு கலங்கிப் பறந்து வந்தார். இந்திய ஆட்சித் தலைவர் மவுண்ட் பேட்டன் பிரபுவும், அவருடைய இராணுவச் செயலாளரும் படைத்

தலைவர் புச்சேரும், நவநகர் ஜாம்சாகிபும் விரைந்து வந்தனர். மனமுடைந்து பேச்சற்று மெய்ந்நடுங்க நிதியமைச்சர் ஆர். கே. சண்முகஞ் செட்டியாரும் வந்தார்.

காந்தி யடிகளின் முதிர்ந்த வுடல் பிர்லா மாளிகையின் ஓரறையிலே வைக்கப்பெற்றது. இன்றியமையாதவர்கள் மட்டுமே உடனிருந்தனர். மற்றவர்கள் மாளிகையின் எதிரிலே கசங்கும் உள்ளமும் நீர்வழியுங் கண்களும் நடுங்கும் உடலுமாக வெளியே நின்றனர். கூட்டம் உள்ளே நுழைய விடப்படவில்லை.

5 - 35 மணிக்குத் திவான் சமன்லால் வெளியே வந்தார். 'மகாத்மா எப்படி யிருக்கிறார் ?' என்றனர் மயங்கும் மக்கள். 'இன்னும் உயிருட னிருக்கிறார்' என்றார் அவர். 5 - 40 மணிக்கு ஒருவர் வெளியே வந்தார். 'பாபு காலமானார்!' என்று கதறினர்.

கேட்ட மக்களும் 'ஐயோ !' என அலறி அழுதனர்.

எந்த நாட்டினைத் தம் ஆன்ம வலிமையால் உலகிலே ஒளிவீசச் செய்தாரோ, அந்த நாட்டிலே, தாம் மேற்கொண்ட இந்து மதத்தைச் சீர்திருத்த முயன்ற முயற்சியிலே, தம் அன்பைக் கொள்ளைகொண்ட மக்களின் கையிலே அடியுண்டு வீரவாழ்வு பெற்றார் ! தம் கொள்கையை நிறுவும் முயற்சியிலே புலாலுடம்பை விட்டுப் புகழுடம்பைப் பெற்றார் !

இந்து மராட்டியனுன அக் கொடியன் பொழிந்த குண்டு காந்தியடிகளின் உயிரையா குடித்தது? 'அன்று ! அன்று ! நம் நாட்டிலுள்ள பல்லாயிரக் கணக்கான ஏழை மக்களின் உரிமையைக் குடித்தது ! பல நாட்டு மக்களின் ஒற்றுமை வாழ்வைக் குடித்தது ! அறப்போரின் ஆவியைக் குடித்தது ! தன்னாட்சியின் ஆற்றலையே தகர்த்தது ! அடிகளிடம் அன்புடையார் சிலர் உயிரையும், அசுணமா உயிரைப் பறை ஒலி கொள்வது போல் கொள்ளை கொண்டது.

உலகம் ஓலமிட்டது !

5-55 மணிக்கு அனைத்திந்திய வானொலி இந்தப் பேரிடியை உலகுக்குக் கூறியதும் உலகம் ஓலமிட்டது ! அமெரிக்காவின் வானொலி நிலையத்திலே நடைமுறை நிகழ்ச்சிகள் நின்று, காந்தியடிகளின் பிரிவைப்பற்றிய நிகழ்ச்சிகள் வெளியிடப்பெற்றன. ஐக்கிய நாட்டு அவை அறிந்து அழுங்கியது ! அமெரிக்கா திடுக்கிட்டது ! அமெரிக்காவின் தலைவர் கலக்கமுற்று இந்தியாவிலிருக்கும் அமெரிக்கத் தூதரை அவ்வப்போது நிகழ்ச்சிகளை யறிவிக்கத் தந்தியடித்தார்.

இலண்டனிலே நீலச் சாக்குகளினாலே எழுதப்பெற்ற சுவரொட்டிகளின்மூலம் எங்கும் இந்த நிகழ்ச்சி பரவியதும் இலண்டனிலுள்ள இந்தியர்கள் மனமுடைந்து கதறினர். இலண்டன் நடுங்கியது. மக்கள் திரள்திரளாகத் தெருக்களிற் கலங்கும் கண்களுடன் உலவினர்.

இந்தியாவுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்த ஆங்கிலப் பெரியார்கள் துடிதுடித்தனர். இந்தியா தன் உரிமைக்காகப் போராடும் போராட்டத்தின் அடையாளமாகக் காந்தியடிகளை நினைத்திருந்த ஆங்கிலேயர்களுக்கு 1945-இல் தொழிற்கட்சி ஆட்சி பெற்றபோது உண்டான பரபரப்பைவிடப் பெரிய பரபரப்பை உண்டாக்கியது இச் செய்தி !

இந்தியாவிலுள்ள வானொலி நிலையங்கள் எல்லாம் அன்று மாலை ஆறு மணி முதல் மற்றவற்றை நிறுத்தி மக்களின் தலைவரான காந்தியடிகளின் பிரிவு நிகழ்ச்சியையே கூறிக் கதறின ! உலக அன்னையின் கண்ணிலே ஓயாது செந்நீர் பெருகியது !

காந்தியடிகளின் தூய ஊனுடல்

அண்ணல் கொலையுண்டது காட்டுத்தீப்போல் உடனே எங்கும் பரவியது. டில்லியிலும், பம்பாய், கல்கத்தா, சென்னை முதலான எல்லா மாகாணங்களிலும் உள்ள நகரங்களிலும் வணிக நிலையங்கள், உணவு விடுதிகள், பொழுதுபோக்குக் கூடங்கள் எல்லாம் மூடப்பெற்றன. அனைத்திந்திய வானொலியின் வழியாக எல்லா மக்களுக்கும் இக்கொடுமை அறிவிக்கப்பட்டதால் கண்ணீருங் கம்பலையுமாக ஆங்காங்குள்ள வானொலிக் கருவிகளை மக்கள் சூழ்ந்து நின்றனர்.

பிர்லா மாளிகையை நோக்கி எண்ணற்ற மக்கள் நடுங்கும் உடலுடனும் நீர்வழியுங் கண்ணுடனும் கலங்கிய உள்ளத்துடனும் வந்துகொண்டே யிருந்தனர். மாளிகையைச் சுற்றியுள்ள வெளியிடங்களெல்லாம் கண்ணீர்ப் பெருக்கினிடையே மக்கள் குமுறி நின்றனர். அவர்களுக்குக் காந்தியடிகளின் தூய உடலை வணங்கிச் செல்லும் ஆவல் கரைபுரண் டிருந்தது. தலைவர்கள் எவ்வளவோ வேண்டியும் அவர்கள் கலையவில்லை.

எட்டு மணிக்கு ஒருவர் வந்து, 'அடிகள் இறக்கவில்லை. நீங்கள் கலைந்து செல்லுங்கள்' என்று வேண்டினார். அது பொய்யாக இருந்த போதிலும் மக்கள் நம்பிவிட்டனர். எனினும், அடிகளை வணங்கும் ஆவல் இருமடங்காயிற்று; வற்புறுத்தத் தொடங்கினர்.

இந்த நிலையிலே பண்டித நேரு வெளியில் வந்து சில மொழிகள் மொழியலுற்றார். உணர்ச்சி மிகுதியால் மொழிகள் தடுமாறின.

"காந்தியடிகள் இறந்துவிட்டார். அவரை ஒரு வெறியன் சுட்டுவிட்டான். இந்த நெருக்கடியிலே நாம் அமைதியை இழக்கக்கூடாது. நாளைப் பதினொரு மணிக்கு அடிகளின் உடல் ஊர்வலம் பல தெருக்களின் வழியே செல்லும். அப்பொழுது அடிகளைக் காண வகை செய்

யப்படும். அமைதியாகக் கலைந்து செல்லுங்கள்'' என்று வேண்டிக் கொண்டார்.

எனினும் மக்கள் கலைந்து செல்லாமல் அமைதியாக நின்றனர்.

அடிகளின் மெல்லிய உடலைவிட்டு உயிர் நீங்குகையில் வெள்ளியன்று மாலை 5-40 மணி வரையில் அருகிலிருந்து சிலர் கீதை படித்தனர். அவருக்குப் பிடித்தமான 'வைஷ்ணவ ஜனதோ' என்ற பாட்டும் பாடப் பெற்றது. கவர்னர் ஜெனரலும் அமைச்சர்களும் கூடி அடிகளின் உடலை என்ன செய்வதென்று சிந்தித்தனர். யம் உடலை உடனே எரித்துவிட வேண்டுமென்று காந்தியடிகளே கூறியிருப்பதாக அறிந்து, சனிக்கிழமை மாலை 4-மணிக்கு எரியூட்டுவதென்று முடிவுசெய்தனர்.

பொதுமக்களின் விருப்பத்துக் கிணங்கி, அவர்கள் காண்பதற்காகத் தூயவெள்ளைக் கதராடையாற் கால்முதல் மார்புவரையிலே போர்த்தப்பட்ட அண்ணலின் ஊனுடல் ஒரு கட்டிலில் மாடியின் மேல்தளத்தில் சிறிது சாய்த்த வண்ணம் வைக்கப்பெற்றது. மக்கள் திரள் திரளாகக் கடைசிமுறையாகக் காந்தியடிகளின் உடலைக் கண்டு வணங்கிக் கலைந்து சென்றனர். மக்கள் காணும் வகையில் மின்சார விளக்கொளி படும்படி வைத்திருந்தனர். சிறிது கழித்துத் திரும்பவும் அவர் உயிர் நீங்கிய அறைக்குக் கொண்டுவந்து விட்டனர்.

அடிகளின் முகத்தோற்றம் இறைவனை வழிபடும் அன்பரின் அமைதி நிலவிய முகம்போலத் தெளிவாக இருந்தது. அன்றிரவெல்லாம் அடிகளின் ஆசிரமத்தைச் சேர்ந்தவர்களும் அரிய நண்பர்களும் ஊனுடலுக் கருகில் அமர்ந்து இறைவழிபாடு செய்துகொண்டிருந்தனர்.

அனைத்திந்திய வானொலியின் வாயிலாக உலகெங்கும் வெள்ளி மாலை 6 மணி முதல் சனிக்கிழமை மாலை 4 மணி

வரையில் அண்ணலின் பிரிவைப்பற்றிய நிகழ்ச்சிகளையே அறிவித்தனர். வேறு நிகழ்ச்சிகளெல்லாம் நிறுத்தப் பெற்றன. மக்களெல்லோரும் ஆங்காங்குள்ள வானொலிக் கருவிகளின் அருகிலே கூடிவிட்டனர்.

வானொலியின் மூலமாகச் சனிக்கிழமை காலை 10½-மணி முதல் அடிகளின் திருவுடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுமென்று அறிவிக்கப்பட்டது.

இரவு 12 - மணிக்குப் பிறகு, பெரியாரின் உடல் யமுனை நீரால் கழுவப்பெற்று மலர்களால் அணிசெயப் பெற்றது. இறைவழிபாட்டுப் பாடல்கள் பாடப்பெற்றன. நெய் விளக்கு மங்கலாக எரிந்துகொண்டிருந்தது.

இரவு 12 - மணிக்குப் பிறகு பிர்லா மாளிகையிருக்கும் ஆல்புகொர் பெருவீதியிலே போக்குவரத்துகள் நிறுத்தப்பெற்றன. தெருவின் இருபுறங்களிலும் இந்தியப் படைவீரர் காவல் செய்து நின்றனர். ஊர்வலத்திற்குத் தலைவர்களும் படைத்தலைவர்களும் திட்டமிட்டுக் கொண்டிருந்தனர்.

இரவெல்லாம் புறவிருளும் அடிகளின் ஈடு செய்ய முடியாப் பிரிவாகிய அகவிருளுமாக மக்களை மயங்கச் செய்துவிட்டது.

பண்டித நேரு பதறினர்!

உலக மக்களுக்கு இந்நிகழ்ச்சியை அறிவிக்கும் பொருட்டு, நம் நாட்டின் முதலமைச்சர் பண்டித நேரு உயிரற்ற உடலேபோல் திடமற்றுச் செயலற்றுக் கலக்குற்று உணர்ச்சியாலே குரல் தழுதழுக்க உரை குழற, வானொலியிலே பின்வருமாறு பேசினர்:—



"நண்பர்களே! தோழர்களே! நம்மிடமிருந்த விளக்கு அணைந்து விட்டது! எங்கு நோக்கினும் இருள் சூழ்ந்துளது! உங்களுக்கு உரைப்பது என்னவென்றேதோன்றவில்லை! எவ்வாறு எடுத்துக் கூறுவதென்றும் தோன்றவில்லை!" நம் அரும் பெருந் தலைவர்--பாபு என்று நாம் அழைத்து வந்தோமே அவர்—நம் நாட்டின் தந்தை மறைந்து விட்டார்!........ அவ்வாறு சொல்வதும் பொருந்தாதென்று எண்ணுகிறேன். எனினும் நாம் இத்தனை ஆண்டுகளாக எவ்வாறு பார்த்துவந்தோமோ அவ்வாறு இனி அவரைப் பார்க்க முடியாது! அறிவுரை கேட்க அணுக முடியாது! அவரிடமிருந்து ஆறுதல் பெற முடியாது! அது எனக்கு மட்டுமா? நம் நாட்டிலுள்ள கோடிக்கணக்கான எல்லா மக்களுக்குமே ஒரு பேரிடியாகும்! உங்களுக்கு நேர்ந்த இந்தப் புண்ணை நானே அல்லது வேறு எவரோ ஆற்றுதலும் இயலாது!

"விளக்கு அணைந்து விட்டதென்று நான் சொன்னேன். அவ்வாறு சொன்னது தவறாக இருக்கலாம். நாட்டிலிருந்த அந்த ஒளி எளிய ஒளி அன்று! அந்தப் பேரொளி—இதுவரையில் நம் நாட்டை விளக்கி வந்த சிறந்த ஒளி—இன்னும் பல்லாண்டுகள் நம் நாட்டை விளக்கிக்கொண்டிருக்கும். ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் இதே ஒளி மீண்டும் தோன்றும். அதை இந்த நாடும் உலகமும் நோக்கும். அது எண்ணற்ற மக்களுக்கு ஆறுதலளிக்கும். ஏனெனில் அந்த விளக்கு இக்காலத்தைமட்டும் பற்றியதல்ல. உயிர்க்கலையான மெய்ம்மையை வெளியிட்டது. ஒரு நாளும் அழியாத உண்மைகளை வெளியிட்டது! தவறான நெறியிலிருந்து திருப்பி நன்னெறியிலே நம்மை நடத்திவந்தது! இந்தப் பழம்பெருநாட்டின் உரிமையை வாங்கி வழங்கியது!

"அப்பெரியாரால் நமக்கு இத்துணை நன்மைகளும் ஏற்பட்டிருக்கின்றன. இன்னும் எத்துணையோ நலன்களை நல்கியிருப்பார்! எப்போதும் அவரை நாம் வீணென நினைத்ததில்லை; அவருடைய தொண்டு முடிந்துவிட்டதென்றும் நினைத்ததில்லை.

"எவ்வளவோ இடுக்கண்கள் நம்மைச் சூழ்ந்திருக்கும் இந்த நெருக்கடியான காலத்தில், அவர் நம்முடன் இல்லாமல் இருப்பது பேரிடியாகும். இதை நம்மால் தாங்கவியலாது.

"ஒரு வெறியன் அவருடைய உயிரை மாய்த்துவிட்டான்! இவனை வெறியனென்றுதான் நான் விளம்புவேன். கடந்த சில ஆண்டுகளாக நம் நாட்டிலே நஞ்சு பரப்பப்பட்டுவிட்டது. அந்த நஞ்சு, மக்களின் மனத்தில் இடம் பெற்று வேலைசெய்தது. அந்த நஞ்சின் கொடுமையைத் தடுத்து அதை வேரோடுங் களையவேண்டும். நம்மை எதிர் நோக்கியுள்ள எல்லா இடையூறுகளையும் வீரத்துடன் எதிர்க்கவேண்டும். வெறிபிடித்த முறையிலோ, வஞ்சக முறையிலோ அல்லாமல் நம் அரும் பெருந் தலைவர் நமக்குக் கற்றுக்கொடுத்துள்ள முறையில் அவைகளைத் தடுக்கவேண்டும். நமக்குண்டாயிருக்கும் சீற்றத்தினால் நம்மவரில் யாரும் தவறான முறையிலே நடக்கத் துணிதல் கூடாது. நம் உள்ளத்திலே பதியவைக்க வேண்டிய முதல் வேலை இதுதான். திறமையுடனும் வீரத்துடனும் நாம் நடந்துகொள்ளல் வேண்டும். நம் முன் வந்திருக்கும் பேரிடிகளைத் தாங்கிக்கொள்ள வேண்டும். நம் தலைவரும் ஆசிரியருமாகிய பெரியார் நமக்கிட்டுள்ள கட்டளையை நிறைவேற்ற உறுதிகொள்ளல் வேண்டும். அவருடைய ஆன்மா நம்மை எப்பொழுதும் பார்க்குமென்றே நான் நம்புகிறேன். நாம் பலாத்காரத்திலோ இழிசெயலிலோ ஈடுபடுவதைக் கண்டால் அவர் ஆன்மா வருத்தமுறும் என்பதை நம் சிந்தனையிலே வைத்துக்கொண்டு இடையூறுகளை எதிர்க்கவேண்டும்.

"ஆகவே, இழிசெயலிலும் பலாத்காரத்திலும் நாம் ஈடுபடுதல் கூடாது. அதற்காக நாம் ஆற்றலில்லாதவர்களாக இருக்கவேண்டுமென்பதன்று. ஒற்றுமையாகவும் திறமையாகவும் இருந்து நம் எதிரிலுள்ள இடையூறுகளைத் தடுத்தொழிக்க வேண்டும். நாம் ஒன்றுபட வேண்டும். இப்பேரிடியின் எதிரே நம்முடைய தொல்லைகளையும் தகராறுகளையும் விலக்கி வைத்துவிடவேண்டும். ஒரு பெரிய இடுக்கண் வந்தால் சிறு பிணக்குகளை மறந்து வாழ்க்கையின் உயரிய நோக்கங்களை உள்ளத்தில் வைக்க வேண்டுமென்பதன் அறிகுறியாக அதனைக் கொள்ள வேண்டும். சிறு பொருள்களைப் பற்றியே நாம் அண்மையில் மிகுதியாகச் சிந்தித்துவருகிறோம். அவர் தமது பிரிவின் மூலமாக வாழ்க்கையின் உயரிய நோக்கங்களை நினைவூட்டியுள்ளார். அழிக்க முடியாத ஆக்கத்தை நினைவூட்டியுள்ளார். இதை நாம் நினைவில் வைத்துக் கொள்வதே இந்தியாவுக்கு நன்மை தரும்.

"நம்பெரியார் எந்தநோக்கத்துக்காக வாழ்ந்து இறந்தாரோ, அந்த நோக்கத்துக்காகவும் உண்மைக்காகவும் நாம் நம்மை ஈடுபடுத்திவிடுவதாக உறுதிசெய்து கொள்வதே நாம் அவருக்குச் செய்யவேண்டிய வழிபாடு. நமக்கும் நம் நாட்டிற்கும் நாம் செய்யக்கூடிய சிறந்த வழிபாடு இதுவே."

சர்தார் வல்லபாய் படேல்

பண்டித நேரு பேசியபின், உள்நாட்டு அமைச்சர் சர்தார் வல்லபாய் படேல் வானொலியிலே பேசினார். காந்தியடிகளுடன் நடந்த தம் கடைசிச் சந்திப்பைப்பற்றி மிகவும் வருத்தத்துடன் குறிப்பிட்டார்:—



" துக்கத்தினால் என் நெஞ்சு அடைத்துக்கொள்கிறது. உங்களுக்கு என்ன சொல்வதென்று தோன்ற வில்லை! இன்று நடந்த நிகழ்ச்சி நமக்கு வருத்தமும் வெட்கமுந் தரக் கூடியது.

" இன்று மாலை 4-மணிக்கு நான் காந்தியடிகளிடம் சென்றேன். அவருடன் ஒரு மணி நேரம் இருந்தேன். ஐந்து மணியானதும் அவர் தம் கடி-யாரத்தை எடுத்தார். வழிபாட்டுக்கு நேரமாய் விட்டதென்றார். அவர் வழிபாட்டு இடத்துக்குச் சென்றார். நான் என் வீட்டிற்குச் சென்றேன். வீட்டிற்குச் சென்றதும் அந்தப் பேரிடிச் செய்தி கிடைத்தது!

" உடனே பிர்லா மாளிகைக்கு ஓடி அந்தக் கொடிய நிகழ்ச்சிக்குப்பின் அவரைப் பார்த்தேன். அப்பொழுதும் அவர் முகத்தில் அதே அமைதியும் அருளும் நில வின. அன்பும் இரக்கமும் அவர் முகத்தில் முன்பே பதிந்து இடம்பெற்றுவிட்டன.

" நாட்டின் போக்கைக் கண்டு அடிகள் சிறிது கால மாகவே வெறுப்புடனிருந்தார். அதன் விளைவே அவர் மேற்கொண்ட உண்ணுநோன்பு. அந்த நோன்பிலேயே அவர் பிரிந்திருந்தால் நன்றாயிருக்குமே! ஆனால் அவருக்கு வேளை காத்திருந்தது. அதனால் அவர் பிழைத்து விட்டார். மற்றொருநாள் அவர்மீது வழிதவறிய இளைஞனொருவன் குண்டுவீசினான். அப்போதும் அவர் தப்பினார். ஆனால், இன்று நாம் அவருடைய உயிர் தப்பும் நல்வினை செய்யவில்லை!

" இது வருந்த வேண்டிய காலம். சீற்றங் கொள்ள வேண்டிய காலமன்று. சீற்றத்துக் கிடந்தருவது காந்தி

யடிகள் தம் வாழ்நாளெல்லாம் உங்களுக்குக் கற்றுக் கொடுத்த பெரிய அறங்களை மறக்கச்செய்துவிடும். காந்தியடிகளின் அருள்மொழிகளை அவருடைய வாழ்க்கைக் காலத்திலே நாம் ஏற்கவில்லை. அவருடைய பிரிவுக்குப் பின்னும் அவைகளை நாம் பின்பற்றவில்லை என்று பழிக்க இடந்தராதீர்கள். அவ்வாறு இடங் கொடுப்பது நாம் பெற்றிருக்கும் நல்ல பெயருக்கு ஒரு கறையாகும்.

"உங்களுடைய உணர்ச்சி எவ்வகையில் இருப்பினும் உலகம் நம்மைத் தெரிந்துகொள்ளுங் காலம் இதுவே. நமக்குள் வேறுபாடின்றி ஒற்றுமையுடன் இருக்கவேண்டிய காலம் இதுவே. இந்தியா இப்போது ஏற்றுக் கொள்ள நேரிட்ட சுமை மிகவும் கனமாக இருந்தது. இந்தப் பெரியாரின் ஆதரவை நாம் பெற்றிராவிடில் அந்தச் சுமை நம் முதுகை ஒடித்திருக்கும். அந்தோ! அந்த ஆதரவை இப்போது போக்கடித்துக்கொண்டோம். ஆனல், காந்தியடிகள் எப்போதும் நம்முடனிருப்பார். அவருடைய அருள்மொழிகளும் உயர்ந்த நோக்கங்களும் எப்போதும் நம்முன் நிற்கும். நாளை மாலை நான்கு மணிக்கு அவருடைய ஊனுடல் சாம்பலாகிவிடும். ஆனல், அவருடைய ஆன்மா எப்போதும் நம்முடன் இருக்கும். அஃது அழியாப்பொருள். அவருடைய வாழ்நாளில் நிறைவேருதவை இப்போது நிறைவேறலாம். இந்தக் கொடிய நிகழ்ச்சியானது இந்திய இளைஞர்களின் உள்ளத்தைத் திடுக்கிடச்செய்து அவர்களுடைய கடமைகளை உணர்த்தும். ஒன்றுபட்டிருந்து காந்தியடிகள் தொட்ட வேலைகளை முடிப்பீர்களாக!"

சனிக்கிழமை காலை

ஜனவரி 31௳ சனிக்கிழமை காலை 6-மணிக்குப் பிர்லா மாளிகையின் வாயில்கள் திறக்கப்பெற்றன. அடிகளின் திருமேனியைக் காண ஆயிரக்கணக்கான மக்கள்

ஒருவர்பின் ஒருவராக வாயிலுக்கு வெளியே நின்று கொண்டிருந்தனர். அவர்கள் ஒழுங்காக வணங்கிச் சென்ற காட்சி ஊனையும் உயிரையும் உருக்கியது. ரோசா மலர்களுக்கிடையே அடிகளின் ஊனுடல் கிடத்தப்பெற்றிருந்தது. மாளிகை அருகே படைவீரர் அணிவகுத்து நின்றனர். இந்துக்கள், முகமதியர், சீக்கியர், கிறித்தவரென வேறுபாடின்றி எல்லோரும் கதறி யழுதனர்.

முதலமைச்சர் நேரு பிர்லா மாளிகையிலே மக்கள் வெள்ளத்தினிடையே நின்றுகொண்டிருந்தார். மக்கள் அடிகளின் உடலை அறையின் சாளரத்தின் வழியே கண்டு செல்ல வகை செய்யப்பட்டிருந்தது. கிழிந்த ஆடைகளுடன் அகதிகள் மலர்ச்செண்டுகளை அடிகளின் திருவடிகளில் இடுவதற்கு முயற்சிசெய்த காட்சி கல்லையுங் கரைக்கும்படி யிருந்தது. பெருகிவருகின்ற மக்கள் குழுவைப் போலீசார் தடுத்தவண்ண மிருந்தனர். தலைப்பாகை யணிந்த சீக்கிய வீரர்கள், கூர்க்க வீரர்கள், பச்சைத் தொப்பி யணிந்த இராசபுதனத் துப்பாக்கிப் படைவீரர்கள், மகாராட்டிரக் காலாட்படை வீரர்கள் ஆகியோர் காவல் புரிந்து நின்றனர்.

தூய வெண்மையான கதரால் கால் முதல் மார்புவரை மூடப்பெற்றிருந்த அடிகளின் கண்கள் அமைதியாக மூடப்பெற்றிருந்தன. துப்பாக்கி ரவை செய்த அடையாளங்கள் கருமையாகத் தெரிந்தன. கழுத்தில் ஒரு கதர் மாலை இலங்கியது. சாம்பிராணிப் புகை எங்கும் பரவியிருந்தது. அடிகளின் புதல்வர் தேவதாஸ் காந்தி யுட்படப் பல உறவினர் அடிகளைச் சூழ அமர்ந்திருந்தனர். சர்தார் படேல் ஒன்றும் உரையாமல் நிலத்தை நோக்கியவாறு பதுமைபோ லிருந்தார். இராசகுமாரி அமிர்த கவுரி அடிகளின் காலடியில் உட்கார்ந்திருந்தார். பண்டித கோவிந்த வல்லப பந்தும் அங்கு வந்திருந்தார்.

அண்ணலின் இறுதி ஊர்வலம்

பதினொரு மணி அடிக்கச் சில நிமிடங்களுக்கு முன்பு காந்தியடிகளின் அறையிலே பண்டித நேரு நுழைந்தார். அடிகளின் உடலைத் தாங்கிச்செல்லும் வண்டியிலுள்ள பலகையிலே தூய வெள்ளைக் கதராடையை விரிக்க ஏவினர். அவர் முகம் உள்ளக் கவலையால் வெளுத்துப்போயிருந்தது!

யமுனை யாற்றங் கரையி லன்றி, இராச கட்டத்திலே அடிகளின் ஊனுடலை எரியூட்ட ஏற்பாடு நடந்தது. அங்கே நினைவுக்குறி யமைப்பதற்கு நன்றாயிருக்குமென நேரு முதலானோர் ஆராய்ந்தறிந்தனர்.

கவர்னர்-ஜெனரல் மவுண்ட் பேட்டன் தம் இரு புதல்விகளுடனும் பிர்லா மாளிகைக்கு வந்தார். இவர் முதல்நாள் காந்தியடிகள் உயிர் நீங்கிய பிறகு ஒருமுறை வந்துசென்றார். இவர் தம் கையில் ஒரு கறுப்புப் பட்டையைச் சுற்றியிருந்தார். பஞ்சாப் கவர்னர் திருவேதியும் வந்தார்.

அடிகளின் உடலை அவரறையிலிருந்து அவர் பேர்த்தியும் திரு. பியாரிலாலும் மற்ற அன்பர்களுடன் எடுத்துச் சென்றனர். மலர்களாற் புனையப்பெற்ற இராணுவ வண்டியில் அடிகளின் உடல் கிடத்தப்பெற்றது. பண்டித நேருவும் மற்ற அமைச்சர்களும் பின் சென்றனர். ஒவ்வொரு நாட்டுத் தூதரும் ஒவ்வொரு பூச்செண்டாக நூற்றுக்கு மிகுதியான செண்டுகள் அவ் வண்டியில் வைக்கப்பெற்றன.

அடிகளின் காலடியிலே சர்தார் பட்டேல் உட்கார்ந்தார். பக்கத்திலே அன்றுதான் வந்த—அடிகளின் புதல்வர்—இராமதாஸ் காந்தி அமர்ந்தார். அவரருகே சர்தார் பலதேவ சிங்கு இருந்தார். ஐ. மா. கவர்னர் திருவாட்டி சரோசினி நாயுடு சரியான காலத்தில் வந்து சேர்ந்தார்.

2

சரியாக 11 - 45 மணிக்கு வண்டி புறப்பட்டது. சங்குகள் முழங்கின. 'காந்திக்கு ஜே!' என்ற ஆரவாரம் வானெங்கும் நிறைந்தது. அந்த வண்டியை விமானப் படை, தரைப்படை, கடற்படை வீரர்கள் இழுத்துவந்தனர். வண்டி மலர்வண்டியாகவே காணப்பெற்றது. பிர்லா மாளிகையிலிருந்து இராச கட்டம் வரையில் ஏறக்குறைய 5½ - மைல் தொலைவிருக்கும். வழிநெடுக இருபுறங்களிலும் கடல்போன்ற மக்கட்கூட்டம் காலையிலிருந்து காத்திருந்தது. படை வீரர்கள் முன்னாலே வழிவிலக்கிச் சென்றனர்.



ஊர்வலத்தில் மக்கள் வெள்ளம்

வண்டி புறப்பட்டவுடன் அதன் கீழ்ப்படியின் வலப்புறத்திலே சர்தார் - பலதேவ சிங்கும், இடப்புறத்திற் பண்டித நேருவும், நேருவுக்குப் பின்புறத்திலே பட்டேலும் நின்றனர். தேவதாஸ் காந்தி முன் பக்கத்திலே அமர்ந்திருந்தார்.

அடிகளின் உறவினர்களும் ஆசிரம வாசிகளும் வண்டியின் முன்பு நடந்துவந்தனர். மார்பு வரையிலே காந்தியடிகளின் உடல் வெண்மையான கதராலே போர்த்

தப்பட்டிருந்தது. முகம் நன்றாகத் தெரியும்படி திறந்திருந்தது.

கூர்க்கர்களும், 'பாரசூட்' படையினரும், 'மகாத்மா காந்திக்கு ஜே!' என்று கூவியவாறு பூக்களையும் மாலைகளையும் வாரியிறைக்கும் மக்கள் வெள்ளத்தினிடையே வண்டி நகர்ந்து செல்வதற்கு வழிசெய்தனர்.

அரைமணி நேரத்திலே ஊர்வலம் 'நினைவு வளைவு'க்கு வந்துவிட்டது. நல்ல நிழலாக உள்ள மரங்களிலேயும் மக்கள் தொற்றிக்கொண்டு ஊர்வலத்தைக் கண்டனர்.

அண்ணலைக் கிடத்தியிருந்த வெள்ளைக் கதர் தெரியாமல் மலர் மயமாகவே காணப்பட்டது. மோட்டார் கார்களும் மிதிவண்டிகளும் உரிமையாளரின்றி அங்கங்கே கிடந்தன. உரிமையாளர்கள் ஊர்வலத்திலே முதலிடந் தேட ஓடிவிட்டனர். கூட்டத்தினரை ஒழுங்காகத் துப்பாக்கி வீரர்கள் செலுத்திவந்தனர். சாரணர்களும் துணை புரிந்தனர். இராணுவ லாரிகள் நடைபாதையோரத்தில் அங்கங்கே மெதுவாகச் சென்றுகொண்டிருந்தன.

எங்கும் ஒரே அமைதி. எவ்விடையூறும் நேராமல் அதிகாரிகள் முன்னேற்பாட்டுடன் இருந்தனர். மருத்துவக் குழுவினரும் தீயணைப்புப் படையினரும் உடன் வந்தனர். எங்கும் நிலவிய அமைதியைக் காந்தி வாழ்த்தும், மக்களின் விம்மலும் இடையிடையே கலைத்தன. படம் பிடிப்போர் தங்கள் நண்பர்களின் முதுகிலேறிப் படம் பிடித்தனர்.

பிர்லா மாளிகையிலிருந்து இராச கட்டம் வரையிலே நிகழ்ந்துகொண்டிருப்பதை அண்ணலின் ஊர்வலத்தோடு சென்ற வானொலி வண்டியிலிருப்போர், அகில இந்திய வானொலியுடன் பிணைக்கப்பட்டிருந்த வானொலிக் கருவியின் வாயிலாக, ஒரு சிறிதும் விடாமல் உலக மக்களுக்கு

அறிவித்தனர் ஆகையால், நாடெங்குமுள்ள மக்கள் நன்றாக அறிந்துகொண்டு கண்ணீருங் கம்பலையுமாக முகத்தைத் தொங்கவிட்டவாறு அமர்ந்திருந்தனர். வானொலியிலே நிகழ்ச்சி அறிவிப்போரின் குரலோசை கம்மலாகக் கேட்டது. இந்தியிலே, 'ஐயோ! காந்தி பிரிந்துவிட்டாரே!' 'காந்திப் பெரியார் வாழ்க!' என்ற கதறல்களும், அடிகளுக்குப் பிடித்தமான 'வைணவ ஜனதோ' 'ரகுபதி ராகவ ராஜாராம்' என்ற பாட்டுகளும் அழுகை விளிகளும் வானொலியையும் அதைக் கேட்கும் மக்களையும் அலறச் செய்துவிட்டன! நேரிலே காணாவிட்டாலும் எல்லா நடைமுறை நிகழ்ச்சிகளையும் விடாமல் அறிய மக்களுக்கு ஆதரவாயிருந்த வானொலி நிலையத்தின் பேருதவியை எப்படிப் புகழ்வது?

மாலை 4 - 20 மணிக்கு யமுனைக்கரையிலுள்ள இராச கட்டத்தை அண்ணலின் உடல் அடைந்தது. ஊர்வலம் வந்துகொண்டிருந்தபோது இந்திய வானப்படையைச் சேர்ந்த மூன்று வானவூர்திகள் தாழ்வாகப் பறந்து பன்முறை அடிகளின்மீது மலர்மாரி பெய்தவண்ணம் வந்தன.

ஊர்வலத்தின்போது அடிகளைக் காணக் காலையிலிருந்தே காத்திருந்த மக்களின் கரைகாணாக் காதலையும் அவர்களின் கவலை தோய்ந்த முகத்தையும் எவ்வாறு மொழியால் கூற முடியும்?

நாலாயிரம் காலாட் படையினர்; ஆயிரம் வானவூர்தி வீரர், ஓராயிரம் போலீசார், நூற்றுக்கணக்கான கடற்படையினர் ஊர்வலத்திற் கலந்துகொண்டனர். அப்படைகளிலே' சென்னைப் படையே முதலிடம் பெற்றிருந்தது.

ஈமம் :

காலையிலிருந்தே இராச கட்டத்தை நோக்கி மக்கள் வெள்ளம் பெருகிச் சென்றுகொண்டிருந்தது. அடிகளுக்காக அமைக்கப் பெற்றிருந்த ஈமத்தைச் சூழ, முந்நூறு அடிகளுக்கு அப்பால் அமைக்கப்பெற்றிருந்த வேலியை நெருக்கிக்கொண்டு மக்கள் குவிந்தனர். அடிகள் உடல் அங்கு வந்தவுடன் அதைக் காணவந்த கூட்டத்தினரின் ஆவல் எல்லையைக் கடந்துவிட்டது. நேரு முதலிய தலைவர்களின் வேண்டுகோளெல்லாம் பயனற்றுப் போய் விட்டன. கதறி யழுதுவரும் மாதர்களின் வெள்ளத்தை எவ்வாறு தடுப்பது ! குழந்தைகளும் மாதர்களும் பலர் மயங்கி வீழ்ந்தனர். அவர்களை நேருவும் கவர்னர் ஜெனரலும் மருத்துவ லாரிகளுக்குக் கொண்டுசென்றனர்.

சென்னையிலிருந்து லேடி மவுண்ட்பேட்டன் அப்போதுதான் அங்குவந்து சேர்ந்தார். அவரும் சென்னை கவர்னரும், ஐக்கிய மாகாண கவர்னரும், பஞ்சாப் முதலமைச்சரும், பம்பாய் முதலமைச்சரும், காங்கிரசின் தலைவர் இராசன் பாபுவும், உயர்நிலை இராணுவத் தலைவர்களும் அடிகளின் தேர் வருமுன்னரே இராச கட்டத்தை யடைந்துவிட்டனர். திரு. இராசகோபாலாச்சாரியார் நேரே இராச கட்டத்துக்கே வந்துசேர்ந்தார். அப்துல் கலாம் ஆசாத்தும், சென்னையிலிருந்து சென்ற டாக்டர் சுப்பராயன், திரு. அழகப்பச் செட்டியார் ஆகியவர்களும் அங்கிருந்தனர்.

நான்கு கயிறுகளால்—ஒவ்வொரு கயிறும் ஐம்பது பேர்களால்—இழுக்கப்பெற்ற இராணுவ லாரியிலிருந்து அண்ணலை அடிகளின் ஆசிரமவாசிகள் தூக்கிவந்து ஈமத்தின்மீது வைத்தனர்

3\ அடி உயரம் 12 அடி சதுரம் உள்ள செங்கற் கட்டடம் எழுப்பி அதன்மீது சந்தனக் கட்டைகள் அடுக்கப்பெற்றிருந்தன. 15 மணங்கு சந்தனக் கட்டைகள்,

4 மணங்கு நெய், 2 மணங்கு சாம்பிராணி, ஒரு மணங்கு கொப்பரைத் தேங்காய், 15 சேர் கருப்பூரம் ஆகியவை ஈம விறகுக்குப் பயன்பெற்றன.



தலைவர்கள் ஈமத்தை நோக்கியிருத்தல்.

ஈம விறகில் வைப்பதற்கு முன்னாலே தூய யமுனைநீர் தெளிக்கப்பட்டது. 4-30 மணிக்கு உடலம் ஈமத்தின்மீது வைத்தனர். அவருடைய முடி வடக்கில் அமைய வைத்தனர். அண்ணலின் அடிகளில், குமுறும் நெஞ்சுடனும் நடுங்குங் கைகளுடனும் அன்பர்களின் மலர் மாலைகள் குவிந்தன. முதலில் மாலை வைத்தவர் சீனத் தூதர் ஆவர். கவியரசி சரோசினியின் திருமகளார் பதுமசா நாயுடு சிவப்பு வெள்ளை ரோசா மலர்களாலான அழகிய பூச்செண்டு ஒன்றைக் கொண்டுவந்து பண்டித நேருவிடங் கொடுத்து அடிகளின் மலரடியில் வைக்க வேண்டினார். முதலில், அந்த அம்மையையே இடும்படி கூறிய நேரு, பிறகு, தாமே செய்வதாக ஒப்புக்கொண்டு வாங்கிச் சென்றார். தமது காற்செருப்பைக் கழற்றிவிட்டுத் தூய அன்புடனும் தூக்கத்துடனும் அடிகளின் மலரடியிலே அதனை வைத்தார். இதுவரையில் அடைபட்டிருந்த அவர்

அழுகை, பீறிக்கொண்டு வந்ததனால் அடக்கமுடியாமல் 'ஓ' வென்றலறிவிட்டார். அவர் தோற்றம் அவருக்குப் பத்தாண்டு வயது மிகுத்துக் காட்டியது.

திரு. வல்லபாய் பட்டேல் கற்சிலை போலத் திகைத்து நின்றுவிட்டார்.

தீ வைத்தனர் !

அடிகளின் உடல்மீதிருந்த—அவருக்கு விருப்பமான —உயிரான—தாய் நாட்டுக்கொடி விலக்கப் பெற்றுச் சந்தனக் கட்டைகள் குவிக்கப்பட்டன. திரு. இராமதாஸ் காந்தி ஈமச் சடங்குகளை இயற்றினார். 4·55 மணிக்கு அவருடைய கைகள், நாட்டின் தந்தைக்கு—அருளின் அண்ணலுக்கு—இந்து மதத்திற்கு—இந்தியாவின் அருங் கலைச் செல்வத்திற்கு—நாட்டின் ஒற்றுமைக்கு—அமைதிக்கு ஒருங்கு புகலிடமாக இருந்த அடிகளார் திருமேனிக்குத்—தீ வைத்தன !

தீ மூண்டது ! அடிகளின் ஊனுடலின் புறத்தும், இந் நாட்டு மக்களின் உள்ளத்தும் தீப் பரவியது ! கதிரவனும் இதைக் காணப்பொறுமல் மறைந்தான். மக்களின் உள்ளம் கனிந் துருகியது. ஆயிரக்கணக்கான வாய்கள், 'காந்தியடிகள் அமரரானார்' என்று அலறின. அந்தப் பேரொலி வானிலே பரவி எங்கும் இசைத்தது !

திரு. வல்லபாய் பட்டேல் கீழே ஒடுங்கி ஓய்ந்திருந்தார். அவரருகிலே தேம்பித் தேம்பி யழுதுகொண்டிருந்த ஒரு சிறுமியைத் தேற்ற முயன்றுகொண்டிருந்தார். ஆயினும், அவருள்ளங் குமுறிக்கொண்டிருந்தது. அச்சிறுமி இந்தியாவின் அடையாளமன்றோ? தம்மையே தேற்றிக்கொள்ள வியலாமல் தவிக்கும் அவர் இந்தியாவைத் தேற்றுவது எங்ஙனமென்று திகைப்பதுபோலிருந்தது அக் காட்சி ! ஏறக்குறைய அரை மணி வரையில் அவர் பேசாமல் அமர்ந்திருந்தார்.

எங்கும் சந்தன சாம்பிராணி மணம் பரவியது. தம் உயிரைப் பறிகொடுத்துக் கொண்டிருப்பதைப் போற் கலங்கி நின்றுகொண்டிருந்த கோடிக் கணக்கான மக்கள் நேரம் ஆக ஆக மெல்லக் கலையத்தொடங்கினர். அடிகளின் வழிபாட்டுக் கூட்டத்திற்கு வந்து செல்வதைப் போலச் சிறிது தெளிவுடன் சென்றனர். தீயானது தன் செங் கைகளாலே அண்ணலைத் தழுவித் தன்னுள் அடக்கியது! காந்தியடிகளின் பொன்னுடல் பேரொளியிற் கலந்தது!

தீ மூண்டதன்பின் சென்னையில்

சென்னை மாகாண அமைச்சர்களெல்லாரும் சனிக் கிழமையன்று பட்டினியிருந்து அடிகளின் ஆன்மா அமைதியடைய இறைவழிபாடு செய்தனர். முதலமைச்சர் ஓமந்தூர் ரெட்டியார் மாகாண மக்களெல்லாம் அமைதியாகப் பட்டினியிருந்து வழிபாடு செய்யும்படி அறிக்கை விட்டிருந்தார். ஒவ்வோரிடத்திலே சிற்றமடைந்த மக்களால் நேர்ந்த சிறு தவறுதல்களைத் தவிரச் சென்னை முழுதும் அன்றெல்லாம் அழுது தீர்த்தது! தீவைத்த நிகழ்ச்சியைக் கேட்டபிறகு மக்கள் கடலில் நீராடினர். நாலேகால் மணிக்கு ஓமந்தூராரும் கடலில் நீராடினார்.

பிர்லா மாளிகை

முந்தியநாள் இரவுவரையில் ஒரே மக்கள் திரளாக இருந்த பிர்லா மாளிகை அன்று அரவமின்றி உயிர்க்களையின்றி வறிதாகியது. 'வழிபாட்டுவெளி'யிலே ஒருவருமில்லை. பிர்லா குடும்பத்தினர் காந்தியடிகள் வாழ்ந்த அறையிலே வழக்கம்போல இறைவழிபாடு நடத்தினர். இனி அது மக்களின் யாத்திரைத்தலமாக மாறி

னும் மாறலாம். அடிகள் சுடப்பட்டு வீழ்ந்த இடத்தி லுள்ள மண்ணை மக்கள் நினைவுக்குறியாகக் கொண்டு சென்றவண்ணம் இருந்தனர்.

அடிகளின் பிடிசாம்பல்


இராச கட்டத்திலே பிப்ரவரி இரண்டாம் நாளன்று ஆயிரக் கணக்கான மக்கள் கூடினர். பண்டித நேருவும் மற்ற அமைச்சர்களும் வந்திருந்தனர். கவி யரசி சரோசனியும் அஸ்ஸாம் கவர்னர் அக்பர் ஹைதரி யும், நைசாம். சர்க்கார் ஏசண்டும், சத்தாரி நவாப்பும் இன்னும் பல முகமதியத் தலைவர்களும்கூட இருந்தனர்.

அடிகளின் மூன்றுவது புதல்வர் இராமதாஸ் காந்தி சடங்குகளைத் தொடங்கி மறைமுறைப்படி யாவும் செய் தார். தூய கங்கைநீரால் அண்ணலின் என்புகள் நீராட் டப்பெற்றுச் செப்புக்கலத்திலே அடக்கம்செய்யப்பெற் றன. தூய வெள்ளிய கதர்ப்பைகளிலே சாம்பல்குவி யலையும் எடுத்துவைத்தனர். அந்தச் செப்புக்கலசம் வாதாமிநிறக் கதராடையால் மூடப்பெற்றது.

இந்தியாவில் பல்வேறு மாகாணங்களிலுள்ள தூய ஆறுகளிலும், கடல்களிலும் அண்ணலின் தூய வெண் சாம்பரை, பிப்ரவரி 12 - ம் நாள் கரைப்பதென முடிவு செய்யப்பட்டது. கங்கை, கோதாவரி, கிருஷ்ணு, திரி வேணி, காவிரி, சபர்மதி, கோமதி, பிரமபுத்திரா முதலிய ஆறுகளிலும், பூரி, இராமேச்சுரம், கன்னியாகுமரி, போர் பந்தர் ஆகியவற்றின் கடற்கரையோரத்திலும் சாம்பரைச் சேர்ப்பதென்ற முடிவும் ஏற்பட்டது.

அந்தந்த மாகாணத் தலைவர்கள் அண்ணலின் தூய சாம்பலை எடுத்துக்கொண்டு சென்றனர்.


சென்னை கவர்னர் சர். ஆர்ச்சிபால்டு நை அவர்கள் சென்னை மாகாணத்திற் குரிய பகுதியை எடுத்து வந்தார். அடிகளின் அத்தியைத் தாங்கிய 'டெக்கான் ஏர்வேஸ்' வானவூர்தி 4-30 மணிக்குச் சென்னை விமானநிலையத் திற்கு வந்தது. முதலமைச்சர் திரு. ஓமந்தூர் பி. இராம சாமி ரெட்டியார் அவர்களும், பிற அமைச்சர்களும் சட்ட சபைத் தலைவரும், உறுப்பினர்களும், மற்றும் பல பெரி யோர்களும் பொதுமக்களும் எதிர்நோக்கி நின்றனர். ரோசா, செவ்வந்தி மலர்களாலான ஒரு கூடையைத் தமிழ்நாட்டுக் காங்கிரசுக் குழுவினர் தொடுத்துவைத் திருந்தனர்.



சென்னையில் முதலமைச்சர் முன்செல்லத் தொண்டர்கள் தூய சாம்பற்குடத்தைத் தூக்கி வருதல்.

கவர்னர் அந்தத் தூய குடத்துடன் ஊர்தியிலிருந்து இறங்கி முதலமைச்சரிடம், 'இதோ அடிகளின் அத்தி. கவலையுடன் வாங்கிக்கொள்ளுங்கள்' என்றார். திரு. ரெட்டி யார் மிகவும் வணக்கத்துடன்—கருத்தழிந்த நெஞ்சுடன்— வாங்கிக்கொண்டார். அது, பிறகு மலர்க்கூடையில் வைக்

கப்பெற்று,ஒரு காங்கிரசுத்தொண்டர் தலைமீது அமர்ந்தது. இருவர் இருபுறமும் தொட்டுவர, ஏறக்குறைய ஐம்பது பெண்கள் இருபுறமும் அணிவகுத்து வர முதலமைச்சரின் மோட்டார் வண்டிக்குச் சென்றது அக் குடம். மலர்களை யிட்டுக் கைகுவிப்போரும், தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொள்வோருமாக உயர்வு தாழ்வின்றி எல்லா மக்களும் அப்போது வாடிய முகத்துடன் தோன்றிய காட்சியை என்னென்பது ?



சென்னை மாளிகையில் திருச்சாம்பல் வழிபாடு.

மோட்டார் வண்டியில் அந்தக் குடம் மவுண்டு ரோட்டில் உள்ள அரசாங்க மாளிகைக்கு எடுத்துச்செல் லப்பட்டது. சபாமண்டபத்திலே ஆரவாரமின்றி அவலம் நிரம்பிய முகத்துடன் எண்ணிறந்த மக்கள் நின்றுகொண் டிருந்தனர்.

வண்டியிலிருந்த குடம் முதலமைச்சராலே மண்ட பத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது. அமைச்சர்களும் பிறரும் பின் சென்றனர். அக்காட்சி காண்போர் கண்

களைக் கலக்கியது. கவலைக்கடலொன்று அலைவீசாமல் ஆரவாரமின்றி யிருப்பதுபோ லிருந்தது! தூய சூழ் நிலையிலே அக்குடம் ஒரு மேடையின்மேற் கண்ணாடிப் பெட்டியிலே வைக்கப்பெற்றது. அப்பெட்டி பலவகை மலர்களாலே அணிசெய்யப்பெற்றிருந்தது.

அந்தக் குடம் வைக்கப் பெற்ற மண்டபம் ஒரு தூய சேவைத் தலமாக மாறிவிட்டது.

அடிகளின் தூய அத்தி நிறைந்த குடத்தை வணங்க, பிப்ரவரி 7உ கவர்னரும் அவர் மனைவியும் வந்து மூன்று மலர்களை அக்குடத்தின் மீதிட்டுச் சென்றனர். நகரின் பல விடங்களிலு முள்ள மக்கள் விடாமல் வந்து செல்லும் காட்சி மிகவும் உருக்கமாக இருந்தது.

காந்தியடிகளின் சாம்பல் கரைப்புச் சடங்கு

அலகாபாத்தில் காந்தி யடிகளின் தூய சாம்பற் குடத்தைத் தாங்கிய, தனிப் புகை வண்டி டில்லியி லிருந்து பிப்ரவரி 11-ம் நாள் காலை 6-30 மணிக்குப் புறப் பட்டது. 12-ம் நாள் காலை 9-மணிக்கு அலகாபாத் புகை வண்டி நிலையத்துக்கு வந்து சேர்ந்தது. எண்ணற்ற மக்கள் ஆவலோடும் வணக்கத்தோடும் நின்று கண்டனர். அவர்க ளிடையே மனக்கசிவும் உணர்ச்சியும் உருக்கமும் பரவின.

முதலமைச்சர் பண்டித நேரு, சர்தார் பட்டேல், மௌலானா ஆசாது ஆகியோர் மலர்மாலைக ளணிந்திருந்த சாம்பற் குடத்தை வாங்கிக்கொண்டனர். அப்போது வானிலிருந்து பல வூர்திகள் மலர் மாரி பெய்தவண்ண மிருந்தன. முன்னே கவி யரசியார் சரோசனியார் செல்ல அமைச்சர்கள் அவருக்குப்பின் ஊர்வலமாய்ச் சென்றனர்.

குடத்தை ஒரு நாற்காலியில் வைத்துப் பண்டித நேரு வும் அவர் கூட்டாளிகளும் தூக்கிச் சென்றனர். புகை வண்டி நிலையத்தில் இக் குடஞ் சென்ற வழி முழுதுந் தூய வெள்ளைச் சதராடை விரிக்கப்பட்டிருந்தது. மிகவும் மெதுவாக நடந்து நிலையத்தைக் கடந்தது கூட்டம்.

பிறகு, அக் குடம் ஒரு தேரில் வைக்கப்பெற்று, 'குவின்ஸ் ரோட்' டிலிருந்து ஊர்வலம் புறப்பட்டது. இருபுறங்களிலும் ஆயிரக் கணக்கான மக்கள் வரிசையாக நின்றுகொண் டிருந்தனர். சங்குந் தாரைகளும் முழங்கத் தேர் நகர்ந்தது. தேரின் பின்னால் பட்டேல், கித்வாய், சங்கரராவ் தேவ், இராமதாஸ் காந்தி, தேவதாஸ் காந்தி ஆகியோர் சென்றனர்.

தேருக்கு முன்னே குதிரைப் படை அணி வகுத்துச் சென்றது. இப் படைக்கும் முன்னாலே கவச மோட்டார்களும், ஜீப் வண்டிகளும் சென்றன. தேருக்கு முன்னும் பின்னும் இருமருங்கிலும் படை வீரர் அணியணியாகச் சென்றனர். ஊர்வலம் மெதுவாகச் சென்றது. தாரைகள் இடையிடையே முழங்கின.




திருச்சாம்பல் தாங்கித் தேர் செல்லும் காட்சி.

கூட்டம் இரண்டு இலட்சத்துக்குமேல் பெருகியது. 'கானின் ரோட்' டில் உள்ள மாதா கோயில் முழுதுங் கருப்பு உடை அணிந்தவர்கள் கணக்கின்றி நின்றனர். ஆரவாரம் ஏதும் இல்லை. மூச்சுவிடும் ஒலியுங் கேளாமல் அமைதியாய்ச் சென்றது ஊர்வலம். மோட்டார் ஒலி மட்டுமே கேட்டது.

தேர் 'பாலெஸ் சினிமா' அருகிற் சென்றதும் பார்சியர் வணக்கஞ் செலுத்தினர். 10-30 மணிக்குத் தலைமைக் கடைத் தெருவை இது அடைந்தது. கூட்டம் பன்மடங்

காகச் சேர்ந்துவிட்டது. வானிலிருந்து வான வூர்திகள் மலர்களை வாரித் தூவின.

தேருக்கு முன்னுற் பெண்கள் பாடிக்கொண்டு சென்றனர். தேரின் மீதிருந்த பண்டித நேரு இறங்கிச் சிறிது தூரம் நடந்து சென்ருர். இரு பக்க ஓரங்களிலும் மேஜர் ஜெனரல் இராஜேந்திர சிங்கு, மேஜர் ஜெனரல்




திரிவேணி சங்கமத்தைத் தேர் நெருங்குகிறது.

நாது சிங்கு ஆகியோர் அமர்ந்திருந்தனர். ஊர்வலம் 'போர்டு ரோட்'டுக்குட் புகும்போது அங்குச் சென்று கொண்டிருந்த புகைவண்டியை நிறுத்தி, வண்டியிலுள்ள மக்கள் ஓடிவந்து குடத்தை வணங்கினர்.

கூட்டம் பத்து இலட்சத்துக்கு மேல் மிகுந்தது. இந்தியா முழுதுமுள்ள மக்கள் 'கும்ப மேள'த்துக்காக வந்திருந்தனர். வழியின் இருபுறமும் பல சாதுக்கள் அமர்ந்திருந்தனர். இராம நாம வழிபாட்டுடன் ஊர்வலம் ஆற்றங்கரையை அடைந்தது. கும்பமேளாவிலே முப்பது லட்சம் மக்கள் வணங்கினர்.

யமுனையாற்றங் கரையை அடைந்ததும் திருக்குடம் தேரிலிருந்து, ஒரு மோட்டார்ப்படகுக்கு மாற்றப்பட்டது. இது தரையிலும் நீரிலுஞ் செல்லக்கூடியது. மோட்டார்ப் படகின்மேல் அடிகளின் சாம்பற் குடத்தைப் பண்டித நேரு, பட்டேல், கிருவாய், பண்டித பந்து ஆகியோர் மெதுவாக வைத்தனர். கவியரசி சரோசினியும் படகில் ஏறிக்கொண்டார்.



படகிலே தலைவர்கள்

முதலில் இப் படகு சரசுவதி நதியிற் சென்றது. கரையிலிருந்தோர் வணங்கினர். பிறகு திரும்பிச் சங்கமத்துக்குச் சென்றது. ஒவ்வொரு நிமிடமும் விமானங்கள் மலர் மாரி பெய்தன. சங்கமத்தின் தென் மேற்குக் கோடிக்குப் படகு சென்றது. அங்கே இராமதாஸ் காந்தி மறை முறைப்படி சடங்குகள் செய்துகொண்டிருந்தார். படகில் இருந்தவர்கள் இராம வழிபாட்டுப் பாடல்களையும் குரான் மொழிகளையும் பாடச் சாம்பல் சங்கமத்திற் சேர்க்கப்பட்டது. ஆற்றிலே பாலும் விடப்பட்டது.

ஏறக்குறையப் பதினைந்து லட்சம் பேர் இச் சடங்கிலே கலந்துகொண்டனர். செப்புக் குடத்திலிருந்து 1-55 மணிக்குச் கங்கையும், யமுனையும், சரசுவதியும் ஒன்று கூடிக் கலக்கும் திரிவேணி சங்கமத்தில் அண்ணலின் தூய சாம்பல் சேர்க்கப்பட்டது. புகை வண்டி நிலயத்திலிருந்து ஐந்து மைல் நீளத்துக்கு வழியின் இருபுறமும் மக்கள் வெள்ளம் பெருகியிருந்தது. முகமதியப் பெண்களும் கணக்கின்றி நின்றனர். சாம்பலைச் சங்கமத்திற் சேர்த்த போது அலகாபாத்துக் கோட்டையிலிருந்து பீரங்கிகள் முழங்கின.

கல்கத்தாவில்

மேற்கு வங்காள கவர்னர் திரு. இராசகோபாலாச்சாரியார் வழிபாட்டுடன் அடிகளின் சாம்பலைப் பாரக்பூரில் கங்கையிற் சேர்த்தார். 15-மைல் தொலைவிலுள்ள கங்கையாற்றிற்குப் பகல் 12-மணிக்குப் போய்ச் சேர்ந்தார். ஒரு படகில் நட்டாறுவரை சென்று சாம்பலைக் கரைத்தார். பல்லாயிரக் கணக்கான மக்கள் அங்குக் கூடி வணக்கஞ் செலுத்தினர்.

பம்பாயில்

பம்பாய் முதலமைச்சர் டாக்டர் பி. ஜி. கேர் இராமகுண்டத்தில் (கோதாவரியின் ஒரு துறை) அடிகளின் சாம்பலைக் கரைத்தார். பம்பாய் கவர்னர் மகாராசசிங்கும் சிறப்புடைய போர்ப்படைத் தலைவர்களும் பிறரும் அளவற்ற மக்களுங் கூடியிருந்தனர். ஊர்வலம் 2-மைல் இருந்தது. காலை 8-30 மணிக்குப் புறப்பட்ட ஊர்வலம் 3-மணி நேரம் ஐந்து மைல் நடந்து சென்றது.

பம்பாய் மாகாண காங்கிரசுத்தலைவர் திரு. எஸ். கே. பட்டீல் அவர்களாற் கடலினும் அடிகளின் சாம்பல் கரைக்கப்பட்டது.

11—மைல் தொலைவிலுள்ள ஜூகுவிலும் அச்சடங்கு நடைபெற்றது. ஜூகுவிலேதான் 1944-ல் அடிகள் சிறையிலிருந்து வந்தபின் சிறிது காலம் தங்கியிருந்தார்.

சபர் மதியில் :

அடிகளோடு சிறந்த தொடர்புடையது ஆமதாபாத்து. எனவே அடிகளின் சாம்பல் தூதேசுவரத்திலே சபர்மதியாற்றிலும் சேர்க்கப்பட்டது.

சென்னையில் :

காந்தியடிகளின் சாம்பலைச் சென்னைக் கடலிற் சேர்க்கும் சடங்கு அரசாங்க வணக்கத்துடன் பிப்ரவரி 12-ம் நாள் நடைபெற்றது. வகுப்பு வேற்றுமை-மத வேறுபாடுகளின்றி ஏறக்குறைய ஐந்து இலட்சம் மக்கள் கலந்து கொண்டனர்.

அரசாங்க மாளிகையிலிருந்து மாலை மூன்றரை மணிக்கு அடிகளின் சாம்பலடங்கிய திருக்குட ஊர்வலம் புறப்பட்டு, திருவல்லிக்கேணி கடற்கரை வழியாகப் 'போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல்' அலுவலகத்தை அணுகியது. வழியிலே மக்கள் வெயிலின் கொடுமையையும் நோக்காது மரங்களின்மீதும் மாடிகளிலும் ஏறிக்கொண்டு ஊர்வலத்தை ஆவலோடு கண்டனர்.

மலர்களால் அணி செய்யப்பட்டிருந்த வண்டியிலே அடிகளின் சாம்பற்குடம் 5-20 மணிக்குக் கடற்கரைக்கு வந்து சேர்ந்தது. கடற்கரையோரமாக ஒரு தனி மேடை நிறுவப்பட்டிருந்தது. இங்கு ஒலி பரப்பி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. சென்னை முதலமைச்சர் திரு. ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாரவர்கள், காந்தி வாழ்த்துப் பேரொலி முழங்கக் குடச் சாம்பலைக் கடலிலே சேர்த்தார். அப்போது பலர் கடலில் நீராடினர்.

ஊர்வலத்திலே சென்னைத் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

பிறகு, வழிபாடு தொடங்கியது. எல்லோரும் அமைதியாக அமர்ந்தனர். அடிகளின் பிரிவாற் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்த மக்களின் காட்சி மிக உருக்கமாயிருந்தது.

கீதை மொழிகளும், அடிகளுக்கு விருப்பமான அறவுரைகளும், குரான் மொழிகளும், பைபிள் மொழிகளும் சிறப்பாக எடுத்தோதப் பெற்றபின், த. நா. கா. தலைவர் திரு. காமராஜ் நாடார் அவர்களும், சென்னை முதலமைச்சர் அவர்களும் பிறரும் அடிகளின் பெருமைபற்றிப் பேசினர்.

திருவரங்கத்தில் :

பிப்ரவரி 12-ம் நாள் நண்பகலில் அமைச்சர்கள் திரு. தி. சு. அவினாசிலிங்கஞ் செட்டியார் அவர்களும், டாக்டர். டி. எஸ். எஸ். ராஜன் அவர்களும், அண்ணலின் சாம்பரைப் பொன்னியாற்றிலே கரைத்துப் பொருமி வாடினர்!

இராமேச்சுரத்தில்:

அண்ணலின் பிடிசாம்பலை இராமேசுவரத்திற் சேர்க்கும் பணியை அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் ஏற்றுப், பல்லாயிரக் கணக்கான மக்களின் கண்ணீர்ப் பெருக்குடனே, புனித நீற்றைத் திருக்கடலிற் சேர்த்தார்.

தமிழகத்தின் தென் முனையில் :

அலைமோதும் துன்ப வுள்ளத்தோடு அமைச்சர் திரு. கே. மாதவமேனன் அவர்கள் காந்தியடிகளின் தூய சாம்பற் பகுதியைக் கன்னியா குமரிக் கடலிலே

கரைத்துக் கண்ணீர் மல்கினர்! அமைச்சர் கன்னியாகுமரிக்குச் சாம்பற் கலயத்தை எடுத்து வரும் வழியில் கொச்சி, திருவாங்கூர் மன்னர்கள் திருக் குடத்திற்கு மலர் மாலைகள் சூட்டி வணக்கம் செலுத்தினர்.

மற்றும் பல இடங்களில் :

காஷ்மீர், காசி, பூரி, கோலாப்பூர், பரோடா, சூரத், பாலன்பூர், ராம்பூர், ஜம்மு, ஐதராபாத், ரங்கூன், மதுரை, பெஜவாடா, திரிகோண மலை, கிரி மலை முதலிய பல்வேறு இடங்களிலும் அண்ணலின் சாம்பற் கரைப்புச் சடங்கு நடைபெற்றது.

நினைப்பார்களாக!

மக்களின் உள்ளத்திலே குடிகொண்ட அடிகளின் பிடி சாம்பல் நாட்டின் பல இடங்களிலும் கரைக்கப்பட்டுள்ளதன் வாயிலாகவேனும் மக்கள், அடிகளின் அன்பு நெறியை—அருள் நெறியைச்—சமநெறியைப் பின்பற்றி உண்மையும் உறுதியும் உடைய உள்ளத்துடன் அவரை நினைப்பார்களாக! அவ்வாறு நினைத்தால் ஊனுடலை விடுத்த அடிகள் ஒளியுடலுடன்—புகழ் மெய்யுடன்—நம்மிடையே இருந்து நாட்டின் உரிமையை உறுதி செய்து உலகம் தலைநிமிர்ந்து நம் நாட்டை நோக்கும்படி மிளிர்வார்.

காந்தியடிகளின் புகழ் வாழ்க!

காந்தீயம் ஓங்குக!!

அரசியலிற் படுகொலைக்கு ஆளான சிலர்

சீசர்—(ரோம் வல்லரசின் பேரரசன் ...கி. மு. 50-40)
ஆபிரஹாம் லிங்கன்—(அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ...1868)
சாதி கார்னுட்—(பிரஞ்சுக் குடியரசுத் தலைவர் ...1894)
ஹம்பர்ட்—(இத்தாலி அரசன் ...1900)
வில்லியம் மாக்கின்ஸி—(அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ...1901)
இடோ இளவரசன்—(ஜப்பான் ...1909)
மாடெரோ—(மெக்ஸிகோ குடியரசுத் தலைவர் ...1913)
முதலாம் ஜியார்ஜ் அரசன்—(கிரீஸ் ...1913)
ஜார் நிக்கோலாஸ் II—(ரஷ்யா ...1918)
ஜாரினு அலெக்ஸாண்டிரியா—(ரஷ்யா ...1918)
டோல்பஸ்—(ஆஸ்திரியா சான்ஸலர் ...1934)
காலிரெஸ்க்யூ—(ருமேனிய முதலமைச்சர் ...1939)
லின் டிராட்ஸ்க்கி—ரஷ்யா ...1940)
அல்லா பக்ஸ்—(இந்தியா ...1943)
ஆங்-சான்—(பர்மிய முதலமைச்சர் ...1947)
பெரியார் காந்தியார்—(1948)

—["மன்றம்" இதழிலிருந்து]

உலகின்  கண்ணீர்

ஆரும் ஜார்ஜ்

அரசரும் அரசியும் :

காந்தியடிகளின் பிரிவு கேட்டு நானும், அரசியும் வருந்தினோம்; பேரதிர்ச்சியடைந்தோம். இந்திய மக்களுக்கு—உண்மையில் மனித சமுதாயத்திற்கே—ஏற்பட்டுள்ள ஈடுசெய்ய முடியாத பேரிழப்புக்காக எங்கள் உள்ளத்தில் வழியும் பரிவு இந்திய மக்களுக்கு உரியது.

கிளமென்ட் அட்லி :

(பிரிட்டிஷ் முதலமைச்சர்)



பலாத்காரத்தாலே காந்தியடிகள் மறைந்த செய்தி எட்டியது. எங்கள் அளவு கடந்த வருத்தத்தை ஆங்கில அரசினர் சார்பாகத் தங்களுக்கு அறிவித்துக் கொள்கிறோம். இந்த வியக்கத்தக்க பெரியாரையிழந்தது இந்த நாட்டில் மட்டுமன்றி எங்குமே துக்கத்தை விளைவிக்கும். மக்களினத்தின் மிகப் பெருந் தொண்டரான காந்தியடிகளின் மறைவால் நாங்கள் ஆற்றொணாத் துயரமடைகிறோம்.



ஜார்ஜ் பெர்னர்ட் ஷா :

[இத் தீச்செய்தியைக் கேட்டதும், உலகம் போற்றும் நாடகப் பேராசிரியரும், சிந்தனைச் சிற்பியுமான 91 - வயதுக் கிழவர்—திரு. ஜார்ஜ் பேர்னார்ட் ஷா உளம் நைந்து கூறியதாவது] :—

அளவுக்கு மீறி நல்லவராக இருப்பது எவ்வளவு தீங்கானது என்பதை இது காட்டுகிறது !

பெதிக் லாரன்ஸ் :

(முன்னாள் இந்தியா மந்திரி)

முப்பது ஆண்டுகளாகத் தெரிந்த என் நெருங்கிய நண்பர்—இந்தியாவின் ஆசிரியர்—நம் காலத்திய பெரியார்—சுட்டுக்கொல்லப்பெற்ற செய்தி என்னைத் திடுக்கிடச் செய்தது. அவருடைய எல்லாப் பண்புகளையும் விட மிகச் சிறந்த—அவருக்கு விருப்பமான—பண்பு எனக்குத் தெரியும் : "தம் சாவுக்காகப் பழிவாங்கக் கூடாது. மேற்கொண்டு இரத்தம் சிந்தக்கூடாது. ஆனால், இந்தியாவிலுள்ள பல்வேறு மக்களை ஒன்றுபடுத்த அது வழிகாட்டியாக இருத்தல்வேண்டும்'' என்று அவர் விரும்பியிருப்பார்.



அவரது உயிர் பிரிந்தது; ஆனால் அவருடைய உயரிய கொள்கைகள் என்றும் வாழும் !

எல். எஸ். அமரி :

(முன்னாள் இந்தியா மந்திரி)

எல்லா ஆங்கிலேயர்களும் மிகவும் வருந்துகின்றனர். பிரிட்டன்-இந்தியா உறவு வகையில் அவருடைய பங்கை வரலாறுதான் முடிவு கூறமுடியும். எனினும் ஒரு குறிப்பிட்ட வழியில் இந்தியாவில் ஆங்கில ஆட்சி முடிந்ததற்கு அவரே பெரிதும் காரணராவார். வரலாற்றில் ஓர் அத்தியாயம் முடிவுறுகிறது.

லார்டு லிஸ்டோவல் :

இது மிகவும் கொடிய அவல நிகழ்ச்சி. காந்தியடிகளின் பிரிவால் இந்தியாவுக்கு மட்டுமேயன்றி, உலகுக்கே பெரிய இழப்பு. ஏனென்றால், இந்தத் தலைமுறையில் சமாதானத்துக்காக நடைபெறும் போராட்டத்திலே தலை சிறந்து விளங்கியவர் அவரே !

சர். எஸ். கிரிப்ஸ் :

(பொருளாதார அமைச்சர்)



இஃது உலகிற்கும் இந்தியாவிற்கும் இணையற்ற அவல நிகழ்ச்சி. நெருக்கடியான நிலைகளில் அமைதியை நிறுவ அவரது செல்வாக்கு இதுவரையிற் பயன்பட்டது. காந்தியடிகள் போன்ற சான்றோர் இப்போது வேண்டியிருக்கத் திடீரென அவர் மறைந்தது பெரிய நட்டம். அவரைவிடச் சிறந்த ஆன்மிகத் தலைவர் நம்மிடையே இருந்ததில்லை என்பதைக் குறிப்பிடல் வேண்டும்.

ரெஜினல்டு ஸோரன்ஸன் :

(தொழிற்கட்சி உறுப்பினர்)

காந்தியடிகள் ஆன்மவலியை விளக்கியவர். அதை அரசியல் துறையிற் கைக்கொள்ளவும் முயன்றவர். இந்தியாவில் மட்டுமன்றி இன்றைய உலகிலும் அவர் செல்வாக்குச் சொல்லுக்கடங்காது. எல்லா நெறிகளிலும் நாம் அவருடன் உடன்பட முடியாதெனினும் அவருக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

வான்சிட்டாடு பிரபு :

காந்தியடிகளின் இறப்பு நமது இக்கால நாகரிகத்தின் இழிநிலையைக் குறிக்கிறது. நமது காலத்தில் ஒரு துறவி கூடக் காவலின்றியிருக்க முடியவில்லை ! இரண்டு உலகப் பெரும் போர்களின் விளைவும், அடக்குமுறையாட்சி பரவியதன் விளைவுமே இந்நிலை.

வெஸ்ட் மின்ஸ்டர் ஆர்ச்சி பிஷப் :

இரு கூட்டரசாங்கங்களில் அமைதி ஏற்படுத்தக் காந்தியடிகள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் ஒற்றுமையை விரும்பும் நாடுகளாற் பாராட்டப்பெற்றிருக்கையில் அவர் படுகொலையான செய்தி என்னைத் திடுக்கிடச் செய்தது !

கிளமெண்டு டேவிஸ் :

(லிபரல் கட்சித் தலைவர்)

இந்த நிகழ்ச்சியால் இருவகை விளைவுகள் ஏற்படலாம் : பகைமை மிகலாம். அல்லது பொறுமையாலும் பூசலாலும் என்ன நிகழ்ந்து விட்டதென்பதை உணர்த்தி மக்களுக்கு ஒற்றுமையுணர்ச்சியை உண்டாக்கலாம்.

அடிஸன் பிரபு:
(பிரபுக்கள் அவைத் தலைவர்)

உலகத்திற்கு வாழ்க்கை வழிகாட்டியாக இருந்த பெரியார் ஒருவரின் பிரிவால் நாம் எல்லோருமே துயருறுகிறோம்.

ஏ. வி. அலெக்சாண்டர்:
(பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர்)

வரலாற்றில் என்றும் நிலைத்து நிற்கும் வாழ்வின் சிகரமாக விளங்கிய ஒரு சிலரில் காந்தியடிகளும் ஒருவர். ....மக்கள் எல்லோரையும் ஒன்று சேர்க்கும் பணியில் அஹிம்சையைக் கடைப்பிடித்ததாலும், அவருடைய உயரிய கொள்கைகளினாலுமே அவர் புகழ் என்றும் நிலைத்து நிற்கும்.

ஹெர்பர்ட் மோரிஸன்:

காந்தியடிகள்
மதிப்பிற்குரிய
மாபெரும்
பெரியார்.



ஆர்தர் ஹெண்டர்ஸன்:
(பிரிட்டிஷ் விமான அமைச்சர்)

காந்தி மனித வரலாற்றில் மிகப் பெரிய ஆத்மசக்தி படைத்தவர். அஹிம்சையின் உயரிய சின்னம்; மக்களிடையே அமைதியும், நட்புரிமையும் வளர்வதற்காகவே

அவர் தம் வாழ்நாள் முழுமையும் செலவிட்டார். இப்போது அவருடைய பருவுடல் மறைந்துவிட்டது. தம் நாட்டுமக்களுக்கு மட்டுமன்றி, உலகிலுள்ள ஆண் பெண் பாலார் அனைவருக்கும் அவருடைய ஆன்மா வழிகாட்டும் சிகரமாக விளங்குகின்றது. மக்கள் இனம் பலாத்காரத்தையும், பகைமையையும், வெறுப்பையும் ஒழிக்கவும், உலக சகோதரத்துவ அடிப்படையில், பெருந்தன்மை, நேர்மை, இரக்கம், அமைதி இவற்றோடு ஒழுங்கான அன்பு நெறியைக் காணவும் அது வழிகாட்டும்.

வேவல் பிரபு ;

காந்தியாரின் மரணம், இந்திய ஒற்றுமைக்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.



வின்ஸ்டன் சர்ச்சில் :

இந்தப் பெரும்
பாதகச் செயல்
என்னைத்
திடுக்கிடச்
செய்தது !

பென்னர் பிராக்வே :

காந்தியடிகளின் மறைவால் உலக வரலாறு ஈடற்ற தலைவரை இழந்துவிட்டது !

பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சி:

காந்தியடிகள் கொலையுண்டது இந்தியாவிற்கும் உலகிற்கும் கொடிய தாக்குதலாகும். வகுப்புவாதத்தை எதிர்த்துப் போரிட்டுத் தம் உயிரை வழங்கினர். அவர் வாழ்நாள் வகுப்பு ஒற்றுமைக்காக வழங்கப்பட்டது. அவ் வேலை நீடிக்கவேண்டும்.

ஆங்கில அரசியல் அலுவலக அறிக்கை :

காந்தியடிகள் மடிந்தாரென்ற அவலச் செய்தி ஆங்கில அரசாங்கத்தாருக்குப் பேரதிர்ச்சியை உண்டுபண்ணிவிட்டது. எவரும் தமது நாட்டு வரலாற்றில் இவருக்குமேல் அதிகப் பங்கெடுத்ததில்லை. வாழ்நாளெல்லாம் இவர் ஒற்றுமைக்காக முயற்சிசெய்தார். பலாத்காரத்தைக் கண்டித்தார். உலகிலுள்ள எல்லா மக்களுக்கும் அவர் மறைவு பெரும் இழப்பாகும். குழப்பம் நிறைந்த காலத்தில் அவருடைய அமைதியான அறநெறித் தலைமை நலந்தரும் சான்றாக இருந்துள்ளது. பிரிட்டனும் இந்தியாவின் துக்கத்தைப் பகிர்ந்துகொள்ளும். அவர் இறுதிக் காலத்தில் வகுப்புவாதத்தை ஒழிப்பதிலும், பொதுநலத்திலே இந்தியர் பங்கு பெறும்படி செய்வதிலும் வெற்றிபெற முயற்சி செய்தார்.

அவர் சான்று பின்பற்றப்படும் என்பதும், அவரது அறநெறிச் செல்வாக்கு ஒற்றுமை வழியில் இன்னும் மக்களுக்கு வழிகாட்டுமென்பதும் ஆங்கில அரசினரின் நம்பிக்கை.

அமெரிக்கத் தலைவர் ட்ரூமன் :



காந்தியடிகள் இந்தியாவின் பெருமை மிக்க அரசியல் தலைவர். அதுமட்டுமா? அவர் உலக மக்களின் தலைவராகவும் விளங்கினார்.

தம் மக்களை மேம்படுத்தத் தன்னலப் பற்றில்லாமல் அவர் உழைத்தார். இந்தியத் தலைவர்களிற் பலர் அவர் மாணவர்கள். அவர்களுக்குக் காந்தியடிகளின் அருந்தவ நெறி, நிலையான எடுத்துக்காட்டாக நிலவுவது உறுதி.

இந்திய மக்களை மட்டுமன்றி, உலகமக்க ளெல்லோரையுமே அவரது பற்றற்ற திருப்பணி ஊக்கப்படுத்தி ஒற்றுமையையும் சமநெறியையும் அடைவிப்பதில் ஈடுபடுத்தும் என்பதை நான் அறிவேன். காந்தியடிகள் சகோதரத்துவம் சமத்துவம் என்னும் இரண்டின் வடிவமாக விளங்கினார்.

[இந்திய கவர்னர் ஜெனரலுக்கு அவர் விடுத்த செய்தி]:—நான் மிகவும் வருந்துகிறேன். உங்களுக்கும் இந்திய அரசினருக்கும் இந்திய மக்களுக்கும் என் உள்ளம் நிறைந்த துக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தலைவரும் ஆசிரியருமான அவருக்கு இந்தியாவில் மட்டுமன்றி உலகில் எங்குமே செல்வாக்கு இருந்தது. சமாதானத்தை விரும்பும் எல்லா மக்களுக்கும் அவர் சாவு பெருந்துக்கத்தை விளைவிக்கிறது.

சகோதரத்துவத்தையும் சமாதானத்தையும் நிலைநிறுத்தும் திருப்பணிக்காக மக்களில் மற்றொரு மாவீரர் வீழ்ந்துவிட்டார்!

சீன அரசினர் :

இந்திய சுதந்திரச் சிற்பியான மகாத்மா காந்தி கொலை செய்யப்பட்டது சகிக்கவொண்ணுத நட்டமாகும். வாழ்க்கையில் உயர்ந்த குறிக்கோள்களின் சின்னமாக அவர் விளங்கினுர். ஒன்றுபட்ட இந்தியாவைக் காணும் முயற்சியில் அவருக்கு நேர்ந்த மரணமானது அவரை மிகவும் சிறந்த பெரியாராக்குகிறது. மகாத்மாவின் மறைவால் ஏற்பட்ட இழப்பிற்காகச் சீனு மிகவும் வருந்துகிறது.

ஷூமன் :

(பிரஞ்சு முதலமைச்சர்)

அறநெறிக்குச் சிறப்புத் தரும் எல்லா நாடுகளையும் மக்களையும் காந்தியடிகளின் அவலச் சாவு அழுகையில் ஆழ்த்தியுள்ளது! இந்திய சர்க்காருக்கும் மக்களுக்கும் எங்கள் துக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பிரஞ்சுப் பாராளு மன்றத் தலைவர் :

நாட்டுத் தொண்டரும் பேரறிஞருமான காந்தியடிகள் பகைமையைவிட அன்பே வலிமை யுள்ளது என்பதை உலகிற்கு உணர்த்தினுர்.

பிராங்காய் மாரியாக் :

(பிரஞ்சு நாவலாசிரியர்)

வேறெந்த நாட்டிலும் ஒரு முதியவரின் உண்ணு நோன்பினுற் போர்க் கருவிகளைக் கீழே வைத்துவிடும்படி மக்களைக் கட்டுப்படுத்த இயலாது. அவர் மக்கள் குழுவிற்கே முக்காலத்திற்கும் முதல்வர்.

தளபதி ஸ்மட்ஸ் :

(தென் ஆப்பிரிக்க முதலமைச்சர்)

மனிதர்களுக்குள்ளே மன்னர் மறைந்துவிட்டார். ஈடுசெய்யமுடியாத நட்டமடைந்த இந்தியாவோடு சேர்ந்து நாங்களும் துயருறுகிறோம்.

தி வேலரா :

(அயர்லாந்தின் அரசியல் தலைவர்)

அயர்லாந்து, இந்தியா, ஆகிய நாடுகளின் விடுதலைப் போரின் சாயல் ஒன்று போன்றுளது. இந்தியர்கள் தங்கட்கு உரிமையைப் பெற்றுத்தந்த தலைவரை இழந்தனர். இந்திய மக்களுடன் நாமும் அவலமுறுகிறோம். தம் உயிரை வழங்கியதன் வாயிலாகத் தாம் செய்யவேண்டிய சேவை முழுவதையும் செய்துவிட்டார். அவர் காதலித்த உடன்பிறப்பியல் அவர் உயிர்க்கொடையின் வாயிலாக இந்திய மக்களிடம் ஏற்பட வேண்டுமென நாம் இறைவனை வேண்டுவோம்.

டாக்டர் ஷுமாச்சர் :

(ஜெர்மன் குடியரசுத் தலைவர்)

மக்கட் பண்பின் சான்றாகக் காந்தியடிகள் நம்முடன் என்றும் வாழ்வார். முன்னையைவிடப் பெருந்திண்மையாக அவராற்றல் விளங்கும்.

டச்சு முதலமைச்சர் :

காந்தியடிகளின் சாவினால் அதிர்ச்சியடைந்து விட்டேன். உடன் வாழும் மக்களுக்காக அவர் எத்தகைய துறவையும் பெரிதாகக் கருதவில்லை.

ஜப்பான் முதலமைச்சர் :

ஒற்றுமை அன்பராகிய காந்தியடிகள் கொலையுண்டது திடுக்கிடும் செய்தி. அவர் விருப்பத்தை இந்திய மக்கள் நிறைவேற்றுவார்களென நம்புகிறேன்.

எகிப்து ஆஜம் பாஷா :

இதைவிடக் கொடுமையான குற்றத்தை மக்களுக்கு இழைக்கவொண்ணாது !

எகிப்திய மன்னர் :

கிழக்குத் திசை ஒரு பெரிய அரசியல் அறிஞரை இழந்துவிட்டது. உலகமும் மக்கட் குழுவும் தங்கள் மாபெருந் தலைவரை யிழந்தன.

ஆஸ்திரேலிய முதலமைச்சர் :

மக்களினத்தின் நலனுக்கும் ஒற்றுமை நெறிக்கும் உழைத்தவர் என்ற முறையில் ஆஸ்திரேலியா என்றும் அவரை நினைவில் வைத்துக்கொள்ளும். இந்திய சர்க்காருக்கும் மக்களுக்கும் எங்கள் ஆழ்ந்த வருத்தம்.

எர்னஸ்ட் பெவின் :

(பிரிட்டிஷ் அயல்நாட்டு அமைச்சர்)



இக் கொடிய நிகழ்ச்சியால் இந்தியாவும் அகில உலகும் அடைந்துள்ள இழப்பிற்காக நாங்கள் எல்லோரும் எவ்வளவு வருந்துகிறோம் என்பதைத் தக்கவாறு தெரிவிக்கச் சொற்களே தடுமாறுகின்றன.

காந்தியின் இறுதி முயற்சிகளை நாங்கள் எல்லோரும் மிகவும் வியப்போடு கவனித்துக்கொண்டு வந்தோம். ஆனால் இச் செய்தி ஓர் பேரிடியாக வந்தது !

அவர் எதற்காகப் பாடுபட்டாரோ அந்த அமைதியை இந்தியா காணும் என்பதே எங்கள் ஆழ்ந்த நம்பிக்கை.

ஜார்ஜ் மார்ஷல் :

(அமெரிக்கா)

மகாத்மா காந்தியின் பிரிவு பற்றிய கொடிய செய்தி கேட்டு அமெரிக்கா அதிர்ச்சியடைந்தது. அஃது இந்தியா

வோடு சேர்ந்து துன்பப் பெருஞ் சுமையிலும், இழப்பிலும் பங்கு கொள்கிறது. அமெரிக்க மக்களுக்கும் இந்திய மக்களுக்குமுள்ள இணக்கத்திற்கு இந் நாட்டிற் காணப்பட்ட துயர உணர்ச்சியே சான்ருகும்.

பேர்ள் பக் அம்மையார் :

(பென்சல்வேனியா நாவலாசிரியை)

என் கணவர் திடீரென்று எங்கள் அறைக்குள்ளே வந்தார். 'வானெலி இப்போது ஒரு பயங்கரச் செய்தி சொல்லிற்று ! காந்தி இறந்தார் !' என்ருர். சகிக்க முடியாத அந்த விவரங்களைக் கேட்டோம் ! தம் மக்களுக்குச் சேவை செய்வதில் தமது வாழ்க்கையையே ஈடுபடுத்திய சமாதான வாதியான காந்தி கொலையுண்டார்! எங்களுடைய பத்து வயது மகன் கண்ணீர் சொரிந்துகொண்டு, " துப்பாக்கி செய்ய யாருக்குமே தெரியாமல் போயிருக்கலாகாதா ?'' என்ருன்.

* * *

பலாத்காரத்தினுல் காந்தியடிகள் இறந்தது, மேலை நாட்டில் வளரும் இந்தியாவின் பெருந் தன்மைக்கு மட்டுமன்றி, மக்களின் விடுதலை இயக்கத்திற்கே பேரடி கொடுத்ததாகும். மக்களின் உரிமை நோக்கத்தின் எதிரிகள் இன்று பெரு மகிழ்ச்சி யடையலாம். ஆனுல் மனித வரலாற்றின் மாபெரும் பெரியோர்களில் ஒருவரான அவரது பிரிவால் ஏனையோர் அவலமே எய்துகின்றனர். காந்தியின் பிரிவு நெருக்கடியான நேரத்தில் ஏற்பட்டுவிட்டது. வீர மரணம் எய்தியவர்க்குச் செய்ய வேண்டிய வணக்கத்தோடு மரியாதையும் மேலோங்குகிறது.

ஹான்ஸ் ஹெட்ராப்ட் :

(டென்மார்க் முதலமைச்சர்)

பெரும் போரினுல் ஏற்பட்ட விலங்கியலுக்குக் காந்தியடிகள் இரையானுர்.

போர்ச்சுகல் முதலமைச்சர் :

உலகத்திற்கே ஒரு பெரிய ஒழுக்கத்தின் வடிவமாக விளங்கிய மகாத்மா காந்தியின் கோரமான மரணச்செய்தியினால் வருந்துகிறேன். போர்ச்சுகீஸ் அரசாங்கத்தின் ஆழ்ந்த உண்மையான இரங்குதலை அறிவித்துக் கொள்கிறேன்.

ஆப்கானிஸ்தான் முதலமைச்சர் :

இந்திய மக்களின் பேரன்பிற்குரிய தலைவரும், மாபெருந் தேச பக்தரும், அமைதி விரும்பியுமான மகாத்மா காந்தியின் கோரமான படுகொலைச் செய்தி கேட்டு நாங்கள் பேரதிர்ச்சி யடைந்து விட்டோம்!

டாக்டர் சுகர்ணோ :

(இந்தோனேஷியத் தலைவர்)

காந்தி யடிகளின் இறப்பு என்னும் கொடிய செய்தி எங்களுக்குப் பேரதிர்ச்சியையும் துன்பத்தையும் கொடுத்தது. இந்தியாவுக்கு மட்டுமன்றி மனித இனம் முழுமைக்குமே இஃது ஈடு செய்ய வொண்ணாத இழப்பாகும்.

சீன் ஓகெல்லி :

(அயர்லாந்தின் தலைவர்)

மகாத்மா காந்தியின் கோர மரணத்தினால் துன்புறும் இந்திய அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் எனது ஆழ்ந்த இரக்கத்தை உரியதாக்குக!

தம் நாட்டிற்கேற்ற பணியின் மூலம் மாபெருந் தியாக வாழ்க்கையால் எல்லோருக்கும் உணர்ச்சி யூட்டிய ஓர் பெரியாரின் பிரிவால், எல்லா நாடுகளிலுமுள்ள விடுதலை விரும்பிகளோடு சேர்ந்து அயர்லாந்து மக்களும் துயரமடைகின்றனர்.

ஜெனரல் மக் ஆர்தர் :

இத்தகைய பெரியாரின் படுகொலையைவிட மிகவும் புரட்சிகரமான ஒன்று தற்கால உலக வரலாற்றில் நடைபெறவே யில்லை. எந்தப் பிரச்னையையும் தீர்ப்பதற்குப் பலாத்காரத்தைப் பயன்படுத்துவது மிகவுந் தவறு என்பதோடு மட்டுமல்லாமல், பலாத்காரம் தனக்குத் தானே அழிவு தேடக்கூடிய கிருமிகளைக் கொண்டதாகும், என்று காந்தியார் நம்பினர். மனித நாகரீக எழுச்சி பிழைக்க வேண்டுமானல், நாளடைவில் எல்லா மக்களும் இந்த நம்பிக்கையைத் தழுவாமலிருக்க முடியாது. காந்தியார் காலங் கடந்து முன்னேறும் தீர்க்கதரிசிகளில் ஒருவராகும்.

விடேலா :

(சில்லி - தலைவர்)

அன்பை ஆயுதமாகக் கொண்ட மக்களின் தலைவர் காந்தி. எல்லா அரசியற் குற்றங்களும் கண்டிக்கத் தக்கனவென்ருல், இச் செய்தி அனைத்தினும் மிக மிகக் கொடுமையானது !

கவுன்ட் ஸ்போர்ஸா :

(இத்தாலிய அயல்நாட்டு அமைச்சர்)

மனித இனம் முழுமைக்குமே பேரிழப்பாகிவிட்டது. இத்தாலி முழுவதும் உங்களோடு ஆழ்ந்த வருத்தத்தில் மூழ்குகிறது !

சிப்லி :

(ஆஸ்திரேலிய முதலமைச்சர்)

மனித இனத்தின் நன்மைக்காகவும், அமைதி நெறிக்காகவும் பாடுபட்டவர் என்று காந்தியை ஆஸ்திரேலியர் என்றும் நினைவில் வைத்திருப்பார்கள்.

தக்கின் - நூ :

(பர்மிய முதலமைச்சர்)

இந்தியாவிலிருந்து வந்த இந்தக் கொடிய செய்தியால், பர்மிய அரசாங்கமும், மக்களும், மிகுந்த துயரத்தில் ஆழ்கின்றனர். மகாத்மா காந்தியின் பிரிவு, பர்மாவுக்கும் பேரிழப்பாகவே கருதுகிறோம். மாபெரும் இந்திய முனிவரும் தலைவருமான காந்தியின் பிரிவு ஈடு செய்ய முடியாதது.

டாக்டர் பீல் :

(டச்சு முதலமைச்சர்)

சகோதர மனிதர்களின் நன்மைக்காகப் பணியாற்றுவதில் மகாத்மாவுக்குள்ள பக்தியால் எத்தகைய தியாகத்தையும் அவர் பெரிதாக மதிக்கவில்லை.

லின் - யூ - டாங் :

(சீனப் பேராசிரியர்)

காந்தி தற்காலம் இந்தியா பெற்றிருந்த ஒரே முனிவரும் மகானுமாவார். இந்தியாவைப் போன்ற ஒரு நாட்டிலேயோ அல்லது ஆசியாவைப் போன்ற ஒரு கண்டத்திலேயோதான், ஆத்மீக பலத்தினுல் ஒருவர் மிகப் பெரிய அரசியல் செல்வாக்குப் பெற முடியும்.

மேலை நாடுகளில் காந்தீயத்தைப் போன்ற ஒரு தத்துவம் இயங்க முடியாது. மேலை நாட்டினர் கீழை நாட்டு அரசியலில் தலையிடக்கூடாது என்பதை இஃது அவர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.



சியாங் - கே - ஷேக்கும் அவரது மனைவியாரும் :

மகாத்மா காந்தியின் படுகொலைச் செய்தி கேட்டுத் திடுக்கிட்டு ஆழ்ந்த துயரத்துக்கு ஆளானோம்.

அமைதிக்காகவும், அஹிம்சைக்காகவும் போராடிய வீரர் பலாத்காரத்தினால் வீழவேண்டி நேர்ந்தது உண்மையில் உள்ளந் துடிக்கச் செய்யும் கொடுமையாகும். உங்களுக்கும், காந்தியாரின் குடும்பத்தாருக்கும், காங்கிரசுக் கட்சிக்கும், இந்திய மக்களுக்கும், சீன மக்களும் நாங்களும் எங்கள் உளமார்ந்த இரக்கத்தை உரியதாக்குகிறோம்.



ரோக்ஸாஸ் :

(பிலிப்பைன் தலைவர்)

நம் காலத்தில் மனித விடுதலைக்காகப் போராடிய முதன்மையான வீரர்களில் காந்தியார் ஒருவர். எங்கும் உண்மையான விடுதலை வேட்கையுள்ளோர் அனைவரும் அவரது பிரிவால் துக்கமுறுவர்.

தலை லாமா :

(திபெத் மன்னர்)

மகாத்மா காந்தி யடிகளுடைய இறப்பைக் கேட்டதும் மிகவும் வருந்தினேன். அவர் அமைதியை நிலவச் செய்யவென்றே தோன்றிய மகான். அவருடைய ஆன்மா அமைதியடைய வேண்டுகின்றேன்.

நேப்பாள மன்னர் :

நானும், என் உடன் பிறந்தார்களும், நேப்பாள மக்களும் மகாத்மா காந்தி கொலை செய்யப்பட்டதைக் கேட்டதும் அதிர்ச்சி யடைந்தோம்.

எச். எஸ். எல். போலக் :

(காந்தி யடிகளின் நண்பர்)

பகைவனுக்கும் மதிப்பளித்தவர் காந்தி யடிகள். எப்பொழுதும் அவர் தம் மனச் சாட்சியின்படியே தான் நடப்பார்.

டாக்டர் ஹேவ்லெட் ஜான்ஸன் :

(காந்தி யடிகளின் நண்பர்)

மகாத்மா காந்தி மாந்தர் இனத்தின் உண்மையான நண்பர்களில் ஒருவர். காந்தி இறக்கவில்லை; அவர் வாழ்கின்றார்! கடவுளின் மக்கள் ஒருநாளும் இறப்பதில்லை.

டாக்டர் ஜான் ஹேன்ஸ் ஹோல்ம்ஸ் :

(அமெரிக்கா)

காந்தியார் கௌதம புத்தருக்குப் பின் தோன்றிய சிறந்த மாபெரும் இந்தியரும், கிறிஸ்துவுக்குப் பின் தோன்றிய உலகப் பெரியாரும் ஆவார்.

நஹாஸ் பாஷா :

(எகிப்தியத் தலைவர்)

அவ்ரது இறப்பு சிறந்த குறிக்கோள்களின்மீது விழுந்த பலமான அடியாகும்.

நொக்ராசி பாஷா :

(எகிப்திய முதலமைச்சர்)

இந்து முகம்மதிய ஒற்றுமைக்காக அரும்பாடு பட்டு வருங் காலத்திலே காந்தியடிகள் கொலை யுண்டது உலகையே திகைப்பித்தது !

கமால் சந்திரிகி :

(குடியரசுக் கட்சித் தலைவர்)

காந்தி யடிகளை உலகத் தலைவர்களில் ஒருவராக நான் கருதுகிறேன். அவரது சாவு உலகிற்கே பேரிழப்பாகும்.

லியான் புளூம் :

(பிரெஞ்சு முன்னாள் முதலமைச்சர்)

நான் காந்தியைக் கண்டதில்லை; அவர் பேசும் மொழியை அறியேன்; அவர் நாட்டில் அடி யெடுத்து வைத்ததில்லை. என்றாலும் யாரோ ஒரு நெருங்கிய உறவினரை இழந்ததுபோல் எனக்குத் துக்கம் உண்டாகிறது !

எம். ஆண்ட்ரே குரோமிகோ :

[சோவியத் பிரதிநிதி U. N. O.]

சோவியத் பிரதிநிதிகளின் சார்பாக, காந்தியின் கோர மரணத்திற்கான ஆழ்ந்த இரங்குதலை இந்தியப் பிரதிநிதிகளுக்கும் இந்திய மக்களுக்கும் அறிவித்துக்கொள்கிறேன்.

ஜெனரல் ஆண்ட்ரூ மெக்நாட்டன்:

[கனடா பிரதிநிதி]

காந்தியாரின் மரணம் இந்தியாவுக்கு மட்டுமல்ல, எங்கும் நன்மை நாடும் மக்கள் எல்லோருக்குமே ஒரு பேரிடியாகும். அவர் பிரிந்த துக்கத்தில், அமைதியையும் விடுதலையையும் தேடுவதிலே, மனிதர்களின் மனத்தை அவரது செல்வாக்கு என்றும் பண்படுத்தும் என்று, அவருடைய குறிக்கோள்களிற் பங்குகொள்ளும் நாம் நம்புகிறோம்.

டாக்டர் டி. எப். சியாங்:

[சீனப் பிரதிநிதி]

மகாத்மா காந்தியின் பிரிவினால் ஆசியா தன்னிடத்தே வாழ்ந்த மிகப் பெரிய முனிவரை இழந்துவிட்டது! இந்தப் பழைய கண்டத்தின் அறிவு பெருந்தன்மை இவற்றின் சின்னமாக மகாத்மா காந்தியைப் போல் வேறொரு மனிதன் தோன்றவேயில்லை. அவருடைய கொள்கைகள் உலகப் பொதுத்தன்மை வாய்ந்தன.

வாஸிலி தடரா செங்கோ:

[உக்ரெய்ன் பிரதிநிதி]

உள்நாட்டு அமைதி, மக்களின் நன்மைக்காக மட்டுமல்ல, இந்திய நாட்டைக் காப்பாற்ற விரும்புபவர்களின் நன்மைக்காகவே மிகவும் அவசியமென்று காந்தியார் தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு நம்பிக்கை யூட்டினார். நிலையான அரசாங்கத்தை ஏற்படுத்தவும், முழு உரிமையை எழுப்பவும் போராடும் இந்தியமக்களின் வேலையைக் காந்தியாரின் மரணம் தடை செய்யாது என்பதே எனது நம்பிக்கையும் முடிவும்.

டாக்டர் ஜோஸ் ஆர்ஸ் :
(அர்ஜென்டைன பிரதிநிதி)

காந்தியார் அவரது காலத்தின் மிகப் பெருந் தலைவர்களில் ஒருவர் என்பதில் ஐயமில்லை. அவரது வாழ்க்கையிலும் நல்லுரைகளினாலும் ஆன்மாவின் வேகத்தையும் ஆற்றலையும் அவர் விளக்கினார். அவர் எல்லோருக்கும் ஒரு பெரிய எடுத்துக்காட்டாக விளங்கினார்.

எம். கை-டி-லா டூர்னெல்லே :
(பிரெஞ்சு நாட்டுப் பிரதிநிதி)

காந்தியாரின் மரணத்தால் மனிதப் பண்பின் மாபெரும் திருவடிவங்களில் ஒன்று மறைந்தது. காந்தியின் பெயரை அறிந்து மதிக்காத பிரெஞ்சுக்காரன் ஒருவன்கூட இல்லை. குறிக்கோள்களுக்காக மடிந்து, வீர மரணத்தால் சிறந்த புகழுயிரைப் புனைந்துகொண்டார்.

எச். என். பிரெயில்ஸ் போர்டு :
[லண்டன்]

ருஷ்யாவுக்கும் நமக்கும் இடையே உள்ள கருத்து வேற்றுமைகளைப் போக்கிக்கொண்டு அமைதிக்கான வழியைக் காண, காந்தி யவர்களின் பெயரால் பிரிட்டன் ருஷ்யாவை அணுக வேண்டும்.

இருதரப்பாரும் கண்டு பேசப் பண்டித நேரு தம் நாட்டில் வசதி யளித்தால் இரு அரசாங்கத்தின் பிரதிநிதிகளும் டில்லியில் கூடிப் பேசலாம். திரு. பெவினுக்கும் பண்டித நேருவுக்கும் இந்த யோசனையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாடுவும் - ஜி. எம். நாயக்கரும் :
[தென் ஆப்பிரிக்கத் தலைவர்கள்]

எந்தக் குறிக்கோளிற்காக மகாத்மா வாழ்ந்து தம் உயிரைக் காணிக்கை யாக்கினரோ, அந்த உயரிய குறிக்

கோளிற்காகப் பாடுபடத் தென் ஆப்பிரிக்காவிலுள்ள எல்லா மதத்தினரும் உறுதிமொழி கூறியுள்ளனர்.

ஹென்ரி கிரேடி :

[இந்தியாவிலுள்ள அமெரிக்கத் தூதர்]

மகாத்மா காந்தி உலக மக்கள் எல்லோருக்கும் சொந்தமானவர். அவருடைய மரணத்திற்குப் பிறகு நமக்கு ஏதாவது ஆறுதல் ஏற்பட முடியுமானால் அதற்கு ஒரே ஒரு காரணந்தான் இருக்க முடியும். அஃதாவது அவரது ஆன்ம பலத்தின் உயர்வும், செல்வாக்கும் அவர் உயிர் வாழ்ந்தபோது இருந்ததைவிட இப்போது மிகுதியாக நமக்குத் தென்படுகின்றன. அந்த மகான் மறைவு பற்றி உலகமே இன்று துயரத்தில் ஆழ்ந்திருக்கிறது. மனித இனத்தின் ஆன்மீக உயர்வுக்காக அவர் பாடுபட்டார். அவருடைய உயர்வு அவரது உடலுடன் மறைந்து விடாது. காலம் செல்லச் செல்ல மேன்மை உயரும்.

சேனு நாயகா :

[இலங்கையின் முதலமைச்சர்]

இக் கொடிய நிகழ்ச்சியால் இந்தியாவுக்கு மட்டுமன்றி உலக முழுமைக்குமே என்ன தீங்கு விளையுமென்று நினைக்கவும் இயலாத அத்துணை அதிர்ச்சி இது !

ஐக்கியநாட்டுக் கழகம் (U. N. O,) :

காந்தியடிகள் மறைந்துவிட்டதை அறிந்து ஐக்கிய நாட்டுக் கழகத்தினர் எழுந்து நின்று மரியாதை செய்தனர். மூன்றுநாள் வரையில் கழகக் கொடிகள் தாழ்ந்து பறந்தன. கழகத்தின் செயலாளர் 'பைரன் பிரைஸ்' என்பவர் பண்டித நேருவுக்குத் தெரிவித்த செய்தியில், "காந்தியடிகளின் மறைவால், மக்கள் குழுவுக்கே ஈடு செய்யமுடியாத பெரிய குறை ஏற்பட்டுவிட்டது. உலக மக்களுக்கிடையே நேர்ந்த பல கவலைக்

கிடமான இடையூறுகளைத் தடுப்பதற்கு ஆன்ம வலிமை படைத்த ஒரு சான்றோர் வழிகாட்ட வேண்டிய இப்போது அவர் மறைந்தது பெருந் தீவினை. ஐக்கிய நாட்டுக் கழகத்தின் உயர்ந்த கொள்கைகளை யெல்லாம் அவர் கொண்டிருந்தார்,'' என்று கூறினர்.

ஐக்கிய நாட்டுப் பாதுகாப்புக் கவுன்சில் :

இந்தக் கவுன்சில் உறுப்பினர்கள் திடுக்கிட்டனர். கவுன்சில் ஒத்திவைக்கப்பெற்றது. அதன் தலைவர் 'உலகம் காந்தியடிகளின் பொன்மொழிகளைக் கடைப் பிடிக்க வேண்டும்,' என்ருர்.

சர். என். கோபாலசாமி ஐயங்கார் திடுக்கிட்டுப் பண்டித நேருவுக்கு மனமுடைந்து போகாதிருக்கும்படி தந்தி கொடுத்தார். பாதுகாப்புக் கவுன்சிலுக்குத் தம் நன்றியை (வருத்தம் தெரிவித்ததற்காக) அறிவித்தார்.

ஐக்கிய அமெரிக்கக் காங்கிரஸ் :

பிப்ரவரி 5-ம் நாள் நடைபெற்ற, ஐக்கிய அமெரிக்கக் காங்கிரஸின் பிரதிநிதிகள் கூட்டத்தில், மகாத்மா காந்தியின் சிறந்த ஞானத்திற்கும் தலைமைக்கும் நினைவுச் சின்னமாக அவரது உருவச்சிலை யொன்றை வாஷிங்டனில் நிறுத்த வேண்டுமென்ற தீர்மானத்தைத் திரு. இம்மேனுவேல் ஸெல்லர் கொண்டு வந்தார்.

பிரிட்டிஷ் பாராளு மன்றம் :

பிரிட்டிஷ் பாராளு மன்றத்தில் பிப்ரவரி 4-ம் நாள் திரு. ரெஜினல்ட் ஸோரன்ஸன் தலைமையில் மகாத்மா காந்தி நினைவுக் கூட்டம் நடைபெற்றது.

பெல்ஜியன் பாராளு மன்றம் :

பிரஸ்ஸல்ஸ் நகரில் பிப்ரவரி 3-ம் நாள் நடைபெற்ற பெல்ஜியன் பாராளு மன்றத்தில், தலைவர் பிரான்ஸ் வான் காஞ்லெர்ட், மகாத்மா காந்தியின் மறைவு குறித்து மிகவும் உருக்கமாய்ப் பேசினார். அவர் பேசுகையில் அங்கத்தினர் எல்லோரும் மௌனமாக எழுந்து நின்று மரியாதை செலுத்தினர்.

பிரெஞ்சு நாட்டின் சட்ட சபை :

பாரிஸ் மாநகரில் சனவரி 31-ம் நாள் நடைபெற்ற கூட்டத்தில், முதலமைச்சர் ராபர்ட் சூமனால் தயாரிக்கப் பின்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது :—

"ஆத்ம சக்தியால் ஆட்கொள்ளப்பட்டு எல்லா மக்களும், எல்லா நாட்டினரும் துக்கத்தில் ஆழ்ந்திருக்கின்ற—மகாத்மா காந்தி கொலை செய்யப்பட்ட—இந்த நேரத்தில் இந்தப் பிரெஞ்சு நாட்டுச் சட்டசபை இந்திய அரசினருக்கும், மக்களுக்கும் தனது ஆழ்ந்த இரக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

காந்தியடிகளைப் பிரெஞ்சு நாட்டின் நண்பர் என்ற முறையிலும், நாட்டுப்பற்று மிக்கவர் என்ற வகையிலும், எல்லாவற்றிற்கும் மேலாக உலகத்திற்குப் 'பகைமையை விட அன்பே உயர்ந்தது' என்ற உண்மைக்கு எடுத்துக் காட்டாயிருந்த சிந்தனையாளர் என்றதனாலும் இச் சபை மரியாதை செலுத்துகின்றது."

செக்கோஸ்லோவாக்கியா சட்ட சபை :

பிப்ரவரி 3-ல் பிரேக் நகரில் நடைபெற்ற செக்கோஸ்லோவாக்கியா சட்ட சபையில் மகாத்மா காந்தியின் பிரிவுபற்றித் தலைவர் எம். ஜோஸப் டேவிட் மிக உருக்கமான சொற்பொழிவாற்றினார். அவர் பேசும்போது உறுப்பினர்கள் எல்லோரும் எழுந்து நின்று மகாத்மாவுக்கு வணக்கஞ் செலுத்தினர்.

ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம் :

அண்ணலின் பிரிவுபற்றி ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் ஓர் இரங்கற் கூட்டம் பிப்ரவரி 4-ல் நடைபெற்றது. டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன், பேராசிரியர் முர்ரே முதலியோர் காந்தியடிகளின் மாண்பை விளக்கிப் பாராட்டினர்.

இலங்கைச் சட்ட சபை :

இலங்கைச் சட்ட சபையில் முதன் மந்திரி சேனநாயகா அடியிற் குறித்த தீர்மானத்தைக் கொணர்ந்து நிறைவேற்றினர்.

“ஒளியின் சிகரம் அணைக்கப்பட்டு விட்டதுபோன்று தோன்றுகின்றது. ஆனல் உண்மையில் அவ்வாறு இருக்க முடியாது. அவர் மனித இனத்திற்குச் சிறந்த போதகராகவும், அவதார புருடராகவும் விளங்கினர். அவருடைய அறிவுரைகளை உலகம் ஏற்று முறையாக நடந்துவர அவருடைய ஆன்ம பலமானது நமக்குத் துணைபுரிந்து தீமை அனைத்தையும் வென்று விடும்”

மேல்சபைத் தலைவர் ஆலிவர் குணதிலகா “இந்தியா தன் தந்தையை இழந்துவிட்டது. உலகம் ஒரு தலைவனை இழந்துவிட்டது. மனித இனம் தன் ஒப்பற்ற ஆசிரியனை இழந்துவிட்டது,” என்று கூறி மேற்கண்ட முடிவை நிறைவேற்றினர்.

இந்தியப் பாராளு மன்றம் :

1948, பிப்ரவரி 2-ல் நடைபெற்ற இந்தியப் பாராளு மன்றக் கூட்டத்தில் மகாத்மா காந்திக்கு அன்பும் பாராட்டும் வணக்கமும் செலுத்தப்பட்டன. பண்டித நேரு மன்றத்தில் உணர்ச்சி ததும்பப் பேசுகையில், “நாம் பெற்றிருந்த மிக வுயர்ந்த கருவூலத்தைப் பாதுகாக்கத்

தவறி விட்டோமே என்று தனிப்பட்ட முறையிலும், இந்திய அரசாங்கத்தின் தலைவன் என்ற முறையிலும் எனக்குமிருந்த வெட்க உணர்ச்சி உண்டாகிறது!" என்று குறிப்பிட்டார். மன்றத் தலைவர் திரு. ஜி. வி. மாவ்லங்கர், சர். மகம்மது சாதுல்லா, ஜிரோம்-டி. சௌஸா, எம். ஆர். மசானி, பிராங்க் அந்தோனி, குருமுக் சிங் முசாபர், காண்டேகர் திருமதி. ஹம்சா மேத்தா ஆகியோரும் மகாத்மாவுக்கு அஞ்சலி யுரையாற்றினர். உறுப்பினர்கள் எல்லோரும் சிறிது நேரம் மோனமாக எழுந்து நின்று காந்தியடிகளுக்கு வணக்கஞ் செலுத்தினர்.

பாக்கிஸ்தான் சட்டசபையும் அடிகளுக்கு அஞ்சலி செய்தது.

சென்னைச் சட்ட சபை :

கவலையும் அவலமும் நிறைந்த சூழ்நிலையிலே பிப்ரவரி 2-ல் சென்னைச் சட்ட சபை கூடியது. காந்தி யடிகளின் பிரிவு குறித்துப் பின்கண்ட தீர்மானம் டாக்டர் பி. சுப்பராயன் முன்மொழிய, நிறைவேற்றப்பட்டது :—

"நாட்டின் தந்தையும், உரிமை மாளிகை கட்டித் தந்த சிற்பியுமான காந்தியடிகள் கொலையுண்டது குறித்து இச் சபை துக்கத்தில் ஆழ்கிறது. நாட்டிற்கு ஏற்பட்ட ஈடு செய்ய வியலாத இழப்பிற்காக வருந்துகிறது. தம் உயரிய வாழ்க்கையின் வாயிலாக அவர் காட்டிய சத்தியம், தொண்டு, அருள் ஆகிய கொள்கைகளைப் பின்பற்றி நடப்பதுதான் நாம் அவருக்குச் செலுத்தக்கூடிய ஒரே காணிக்கை."

தீர்மானத்தை முன்மொழிந்து பேசுகையில் டாக்டர் சுப்பராயன் கண்ணீர் வடித்துவிட்டார்.

தீர்மானத்தை ஒட்டித் தலைவர் திரு. ஜே. சிவசண்முகம் பிள்ளை, திருவாளர்கள் முகம்மது இஸ்மாயில்,

பாச்சிலர், ஆனந்த நம்பியார், குமாரராஜா - சர். முத்தையா செட்டியார் முதலியோர் இரங்கலுரை யாற்றினர். எல்லோரும் எழுந்து நின்று அடிகளின் ஆன்மா அமைதியடையுமாறு மோனமாக வணக்கஞ் செலுத்தினர்.

சபையின் வேறு அலுவல்களெல்லாம் ஒத்திவைக்கப் பெற்றன.

சென்னை மேல் சபையிலும் அடிகளின் பிரிவாற்றாமைக்காக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முஸ்லீம்களின் மாநாடு :

மாகாண முஸ்லீம்களின் மாநாடு மார்ச். 8-ம் நாளன்று சென்னையில் நடைபெற்றபோது, நாட்டின் தந்தையான மகாத்மா காந்தியின் மறைவுக்காக இரங்கலைத் தெரிவித்து முதல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தியாவில் உள்ள பல்வேறு வகுப்பினரும் அமைதியாக வாழவேண்டுமென்பதற்கே உயிர் துறந்த காந்தியடிகள் இந்த யுகத்தில் தோன்றிய பெரியார் என்பதை முஸ்லீம்கள் உணரவேண்டுமென்று தீர்மானத்தில் குறிக்கப்பட்டிருந்தது. வணக்கத்துக்கு அறிகுறியாக அனைவரும் எழுந்து நின்று தீர்மானத்தை நிறைவேற்றினர்.

இன்னும் பல :

இவற்றைப் போன்றே, உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும், சட்ட சபைகள், பொது மன்றங்கள், மாநாடுகள் முதலிய எண்ணற்ற நிகழ்ச்சிகளில் அண்ணலின் பிரிவு குறித்து இரங்கல் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பல கட்சிகளின் சார்பாக எண்ணற்ற இரங்கற்கூட்டங்களும் நிகழ்ந்தன.

மௌன்ட் பேட்டன் பிரபு :
(இந்தியாவின் கவர்னர் ஜெனரல்)



[அமெரிக்கத் தலைவருக்கு அனுப்பிய பதிலில்]

இந்தியா—ஏன்?—உலகமே—அவரைப்போல் இன்னொருவரை இன்னும் பல நூற்றாண்டுகளுக்குக் காணப்போவதில்லை. மக்களிடம் அன்பு, பொறுமை, உண்மை இவற்றையே கொண்ட அவரது வாழ்க்கை நம் இடர்ப்படும் உலகிற்கு உணர்ச்சியூட்டும் என்பதுதான் இச் சமயத்தில் நம் ஈடற்ற ஏக்கத்திற்கு ஓர் ஆறுதலாகும்.

[வானொலியில்]

அமைதி வடிவான பெரியாரும், அஹிம்சா அண்ணலுமான காந்தியவர்கள், பலாத்கார வெறியை எதிர்த்து நடத்திய போராட்டத்தில் அதற்காகவே வீர மரணம் எய்தினர். இந்தப் 'பலாத்கார' நோய்தான் புதிதாகக் கிடைத்துள்ள இந்தியாவின் சுதந்திரத்தையே குலைத்து விடப் பார்க்கிறது! நம்மை எதிர்நோக்கி நிற்கும்—நாட்டின் சீரமைப்பு வேலை யென்னும் பெரும் பணியில் இந்தியா இறங்குமுன் இந்தக் கொடிய புற்று நோயை வேருடன் களைந்தாக வேண்டுமென்பதே அவர் எண்ணம்.

எல்லா மக்களும் சரிநிகர் சமானமான வாழ்க்கையை நடத்தக்கூடிய வகையில், மதத் தொடர்பற்ற மக்களின் அரசாங்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தையே நம் மாபெரும் முதலமைச்சர் பண்டித நேரு உயரிய குறிக்கோளாகக் கொண்டுள்ளார். தம் வாழ் நாளிலே காந்தியவர்கள் நிலையாக நிறுவியுள்ள அந்தச் சுதந்திர அடிப்படையின்பேரில் அத்தகைய அரசாங்கத்தை ஏற்படுத்துவதற்கு நமது மனம், வாக்கு, காயம்

ஆகியவற்றைத் தூய்மைப்படுத்திக் கொள்வதுதான் காந்தியாருக்கு நாம் செலுத்தக்கூடிய சிறந்த அஞ்சலியாகும்.

மௌன்ட் பேட்டன் சீமாட்டி :

இஃது இந்தியாவை மட்டும் பற்றிய தீங்கு அன்று; எல்லா நாடுகளையும் வருத்துவதாகும். துக்கத்தினால் தொண்டை அடைக்கிறது! சொற்கள் தடைப்படுகின்றன! அவர் பிரிவு உலகிற்கே ஈடு செய்ய முடியாதது. அவர் பெரிய தலைவர். அவர் கொள்கைகளைப் பின்பற்றுவதே நாம் சிறப்பாகச் செய்யக் கூடியதாகும்.

பண்டித நேரு :

[இந்தியாவின் முதலமைச்சர்]

(பிப்ரவரி 14-ல் வானொலியில்)



உலகத்திலுள்ள மூலை முடுக்கு நாடுகளிலிருந்தெல்லாம் காந்தியடிகளுக்கு மரியாதையும் அஞ்சலியும் வந்து குவிந்திருக்கின்றன. மிகவுயர்ந்த தலைவர்கள், அதிகாரிகளிலிருந்து சாதாரணப் பொதுமக்கள் வரையில் எல்லோரும் அவருக்கு மரியாதை செலுத்தியிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் காந்தியடிகளைத் தத்தம் நண்பராகவும், தோழராகவும், நலன்களுக்குப் போராடுவோராகவும் கருதி வந்திருக்கின்றனர்.

உணர்ச்சி வேகம் வரவரக் குறைந்துவிடும். ஆனால், நமது நட்டம் மட்டும் ஈடுகட்ட முடியாததாகவே இருந்து வரும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் காந்தியடிகள் நம் வாழ்க்கையிலும் உள்ளத்திலும் இரண்டறக் கலந்திருந்தார்.

காந்தியவர்களுக்கு வெண்கலத்திலும் பளிங்கிலும் சிலை செய்து வைப்பதுபற்றியும், தூபிகள் நிறுத்துவது பற்றியும் பலர் கூறினார்கள். அப்படிக் கூறுவது அவரைப் பரிகசிப்பதாகும். அவர் நமக்கு ஆற்றியுள்ள அறிவுரைகளுக்கு அது மாறுபட்டதாகும். அவர் விரும்பக்கூடிய எந்தகைய மரியாதையை நாம் அவருக்குச் செய்ய வேண்டும்? எப்படி வாழ்க்கை நடத்துவது எப்படி இறப்பது என்ற இரண்டு காரியங்களிலும் அவர் நமக்கு வழிகாட்டியிருக்கிறார். அவற்றை நாம் அறிந்துகொள்ள முடியவில்லையென்றால் அவருக்கு நாம் நினைவுச் சின்னம் எதுவும் எழுப்பாமலிருப்பதே நல்லது. அவர் காட்டிய வழியிற் சென்று வாழ்க்கையிலும் மரணத்திலும் நம்முடைய கடமையைச் செய்வதே நாம் அவருக்கு எழுப்பக்கூடிய சிறந்த நினைவுச் சின்னமாகும். ....

நம்முடைய உள்ளத்தை இவ்வளவுதூரம் ஆட்கொள்வதற்கு அவரிடம் என்ன சக்தி இருந்தது? வருங்கால மக்கள் அதை நன்றாக உணர்வார்கள். அவருடைய மாபெரும் வியக்கத்தக்க மேன்மையை நாம் சரிவர உரைமுடியாது. ஏனெனில், நாம் அவ்வளவு தூரம் அவருடன் நெருங்கியிருக்கிறோம். ஆனால், அவருடைய உள்ளம் சத்தியத்தை நாடியது என்பதை நாம்கூட உணருகிறோம். தீய வழிகளைக் கையாளுவதன் மூலமாக நல்ல குறிக்கோள்களுக்குப் பாடுபட முடியாது என்பதை இந்தச் சத்தியத்தின் ஆற்றலால் அவர் இடைவிடாது எடுத்துரைத்தார். தவறான வழிகளால் அடையும் குறிக்கோள் அரைகுறையானதாகத்தான் இருக்குமென்று விளக்கினார்.

தாம் தவறு செய்துவிட்டதாக அறிந்தவுடன் அதை வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும்படி செய்தது சத்தியந்தான்! தாம் செய்த சில தவறுகள் ‘இமயத்தைப் போன்று மிகப் பெரியவை’ என்று அவரே பல தடவைகளில் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

தீமையையும் பொய்மையையும் ஒழிக்கவும், ஏழை எளியவர்களுக்குப் பணியாற்றவும், வேற்றுமைகளை

எதிர்த்துப் போராடவும் அவரைத் தூண்டியது சத்தியமே! எனவே சமூக, அரசியல் கொடுமைகளுக்கு உள்ளாகி யிருந்தவர்களின் உள்ளத்தில் அவர் இடம் பெற்று விட்டார். .... அவருடைய பருவுடல் மறைந்து விட்டது. அவரை நாம் மீண்டும் பார்க்க முடியாது. அவருடைய மென்மையான குரலைக் கேட்க முடியாது. நல்லுரைக்காக இனி அவரிடம் ஒட முடியாது. ஆனாலும் நம் உள்ளத்தில் அவருடைய நினைவை அழிக்க எவராலும் முடியாது. அவருடைய அறிவுரை என்றென்றும் நிலைத்திருக்கும் என்பது உறுதி. ....

அவர் இறப்பதற்குச் சிறிது நேரத்திற்கு முன் நாங்கள் அவருடைய நல்லுரைகளைக் கடைப்பிடிப்பதாக வாக்குறுதி அளித்தோம். அதை நாம் காப்பாற்ற வேண்டும். இங்கு வாழ்பவர் எல்லோருக்கும் இந்தியா சொந்தமானது என்பதையும் எந்தக் குலத்தினராயினும் நம்முடைய பரம்பரைச் செல்வத்தில் அவர்களுக்கும் பங்கு உண்டு என்பதையும் நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இங்குள்ள எல்லோருக்கும் ஒரே மாதிரியான கடமைகளும், ஒரே தன்மையான உரிமைகளும் இருக்கின்றன. ....

நமது காலத்தில் சிறந்த பெரியாராக விளங்கியவரைக் கொன்ற, பயங்கரமான வகுப்புவாத நஞ்சை எதிர்த்துப் போராட நாம் ஒவ்வொருவரும் ஒன்றுபட வேண்டும். இதை வேருடன் களைய வேண்டும். ஆனால் தவறான வழியில் செலுத்தப்பட்ட தனி ஆட்களிடம் வேற்றுமையைக் காட்டுவதன் மூலம் இதைச் செய்யக்கூடாது. இந்த நஞ்சையே நேரடியாக, அஃது எங்கெல்லாம் காணப்படுகிறதோ அங்கெல்லாம் தகர்க்க வேண்டும். இந்த நஞ்சு காந்தியடிகளைக் கொல்வதுடன் மட்டும் நிற்கவில்லை. இந்தக் கொலையைப் பல்வேறு வகையாகச் சிலர் கொண்டாடியதுதான் கொலையைவிட மிகவும் வெட்கப்படத் தக்கதாகும். அவ்வாறு கொண்டாடியவர்களும் அதே முறையில் நினைத்தவர்களும் இந்தியர்கள் என்று அழைக்கப்படும் உரிமையை இழந்தவர்களாவர். ....

காந்தி யவர்களின் கனவுகளிற் சிலவற்றை நனவாக்க இந்தத் தலைமுறையில் வாய்ப்புக் கிட்டவேண்டு மென்று நான் முழுமனத்துடன் இறைஞ்சுகிறேன். இதனால் அவரது திருப்பெயரை நாம் மதித்துத் தகுந்த நினைவுச் சின்னத்தை எழுப்பியவர்களாவோம்!

சர்தார் வல்லபாய் பட்டேல்:

[இந்தியாவின் உதவி முதலமைச்சர்]



இந்தியாவின் சுதந்தரப் போராட்ட வரலாறு மகாத்மாவின் வாழ்க்கை வரலாறேயாகும். எனது வாழ்க்கையே மகாத்மாவோடு அத்தகைய தொடர்பு கொண்டது. மகாத்மா இந்தியாவுக்கு வராமல் இருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதைச் சொல்வது கடினம். ஒருவேளை இதுவரை இந்தியாவிற்குச் சுதந்திரம் கிடைக்காமற் போயிருக்கலாம்!

சத்திய வடிவான அவர் இந்திய மக்களைச் சுதந்தரத்திற்கு அழைத்து வந்தார். அந்த யாத்திரை முடிந்ததும் அவர் இந்தியன் கையாலேயே உயிர் நீத்தார்!

மகாத்மா காந்தியைப் போன்ற ஒருவரே கொலை செய்யப்பட்டார் என்றால் இந்த நாட்டில் வேறு எந்தப் பயங்கரச் செயல்தான் நடக்க முடியாது?

பயங்கர வேலைகளில் ஈடுபட்டிருப்பவர்களை எதிர்க்க வேண்டியது நம் கடமை. ஆனால் அதையும் அமைதியான முறையில் செய்தாக வேண்டும். யாரும் தான்தோன்றித் தனமாய் நடந்துகொள்ளக்கூடாது. இதுபற்றிக் கடுமையான நடவடிக்கைகள் எடுப்பதென அரசாங்கம் உறுதி கொண்டிருக்கிறது. அதற்கு மக்களின் ஒத்துழைப்பு வேண்டும்.

திரு. ஆர். கே. சண்முகஞ் செட்டியார் :
(இந்தியாவின் நிதி அமைச்சர்)



வானமே இடிந்து பூகோளமே பிளவுபடச் செய்வதைப்போன்ற பேரிடி ஒன்று நம்மைத் தாக்கிக் குழந்தைப் பருவத்திலிருக்கும் நம் சுதந்திர நாட்டை அனாதையாக்கிக் காரிருளில் ஆழ்த்திவிட்டது! ஏசு நாதரைச் சிலுவையில் அறைந்த அதே கொடிய கை, வரலாற்றின் கொடிய இடை வெளிகளின் வழியே புகுந்துவந்து மகான்களின் மரபில் இக்காலத்திருந்த ஒரே பெரியாரை யும் கொன்றுவிட்டது!

"திர்க்காலோசனை இல்லாதவர்களைக் காப்பாற்ற ஒவ்வொரு சகாப்தத்திலும் ஒரு கிறிஸ்து கொடுமைக்குப் பலியாகத்தான் வேண்டுமா?" என்று வியப்புறும், பெர்னார்ட் ஷாவுடன் சேர்ந்து ஒவ்வொருவரும் வியப் படைய வேண்டியிருக்கிறது!

மகாத்மாவின் மறைவால் உலகம் ஒரு முன்னேற்ற நிலையை இழந்துவிட்டது! நமது நாடோ, அதனை ஆக்கிய தந்தையை இழந்துவிட்டது! நாம் ஒவ்வொருவரும் நண்பரை, ஞானியை, வழிகாட்டியை இழந்துவிட்டோம்! நாடுபற்றியோ, தன்னலம்பற்றியோ, இடர்ப்பாடுகள் நேரும்போதெல்லாம் பலர் அவரை நாடிப் போயினர். அவரிடமிருந்து புது நம்பிக்கை மலர்ச்சியோடு மீண்டனர்! தாய்ப் பறவையின் இறகால் அணைக்கப்பட்ட குஞ்சு கத கதப்பையும் பாதுகாப்பையும் பெறுவதுபோல், மகாத் மாவின் அரவணைப்பால் நாம் பாதுகாப்பையும் ஆறுதலை யும் அடைந்து வந்தோம். கெடுவினை நம்மை இவ்வாறு தொடர்ந்து வருவதைப் பார்த்தால், நற்கதியடைய முடி யாத நாசத்தை யடைவதுதான் நம் விதியோ என்றுகூட

ஐயுற நேருகிறது ! ஆனால், காந்தீய மனப்பான்மை அற்றவர்களுக்குத்தான் அத்தகைய ஐயுறவு இருக்க முடியும். ஏனெனில், பெருங் குழப்பத்திலும் கவலையிலுங்கூட அவர் உற்சாகமாகவும், வீரமாகவும், நம்பிக்கையுடனுமே இருந்தார். ஒரு நிழலின்கீழ் உங்கள் முன் பேச எழுந்திருக்கிறேன். அவருடைய மகத்தான தியாகத்தின் நிழல் அது வென்பதை அறிவேன். எனவே, நம் நாட்டின் முன்னிருக்கும் பெரிய சவாலையும் ஏற்றுச் சமாளித்து மக்கள் வெற்றியே பெறுவார்கள் என்ற நம்பிக்கையைப் பெறுகிறேன். எதுவரினும் நம்பிக்கையுடன் சமாளிப்போம் ! இந்தியா எப்படியிருக்கவேண்டுமென்று மகாத்மா விரும்பினாரோ, அவ்வழியில் கதியை நிர்ணயித்து, வேற்றுமையும் ஏக்கமும் மிகுந்த பாதாளத்தைவிட்டு வெளியேற்றி, நிலைபெற்ற மேன்மையின் சிகரத்திற்கு நாட்டைக் கொண்டுபோய்ச் சேர்த்தே தீருவோம் !

திருமதி இராச குமாரி அமிர்த கவுரி :

(இந்தியாவின் நலத்துறை அமைச்சர்)



நம்முடைய ஒப்பற்ற மாபெருந் தலைவரும் நம் நண்பருமான சிறந்த தத்துவ ஞானியை நொடியிலே இழந்துவிட்டோமே ! அவர் இந்தியாவின் ஒப்பற்ற தலைவரென்பது மட்டுமா? உலகுக்கே தலைவர். அவர் நம்முடைய தந்தை. அவரை முகமனுக்காக 'பாபுஜி' என்று அழைக்கவில்லை. இன்று நாம் ஆதரவற்றோம் !

நம் வரலாற்றின் இந்த நெருக்கடியான நிலையில் அவர் நம்மை விட்டுப் பிரிந்ததால் நாம் எத்துணை ஊதியத்தை இழந்துவிட்டோம் என்பதை நம்மாற் கண்டுபிடிக்க வியலாது ! அவருடைய அறிவுரையை மேலும்

மேலும் கேட்பதை எவ்வளவுதூரம் இழந்துவிட்டோம் என்பதைக் காலப்போக்கிலாவது உணர்வோம் என்று நம்புகிறேன். நமது குறிக்கோளான அரசியல் உரிமையைப் பெறுவதற்காக நம்மைச் சரியானவழியிலே நடத்திச் சென்றார். ஆகஸ்டு பதினைந்துக்குப் பின்னால் உண்டான வகுப்புச் சண்டைகள் அவருடைய உள்ளத்தைப் பிளந்தன! அடக்குமுறை இந்தியாவை அவரால் நோக்கவும் இயலவில்லை.

நம்மிடையே உயிரறம் குறைந்து வருவதாக உணர்ந்தார். அன்பு கனிந்த தந்தையாக மீண்டும் நமக்கு வழி வகுத்துக் காட்டினார். தமது அன்பின்வழியே பலர் உள்ளத்திலும் கொழுந்துவிட்டெரிந்த சினத்தை அவர் தணிக்க முயன்றார். நமக்கும் கொடுங்கோன்மைக்கும் இடையே நின்ற பெரியார் அவர் ஒருவரே.

வெறியனின் செயல் அவருடைய ஊனுடலை மட்டும் நம்மிடமிருந்து பிரித்தது. அவருடைய ஆன்மாவை யாரால் அழிக்க முடியும்? காந்தியடிகளை அழிக்க முடியாது. அவர் நம்மிடையே இடைவிடாமல் இருந்துவருகிறார் என்பதை எப்போதும் உணர்வோம். அவர் நம்மிடையே இருந்தபோதிருந்ததைவிட இப்போதுதான் நாம் அவருக்கு உண்மையாக இருத்தல் வேண்டும்.

குறிக்கோளுக்காகத் தம் உயிரையே கொடுத்தவர் காந்தியடிகள். அவருடைய பொன்மொழிகள் இப்போது நின்றுவிட்டன! நாம் செய்த குற்றங்களை மறந்துவிடக் கூடாது. நம்மிடையே உள்ள ஒருவன் இழிவான நிலைக்கு வந்து காந்தியைக் கொன்றான் என்பதை நினைத்து ஒவ்வோர் உண்மை இந்தியனும் நாணித் தலைகுனியவேண்டும். தம்மைச் சுட்டவனைக் காந்தியார் மன்னித்திருப்பார். அந்த வெறியன் சுட்டபோதுகூடக் காந்தியடிகள்

அவனை நேசித்திருப்பார். ஆகவே, நாமும் அவனை மன்னிப்போம். கடவுளும் மன்னிப்பாராக!

உண்மை, அன்பு நெறிகளிலே செல்ல நமக்குத் தகுதியான ஆற்றல் இருக்கட்டும். இந்த நாட்டின் நல்ல பெயருக்கு இன்று கறை யுண்டாக்கியிருக்கும் வகுப்பு வேற்றுமைகளை நாம் மறப்போமாக! கடவுள் நம்மிடம் அருள் கூர்ந்து உண்மையாய் நடந்துகொள்ளும் ஆற்றலை அளிப்பாராக! இனிமேல் காந்தியடிகளின் கனவுப்படியே புதிய இந்தியாவை நனவாக அமைப்போம்.

சர்தார் பலதேவ சிங்:

(இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சர்)

நாட்டு விடுதலைக்குப் பின் சூழ்ந்துள்ள பேரிடர் இதுவரை என்றும் நடந்திராத துன்பமாகும். ஒவ்வோர் இந்தியனும் தன்னலமற்று நாட்டுக்கும் மக்களுக்கும் பணியாற்றுவதென்று கங்கணம் கட்டிக்கொள்ளவேண்டும். குல, வகுப்பு, மத வேற்றுமைகளைப் பாராமல் காந்தியவர்கள் எல்லோருடைய நன்மைக்காகவுமே உழைத்தார். ஒவ்வொருவனும் இன்பமடைய வேண்டுமென்பதும், உலகத்தில் இந்தியாவிற்கோர் தனிமதிப்பு ஏற்படுத்த வேண்டுமென்பதுந்தான் அவரது வாழ்வின் குறிக்கோள்.

இந்திய மக்கள் மகாத்மா காந்தி தொடங்கிய பணியை நிறைவேற்றி அவர் காட்டிய வழியைப் பின்பற்றவேண்டும். இதனால் மிகுந்த நன்மையுண்டாகும்.

திரு. ஜகஜீவன் ராம்:

(இந்தியாவின் தொழில் அமைச்சர்)

வருந்தத்தக்க இந்தப் பயங்கர நிகழ்ச்சி, சொற்களால் வருணிக்க முடியாதது. இக்காலத்தின் மிகப் பெரிய ஆன்மாவை உலகம் பறிகொடுத்துவிட்டது! நாடு முழுவதும் அனாதையாக்கப்பட்டுவிட்டது! தாழ்த்தப்பட்டோர், தம் மதிப்பிற்சிறந்த செல்வமும், தம் நலம் நாடும் உண்மை அன்பருமான பாபுவை இழந்துவிட்டனர்!

நமது சுதந்திரக் குழந்தை இப்போதுதான் நடை பழகிக்கொண்டிருக்கிறது. பாபுவின் அபய கரம் திடீரென்று பிரிக்கப்பட்டு விட்டமையால், சுதந்திரத்தின் ஆரம்பப் பயிற்சி, நன்மை - தீமை, ஒற்றுமை - வேற்றுமை, முன்னேற்றம் - பிற்போக்கு இவற்றின் சக்திகளுக்கிடையே நேரடியான சண்டையைக் கிளப்பும் நிலைக்கு வந்துவிட்டது. அது பலமான வஞ்சினப் போட்டியும் சோதனையுமாகும்.....நாம் ஒவ்வொருவரும் வாழ்க்கையில் எந்தக் கட்டத்தில் இருந்தாலும், பாபு ஆரம்பித்து நிறைவேறாமல் இருக்கும் குறிக்கோளை நிறைவேற்றவும், அமைதியையும் ஒற்றுமையையும் பாதுகாக்கவும் நம் வாழ்க்கையைப் பயன்படுத்தினோமானால் உலகில் தோன்றிய மிகப் பெரிய பெருந்தன்மை வாய்ந்த ஒரே ஆன்மாவான பாபுவின் வீர மரணம் வீணானதாகாது !

மௌலானா அபுல்கலாம் ஆசாத் :

(இந்தியாவின் கல்வி அமைச்சர்)

(ஒரு தலைமைச் சொற்பொழிவில்)



என் வாழ்விலே பல சுமைகளைச் சுமந்தேன். ஆனால், அடிகள் நம்மை விட்டுப் பிரிந்து சென்றபிறகு எங்கள் தோளில் விழுந்துள்ள சுமையே மிகவும் பெரியது.

அடிகளின் பிரிவினால் என் மூளை முடமாகியது. அவர் தமது கடைசிப் பயணத்தை முடித்தார். அதன் விளைவாக நாம் ஒரு புதிய பயணத்தைத் தொடங்குகிறோம். இதனை வெற்றியாக நடத்தி முடிப்போமென நம்புவோமாக! அடிகள் தாங்கியிருந்த சுமையைப் பகிர்ந்து சுமக்கும் வேலை நமக்கு இப்போது நேர்ந்துள்ளது. கோடிக்கணக்கான எல்லா

இந்தியர்களும் அதைப் பகிர்ந்துகொண்டு வெற்றி யடைந்தால் அது மிக வியக்கத்தக்க செயலாகும்.

மூப் பொருள்களை மக்கள் கருத்திற் கொள்ளுதல் வேண்டும். அவை: அடிகளின் கொலை ஒரு தனிப்பட்ட வெறியனின் செயலன்று என்பதும் சூழ்நிலை முழுவதையும் மாற்றவேண்டும் என்பதும் முதற் பொருள். எல்லா வகை வகுப்புப் பூசலையும் அடியோடு ஒழித்துவிட அரசாங்கம் உறுதி கொண்டிருக்கிற தென்பது இரண்டாவது. அமைதியை நிலை நிறுத்துவதன் வாயிலாகவும் சட்டத்தை மீறுதிருப்பதன் வாயிலாகவுமே அரசாங்கத்தின் கையை மக்கள் வலிமைப்படுத்த முடியும் என்பது மூன்றுவது.

சர். என். கோபாலசாமி ஐயங்கார்

எங்கள் உள்ளங்கள் சொல்லொணுத துன்பம் நிறைந்துள்ளன. இந்திய வரலாற்றில் மிகப் பெரிய துன்பியல் நிகழ்ச்சி எங்களைச் சூழ்ந்துள்ளது.

இந்திய மக்களுக்கு அவரது வாழ்க்கை ஒரு பெரிய உணர்ச்சி வடிவாக இருக்கும். மனித இனத்தின் உச்ச நிலைமையைப் பெறுவது அகிம்சையின் மூலமாகத்தான் இயலும் என்றும், மனித வாழ்க்கைக்குப் பலாத்காரம் தேவையில்லை என்றும் நம்புகிற இனத்தார்க்கும் நாட்டினர்க்கும் அவரது வாழ்க்கை குன்றிலிட்ட விளக்குப் போல் ஒளி நல்கும். ஐக்கிய நாடுகள் அமைக்கப்பட வேண்டிய கொள்கைகளைத் தம் வாழ்நாள் முழுதும் உபதேசித்து வாழ்விலும் நடத்தையிலும் அவற்றைப் பொதிந்து காட்டிய ஒரு பெரியார் உலகில் உண்டானல் அவர் மகாத்மா காந்தியே யாகும்.

பாபு ராஜேந்திர பிரசாத் :

[அ. இ. காங்கிரசுத் தலைவர்].



அடிகளின் கொலைக்கு யார் பொறுப்பாளி? இன்று ஒவ்வொரு காங்கிரஸ்காரரும் தமக்குள்ளே சிந்திக்கட்டும்! அவர்கள் எதுவரையில் நேராகவோ, அல்லது மறைமுகமாகவோ அடிகளின் கொலைக்குப் பொறுப்பாளி என்பதுபற்றி அவரவரே தங்களைத் தேர்ந்தறியட்டும்! அடிகளின் விளக்கவுரைகளைத் தெளிவாகப் புரிந்துகொண் டிருப்பார்களானல் இந்தத் தீவினை நாட்டுக்கு நேர்ந்திராது. நாம் ஒவ்வொருவரும் தனித்தனியே செய்த பழி மூட்டைகளுக்கு அடிகள் இரையானர். அவர் காட்டிய நெறியைப் பற்றி நடக்க வேண்டியது நம் எல்லோருடைய கடமையாகும்.

ஜனப் ஜின்ன :

(பாக்கிஸ்தான் கவர்னர் ஜெனரல்)



காந்தியடிகள் கோழைத்தனமாகத் தாக்கப்பெற்று இறந்தது குறித்து வருந்துகிறேன். எங்களுக்குள் அரசியலிலே கருத்துவேற்றுமை யிருக்கலாம். ஆனல், இந்து சமூகத்தில் உண்டான பெருந்தலைவர்களில் அவர் ஒருவர். என் ஆழ்ந்த வருத்தத்தை இந்து மக்களுக்குத் தெரிவிக்கிறேன்.

திரு. சி. இராசகோபாலாச்சாரியார் :
(மேற்கு வங்க கவர்னர்)



நம்முடைய அருஞ் செல்வத்தை இழந்துவிட்டோம்! ஓர் அறிவற்ற வெறியன் திருடிக்கொண்டு போய் விட்டான்! இந்தியாவுக்குப் பெரிய இழப்பு நேர்ந்த இக்காலத்தில் அதைக் கடவுள் காப்பாராக! நம் அருந் தலைவர் பலியான பிறகாவது எல்லா சிந்தனைகளும் ஐயங்களும் முடிவடையட்டும்.

* * *

எல்லா மதமும் ஒன்று என்று மகாத்மா காந்தியைப்போலவே சுவாமி விவேகானந்தரும் சொற்பொழிவாற்றி வந்தார்.

மகாத்மா காந்தியைக் கொன்றவன் சுத்த முட்டாள் மனிதன். ஏனென்றால் நிழலைச் சாய்த்து விடுவதன் மூலம் மனிதனைக் கொன்று விடலாம் என்று அவன் எண்ணினான்.

மகாத்மா காந்தி என்றும் வாழ வேண்டுமென்று நாம் எல்லோரும் முடிவு செய்துகொண்டோமானால் என்றும் அவர் நம்முடன் வாழ்வார். விவேகானந்தரையோ, மகாத்மா காந்தியையோ உயிருடன் வைத்திருக்க உள்ள வழி அவனவன் பணியை அவனவன் செய்து வருவதேயாகும். ஏனெனில் உழைப்பதே கடவுள் வழிபாடு என்பதை இருவரும் போதித்தனர்.

கவியரசி திருமதி சரோஜினி தேவியார் :

(ஐக்கிய மாகாண கவர்னர்)



காந்தியடிகளின் உயிரும் எங்கள் உயிரும் ஒன்றைவிட்டு ஒன்று பிரிக்க முடியாதவை என்னுமாறு எங்களிற் சிலர் நெருங்கிப் பழகினேம். எங்களிற் சிலர் உண்மையில் அவருடனேயே இறந்துவிட்டோம்! உயிரின் ஒரு பாதி போய்விட்டதுபோன்ற நிலைமைக்குப் பலர் வந்துவிட்டோம். ஏனெனில், நம்முடைய உயிர், தசை, குருதி யெல்லாம் அவர் வாழ்க்கையுடன் பிணைப்புற்றவை

அடிகள் மறைந்துவிட்டார்! அவர் மறைந்துவிட்டதால், எல்லாம் போய்விட்டதென்று கருதுவோமானல் அஃது அவரைக் கைவிட்ட செய்கையேயாகும். அவருடைய ஊனுடல் நம்மிடையேயிருந்து மறைந்ததாலேயே எல்லாம் இழந்தோமெனக் கருதுவோமானல், அவரிடம் நாம் கொண்டிருந்த அன்பும் நம்பிக்கையும் என்ன பயன் பெறும்? அவருடைய மரபினராக—அவருடைய ஆன்மவூதிய உரிமையாளராக—அவருடைய நோக்கத்தின் காவலாளராக—நாம் இல்லையா? உரிமை முறையில் துக்கங்கொள்வதற்குரிய காலம் ஓடிவிட்டது!

மார்பில் அறைந்து கொள்ளவோ, தலையைப் பிய்த்துக்கொள்ளவோ இது காலமன்று! அடிகளை எதிர்த்தோரின் அறைகூவலை ஏற்க எழுச்சியுடன் உள்ளோமென முழங்கவேண்டிய சமயம் வந்துவிட்டது. நாம் அவருடைய உயிர்ச் சின்னங்கள்! அவருடைய படைவீரர்கள்! உண்மையும் அன்புமே நம் படைக் கருவிகள்! செந்நீர் சிந்தாமல் அமரில் வெற்றிபெறும் ஆற்றலே நம் வெற்றிவாள்!

நம் தலைவர் காட்டிய வழியை நாம் பின்பற்றமாட்டோமா? நம் தந்தையின் அருள் மொழிகளை ஏற்று நடக்கமாட்டோமா? போர் வீரர்களாயிருந்து, உண்மைப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தமாட்டோமா? அடிகளின் பொன் மொழிகளை உலகமெங்கும் பரப்ப மாட்டோமா? அவர் பேசமாட்டார் என்றாலும் அவர் மொழிகளை உலகமெல்லாம் எடுத்துக்கூற ஆயிரக்கணக்கான மக்கள் இல்லையா? இப்போது மட்டுமன்று; தலைமுறை தலைமுறையாகப் பரப்பி வர மக்கள் இல்லையா?

நடுக்கமுறும் என் குரலைக் கேட்டுக்கொண்டிருக்கும் இவ்வுலகத்தின் முன்பு முப்பதாண்டுகளுக்கு முன்னமே அடிகளின் சேவைக்காக என்னை அடிமைப்படுத்தி விட்டேன்; இன்றும் செய்துகொள்கிறேன்! சாவு என்பதென்ன? என் சொந்தத் தந்தை இறந்தார்! இறப்பதற்குச் சிறிது முன்னம் அவர் கூறினார்: "பிறப்பு உண்டு; இறப்பு இல்லை! உண்மை அல்லது நிறைநிலையை நோக்கிப் படிப்படியாக உயிர் செல்லும் வகையே வாழ்க்கை!"

அடிகளின் உடல் நேற்று நெருப்பிலே நீறாயிற்று. ஆனால், அவர் இறக்கவில்லை. ஏசுநாதர் முற்காலத்தில் உயிர்த்தெழுந்தது போலவே, அடிகளும் மூன்றாம் நாள் உயிர்பெற்றெழுந்துவிட்டார்! மக்களின் அழுகுரலுக்கு இணங்கியும்—வழிகாட்டுமாறு உலகமே விடுத்துள்ள வேண்டுகோளுக் கிணங்கியும்—அவர் தோன்றிவிட்டார்!!

டில்லியிலே பழைய மன்னர்கள் அடக்கஞ் செய்யப்பட்ட இடத்திலே அடிகளின் உடல் எரிக்கப்பெற்றது பொருத்தமே. ஏனெனில், அவர் மன்னர்மன்னர்! உண்மையுருவான அவர் ஒரு மாபெரு வீரருக்குரிய சிறப்புடன் எடுத்துச் செல்லப்பெற்றது மிகவும் சரியானது. ஏனெனில், அவர் வீரர்களுட் சிறந்த வீரர்.

என் தலைவரின் ஆன்மா—என் குருவின் ஆன்மா—என் தந்தையின் ஆன்மா—அமைதியுற்றிராமல் இருக்குமாக! என் தந்தை ஒப்புக்கொள்ளமாட்டார்! ஒப்புக்கொள்ள விரும்பவுமாட்டார்!

எந்தையே! தங்கள் மக்கள்—தங்கள் வாரிசுகள்—தங்கள் பரம்பரையார்—தங்கள் மாணவர்—ஆகிய நாங்கள் வேண்டுகிறோம். எங்கள் வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கான ஆற்றலை அளியுங்கள்!

இதுவரை தோன்றிய இந்துக்களிலே மிகச் சிறந்தவரும் இந்துமத உண்மைகளை, அறங்களை உண்மையாய்க் கைக்கொண்டவருமான ஒரு பெரியார் ஓர் இந்துவின் கையாற் கொல்லப்பெற்றது எத்துணை வருத்தமானது!

ராஜா சர். மஹராஜ் சிங் :
(பம்பாய் கவர்னர்)

காந்தியடிகள் மற்றவர்களுக்காகவே வாழ்ந்தார். மனிதரிடையே அமைதியும் ஒப்புரவும் நிலவவேண்டும் என்பதற்காகவே அவர் வாழ்ந்தார். அவர் எதற்காக வாழ்ந்தாரோ அதை நிறைவேற்றுவதுதான் மக்களின் கடமை.

திரு. எம். எஸ். ஆனே :
(பீஹார் கவர்னர்)



மகாத்மா காந்தி இறந்தார். ஆனால் அவர் நம் உள்ளங்களில் என்றைக்கும் சாகமாட்டார். நம்மைச் சூழ்ந்துள்ள இப் பெருந் துன்பத்தில், அவர் நாம் என்ன செய்ய வேண்டுமென்று விரும்பியிருப்பாரோ அதற்குக் குறைவாக ஒன்றும் செய்ய மாட்டோம்! விளைவு எப்படியானாலும், அவரது அன்பு, அறம், நல்லெண்ணம் ஆகியவற்றின் அறிவுரை நின்று நிலவ வேண்டும். நம் வாழ்க்கையில் நிகழ்ந்த இம் மாபெரும் நெருக்கடியில் அந்த அறிவுரையைப் பின்பற்றுமாறு பீஹார் மக்களை அழைக்கிறோம்.

சர். ஆர்ச்சிபால்டு நை :
(சென்னை கவர்னர்)



பல்லாண்டுகளாக அவருடைய நோக்கமும், பெருந்தன்மையும், தலைமையும் இந்நாட்டில் உணர்ந்து ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. அவர் நாட்டின் தந்தை. ஆனால், உலகின் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் வந்து குவியும் இரங்கற் பாராட்டுச் செய்திகளைப் பார்க்கும்போது தான், அவருடைய பெருமையை அளவிடக்கூடிய வாய்ப்பு நமக்குக் கிடைக்கிறது. உலகம் இதுவரை கண்டுள்ள மிகச் சிறந்த பெரியார்களில் ஒருவரை நம் வாழ்நாளிலேயே காணும் வாய்ப்புப் பெற்றிருந்தோம் என்பதை உணர முடிகிறது.

மகாத்மா காந்தியின் முயற்சியினாலும், அறிவுரையினாலும், தலைமையினாலும், ஆறு மாதங்களுக்கு முன் இந்தியா விடுதலைபெற்ற நாடாயிற்று. அந்நேரத்தில் நாட்டின் பெருமையை உயர்த்துதற்கு ஒவ்வொரு மனிதனும் எதையும் செய்யத் தயாராக இருக்க வேண்டுமென்ற வேட்கை எழுந்தது. இன்று, துக்க நேரத்தில் அவரது நினைவைப் பாராட்டுவதற்கு நம் அன்றாட வாழ்க்கையில் நடைமுறையில் என்ன செய்யவேண்டுமென்பதை நம்மை நாமே கேட்டுக்கொள்வதே ஒவ்வொருவருக்கும் ஆவலாக இருக்க வேண்டும்.

கிழக்கு வங்காள கவர்னர் :

இந்தியாவின்—ஏன்?—உலகத்தின் பொது வாழ்வில் மகாத்மா காந்தியின் மரணத்தால் ஏற்படக்கூடிய விளைவுகள் என்ன என்பதை நிர்ணயிக்க இப்போது எவராலும் இயலாது. எனினும் இந்திய மக்களின் மாபெரும் நண்பர் ஒருவரின் மறைவு குறித்து நாம் துயரப்படத்தான் செய்

வோம். அத் துயரத்தோடு அவர் எதற்காக இறந்தார் என்ற வியப்பும் எழலாம். மனிதப் பண்பிற்காகவே அவர் தம் வாழ்வை ஈந்தார் என்று சொல்வது மிகவும் உண்மையானதே.

திரு. எம். சி. எப். பரோன் :

(பிரெஞ்சு இந்திய கவர்னர்)

ஒரு பெரிய விளக்கு அணைந்துவிட்டதுபோ லிருக்கிறது. மிக்வும் இருளடைந்துவிட்ட எதிர்காலத்தை நினைக்கும்போது கவலை மிகுந்து வேதனை ஏற்படுகிறது.

உலகத்திற்கு நேரக்கூடிய மிகப் பெருந் துன்பங்களில் இதுவும் ஒன்று. இதயமும் நம்பிக்கையும் படைத்த எல்லா மக்களுக்கும் காந்தியார் உரியவர். அவர் நினைவு அமரத்தன்மை வாய்ந்தது.

திரு. பி. ஜி. கேர் :

(பம்பாய் முதலமைச்சர்)



வழிபாட்டுக் காலத்தில் உலக முதல்வர் கொல்லப்பட்டார். ஒற்றுமையையும் நல்லெண்ணத்தையும் நிலைநிறுத்துவதற்காகத் தம் மதிப்பு மிக்க உயிரை வழங்கிவிட்டார். மக்களின் மனச் சான்றாக இருந்த அவர் நோக்கத்தை அவருக்குப் பின்னுள்ளோர் முடித்தல் வேண்டும். நம்மிடையே அவர் இருப்பது மிகவும் இன்றியமையாத இக்காலத்திலே கொடுமையாகப் பிரிக்கப்பட்டார். காந்தியடிகளுக்கு முன்பு இம் முறையிலே பணியாற்றியவர்களும் இவர்போலவேதான் பலியானார்கள். ஆனால், அவர்கள் செய்த வேலைகள் பிறகு நலமளித்தன. காந்தியடிகள் இறக்கவில்லை; நம்மிடையே நீடூழி வாழ்வார்.

திரு, கிருஷ்ண சின்ஹா :

[பீஹார் முதலமைச்சர்]

நம் மதிப்பிற்குரிய பாபு மறைந்துவிட்டார்! அன்பு, இன்னா செய்யாமை என்னும் அருள்மொழியுடன் உலகில் தோன்றிய இப் பெரியார், விடுதலை பெற்ற இந்தியாவில் ஓர் இந்தியனால் இவ்வாறு கொல்லப்பட நேர்ந்ததென்பது மனிதப் பண்பையே அதிர்ச்சியடையச் செய்துவிட்டது. அவர் நம் உள்ளங்களின் உருவமாகவும், நம் நாட்டுப் பணிகளுக்கோர் அச்சாணியாகவும் விளங்கினார்..

* * *

அந்த முக்கால ஞானியின் மோகனச் சிரிப்பை இனிப் பார்க்க முடியாதே என்று நினைக்கும்பொழுது அழுகை வருகிறதே!

பண்டித கோவிந்த வல்லப பந்த் :

[ஐக்கிய மாகாண முதலமைச்சர்]

மகாத்மா காந்தி இக்காலத்தின் தேவதூதனாக இருந்தார். இந்தியா எல்லா வகையிலும் கட்டுப்பட்டுக் கிடந்த ஒரு காலத்தில் மகாத்மா அதற்குப் புத்துயிர் அளித்து உலகில் ஒரு தனிமதிப்பைத் தேடித் தந்தார்........

அவர் இந்திய மக்களுக்குச் சுதந்திரம் வாங்கித் தந்ததோடு மட்டுமல்லாமல் அவர்களது நாகரிகம்—பண்பாடு இவற்றின் அடிப்படைக் கொள்கைகளை உணரும்படியும் செய்தார். இழிநிலையில் உள்ளவர்களைக் காப்பாற்றும் மாபெரும் வெற்றி வீரராகவும், எல்லாக் குலத்தினர்க்கும் நிலையான தொண்டராகவும் அவர் விளங்கினார். அவருடைய பேச்சும் செயலும் எல்லோரையும் இன்புறச் செய்யும் வழியிலேயே செலுத்தப்பட்டன.

மகாத்மா காந்தியின் ஆன்மா இன்னும் மக்களின் வழிகாட்டியாகவே இலங்கும். இந்திய மக்கள் அவர் என்ன கற்பித்தாரோ அதனை மறக்கவே மாட்டார்கள்.

டாக்டர் பி. சி. ராய் :

[மேற்கு வங்க முதலமைச்சர்]

(பொருட் காட்சி ஆரம்ப விழாவில் கூறியது)



இந்நாட்டுக்குப் பொருத்தமான முறையில் கைத்தொழிலின் முன்னேற்றம் எவ்வாறு இருக்கவேண்டுமென்பதைப்பற்றிக் காந்தியடிகள் பல திட்டங்களைத் தயாரித்திருந்தார். பொருளாதார—சமூக விடுதலைக்காக நாம் பாடுபட்டு அதை நாம் அடையாமற் போனால் அவருடைய முயற்சியால் கிடைத்துள்ள அரசியல் விடுதலையாற் பயன் ஏதும் இராதென்பதை அவர் அறிவார். குறிக்கோளை அடைய அவரிடம் தனி வழி இருந்தது. இந்த வழியைப்பற்றி அவருக்கே உரிய பாணியில் எழுதியும் பேசியும் வந்தார்........... அவருடைய அறிவும் திறமையும், கருத்தும், அநுபவமும் மிகச் சிறந்தனவென்பதை நாம் அறிந்தும் உணர்ந்துமிருந்தோம். மிகவும் சாதாரண முறைகள் மூலமாகவும், மிகவும் எளிய வழியிலும் அவர் பெரும் வியப்பான காரியங்களை நிகழ்த்தினர்.

திரு. ஹரிகிருஷ்ண மேதாப் :

[ஒரிஸ்ஸா முதலமைச்சர்]

நாட்டின் தந்தை இறந்துவிட்டார். நாம் கண்ணீர் வடிப்போம்! அதனல் நம் கோபமெல்லாம் கழுவப் படட்டும்! நாம் நம் மாபெருந் தந்தைக்கு உகந்தவராக நடந்துகொள்வோமாக! இவ்வளவு காலமாக நாம் நடந்துகொண்ட முறைக்காக உலகம் நம்மைப் பார்த்து நகைக்காமல் இருக்கும்பொருட்டு—இதுவரை நகைக்காமல் இருந்தால்—நம் பிரச்சினைகளைச் சமாளிப்போமாக!

பண்டித ரவிசங்கர் சுக்லா :

[ம. மா. பிரார் முதலமைச்சர்]

நாட்டிற்கு ஒரு பெரிய தீங்கு ஏற்பட்டுவிட்டது. காந்தியடிகளின் ஆன்மாவை மகிழ்விக்கத்தக்க முறையில் நடந்துகொள்ளுமாறு பொதுமக்களை வேண்டுகிறேன்.

திரு. கோபிநாத் பர்தோலாய் :

[அஸ்ஸாம் முதலமைச்சர்]

பேரிடி விழுந்துவிட்டது! என் தந்தையின் மறைவைக் காட்டிலும் மிகுதியான துயரம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. காந்தியவர்களிடம் 28 ஆண்டுகள் நல்லறிவு பெற்றேன். இல்லாவிடில் நான் இருந்த இடம் தெரிந்திருக்காது. அஸ்ஸாமுக்கு இஃது ஒரு பெரிய இழப்பாகும். அஸ்ஸாம் துன்பத்தில் இருந்தபோதெல்லாம் அதற்குக் காந்தியடிகள் துணை செய்திருக்கிறார். ஏசுநாதரைப்போல் காந்தியவர்களை உலகப் பெரியாராக மக்கள் கருதுவர்.

திரு. மீர் லைக் அலி :

[நிஜாம் முதலமைச்சர்]

மகாத்மா காந்தியின் கோர முடிவு நம் எல்லோருக்கும் பெரிய அதிர்ச்சி யளித்திருக்கிறது. அவர் மறைவால் உலகத்திற்கே பேரிழப்பு. காந்தியார் மறைந்துவிட்டார்; ஆனால் அவருடைய உயர்ந்த கொள்கைகள் திகழ்ந்தோங்கி விளங்கும்.

டாக்டர் கோபிசந்த் பர்காவா :

(கிழக்குப் பஞ்சாப் முதலமைச்சர்)

இந்தியா தன் தந்தையை இழந்துவிட்டது. நம் வாழ்க்கையின் எஞ்சிய காலத்திற்கு நாம் அனாதையாகிவிட்டோம்! நம்மீது விழுந்த அடி மிகவும் திகிலடையச் செய்வதாக இருக்கிறது. காந்தியடிகள் இறந்துவிட்டார்; ஆனால் காந்தீயம் என்றும் வாழும்!

திரு. லியாகத் அலிகான் :

(பாக்கிஸ்தான் முதலமைச்சர்)

இந்தச் செய்தி என்னை ஏங்கச் செய்துவிட்டது! இது மிகவும் கோழைத்தனமான செயல். இந்த நூற்றூண்டிலே காந்தியடிகள் ஒரு மாபெரும் பெரியார். மக்களுக்கு நல்லறிவு உண்டாகவும் வகுப்பு ஒற்றுமை வளரவும் அவர் இடைவிடாது உழைத்தார். சென்ற பல ஆண்டுகளாக அவர் காங்கிரசின் இதயமாக இருந்தார். அவரைக் காங்கிரசின் தந்தையென்பது மிகையாகாது.

அருள் நெறியை வாழ்நாள் முழுவதும் போதித்து வந்த ஒருவர் பலாத்காரத்தினுல் வீழ்ச்சியுற்றது ஊழின் வியப்பே!

வகுப்பு ஒற்றுமைக்காக அவர் அண்மையிலே செய்த முயற்சிகளைச் சமாதான விரும்பிகள் நன்றியுடன் உள்ளத்தில் அமைத்துக்கொண்டிருப்பார்கள். இக் கட்டத்திலே இந்திய அரசியல் மேடையிலிருந்து அவர் மறைந்தது ஈடுசெய்ய முடியாத குறையாகும்.

அவருடைய உறவினருக்கும் அவர் பிரிவால் வருந்தும் எல்லோருக்கும் என் உளம் நிறைந்த பரிவைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. குலாம் முகம்மது பக்ஷி :

(காஷ்மீரத் தலைவர்)

பாபுவின் முடிவைக் கேட்டுத் திடுக்குற்றேன். அவரது மறைவால் இந்தியா தந்தையற்ற நாடாக விளங்கினும், அடிகள் எந்தக் குறிக்கோளுக்காகத் தம் உயிரை வழங்கினரோ அதனைத் தாங்கள் நிறைவேற்றித் தலைமை தாங்கி நாட்டை நடத்திச் செல்வீர்கள் என்று நம்புகிறேம். அதற்கான ஆற்றலை ஆண்டவன் தங்களுக்கு அருள் வானுக!

ஸர். ஜபருல்லா கான் :

(பாக்கிஸ்தான் அயல்நாட்டு அமைச்சர்)

காந்தியாரின் படுகொலை மிகவும் கோழைத்தனமான செய்கையாகும். வகுப்பு ஒற்றுமையில் காந்தியார்க்கு இருந்த பக்தியே அவர்து படுகொலைக்குக் காரணமாயிற்று என்று யாரும் எண்ணுமலிருக்க முடியாது. அவரது மரணம் இந்தியாவிற்கு ஒரு சகாப்தத்தின் முடிவைக் குறித்துவிட்டது.

கான் இப்டிகார் ஹுசென் :

(மேற்குப் பாஞ்சால முதலமைச்சர்)

பல நூற்றுண்டுகளாக இந்தியாவில் தோன்றிய தலைவர்களில் மிகப் பெரிய தலைவரான மகாத்மா காந்தியின் படுகொலைச் செய்திகேட்டுப் பேரதிர்ச்சி யடைந்தேன்.

அமைதி நிலவுவதற்கு அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் உலகத்தாரின் கவனத்தை ஈர்த்துள்ளன. அவர் அமைதி விரும்பிகள் எல்லோருடைய உள்ளத்திலும் வாழ்வார் என்று உறுதியாக நம்புகிறேன்.

திரு. அப்துல் கையூம்கான் :

(எல்லைப்புற மாகாண முதலமைச்சர்)

மகாத்மா காந்தியின் மிகக் கொடிய படுகொலையானது யாரும் உண்மை என்று நம்பமுடியாத, நம் மக்கள் எவரும் எதிர்பார்த்திராத பேரதிர்ச்சியாகும். அவர் இன்றையச் சிறந்த உலகப் பெரியார்களுள் ஒருவர். இரு சமூகங்களுக்கும் இடையே ஒற்றுமைக்காக அவர் பாடுபட்டார். அந்த முயற்சியிலேயே வீரராக, உயிர் நீத்தார். மனித இனம் மிகச் சிறந்த ஒருவரை இழந்துவிட்டது. வரலாற்றில் அவர் பெயர் என்றும் நிலைத்திருக்கும்.

திரு. ஏ. கே. பஸ்லுல் ஹக் :

(முன்னாள் வங்க முதலமைச்சர்)

மாபெருந் 'கர்பாலா' துன்ப நிகழ்ச்சிக்குப் பின் நடைபெற்ற மிகப் பெரும் கோரமுடிவுகளில் மகாத்மா

காந்தியின் படுகொலையும் ஒன்று. நம் மனத்தில் எழும் துன்ப உணர்ச்சிகள் சொல்லுக்கு அடங்கா. அவரது ஆன்மா அமைதியுறுக!

திரு. எச். எஸ். சுஹ்ரவர்த்தி :

(முன்னாள் வங்க முதலமைச்சர்)

உலகின் பாதாளமே அதிர்ந்து விழுந்ததுபோன்ற உணர்ச்சி யுண்டாகிறது. ஒடுக்கப்பட்டோரின் தாங்க முடியாத துன்பத்தை இனித் தணிப்பார் யார்? அவர்களது கண்ணீரைத் துடைப்பார் யார்? நமக்குத் துன்பங்கள் வரும்போதெல்லாம் நாம் அவரது வழிகாட்டுதலையும், அறிவுரையையும் கேட்கத் தெரிந்திருந்தோம். அவரும் நம்மை எப்போதுமே கைவிட்டதில்லை!

கைவிடப்பட்டவர்களுக்கும், திக்கற்றவர்களுக்கும் ஆழ்ந்த இரக்கம் காட்டி, மனித இனத்துக்கு உண்மை, நீதி; ஆழ்ந்த அன்பு இவற்றை வழங்கிய பேரொளி அணைந்துவிட்டது! அதனால், அழு! இந்தியாவே, உனது இதயம் பிளக்கும்படி நன்றாக அழு!!



திருமதி விஜயலட்சுமி பண்டிதை :

(ருஷ்யாவில் இந்தியத் தூதர்)

உங்களுக்கும் நாட்டுக்கும் வாய்த்த இந்தப் பெருந் துயரைப்பற்றி நான் என்ன சொல்வேன்? உயிர் நீத்த பாபுவின் தூய திருப்பணி கைகூடுவதற்கு உறுதியுடன் பணியாற்றுவேன் என்று திரும்பவும் சூள் எடுத்துக்கொண்டு என் அன்பைச் செலுத்துகிறேன்.

ஜோத்பூர் மன்னர் :

நாட்டிற்கு நேர்ந்த இப் பேரிடரால் யானுற்ற துன்ப உணர்ச்சிகள் சொல்லித் தீரக்கூடியனவல்ல. மகாத்மா காந்தியடிகளின் தொண்டும் தியாகமும் தனிச் சிறப்பு வாய்ந்தன. அவருடைய செல்வாக்கு நாட்டில் ஒற்றுமை யுண்டாக்கும் பெரிய சக்தியாக இருந்தது. அவருடைய பிரிவினால் இந்நாடு மிகவும் மாண்புமிக்க நல்லுயிரை இழந்துவிட்டது. உலகமோ, உண்மை, அமைதி, ஊறு செய்யாமை இவற்றின் உருவாக வந்த தூதரைத் தோன் றலைப் பறிகொடுத்ததாயிற்று.

இந்தூர் மன்னர் :

நாட்டின் நலனுக்கும் முன்னேற்றத்துக்கும் காரண மான பொதுப் பணியில் எல்லோரையும் ஒன்று சேர்க்கக் கூடிய அமைதியும் ஒழுங்குமே அவரது நல்லுரையாக விளங்கின.

சாந்தூர் மன்னர் :

ஈடு செய்ய முடியாத தேசியப் பேரிழப்பினால் பேரதிர்ச்சி யடைந்துவிட்டேன். மகாத்மாவின் இறவாப் புகழுடைய ஆன்மா, காவலனை இழந்து தவிக்கும் இந்திய மக்களுக்கு வழிகாட்ட வேண்டுமென்று இறைஞ்சுகிறேன்.

காஷ்மீர் மன்னர் :

மகாத்மாவின் மறைவு இந்தியாவின் மிகப் பெரிய இழப்பு. இக் கொடிய படுகொலை மிகவும் பலமாகக் கண்டிக்கத்தக்கது. மகாராணியின் சார்பாகவும் என் சார் பாகவும் என் சமஸ்தான மக்களின் சார்பாகவும் எனது உளமார்ந்த இரங்குதலைக் காணிக்கை யாக்குகிறேன். எங்கள் துக்கத்தை மகாத்மாவின் குடும்பத்தாருக்கும் இந்தியப் பாராளுமன்றத்துக்கும் அன்புகூர்ந்து அறிவி யுங்கள்.

போபால் நவாப் :

மகாத்மா படுகொலையான கொடிய செய்தி போபாலில் உள்ள எங்கள் எல்லோரையும் ஆழ்ந்த கவலையிலும் துயரத்திலும் ஆழ்த்திவிட்டது. அவரது வழிகாட்டுதலும் தலைமையும் முன்னைவிட இப்போது நமக்கு மிகுதியாக வேண்டி யிருந்தது. இந்தச் சமயத்தில் நாடு அடைந்த ஈடு செய்ய வொண்ணாத இழப்பிற்காக நாங்கள் உங்களோடு அவலம் எய்துகிறோம். அவரது ஆன்மா நிலை பெற்ற அமைதியில் நிலவி இன்புறுமாக !

பாட்டியாலா மன்னர் :

இந்தியாவின் மாபெருந் தலைவர் நம்மை விட்டுப் பிரிக்கப்பட்டுவிட்டார். இந்தத் தீச் செய்தி நமது நாட்டைத் துயரத்திலும் இருளிலும் ஆழ்த்திவிட்டது. காந்தியடிகள் இனிமேல் நம்மோடு (பருவுடலோடு) இருக்கமாட்டார் ! ஆனால் அவருடைய ஆன்மாவும் நினைவும் நம்மோடு என்றும் நின்று நமக்கு உணர்ச்சியூட்டி வழிகாட்டும்.

ஹைதராபாத் நிஜாம் :

மகாத்மா காந்தி சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற செய்தி மிகவும் துன்பகரமானது. அவர் உண்மை, அகிம்சை இவற்றின் வடிவமாக விளங்கினார். கடைசியில் விடுதலை கிடைத்ததும் அவரது முயற்சியினாலும், தியாகத்தினாலுமேயாகும். அவர் 'இந்து—முஸ்லீம்' ஒற்றுமைக்காக வாழ்வை இழந்தார். அவருடைய அருஞ் செயல்கள் இந்திய வரலாற்றிலும் உலக வரலாற்றிலும் என்றும் நினைவாக மதிக்கப்படும்.

நவநகர் மன்னர் :

ஒரு புதிய தத்துவத்தையும், பின்பற்ற வேண்டிய குறிக்கோளையும், உலக அமைதிக்கும் உடற்பிறப்புணர்ச்சிக்கும் உரிய ஒரு மணி வாசகத்தையும் மகாத்மா காந்தி

உலகுக்கு வழங்கியுள்ளார். மேலை நாடுகள் அணுகுண்டின் வாயிலான நாகரிகத்தைக் காணும்போது, மகாத்மா காந்தி மனித இனத்தின் நன்மைக்காக 'உண்மை—அஹிம்சை' என்னும் வழியைக் காட்டினார். கீழ்த்திசை உலகுக்கு அளித்த மாபெரும் பரிசு அது. மகாத்மா காந்தி போதித்த அன்பு நெறி ஒரு புதிய உலகத்தை உண்டாக்கி அதனைச் செழிப்புறச் செய்யும்.

மைசூர் மன்னர் :

இந்த நெருக்கடியான சமயத்தில் இதைவிட நாட்டைப் பிடிக்கக்கூடிய பேரிடர் வேறு ஒன்றுமில்லை. இனிமேல் அவருடைய அருளுரையையும் அறிவுரையையும் நாம் பெறமுடியாது; அத்தகைய பயன் நமக்கு இனிக் கிட்டாது. ஆனால் இந்த வீரப் பெரியார் நாம் பின்பற்ற வேண்டிய கணக்கற்ற வாழ்க்கைப் பாடங்களையும் தத்துவப் பரம்பரையையும் வழங்கிச் சென்றுள்ளார். அப்போதைக்கப்போது அவருடைய ஆசியையும், நல்லுரையையும், வழிகாட்டுதலையும் பெறும் அருமையான வாய்ப்பை மைசூர் அரசாங்கம் பெற்றிருந்தது. நாடு முழுமைக்கும் உரிய இந்தத் துக்க நேரத்தில் நானும் என் சமஸ்தான மக்களும் எங்களுடைய ஆழ்ந்த வணக்கத்தையும் மரியாதையையும் மகாத்மா காந்தியின் ஆன்மாவுக்குச் செலுத்துகிறோம்.

திருவாங்கூர் மன்னர் :

இந்தியாவின் மாபெருந் தோன்றலாகிய மகாத்மா காந்தியின் கோரமான முடிவைக் கேட்டதும் மிகவும் பேரதிர்ச்சியடைந்தேன்.

கொச்சி மன்னர் :

கடவுள் கொலையாளியை மன்னிப்பாராக! காந்தியடிகள் தமது கடைசி மூச்சோடும் அப்படித்தான் செய்திருப்பார். கடவுள்தன்மை வாய்ந்த ஓர் ஆன்மாவின்

மீது தனது கொலைக் கரத்தை உயர்த்த முற்பட்டவன் ஓர் இந்தியனாக இருப்பது நாட்டிற்கே மிகவும் வெட்ககரமானது.

புதுக்கோட்டை மன்னர் :

மகாத்மா காந்தியின் பெருமையே தனிப்பட்டது. அவரது பெருமை அவருடைய வாழ்நாளிலேயே உணர்ந்து பாராட்டப் பெற்றது. அவரது மறைவு நம்மைத் தேற்ற வொண்ணாத துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. அண்மையில் அருகிருந்து அவரைக் காணும் பேறு பெற்றேன். அவரது தோற்றமே உணர்ச்சி யூட்டுவதாக யிருந்தது. அவருடைய குறிக்கோள்களைப் பின்பற்ற முயற்சி செய்தால், அவருக்கு நாம் செய்யவேண்டிய கடமையைச் செய்தவராவோம்.

சர். ஏ. இராமசாமி முதலியார் :

(மைசூர் திவான்)



வருணிக்க முடியாத மனப் புண்ணோடு நாடு இவ் வருந்தத்தக்க செய்தியை ஏற்கிறது. தாம் விரும்பித் தழுவிய கொள்கையைக் காக்கும் ஓர் உண்மையான வீரராகக் காந்தியார் விளங்கினார். மிகவும் நெருக்கடியான சமயத்தில் யாருடைய அறிவுரையும் வழிகாட்டுதலும் இன்றியமையாதனவாக இருந்தனவோ, அப் பெரியார்—அரசியல் நிபுணர்—நம்மை விட்டுப் பிரிந்துவிட்டார்! கடவுள் தன்மையின் உண்மைப் பொறியாகவே இலங்கும் அடக்கமுடியாத ஆன்மபலம் அவரது மேன்மையான பருவுடலில் பொருந்தி யிருந்தது. அவருடைய நல்லுரைகளும் செல்வாக்கும் அவரைப் பின்பற்று

வோருக்கு மட்டுமே உரியனவாக்கப்படவில்லை. ஆனால், அவை உலகம் முழுதுமே பரவியுள்ளன. உலகம் எங்கும் உள்ள லட்சக் கணக்கான மக்களின் எண்ணங்களையும் நடத்தையையும் அவர் எவ்வளவு தூரம் திருத்தியுள்ளார் என்பதை எதிர்காலம் எடுத்துக்காட்டும். அவரது ஆன்மா நம்மைக் கவனித்துக்கொண்டேயிருக்கும். நாம் இப்போதிருந்தே அவருடைய நல்லுரைகளைத் தாழ்மையுடன் பின்பற்றும் வழியில் முயற்சி செய்வோமாக!

ஆச்சாரிய கிருபளானி:

(அகில இந்தியக் காங்கிரசு முன்னாள் தலைவர்)



அடிகளின் ஊனுடல் நம்மிடையிருந்து மறைந்துவிட்டது. எனினும், அவர் காட்டிய வழியைப் பின்பற்றி நடந்தால் அஃது எப்போதும் நம்மிடையே இருந்துவரும்.

உண்மையும் அருளுமே அடிகள் கடைப்பிடித்த நெறி. தனிப்பட்ட வாழ்விலும் பிறர் கூட்டுறவிலும் இவற்றையே மேற்கொண்டார். ஆனால், உலகம் இதைக் கடைப்பிடிக்க விரும்பவில்லையென்பதைத்தான் அடிகளின் பிரிவு அறிவிக்கிறது! எனினும் உண்மையும் அருளுங் கொண்ட ஒப்பற்ற நெறியே நறவுநெறியாக இன்னுமிருந்து வருகிறது. வரலாற்றுக் காலமெல்லாம் இந்நெறி விளங்கும்.

அறநெறி முறைகளில் அவர் கொண்ட நம்பிக்கைக்கு அண்மைக் காலத்திலே பெரிய சோதனை ஏற்பட்டது. எனினும் அவர் சோரவில்லை. தம் வாழ்க்கையிலே இருள் சூழ்ந்த காலத்திலும் அவர் நம்பிக்கை அசைவின்றி இருந்தது. என்ன நேர்ந்தாலும் பழிக்குப் பழி வாங்கலாகாது என்பதுதான் அடிகளின் கருத்து.

"மனத்தாலும் கட்டாயப்படுத்துதல் ஒவ்வாது. இந்துக்களின் வீடுகளுக்கும் சீக்கியர்களின் வீடுகளுக்கும் எந்த நிலை ஏற்படினும், அச்சத்தினுலோ, கட்டாயத்தினுலோ குடி நீங்கிய எந்த முகம்மதியர் வீட்டையும் கைப்பற்றக்கூடாது. குடி நீங்கிய முகம்மதிய ஊர்களையும்—அஃது அப்படியே இருக்கவேண்டுமே ஒழிய—கைப்பற்றக் கூடாது. பாக்கிஸ்தானிலிருந்து முகம்மதியப் பெண்கள் கடத்திவரப் பெற்றிருந்தால், அவர்களைக் காவலுடனும் மதிப்புடனுந் திருப்பியனுப்புதல் வேண்டும். இந்த சீக்கியப் பெண்களிடம் பாக்கிஸ்தான் இம்முறையில் நடவாவிட்டாலும் நாம் நேர்மையாகவே நடத்தல் வேண்டும். ஒவ்வொருவரும் தம் சொந்தக் குற்றங்களையும் தம் இனத்தின் குற்றங்களையும் மலைபோல நினைத்தல் வேண்டும். மற்றவர் குற்றங்களையும் மற்ற இனத்தாரின் குற்றங்களையும் கடுகளவு என்று பாவித்தல் வேண்டும். இதுதான் ஒழுங்கான அறநெறி முறை"

என்று அடிகள் எப்போதும் பறைசாற்றி வந்தார்.

இதன் வாயிலாகத்தான் அறநெறியை உண்மையிலேயே கடைப்பிடித்து நிறைவேற்ற இயலும். இந்நெறியின் பயன்கள் நன்ருகவே விளையும். 'அறநெறியிற் செல்லும் மக்கள் துன்புருர்; நாடு துன்புருது; அறத்தைக் கைப்பற்றிஞல் வெற்றி உறுதி.

ஒருவர் தம் நாட்டு மக்களிடம் அன்புகொண்டிருப்பாராஞல், அவர் அதே காலத்தில் உலக மக்கள் எல்லோரிடமும் அன்புகொண்டவராகவும் இருக்கலாம் என்பதையும், இரண்டுக்கும் இடையிலே முரண்பாடு இல்லை என்பதையும் காந்தியண்ணலார் இவ்வுலகிற்குக் காட்டியுள்ளார். இந்தியரென்றும், முகம்மதியரென்றும், அல்லது வேறு எந்த மதத்தினரென்றும் அவர் வேறுபாடு காண்பித்ததே இல்லை. அவருக்கு மக்கட் குழு ஒன்றே; சட்டமும்

ஒன்றே; உலகத்தைப் பிணைத்து ஒன்றுபடுத்தி வைத்திருப்பது அந்த அறநெறியே.

இத்தகைய சான்றோர் நமக்கிடையே—நம் அடிமை வாழ்வின் இடையிலே—பிறந்தது நாம் பெற்ற பெரும் பேறு.

அடிகளை எதிர்த்து நின்று, அவரோடு போராடிய அயலார் எவராலும் உயிர் துறவாமலிருந்த இவர், தம் சொந்த மக்களாலேயே—யாருக்காக இவ்வளவு அறிவுடனும் ஆற்றலுடனும் பாடுபட்டுத் தொண்டாற்றினாரோ அவர்களாலேயே—கொல்லப்பட்டார்! இது நாம் வெட்கித் தலைகுனியவேண்டிய செயல்.

இக் குற்றத்தைச் செய்தவன் தான் செய்வதைப்பற்றி அறியவில்லை. அவன் காந்தியடிகளைக் கொல்லவில்லை. இந்நாட்டின் தந்தையைக் கொன்றான். இந்நாட்டின் உயிரை ஒழித்துவிட்டான்!

அடிகள் மறைந்துவிட்டார்! இந்த நாடு திக்கற்றுப் போய்விட்டது. அவருடைய அறிவுரையும் ஆராய்ச்சியும் மிகவும் வேண்டியிருக்கிற இக்காலத்திலே நாடு ஆதரவற்றுப் போய்விட்டது!

நம் அடிமை நிலையிலும் உலகமெல்லாம் நம்மை மதிக்கச் செய்தவர் அவர் ஒருவரே. நமக்கிடையே இருந்த கருத்து வேற்றுமைகளையும் பிளவுகளையும் போக்கி ஒற்றுமைப் படுத்தியவர் அவரே. நமக்கு இடையூறு நேர்ந்த பொழுதெல்லாம் நாடினோம் அவர் துணையை. சொந்த இடையூறாயினும் பொதுமக்களின் துன்பமாயினும் அவரையே அணுகினோம்.

அவருக்கு வாழ்வும் சாவும் ஒன்றே. கடவுளின் ஆணைக்கே எப்போதும் உட்பட்டிருப்பதாக அவர் சொல்வார். அவருக்கு அவர் உடல் ஒரு பொருளன்று; ஆன்மாவே எல்லாப்பொருளும். உடலின் தளையிலிருந்து விடுபட்ட அவரது ஆன்மா உலகமெங்கும் நிறைந்துவிடும்.

அவரை நாம் தலைவரென்று கொண்டாடினேம். அவரிடமிருந்தே நம் மதிப்பை—அஃது எவ்வளவு சிறிதாயினும்—நாம் பெற்றேம். இனி, நம் கடமை நமக்குள் ஒற்றுமையை உண்டாக்கிக்கொண்டு அவர் நல்லுரைகளின்படி நடப்பதேயாகும். இதன் வாயிலாக, அவர் கனவு கண்ட உரிமையாட்சியை நனவாக்குவோம். இதற்கு அடிகோலவே அவருக்குக் காலமிருந்தது.

அவருடைய ஆசிகள் நமக்குண்டாகட்டும். அவரது கொள்கையைக் கடைப்பிடித்து நிறைவேற்ற வேண்டிய ஆற்றலை ஆண்டவன் நமக்கு அருள்வானக !

திரு. ஜெயப்பிரகாச நாராயணன் :

(சோஷியலிஸ்டுக் கட்சிப் பொதுச் செயலாளர்)

எப்போது காந்தியடிகளின் அறிவுரையும் கருத்தும் வேண்டியிருந்தனவோ, அப்போது இந்தியா தன் தந்தையை இழந்தது ! காந்தியடிகள் தோற்றுவித்த அன்பும் வகுப்பு ஒற்றுமையும்—எவைகளுக்காக உயிர் நீத்தாரோ அவை—மேலும் நீடித்திருக்குமா ? அடக்குமுறையுங் கொடுமையும் அடியோடு ஒழிக்கப்படவேண்டும்.

திரு. சரத் சந்திர போஸ் :

(வங்கத்தின் அரசியல் தலைவர்)



நாட்டின் தந்தை ஒரு மட்டமான ஆசியாக்காரனுற் கொல்லப்பட்டார் என்ற செய்தி என்னைத் திகைப்பிக்கிறது. இப்படிப்பட்ட அட்டூழியத்தைக் கண்டிக்க ஒரு மொழியும் இல்லை. அவர் பிரிவு பேரிடி ! அவரே பெரிய தலைவர் ! அவர் கொள்கைகளைப் பின்பற்றுவதே நாம் அவருக்கு உயர்ந்த வகையில் செய்யக்கூடிய வழிபாடு.

திரு. ஜி. டி. பிர்லா :

உங்களுக்கெல்லாம் காந்தியடிகளைப் பெரியார் அல்லது பெரிய அரசியல் தலைவர் என்றுதான் தெரியும். ஆனால், அவர் உயர்ந்த பண்புடைய ஒப்பற்ற நம்பி யென்பதை நன்றாக உணர்வேன்.

அவர் விரைவிலேயே எவரிடமும் நட்புக்கொள்வார். அவர் இங்கிலாந்துக்கு வட்டமேசை மாநாட்டுக்குச் சென்றிருந்தபோது பெரும்பகைக் குணமுடைய சர். சாமுவேல் ஹோரையும் தம் நண்பராக்கிக் கொண்டார். இறுதி வரையில் இவர்கள் நண்பர்களாகவே இருந்தனர்.

கொள்கை யென்ற பேச்சு வந்துவிட்டால் அவர் பாறைபோல அசைவின்றி நிற்பார். எனினும், அப்போதும் எவருள்ளத்திலும் வெறுப்பை விளைவிக்கமாட்டார்.

ஒன்றை முடிவு செய்வதிலே தயக்கமின்றிச் செல்லும் துணிவு அவருக்குண்டு. 'சௌரி சௌரா' நிகழ்ச்சிக்குப் பிறகு, 'நான் செய்தது இமயத் தவறு' என்று அவர் வெளிப்படையாக ஒப்புக்கொண்டதற்கு எத்துணைத் துணிவு வேண்டும்? இத்துணிவைச் சிலர் வெறுத்தனர். அவர் நண்பர்கள் வருத்தமுற்றனர். எனினும், அவரது துணிவு பிறழவில்லை.

காந்தியடிகள் ஒரு வழியைக் கடைப் பிடித்தால் அதை யாவரும் பின்பற்றுதல் வழக்கமாகிவிட்டது. 1942-ல் கிரிப்ஸ் தூது வந்தபோது ஒற்றுமை ஏற்பாட்டை ஒப்புக்கொள்ள வேண்டும் எனச் சிலர் வற்புறுத்தினர். எனினும், அடிகள் ஓர் அங்குலங்கூட அசையவில்லை. அவர், 'வெள்ளையனே வெளியேறு' என்ற இயக்கத்தைத் தொடங்கினர்.

அவரிடம் அணுகுவோர் மாணவராகத் திரும்பும் கவர்ச்சி அவரிடம் இருந்தது. துன்புறுவோர்க்கு ஆறுதல் பகர்வதிலும், நோயாளிகட்கு மருத்துவம் புரிவதிலும் அவருக்குப் பேரின்பம்!

ஒரு பேரொளி! அஃது இப்போது அணைந்துவிட்டது!

டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் :

(தத்துவக் கலைஞர்)

(ஆக்ஸ்போர்டிலிருந்து செய்தி)



வாயால் உரைக்க முடியாத துக்கம்! மனத்திலும் நினைக்கக்கூடாதது! கொஞ்சமும் நம்பக்கூடாதது நடந்துவிட்டதே!

நம் காலத்திலே தூய்மை, மேன்மை, உளங்கவர் ஆற்றல் ஆகிய எல்லாவற்றிலும் முதல்வராக இருந்து வந்தவர் ஒரு பேதையின் சீற்றத்திற்கு இரையாகி விட்டார்! சாக்ரடீஸ் நஞ்சைக் குடிக்க நேர்ந்தது! இயேசுநாதரைச் சிலுவையில் அறைந்தார்கள்! அந்த அநாகரிக நிலையிலிருந்து நாம் மாறவில்லை என்பதையே இது காட்டுகின்றது.

மறைந்து வரும் பழைய பண்பாட்டின் தனித்த விளக்காக விளங்கிய காந்தியடிகள் காலங் கடந்துவிட்டார்! அவரது ஊனுடலை நாம் கொன்றுவிட்டோம்! ஆனால், அவரது ஆன்மச் சுடரை அணைக்க யாவராலும் இயலாது! தெய்வத் தன்மை பொருந்திய பேரருளிலிருந்து பிறந்தது இந்தச் சுடர்! இதை அணைக்க முடியாது!

பேரருளாளர்கள் உலகில் எப்பொழுதும் அச்சமின்றி வாழ்வார்கள்.

பலாத்காரம், கொடுமை, குழப்பம் என்ற நரக வாழ்வில் நம் இரண்டு பேரரசுகளும் உலகமும் ஆழ்ந்துவிடாமல் இருக்கவேண்டுமானால், காந்தியடிகள் வாழ்ந்து, உயிரையும் வழங்கிய நெறியைக் கடைப்பிடிப்பது தவிர, வேறு வழியில்லை!

(அவர் வானொலியிலே ஆங்கில மக்களுக்கு அறிவித்தது)

இன்றைய உலகில் மிகவும் புகழ் பெற்றவர்களில் காந்தியடிகளும் ஒருவர்.

மாபெருந் துறவியாக வாழ்க்கை நடத்திவந்த அவர், தெய்வீக ஆதரவு பெற்றவராக நாட்டு மக்களால் மதிப்புற்றவர். இந்துக்களே யன்றிப் பல வேறு மதத்தினரும் பலவேறு வகுப்பினரும் அவரைப் போற்றினர்.

மிகவும் குறிப்பிடத்தக்க அவரது கொள்கை அருள் நெறியாகும். தவறுனவை யென நினைத்தவற்றைச் சாத்வீக முறையிலே எதிர்த்தார். அவரைப் பின்பற்றியவர்கள் கட்டுப்பாட்டை மீறினுல் வருந்துவார். அவருடைய மனத் தூய்மையையும் ஊக்கமுறும் பத்தியையும் ஐயமுறவியலாது.

காந்தியடிகள் ஏழை பங்காளர். தாழ்த்தப் பெற்றவரின் தொண்டர். அவர்கட்காக அரும்பாடு பட்டார்.

கொலேகாரனின் கை அவரை வீழ்த்திவிட்டது! சமாதானம் சகோதரத்துவம் என்பவற்றைக் கற்பித்த ஒரு குரல் ஓய்ந்தது. ஆனுல், அவரது ஆன்மா இந்தியரை முன்போலவே ஊக்கப்படுத்திச் சமாதானத்தையும் சமநெறியையும் காக்குமென நம்புகிறேன்.

[பிரிட்டனிலுள்ள தொழிற்கட்சியின் செயலாளர் தம் கட்சியின் சார்பாகத் துக்கந் தெரிவித்தார். இலண்டனிலுள்ள பாகிஸ்தான் ஹை கமிஷனர் தம் துக்கத்தை இந்திய ஹை கமிஷனர் திரு. கிருஷ்ண மேனனிடம் அறிவித்தார்.

அங்குள்ள சீனத் தூதர், 'காந்தியடிகள் கொலேயால் உலகமே திடுக்கிடவேண்டும். வரலாறுகண்ட பெரியார்களில் அவர் ஒருவர். அவரது தியாகம் அவரைப் பற்றி நாம் வருந்தும் இந்த நிலேயில், அவர் முடிக்காமல் விட்ட தூயவேலே முடியத் துணைபுரியுமாக!' என்றுர்].

திரு. வி. கே. கிருஷ்ண மேனன் :

(லண்டனில் இந்திய ஹை கமிஷனர்)

கடந்த இருபத்தெட்டு ஆண்டுகளாகக் காந்தியடிகளே இந்தியாவாக இருந்தார். நம் மக்களுக்கு வேறு இந்தியா தெரியாது. அவருயிர் போகக் காரணமாக இருந்த குற்றத்தின் பொறுப்பில் நமக்கும் ஓரளவு பங்குண்டு என்பதைக் குறிப்பிடாமல் இருத்தல் ஒவ்வாது. நம்முடைய முயற்சிக் குறைவால்—குறிக்கோளை அடைய முடியாத குறையால்—அந்த நிலை நீடிக்கும்படி செய்துவிட்டோம். அடிகளின் நோக்கத்தை நிறைவேற்றுவதனுல் இக் குற்றத்திற்குக் கழுவாய் தேடுவோம்.

நம் நாடு தலைவரை இழந்துவிட்டது. ஆனுல், 'இன்று நம் மக்களுக்கு மட்டுமன்றி, உலக மக்களுக்கும் அவர் நெருங்கியவரானுர்' என நம்புதல் வேண்டும். அடிகளின் நோக்கங்களை உருவாக்க நாம் முற்பட வேண்டும். சிற்பம், ஓவியம், இலக்கியம் முதலிய கலைகளின் மூலமாக நாம் என்ன செய்தாலும் அஃது அடிகளின் நினைவுக்கு ஏற்றதாகாது. நம்முடைய வாழ்க்கையை ஈடுபடுத்துவது ஒன்றுதான் அதற்கு வழி. அது, நாம் மற்றவர்களுடன் எப்படிப் பழகுகிருேம் என்பதைப் பொறுத்திருக்கிறது. இன்று நம் புதிய கடமைகளைச் செய்ய உறுதி பூண வேண்டும்.

இன்று நம் முதலமைச்சரைப் பற்றிய நினைவே இருக்கிறது. எந்தக் காலத்திலும் எந்த அரசியல் அறிஞரும் இவ்வளவு பெரிய பொறுப்பைச் சுமந்ததில்லை. அவர் அப் பொறுப்பை ஏற்குந் திறமை யுடையவரே. ஆனுல், அஃது எவ்வளவு பெருஞ் சுமை என்பதுதான் நமக்குத் திகைப்பை அளிக்கிறது!

காந்தி யடிகளைவிடப் பெரியவர் இனி இந்த உலகத்திலே பிறக்க முடியாது!

திரு. கே. எம். முன்ஷி :

எனக்கு அவர் ஒரு பேரரசர், தூதர், யோகி, தந்தை, வழிகாட்டி. அவரில்லாத வாழ்வு எனக்கு வெறும் பொட்டலாகவே தோன்றுகிறது !

மாராட்டியத் தலைவர்கள் :

[காங்கிரசுப் பொதுச் செயலாளர் திரு. சங்கரராவ் தேவ், மந்திரி திரு. காட்கில், மாராட்டிய மாகாணக் காங்கிரசுத் தலைவர் திரு. ஜெதி ஆகியோர் விடுத்த கூட்டறிக்கை.]

அடிகளின் மறைவால் உலகமே அழுங்குகிறது. கொலைகாரன் எங்கள் மாகாணத்தைச் சேர்ந்தவன் என்பது குறித்து நாணமுறுகிறோம். "தவறொன்றை மற்றொரு தவறாலே திருத்திவிட முடியாது." உள்ளத்தைக் குத்திவிட்டபோதிலும் எம்முறையிலே காந்தியடிகள் நடக்கக் கூறியுள்ளாரோ அதைப்போல நடந்து கொள்ள வேண்டும் என்று மாராட்டிய மக்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

திரு. மணிலால் காந்தி :

(காந்தியடிகளின் புதல்வர்)

[தென் ஆப்பிரிக்கா டர்பன் நகரில், 'இந்தியன் ஒப்பீனியன்' என்ற செய்தித் தாளை நடத்தி வரும் மணிலால் காந்தியின் கதறல்]

என் தந்தையை இழந்தேன் ! அவர் எனக்கு மட்டுமா தந்தை? இந்தியாவின் தந்தை. உலகத்தின் உண்மை நண்பர்.

எல்லாம் இறைவன் செயல். நம்மிடமிருந்து அவரைப் பிரித்துச் செல்வதில் இறைவனுக்கு ஏதோ நோக்கம் இருக்கவேண்டும் !

திரு. தேவதாஸ் காந்தி :

(காந்தியடிகளின் புதல்வர்)

ஆதரவிழந்துவிட்ட நான் சகோதர அனுதைகளுடன் என் துக்கத்தையும் கவலைகளையும் பகிர்ந்துகொள்கிறேன்: எல்லோரிடத்தும் இருள் கவிந்திருக்கிறது.

ஒரு மகன் எவ்வாறு காதலிப்பானே அவ்வாறு நான் அவரைக் காதலித்தேன். அவரும் என்னிடம் தந்தையின் ஆழ்ந்த பற்றை வைத்திருந்தார். என் இருபதாம் வயதில் கல்வி கற்கக் காசிக்குப் புறப்பட்டபோது எனக்கு அவர் அளித்த அன்பான முத்தம் உள்ளத்திலே பதிந்திருக்கிறது.

கடந்த சில மாதங்களாக அவரது சீராட்டுதலைப் பெறும் பேறு பெற்றவன் என் மூன்று வயது மகனே. என்னைவிட அவனை அவர் விரும்பினார். தாத்தா தன்னைக் கூப்பிடும்போது உதட்டை வைத்துக்கொள்வதுபோல இப்போதும் அம் மழலைச் சிறுவன் செய்துகாட்டி எங்களை அழ வைக்கிருன் !

குடும்பத்திலே காந்தியடிகளுக்கு இருந்த பற்றுக் கொஞ்சமே. அவர்—என் தந்தை—எனக்கே உரியவர் என்பதை நீண்ட காலமாக நினைவிலிருந்து அகற்றிவிட்டேன். உங்களைப்போலவே நானும் அவரை ஒரு பெரியாராகக் கருதுகிறேன். உங்களுக்கு நேர்ந்த குறையே எனக்கும் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, பற்றற்ற தன்மையுடனேயே நான் இந்தப் பரிவை உணர்கிறேன். எனவே, எனக்கு எல்லோரும் அளித்த இரக்க மொழிகளை அப்படியே எல்லோருக்குந் திருப்பி யளிக்கிறேன்.

அவர் காலமான பிறகு முப்பது நிமிடங்கள் கழித்தே நான் போய்ச் சேர்ந்தேன். அப்பொழுதும் அவருடல் கதகதப்பாக இருந்தது. ஆனல், நாடி அடிக்கவில்லை. உறங்குவதுபோலவே 'ஆவா'வின் மடியிலே படுத்திருந்தார். 'நான் வரக் காலதாமதம் ஆகிவிட்டது. பொறுக்கவேண்

டும்' என அவர் காதருகிலே கதறினேன்! விடை யில்லை! என்னை ஒருமுறை பார்க்க மாட்டாரா என்று ஏங்கினேன். அந்தோ! அவர் வாய் திறந்து பேசவுமில்லை! கண் விழித்துப் பார்க்கவு மில்லையே! 'என்னை இப்போது தொந்தரை செய்யாதீர்கள்!' என இயம்புவதுபோ லிருந்தது அவர் நிலை.

நாங்கள் இரவெல்லாம் விழித்திருந்தோம். அவர் முகத்திலே பெருந் தன்மை தவழ்ந்தது. உடலைச் சூழ ஒரு தெய்வ ஒளி பரவி யிருந்தது! அதைப் பார்க்கையில் இறப்புக்காகத் துக்கிப்பதும் அஞ்சுவதும் தவறு என்று தோன்றியது. ஜனவரி பதின்மூன்றும் நாள், உண்ணு நோன்பைத் தொடங்கும்போது, 'இணையற்ற நண்பனுகிய' காலனை அவர் அழைத்தது நினைவிலிருக்கலாம்.

அவருடைய ஊனுடலை நீராட்ட, சால்வையைப் பிரித்தபோது எங்கள் எல்லோருக்குந் தாங்க முடியாத துக்கம் உண்டாயிற்று! அந்தச் சால்வையைப் போர்த்திக்கொண்டே அவர் வழிபாட்டுக் கூட்டத்திற்குப் போனுர். சால்வைக்குள் ஒரு வெற்றுத் தோட்டாவும் இருந்தது. சுடுவதற்குப் போதுமான தொலைவிலும் இன்றி அத்துணை அண்மையி லிருந்ததையே அது காட்டுகிறது. நெஞ்சை மறைத்து அவர் அணிந்திருந்த துணியிலே இரத்தக்கறை காணப்பெற்றது!

கோவணந் தவிர மற்றத் துணிகளை நீக்கிய பிறகு அவர், 'நிர்வாண பக்கிரி' யாகக் காட்சி யளித்தார். அப்போது எங்கள் துக்கம் எல்லை கடந்தது. அவருடைய உறுப்புக்கள் எவ்வகை விகாரமுமின்றி இருந்தன. அவரது உடலை நீடித்து வைத்திருக்க வேண்டும் என்ற ஆவல் மிகுதியாக இருந்தது. எனினும், 'இந்து' உணர்ச்சியில் அதற்கு இடமில்லையே! 'பாபு'வும் எங்களை மன்னிக்க மாட்டார்!

* * *

நாம் அவரைப் பாதுகாக்கவில்லையென நினைக்க வேண்டியதில்லை. அவரை யாராற் காக்க முடியும்? 78 ஆண்டுகளாக இறைவன் காவலையன்றி எந்தக் காவலை யளித்தோம்? நம்மைப் போலவே கவலையில் மூழ்கியவர் களைக் குறைகூறுதல் வேண்டாம்.

வருங்காலம் இருள் நிறைந்தது எனக் கருதவில்லை. கடந்த சில மாதங்களாக அன்றாட அறிவுரைகளிலே நல் லறங்களை அவர் தெளிவாகச் செப்பியுள்ளார். அவர் பேரின்பத்திலே ஆழ்ந்துள்ளார். அவருடைய ஆன்மா நமக்கு வழிகாட்டும். சிறிது முயன்றால் இருள் நீங்கி ஒளி பரவும்.

திரு. பெரோஸ் கான் நூன் :

மகாத்மா காந்தியின் பிரிவுச் செய்தி எனக்குப் பேரதிர்ச்சி தந்தது. இந்தத் தூர்ப்பாக்கிய நாட்டிலே இத்தகைய பேரழிவை உண்டாக்கிய, கட்டுப்பாடற்ற—ஒழுங்கற்ற சக்திகள் மேலோங்கி விட்டன என்பதற்கு இஃது அறிகுறியாகாதென்று நம்புகிறேன்! அமைதியின் தூதர் மறைந்துவிட்ட போதிலும், அவரது ஆன்மா நாட் டின் இடையே பரவித் தொடர்ந்து பணியாற்றுமென்று நான் உண்மையாகவே நம்பி இறைஞ்சுகிறேன்.

சர். மிர்சா இஸ்மாயில் :

மகாத்மா காந்தியின் மறைவினால், தன்னிடத்தே தோன்றியுள்ள மிகச் சிறந்த மனிதர்களில்—ஊழியர் களில் ஒருவரை உலகம் இழந்துவிட்டது. இந்தியா அவ ருக்கு எந்த வகையில்தான் கடமைப்பட்டிருக்கவில்லை?

நொய்மையான உடலிற் பொதிந்திருந்த இந்தச் சிறந்த ஆன்மாவைக் காட்டிலும், இந்த நாட்டிற்கு, உண்மையான பற்றுடனும், பெரும் வீரத்துடனும், பணி யாற்றியவர்களோ இடையறாது உழைத்துத் துன்புற்றவர் களோ யாருமே இல்லை! அவர் உண்மையில் இந்தியாவின்

பெருமைக்குரியவராகவே இருந்தார். உலக முன்னணியில் இந்நாட்டை உயர்த்திய பெருமை அவருக்கே உரியது.

நமது மறைந்த தலைவருக்காக உலகம் வருந்திய அளவுக்கு உலக வரலாற்றில் யாருமே அநுதாபச் செய்திகள் பெறவில்லை என்று நான் சொன்னால் அது மிகையாகாது.

காந்தி மறைந்தார்; எல்லோரும் சென்ற வழியில் அவரும் போய்விட்டார்!—ஆனால் அவர் வாழ்கின்றார்! நாட்டு மக்களின் உள்ளத்திலே அவர் என்றைக்கும் வாழ்வார்!

திரு. ஜி. வி. மாவ்லங்கர்:

(இந்தியப் பாராளுமன்றத் தலைவர்)

மகாத்மா அரசியலில் நுழைந்த காலத்திலிருந்து பலாத்காரத்தை எதிர்த்து வந்தார். .... தவறான வழியிற் சென்ற பைத்தியக்காரனின் செயலைக் கண்டிப்பது மட்டும் போதாது. பயங்கர நிகழ்ச்சிகளுக்கு இந்நாட்டில் கொஞ்சமும் இடமில்லாதவாறு ஒவ்வொருவரும் பார்த்துக்கொள்ள வேண்டும். 'காந்தியவர்கள் அடிக்கடி சொல்லி வந்ததுபோல அகிம்சை யில்லாமல் உண்மையான குடியரசு நடைபெறாது.

மகாத்மாவின் செல்வாக்குப் பரவாத துறையே இல்லை. நம் நாட்டிற்கு மட்டுமல்லாமல், உலகத்துக்கே நெருக்கடியாக உள்ள இச் சமயத்தில் நாம் அவரை இழந்துவிட்டோம்.

ரெவரண்டு ஜிரோம் டி-சௌஸா:

(அரசியல் அமைப்பு மன்ற உறுப்பினர்)

மகாத்மாவைக் குறித்து இந்துக்கள் தங்களுடைய உயரிய கலைப்பண்பின் அருமையான மலர் என்று பெருமைப்படலாம். முஸ்லீம்கள் "எங்களுக்காகப் போராடியவர்" என்று பெருமைப்படலாம். தாழ்த்தப்பட்

டோர் "மகாத்மா எங்கள் தந்தை" என்று கூறுவார்கள்; "எங்களை முன்னுக்குக் கொண்டுவரும் வழியை மகாத்மா ஒருவரே கூறினர்" என்று மாதர்கள் கூறுவார்கள். மகாத்மாவின் வியத்தகு ஆற்றல் இந்தியக் கிறிஸ்தவர்களை நாட்டுக் கிளர்ச்சியில் சேர்ப்பித்து, இப்பொழுது அவர்களை நாட்டு நலனுக்காக மற்றவர்களுடன் சேர்ந்து நின்று பாடுபடும்படி செய்திருக்கிறது. அவர் கொலை செய்யப்பட்டார். ஆனல் இந் நிகழ்ச்சி அவர் அறிவுரை யாற்றி வந்த நன்னெறிக்குப் புது ஆற்றலை அளிக்கும்.

எம். ஆர். மசானி :

(அ. அ. ம. உறுப்பினர்)

சுதந்தரத்தைக் கொண்டுவந்து சேர்த்த பிறகு மகாத்மா மறைந்துவிட்டார். இந்தியா ராணுவ பலத்தில் கவனம் செலுத்துமானல் அதன் கதி அதோகதிதான்! இப்போது நாம் மகாத்மா காண்பித்த வழிகளை மிகுந்த ஆர்வத்தோடு பின்பற்றிப் புது அத்தியாயத்தை ஏற்படுத்துவோமாக!

திருமதி. ஹன்ஸா மேத்தா :

(அ. அ. ம. உறுப்பினர்)

மகாத்மாவின் மறைவு இந்திய மாதர்களுக்கு ஈடு செய்யவொண்ணுத இழப்பாகும். இந்தியா அருள் தலைவர்களைப் பெற்ற பேறுடையது. மகாத்மா அவர்களுக்குள் ஒளிமிளிரும் விண்மீனுக விளங்குகிறுர். மகாத்மா எத்தகைய அரசாங்கம் அமைக்கப்பட வேண்டுமென்று விரும்பினரோ அதை ஏற்படுத்தப் பாடுபடுவதே நாம் அவருக்குச் செலுத்தக்கூடிய சிறந்த காணிக்கையாகும்.

பிராங்க் அந்தோணி :

(அ. அ. ம. உறுப்பினர்)

பூசல்கள் மிகுந்துள்ள உலகத்திற்கு மகாத்மாவின் நல்லுரைகளே சிறந்த பரிகாரம்.

சீக்கியத் தலைவர்கள்

மகாத்மாவுக்கு சீக்கியரிடம் ஒரு தனி அன்பு உண்டு. இன்று மாகாணம் உள்ள நிலையில் மகாத்மா அதற்கு என்ன வழி காட்டப்போகிறார் என்றுதான் கிழக்குப் பாஞ்சாலம் காத்துக்கொண்டிருந்தது. மகாத்மாவின் மரணத்தினால் இன்று சீக்கியருக்கு எல்லையற்ற இழப்பு ஏற்பட்டிருக்கிறது. .... இவ்வளவு பெரிய நட்டத்தை உலகம் இதுவரையில் அடைந்ததில்லை !

சர்தார் சார்துல் சிங் சலஷிந்த் :

(இந்திய முன்னேற்றக் கட்சித் தலைவர்)

இதுவரையில் இவ்வளவு பெரிய மனிதர் பிறந்ததில்லை. இனிப் பிறக்கப் போவதுமில்லை. அவருடன் நெருங்கிப் பழகிய எங்களுக்கு இனி உலகம் வெறும் சூனியமாகவே இருக்கும். காந்தியடிகள் வீசிய ஒளி அருள் ஒளியாகும். எனவே அது என்றென்றும் ஒளி தரும் என்பதில் ஐயமில்லை.

திருமதி மார்கரெட் :

(கொலம்பியா ரேடியோ நிருபர்)

மகாத்மா கொல்லப்படுவதற்குச் சற்று நேரத்திற்கு முன்பு நான் அவரைக் கண்டு பேசினேன். என் முதல் கேள்வி அப்போது எனக்கு விளையாட்டாகத் தோன்றியது.

“ நீங்கள் 125 வயது வாழப்போவதாக அடிக்கடி சொல்லி வருகிறீர்களே ! அந்த நம்பிக்கை எப்படி ஏற்பட்டிருக்கிறது ?” என்று கேட்டேன்.

மகாத்மா காந்தி சொன்ன பதில் திடுக்கிடச் செய்தது. “ எனக்கு அந்த நம்பிக்கை பறந்துவிட்டது !” என்று அவர் சொன்னார்.

“ஏன் ?” என்று கேட்டேன்.

"உலகில் நடக்கும் பயங்கரமான நிகழ்ச்சிகளே காரணம். இருளில் வாழ நான் விரும்பவில்லை. .... என் பணி தேவையிருந்தால், எனக்கு ஆணை இருந்தால் 125 வயதுவரை இருப்பேன்" என்று மகாத்மா சொன்னார்.

அவர் உயிரோடிருப்பது அன்றுதான் கடைசி நாளென்பது எங்களிருவருக்கும் தோன்றவேயில்லை.

திருமதி அருணா ஆசப் அலி :

(சோஷியலிஸ்ட் தலைவி)

மகாத்மா காந்தியின் இந்தத் திடீர் மறைவுக்கு இந்தியா முழுவதுமே பொறுப்பாகும். இந்தப் பயங்கரமான பிற்போக்குச் சக்திகளை ஒழித்துக் கட்டுவதற்காக இந்தியாவிலுள்ள முற்போக்கு சக்திகளெல்லாம் உடனடியாக ஒன்று திரள வேண்டும். மகாத்மாவைத் தங்களிடையே வைத்திருப்பதற்கும் அவருடைய அறிவுரையைக் கேட்பதற்கும் இந்தியா சிலகாலமாக அருகதையற்றுவிட்டது! மகாத்மாவைச் சுட்டுக்கொன்ற அந்த முழுமுட்டாள் மட்டுமல்ல காந்தியின் மரணத்திற்குப் பொறுப்பு!

புதிது புதிதாகக் கலவரங்கள் துவங்கியிருக்கின்றன என்று காந்தியவர்கள் கேட்டபோதெல்லாம், "இந்திய வரலாற்றின் இந்த நெருக்கடியான கட்டத்தில் நான் இவைகளையெல்லாம் பார்த்துக்கொண்டு இன்னுமா உயிர் வாழவேண்டும்?" என்று மனமுடைந்து வருந்துவார். இந்திய விடுதலை இத்தகைய அமளியிற் கொண்டுவிடுமென்று அவர் கொஞ்சங்கூட நினைத்ததில்லை! .... இந் நெருக்கடியான கட்டத்தில் நாட்டிலுள்ள தீவிர அரசியல் ஊழியர்கள் எல்லோரும் தங்கள் கடமையைச் சரிவரச் செய்யவேண்டும்.

திரு. ஆஸப் அலி :

(அமெரிக்காவில் இந்தியத் தூதர்)

காந்தியவர்களின் மரணத்தால் நான் மிகவும் துயரடைந்துள்ளேன். இந்த அதிர்ச்சியைத் தாங்கக் கடவுள்

உங்களுக்கு ஆற்றல் அருளுவாராக! காந்தியவர்கள் எதற்காக உயிர் விட்டாரோ அந்தக் குறிக்கோளை நாம் நிறைவேற்றுவோம். இவருடைய, சத்தியம், அன்பு, சமாதான அறிவுரைகள் மூலம் இந்தியா நன்மை யடையட்டும்!

திரு. கமலநயன் பஜாஜ்:

(ஜம்னாலால் பஜாஜின் புதல்வர்)

என் தந்தையின் மரணத்திற்குப் பின் காந்தியவர்களே எங்கள் குடும்பத் தலைவராக இருந்தார். இனி நாங்களெல்லோரும் அனாதைகள் ஆகிவிட்டோம்!

திரு. எஸ். ஏ. பிரெல்வி:

("பாம்பே கிரானிக்கிள்" ஆசிரியர்)

முஸ்லீம்களும் மற்றச் சிறுபான்மையோரும் இந்தியாவில் மதிப்போடும் பாதுகாப்போடும் வாழ்வதற்காக மகாத்மா காந்தி தம் உயிரைத் தியாகம் செய்துள்ளார்! இதனால் பல தலைமுறைகளுக்குச் சிறுபான்மையோர் பெற்றிருந்த நண்பர்களில் மிகச் சிறந்த பெரியார் என்பதைக் காட்டினார்.

திரு. ஜி. எல். மேத்தா:

('டாரிப் போர்டு' தலைவர்)

மகாத்மா காந்தியின் பிரிவால், புத்தரின் தியாகமும், மதத்திற்காக உயிர் நீத்த ஏசுவின் பண்பும், சாக்ரடீஸின் அறிவும், ஆபிரஹாம் லிங்கனின் அரசியற் கலை நிறைவும் ஒருங்கு சேர்ந்த ஒருவரை நாம் இழந்துவிட்டோம்!

மகாத்மா ஆண், பெண், குழந்தைகள் அனைவருடைய இதயங்களிலும் - எண்ணங்களிலும் புரட்சி யுண்டாக்கிய ஒரு புரட்சிக்காரர்! ஆயினும் அவர் எதற்கும் இசைவதிலும் நிலைத்த பண்பிலும் நம்பிக்கை கொண்டிருந்தார். அவர் இந்தியாவின் தேசியப் போர்களில் இறுதிவரை போரிட்டார்! ஆயினும் ஒரு மிக வுயர்ந்த அமைதி காப்

பாளராகவும் அவர் விளங்கினார். வாழ்க்கையிலோ, பின்பற்றுதலைவிட வணங்குதலை மிகுதியாக ஏற்ற தேவதூதர்களின் கதியில்தான் அவரும் துன்புற்றார்.

இந்நாளில் நாம் ஒன்றையொன்று வெறுக்கும் அளவுக்குப் போதுமான மதத்தைப் பெற்றிருக்கிறோம்: ஆனால் காந்தியவர்களோ, பகைவரிடத்தும் அன்பு செலுத்தும் அளவுக்குச் சரியான மதத்தைச் சார்ந்திருந்தார்.

திரு. எஸ். ஏ. டாங்கே :

(அ. இ. தொழிற் சங்கக் காங்கிரசின் தலைவர்)

காந்தியடிகளின் பிரிவு நாட்டிற்கே ஒரு பேரிடி. இந்து முகம்மதிய ஒற்றுமையை நிலைநாட்டி நாட்டின் முன்னேற்றத்தை விரைவுப்படுத்துவது பெரிய வேலை.

திரு. வினோபா பாவே :

(காந்தியடிகளின் மாணவர்)

இந்திய மக்கள் வகுப்புப் போரில் இறங்கினால் இந்தியா அழிந்துவிடும். என்றும் அடிமையாகிவிடும்!

இந்தியா பல மதங்களுக்கும் இடமளிக்கும் ஒரு திருநாடு. தாராள சிந்தனைக்கும் பரந்த மனப்பான்மைக்கும் பெயர் பெற்றது. உலகத்தைக் காப்பாற்றும் ஆற்றல் வாய்ந்தது. அழுது கொண்டிருப்பதால் பயனில்லை! பொதுவாக மனித இனத்துக்குப் பணியாற்றுவது, அன்பு, சத்தியம், இன்னா செய்யாமை இவைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் உலகக் கூட்டுறவை அமைக்கப் பாடுபடுவது என்ற காந்தீயக் குறிக்கோளைப் பின்பற்றி நடப்போமாக! அதுதான் 'பாபு' அவர்களுக்குச் சிறந்த பாராட்டாகும்.

திரு. பி. ஸி. ஜோஷி :

(இந்தியப் பொதுவுடைமைக் கட்சிச் செயலாளர்)

இந்து-முஸ்லீம் ஒற்றுமைக்காகப் பாடுபட்ட மகான் மறைந்துவிட்டார்.

ஸ்ரீபிரகாஷா :

(பாக்கிஸ்தானில் இந்திய ஹை கமிஷனர்)

காந்தியவர்கள் மறைந்துவிட்டதற்காக மிகவும் துயர மடைகிறேன்.

டாக்டர் எம். ஆர். ஜெயக்கர் :

ஏசு கிறிஸ்துவின் கொள்கையோடு தம் கொள்கையை மகாத்மா அருமையாக மதிப்பிட்டுக் காட்டிய ஒற்றுமையின் சிகரத்தைக் குறிக்கிறது அவரது வெறுக்கத்தக்க படுகொலை! அவர்கள் இருவரும் வீர மரணம் எய்தியதில் உடன்பிறப்பாளர்கள்.

டாக்டர் சச்சிதானந்த சின்ஹா :

(பாட்னா பல்கலைக் கழகத் துணைவேந்தர்)

இந்தியாவில் தோன்றிய மிகச் சிறந்த பெரியார்களில் ஒருவராக மகாத்மாவை நான் மதிக்கிறேன். மிகச் சிறந்த ஒழுக்கத்தின் நடைமுறைக்கேற்ற குறிக்கோள்களுடன் கூடிய ஆன்மாவின் மிக வுயர்ந்த நிலையை அவர் பெற்றிருந்தார். அத்தகைய பெரியார்கள் உலகில் மிகவும் அரிதாகத் தான் தோன்றுவார்கள்.

சர். தேஜ் பகதூர் சாப்ரு :

இந்தக் கொடிய செய்தி கேட்டு யான் திகைத்துவிட்டேன்! பெருந்தன்மை வாய்ந்த பெரியார்—மிகச் சிறந்த நாட்டுப் பற்றுடையவர்—இந்திய விடுதலையின் தந்தை, இந்திய ஒற்றுமைக்காகத் தம் உயிரையே தியாகம் செய்துவிட்டார்! அவரைப் பின்பற்றும் காங்கிரசு நண்பர்கள் அவரது பரம்பரைக்கும் தகுதிக்கும் உகந்தவர்களாக விளங்குவார்கள் என்று நம்புகிறேன்.

சென்னை மாகாணம்

திரு. ஓமந்தூர் பி. இராமசாமி ரெட்டியார் :

(சென்னை மாகாண முதலமைச்சர்)



இந்தியாவின் ஆத்மீகத்தின் சின்னமாக விளங்கிய மகாத்மா மறைந்துவிட்டார். பாரத நாட்டின் ஆன்மீக கருமத்துக்கு எடுத்துக் காட்டாக அவரைப்போன்றவர் வேறு யாரும் கிடையாது. இந்தியாவுக்காகவும், இந்தியர்களுக்காகவுமே அவர் உயிர் வாழ்ந்தார். இந்திய மக்களுக்காக எல்லாவற்றையும் தியாகம் செய்தார். அவர் கொலையுண்டு மாண்டதின் மூலம் மக்களுக்காகவும் நாட்டிற்காகவும் ஒப்புயர்வற்ற, ஈடு இணையற்ற மாபெருந் தியாகத்தைச் செய்திருக்கிறார். "தேசத்தின் தந்தை" என அவருக்கு அளிக்கப்பட்ட பெயர் மிகவும் பொருத்தமானதே. மகாத்மா உண்மையான கர்மயோகி.

மகாத்மாவைக் கொலை செய்ததன் மூலம் உலகம் பூராவையுமே ஒரு கொடியன் கலக்கத்துக்கு ஆளாக்கி விட்டான். நாடு பூராவுமே துக்கத்தில் ஆழ்ந்துவிட்டது. மகாத்மா போதித்துவந்த சகோதரத்துவம், அகிம்சையாகிய தத்துவங்களை நாம் கிரியாம்சத்தில் பின்பற்றி நடக்கவேண்டும். நாட்டில் உள்ள ஒவ்வொருவரும் கர்மயோகிகளாக மாறவேண்டும். அப்பொழுதுதான் அந்த மாபெருந் தலைவர் நம்மீது வைத்திருந்த நம்பிக்கைக்குத் துரோகம் செய்தவர்களாகமாட்டோம் !

திரு. எம். பக்தவத்சலம் :

(பொதுப்பணி-விளம்பர அமைச்சர்)



மகாத்மா காந்தியடிகள் வாழ்ந்த காலத்திலே நாமும் வாழ்ந்தோம் என்பது நமக்கு மிகவும் பெருமை கொடுக்கக் கூடியது. மகாத்மா நமது நாட்டினர் என்பது நாம் மேலும் பெருமை கொள்ளக்கூடிய தாகும். பல ஆண்டுகளாக இவ்விதப் பெருமையை நாம் அடைந்துவந் தோம். ஆனால், நம்மில் ஒருவராலேயே மகாத்மா கொல்லப்பட்டது நம்மை மிகுந்த கேவலமானநிலைக்குக் கொணர்ந்துவிட்டது. தமது வாழ்நாள் முழுவதையும் நமது சீர்திருத்தத்துக்காகவே மகாத்மா செலவழித்தார். அவர் மரணத்தின் மூலமும் நமக்குச் சேவையே செய்துள்ளார். ஆனால், அவர் இவ்வித கொடுமையான மரணம் அடைந்தது நமக்கு ஒரு படிப்பினையைக் கற்பிக்கிறது. நமது நாட்டிலிருந்து பலாத்காரத்தை வேரறுத்து ஒழித்துவிடவேண்டும் என்பதே அந்தப் படிப்பினை. சுதந்திர இந்தியர்கள் சமாதானமாக வாழ வழிசெய்ய வேண்டும். நமக்காக வாழ்ந்து, நமக்காக உயிர்நீத்த மகாத்மா காந்தியின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நாமும் நம் மனத்திலிருந்து குரோதம், பொறாமை, கெட்ட எண்ணம், சுயநலம் ஆகிய தீக்குணங்களை அடியோடு அகற்றுவோமாக! அப்படிச் செய்வதன் மூலமே இந்தப் பரிசோதனைகாலத்தை நாம் சமாளிக்க வேண்டும்.

மறைந்த மகாத்மாவுக்கு நம்முடைய வணக்கத்தையும் மரியாதையையும் எப்படித் தெரிவித்துக்கொள்வது? மக்கள் சமூகத்துக்குத் தொண்டு செய்ய நாம் உறுதி செய்துகொள்வதன் மூலமேயாகும்.

டாக்டர் பி. சுப்பராயன் :

(சட்ட அமைச்சர்)



நம்முடைய வாழ்க்கையில் ஏதோ ஓர் அரிய பொருளை இழந்துவிட்டு ஒரே சூன்யமாக இருப்பதுபோல் நான் உணர்கிறேன். தான் செய்வது இன்னதென்றுகூடப் பகுத்தறிந்து பார்க்கச் சக்தி இல்லாத ஒரு வெறிபிடித்த கொலைகாரனால் நம் பாபு கொல்லப்பட்டார். அவர் சாகுந் தறுவாயில்கூட கடவுளையே தியானித்துக்கொண்டு இருந்தார். ஆயுதப் போராட்டத்தினால் அல்லாது, தாம் ஒருவரே பிறருக்காக இரங்கித் துன்பத்தை ஏற்றுக்கொண்டதாலேயே தம் நாட்டிற்கு விடுதலையைத் தேடித் தந்த வேறொரு தலைவரை—மகானை—உலக வரலாற்றிலேயே காண முடியாது. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக அவர் நடத்தி வந்த போராட்டங்களெல்லாம் அன்பின் அடிப்படையிலேயே இருந்து வந்தன. ஏகாதிபத்தியத்தின் கல் நெஞ்சையும் அன்பினாலேயே மாற்றிவிட முனைந்து பாடுபட்டார். எந்த வெற்றிக்காக அவர் பாடுபட்டாரோ அந்த வெற்றி, அவர் விரும்பிய முறையில் இல்லாவிட்டாலும், அவரது வாழ்க்கையில் கடைப்பிடித்து வந்த சத்திய நெறியினாலேயே நம்மை வந்தடைந்தது. தங்களுடைய புனித லட்சியத்திற்காக உயிரையே காணிக்கையாக ஈந்த சாக்ரடீஸையும், இயேசு கிறிஸ்துவையும் போலவே அவரும் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவர். அரசியல் துறையில் எண்ணிப் பார்த்தால் நம் பாபுவைப் போலவே கோரமாகக் கொலை செய்யப்பட்ட ஆபிரகாம் லிங்கன் வாழ்ந்த காலத்திற்கு என் மனம் பறந்து செல்கிறது. நம் மகத்தான தலைவர் இறந்ததைக் குறித்து நாம் மட்டும் துக்கப்பட

வில்லை. நம்மோடுகூட உலகம் முழுவதுமே ஆறாத் துயரில் ஆழ்ந்துள்ளது. அவர் நம்முடைய தலைவர் மட்டுமல்ல; மனித இனத்தையே வாழ்விக்க வந்த ஒரு 'போதகர்'. அவர் மறைந்தது குறித்து உலகத்தின் எல்லா மூலை முடுக்குகளிலிருந்தும் ஆழ்ந்த வருத்தத்தையும் மரியாதையையும் காட்டும் மிகுதியான இரங்கற் செய்திகள் வந்து குவிந்த வண்ணம் இருக்கின்றன.

டாக்டர் தி. சே. சௌ. ராஜன் :

(உணவு அமைச்சர்)



மகாத்மா காந்தியடிகள் அமரராகி விட்டார். இந்தக் கொடூரக் கொலையினால் அகில உலகமே பயத்தினாலும், நடுக்கத்தினாலும் அலறிவிட்டது. மகாத்மா என்றைக்கும் அழியாத ஒரு பெரும் சக்தி. அவர் எப்போதும் தைரியத்தைக் கைநழுவ விட்டதில்லை. பயம் என்பதையே அறியாதவர். அவரைப் போன்ற அரும் பெரும் மகான்களால் மட்டுமே அவ்வாறு இருக்க முடியும். அகிம்சையும் சத்தியமும் அழகு செய்யும் பீடத்தில் உயிரைப் பலிகொடுக்க அவர் எந்தக் காலத்திலும் சித்தமாகவே இருந்தார். அவருக்கு உலகத்திலே சொந்தமானதென்று ஒன்றும் கிடையாது. ஆனால் அவர் செல்வர்களுக்கு எல்லாம் செல்வராக விளங்கினார். லட்சாதிபதிகளெல்லாம் தங்களுடைய செல்வங்களை அவரது காலடியிலே சமர்ப்பித்து அவர் இடும் கட்டளையை எதிர்நோக்கிக் காத்துக் கிடந்தனர். அவர் எதைப் போதித்தாரோ, அதையே தம் வாழ்விலும் கடைப்பிடித்து மக்கள் குலத்திற்குப் பணியாற்றி வந்தார். அவருக்கு அரசன் என்றும் ஆண்டி என்றும் வேற்றுமை கிடையாது. எல்லோரும் ஓர் குலம்—ஓரினம் என்றே மதித்து

அன்புடன் நேசித்து வந்தார். உலக வரலாற்றிலேயே அவரது வாழ்க்கை எப்போதும் கண்டிராத ஒரு புது சகாப்தத்தைத் தொடங்கி வைத்திருக்கிறது. அவர் மக்களிடமும், பல நாடுகளுடனும் அகிம்சையையே ஆபரணமாக அணிந்து பழகி வந்தார். அப்பழுக்கில்லாச் சத்தியத்தின் மூலம் அரசியல் சுதந்திரத்தை அடைய முடியும் என்று உலகிற்குப் பாடங் கற்பித்தார். அந்தோ! எந்தப் பலாத்காரத்தை எதிர்த்துத் தம் வாழ்நாள் முழுதும் போரிட்டாரோ அதே பலாத்காரத்தினால் அவர் கொல்லப்பட்டது நம்மால் நம்ப முடியவில்லை.

ஒன்றையொன்று தாக்கி வாழ்கின்ற பல சாதி, பிறப்பு வேற்றுமைகள் மலிந்துள்ள இந்நாட்டில் மனித உயிர்களுக்குள்ள ஒற்றுமையை அவர் நிலைநாட்டினார். உலகத்தைக் கரையேற்றுவிக்க, தங்கள் வாழ்நாட்களில் பாடுபட்ட பல சிறிய மகான்களோடு அவரும் சேர்ந்து விட்டார். காந்தியடிகளின் வாழ்க்கையும், கோட்பாடுகளும் மக்களினத்தில் அழியா முத்திரைகளாக விளங்கும். இயேசு கிறிஸ்து, ஆப்ரகாம் லிங்கன், சாக்ரடீஸ் ஆகியவர்களை நாம் பார்க்கவில்லை. ஆனால் போற்றுகிறோம். காந்தியடிகளோ நம்மிடையே உதித்து, நம்முடனேயே வாழ்ந்தவர். அவருடைய அரும்பெரும் பெருமைகளையெல்லாம் நாம் கண்ணெதிரிலேயே கண்டோம். எனவே அவர் ஏற்றிவைத்த அன்பு, சத்தியம், தன்னலமின்மை ஆகியவற்றின் கொடியைத் தாழாது பறக்க விடுவோமாக! அவர் போதித்து வந்த சத்தியத்தை உணர்ந்து அதன்படி ஒழுகுவோமாக! வரலாற்றில் காந்திய சகாப்தம் மறக்க முடியாதது.

புண்பட்ட உள்ளத்திற்குப் போதகனை—துன்புறும் ஆன்மாவிற்கு ரட்சகனை—நாம் அவரைப் பார்க்கிறோம். அவர் உள்ளமெல்லாம் அன்பு வழிந்து ஓடுவதைப் பார்க்கிறோம்.

காந்தியடிகள், என்னுடைய கண்ணைத் திறந்த கருணை மூர்த்தி. அன்றொரு நாள் பலாத்காரமும், துவேஷ நினைப்

பும் என் இதயத்தை மூடிக்கொண்டு இருந்தபோது அவர் என்னுடைய கைகளைப் பிடித்துக் கொண்டு லண்டன் நகரத்துத் தெருக்களில் என்னை அழைத்துச் சென்றார். அன்று என்னுடைய பயித்தியக்கார மனோநிலையை என்னை விட்டுப் பறக்கடித்தார். என் உள்ளத்தைக் கவர்ந்து விட்டார். எத்தனை பெரும் புத்தகங்களாலும் எனக்கு அளிக்க முடியாத ஒரு பெரும் படிப்பினையை எனக்குப் போதித்து என்னைப் புது மனிதனாக்கினார்.

திரு. தி. சு. அவினாசிலிங்கம்:

(கல்வி அமைச்சர்)



இந்த நாடு சுதந்திரம் அடைவதற்குக் காரணமாக இருந்தவர். இமயத்தில் இருந்து கன்யா குமரி வரை, கோடிக்கணக்கான மக்களால் தலைவராக மட்டுமல்ல, நடமாடும் தெய்வமெனக் கொள்ளப்படும் அவர் சுதந்திரம் பெற்ற ஆறு மாதத்திற்குள், பகைவரால் அல்ல, விரோதியால் அல்ல, இந்த நாட்டு மகன் ஒருவனால் சதி செய்து கொல்லப்பட்டார் என்றால், நம் நாடும் மக்களும் எவ்வளவு கேவலமாக உலகமக்களால் நினைக்கப்படுவார்கள் என்று யோசனை செய்து பாருங்கள். நினைக்க நினைக்க உடல் சிலிர்க்கிறது! குலை நடுங்குகிறது!

நடந்தது நடந்துவிட்டது. எதிர் காலத்தில் நமது கடமை என்ன? இனிமேலாவது இம்மாதிரி வெறிச்செயல்கள் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இத்தகைய செயல்களுக்கு அடிப்படையாக இருப்பது வெறுப்பு. இவ் வெறுப்பைத் தனி மனிதர்களுக்குள்ளும் சமூகங்களுக்குள்ளும் கிளப்பிவிடுவது எளிது. ஆனால்

அது பெரும் பிசாசாக வளர்ந்து கோர ரூபம் அடைந்த பின் அதைத் தடுப்பது மிகக் கடினமான காரியம். ஆதலால் இந்நாடு உய்யவும், நாம் புதிதாகப் பெற்ற நமது சுதந்திரத்தை நிலை நிறுத்தவும், உலகிற்கு வழிகாட்டவும் மகாத்மா காந்தி நமக்குக் காட்டிய அன்புநெறியைப் பின் பற்றுவதே நமது கடமையாகும். அவர் காலமான பிறகு அவருடைய கொள்கைகளை நழுவ விட்டோம் என்ற அவச் சொல் நமக்கு வேண்டாம். நமக்குச் சுதந்திரத்தை தேடிக் கொடுத்த அந்நெறியே நம்மை உயர் வாழ்வுக்கும் அழைத்துச் செல்லும் என்று நம்பி அவர் அன்புநெறியைப் பின் பற்றுவோமாக!

அகிம்சை, சத்தியம், ஏழைகள்பால் அன்பு, அனைவருக்கும் சேவை என்ற அவர் போதித்த கொள்கைகளைப் பின்பற்றுவதே நாம் அவருக்குச் செய்ய வேண்டிய கடமையாகும்.

திரு. டேனியல் தாமஸ்:

(மது விலக்கு அமைச்சர்)



நம் காலத்திலேயே மகாத்மா காந்தி வாழ்ந்தார். அவரை நாம் நேரில் கண்டுள்ளோம். அவருடைய அருள் உபதேசங்களை நம் காதுகளால் கேட்டுள்ளோம். அவர் மூச்சு விட்ட காற்றிலேயே நாமும் மூச்சு விட்டிருக்கிறோம். இந்தக் காந்திய சகாப்தத்தில் இந்தியாவிலும் உலகத்திலும் வாழ்கின்ற நிகழ் காலச் சந்ததியாருக்கு இஃது என்றைக்கும் கிடைக்கப் பெறாத மகத்தான பெருமையாகும். காந்தியடிகளின் தன்னலமற்ற தனிப்பெரும் சேவையினால் மனித

இனத்திற்கே அளவிறந்த பெருமை ஏற்பட்டுள்ளது. எல்லா வகையான நல்லெண்ணங்களும் நற்குணங்களும் அவரிடம் பொதிந் திருப்பதை நாம் காண்கிறோம். அவர் ஆத்மீக குணத்தில் ஒரு ஞானி; அறிவுத் திறமையில் ஒப்புயர்வற்ற அறிஞர்; மனோ திடத்தை இழக்காத மகாத்மா; கொள்கைக்காகத் தன்னையே அர்ப்பணிக்கத் தயங்காத கர்ம வீரர்; மக்களின் இதயத்தில் மறையாத நண்பர்; இந்தியர்களையும் உலக மக்களையும், உள்ளன்புடன் நேசித்து வந்த உத்தமர்; திரிகரண சுத்தமாகப் பரம்பொருளை வழிபட்டுவந்த பக்தர். இந்தக் குணங்கள் அவருடைய உடம்பின் ஒவ்வொரு அணுவிலும் கலந்திருந்தன. இதனால் அவருடைய வாழ்க்கையும், குணங்களும் மிக எளியனவாயிருந்தன. ஒரு சிறு குழந்தையிடம் உள்ளதைப்போன்ற களங்கமற்ற தன்மையும் அடக்கமும் அவரிடம் இருந்து வெளிப்பட்டன. அவரைப்போன்ற மற்றொரு மகான் அவதரிக்க இன்னும் எத்தனை ஆயிரம் ஆண்டுகள் பிடிக்கும் என்பதை நம்மால் கூறமுடியாது.

அவரது வாழ்க்கையின் மூலம் இந்துக்களும் முஸ்லீம்களும், கிறித்துவர்களும் ஒருவர்க்கொருவர் சகோதரர்களாக வாழ்வதற்கு வழிகாட்டினார். இப்போது அவர் இறந்துபட்ட பிறகு நாமெல்லோரும் ஒன்றுபட்டுத் துக்கப் படுகிறோம். இந்த ஒற்றுமை நிலைத்து நிற்குமாக. இந்தியாவில் மட்டுமல்ல, உலக நாடுகளிலேயும் கூட ஒற்றுமையும் நல்லெண்ணமும் நிலைப்பதற்கு அவருடைய கொள்கைகளையும், வழிகளையும் கடைப்பிடிப்போம். இதன் மூலம் மனித இனத்தின் அழியா நண்பரும், பரம்பொருளின் அன்புக்குகந்த பக்தருமான காந்தியடிகளை நினைவிலிருத்திப் போற்றி வருவோமாக!

திரு. கே. மாதவ மேனன்:
(விவசாய அமைச்சர்)



ஒரு சண்டாளச் சதிகாரனால் மகாத்மா காந்தியடிகள் கொல்லப் பட்டது இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்திலேயே ஏற்பட்ட மிகப் பெருங் கொடிய நிகழ்ச்சியாகும்.

நாம் நினைப்பது போல் அவரைப் பின்பற்றுவது அவ்வளவு சுலபமான தல்ல. வெறும் வாயளவில் பேசி விடுவது எளிது. பின்பற்றுவதற்கு மன உறுதி வேண்டும். அவர் கொள்கை களைக் கடைப்பிடிக்க முயற்சியாவது செய்தோமா? இல்லையென்றால் இந்தக் கணத்திலிருந்தாவது சத்தி யத்தையும் அகிம்ஸையையும் கடைப்பிடித்து ஏழை எளியவர்களுக்கு உதவிசெய்ய மனதைத் திடப்படுத் திக் கொள்வோம்.

காந்தியடிகள் நமக்காகவே வாழ்ந்தார். நம்மாலேயே கொல்லப்பட்டு நமக்காகவே உயிர் நீத்தார். ஆம்; உலகில் உதித்த சிறந்த மகான்களின் முடிவெல்லாம் இப்படித் தான். அவர் மறைந்து விட்டாலும் அவருடைய ஆன்மா நமக்கு, எந்தக் காலத்திலும் வழி காட்டும். இந்தக் கணத் தில் இருந்தாவது அவருடைய கொள்கைகளைப் பின்பற்று வோம் என்று கங்கணங்கட்டிக்கொண்டு அவற்றைக் கடைப்பிடிப்போம். இதனால் அவரது புனித ஆன்மா வும் சாந்தி யடையும். நாமும் பழியைத் துடைத்துக் கொள்ளலாம்.

திரு. ஏ. பி. ஷெட்டி :

(நலத்துறை அமைச்சர்)



மகாத்மா காந்தி வாழ்ந்த காலத்திருந்த நாம் பல படிப்பினைகளைக் கற்றுக்கொள்ளலாம். அதில் ஆரோக்கிய வாழ்க்கை நடத்துவது பற்றிய அவருடைய போதனைகளும் முக்கியமானவைகள். எளிய வாழ்க்கை நடத்தவும், சாதாரண சுத்த உணவு வகைகளை உண்ணும்படியும், முறையாகத் தேகப் பயிற்சி செய்யும்படியும், காமத்தில் மிஞ்சிய ஆசைகளைக் கட்டுப்படுத்தும் படியும் இயற்கையோடு இயைந்து வாழும்படியும், நோய்களுக்கு இயற்கை வைத்திய முறைகளைக் கையாளும்படியும் அவர் போதனை செய்தார். பிறருக்கு உபதேசித்தபடி தாமும் நடந்து வந்து நமக்கு உதாரண புருடராக இருந்தார். சுகாதாரத்தின் முக்கியத்தை அவர் பெரிதும் வற்புறுத்தி வந்தார். ஆஸ்பத்திரிகளும், மருந்துச் சாலைகளும் அவசியம் என்று அவர் கருதி வந்த போதிலும், பொதுமக்கள் தாங்களே தங்கள் உடல் நலத்தைப் பாதுகாத்துக்கொள்வதும், தங்கள் சுற்றுப்புறங்களைச் சுத்தமாக வைத்துக்கொள்வதும் அவர்களது முக்கியமான முதல் கடமை என்று அவர் கருதினர்.

அவர் ஒழுக்கமும், முறையுமான வாழ்க்கை நடத்தியதால் முதிர்ந்த வயதுவரை நல்ல உடல்நலத்துடனும், மனவலிமையுடனும் வாழ்ந்துவந்தார். எவ்வளவோ கடுமையான சமயங்களிலும் கடினமான பிரச்சினைகளை, அவர் தீர்க்கும்படி ஏற்பட்டபோது அவரது உடல் நலம் பாதிக்கப்படவில்லை. சுத்தமான சுகவாழ்வு நடத்துவதில் நாம் அவரைப் பின்பற்றுவோமாக!

திரு. காளா வெங்கட்ட ராவ்:

(வருமான அமைச்சர்)



மகாத்மா இறந்துவிட்டாலுங்கூட காந்தீயத்தை மங்க விடாது பரப்பி வருவதே நம் நாட்டிற்கும், மக்களினத்திற்கும் செய்யும் தலைசிறந்த தொண்டாகும். இந்தியாவிற்கும், இந்திய மக்களுக்கும் காந்தீயத்தினல் பல நற்பணிகளைச் செய்யும் முழுப் பொறுப்பும் அவரோடு இந்த இருபத்தைந்து ஆண்டுகளாக நெருங்கிப் பழகிவந்த எல்லோருடைய தலையிலும் உள்ளது. நாம் மனத்தைத் திடப்படுத்திக்கொள்வோம்.

அகிம்சா வாழ்க்கையின் மூலம் புது உலகிற்கே ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளார். வாழ்க்கையின் பல துறைகளிலும், அகிம்சையைப் புகுத்தி அதனை ஒரு அருங்கலையாகவே வளர்த்து வந்தார். அவர் லட்சியத்திற்கு முடிவே கிடையாது என்றும், அம்முடிவை அடையக் கையாளப்படும் வழிகள் நேர்மையாகவும் புனிதமாகவும் இருக்கவேண்டும் என்றும் உலகத்திற்கு வழிகாட்டினர். அதோடுகூட ஒருவன் தான் செய்த தவறை உணர்ந்து ஒத்துக்கொள்வதன் மூலம் அவன் திருந்துவதற்கு வழியுண்டு என்பதையும் விளக்கினர். எனவே சத்தியாக்கிரகிகள் எல்லோரும் முதலில் தங்களையும் தங்கள் குடும்பங்களையும் திருத்திக்கொண்ட பிறகே சமூக சேவையில் இறங்க வேண்டும் என்று போதித்தார். சுவர்க்கமே அதர்ம வழியில் நடந்தாலுங் கூட இங்குள்ள மக்கள் உண்மையையும், சத்தியத்தையும் தவறவிடக் கூடாது. இதுதான் அவருடைய ஒரே ஒரு மணிபோன்ற கொள்கை.

அவருடைய வாழ்க்கை நம் நாட்டின் ஒவ்வொரு முன்னேற்ற வேலைகளிலும் நமக்கு வழிகாட்டுமாறு நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இத்தகைய மகானுடைய உடலை மட்டும் நீங்கள் கொன்று விடலாம்; ஆனால் உண்மை வடிவாகவும், சத்திய உருவாகவும் சுடர் விட்டெரியும் அவருடைய அமர ஜோதியை யாராலும் அணைக்கவே முடியாது.

திரு. பி. கோபால் ரெட்டி :

(நிதி அமைச்சர்)



அறியாமை, அடிமைத்தனம், ஏழைமையில் மூழ்கிக்கிடந்த மக்களை மீட்க வேண்டியே மகாத்மா அரசியலில் ஈடுபட்டார். அவர் மக்களை அரசியல் அடிமைத் தனத்திலிருந்து மட்டும் விடுவிக்கவில்லை; பிறரைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றும் பழக்கத்தினின்றும் விடுவித்தார். இந்தியாவிற்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்ததே அவர் சாதனைகளில் தலை சிறந்தது. தூசியிலிருந்து ஒரு சர்க்காரை நிர்மயித்தார். உப்பின் பேரால் ஒரு சக்தியைக் கிளப்பினார். அதன் உத்வேகம் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை அடித்துக் கொண்டு போய்விட்டது! சுயராஜ்யமடைவது மட்டும் அவரது லட்சியமல்ல. 'பொதுஜன சேவை'க்கு சுயராஜ்யத்தை ஒரு சாதனமாகவே மகாத்மா கருதினார்.

திரு. எச். சீதாராம ரெட்டி :

(தொழில் அமைச்சர்)



மனத்தைக் கலங்கச் செய்ய இதை விட வேறு கொடிய செய்தி இருக்க முடியாது. மகாத்மா யாரையும் வெறுத்தவரல்லர். யாருக்கும் ஒரு விதமான கெடுதியும் செய்தவரல்லர் ; செய்யும் எண்ணங்கூட அவருக்குக் கிடையாது. எல்லோரிடத்திலும் அன்புகாட்டிய அண்ணல் அவர். அருளின் அவதாரம். இப் பெரியாரின் மறைவு உலகத்துக்கே ஒரு பேரிழப்பாகும்.

திரு. வி. கூர்மையா :

(தாழ்த்தப்பட்டோர் முன்னேற்ற அமைச்சர்)



ஓர் இந்துவால் மகாத்மா காந்தி கொல்லப்பட்டது நமது நாட்டிற்கே பெருத்த அவமானம் விளைத்துவிட்டது. இந்து மதத்துக்கே அவ் இளைஞன் பெருந் தீங்கு விளைவித்துவிட்டான். தம வாழ்நாள் பூராவும் மகாத்மா அகிம்சாபோதம் செய்துவந்தார். ஆனல் கடைசியில் பலாத்காரத்துக்குப் பலியானார். பாரத நாட்டு மக்களுக்காக தமது வாழ்க்கையை அர்ப்பணம் செய்தார். அவரில்லாவிட்டால் 'ஹரிஜன' முன்னேற்றத்திற்காக எந்த மாகாணத்திலும் சட்டங்கள் இயற்றப்பட் டிருக்கமாட்டா.

திரு. கே. சந்திர மௌளி :
(நகராண்மை அமைச்சர்)



சத்தியம், அகிம்சை ஆகியவற்றை உலகுக்குப் போதித்த மகானை காந்தியடிகள் ஒரு மூடனால் கொல்லப்பட்டார் என்ற செய்தி யாரையும் வருத்தத்தில் ஆழ்த்தும் என்பதில் ஐயமில்லை. உலகம் இழைத்த தவறுகளுக்காக அவர் பலமுறை துன்பப்பட்டுள்ளார். அதற்காகக் கடுமையான தவத்தையும் அவர் மேற்கொண்டார். பல நெருக்கடியான நேரங்களில் அவர் தம் உயிரையே பணயம் வைத்து உலக நன்மைக்காக உழைத்துள்ளார். ஒவ்வொரு முறையிலும் அவர் வெற்றிபெற்று அதன் மூலம், மக்கள் வாழ்க்கையை உயர்த்தியிருக்கிறார். அவருடைய கொள்கைகளையும் உணர்ச்சிகளையும் ஏற்றுக்கொள்ளாத அவர் பகைவர்களுங்கூட அவருக்கு மதிப்புக்கொடுக்க என்றும் தவறியதில்லை. அவ்வளவு சிறந்த முறையில் அவர் வாழ்க்கை அமைந்திருந்தது.

ஏழை மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் ஆகியோருக்கு அவர் செய்துள்ள சேவை சொல்லுந் தரமன்று. அவர்கள் இன்பமாக வாழவேண்டும் என்பதற்காகவே அவர் அல்லும் பகலும் வேலை செய்தார். அத்தகையவரை இழந்ததன்மூலம் உலகமே ஏழைமைத்தனத்தில் மூழ்கிவிட்டது.

அவருடைய தலைமையைப் பின்பற்றிப் பெருமை பெற்ற இந்திய நாடு இன்று ஓர் அனாதையாகக் காட்சியளிக்கிறது. எங்கும் இருள் சூழ்ந்து துக்கமே மலிந்

துள்ளது. ஆயினும் பாரத நாட்டின் புதல்வர்கள் இதனால் பலவீனம் அடையக்கூடாது. அப் பெருந்தகை யாளர் நமக்களித்துள்ள கடமைகளையும் பொறுப்புக் களையும் அறிந்து நடக்கவேண்டும். அவர் காட்டியுள்ள வழியைப் பின்பற்றுவதே நாம் அவருக்குச் செய்யும் கைம் மாறு. தீர்க்க தரிசனத்துடன் அவர் வகுத்துச் சென் றுள்ள திட்டங்களையும் லட்சியங்களையும் நாம் நிறை வேற்றுவோமாக !

திரு. கே. காமராஜ் நாடார் :

(த. நா. காங்கிரசுத் தலைவர்)



மகாத்மா மறைந்துவிட்டார். உல கமே அவருக்காக வருந்துகிறது. மகாத்மா எதற்காக நம்மிடமிருந்து மறைந்தார் என்பதைக் கவனிக்க வேண்டும். வேற்றுமை மனப்பான் மையை மக்களிடமிருந்து ஒழிக்க அவர் பாடுபட்டார். இறுதியில் அதற்காக உயிரையுந் தியாகஞ் செய்தார். வேற்றுமையைப் போக்க நாம் இனி அவர் விட்டுச்சென்ற வேலையைத் தொடர்ந்து செய்யவேண்டும். நம் மனத்தில் உள்ள வேற்றுமையைப் போக்கி நாட்டைப் பக்குவப் படுத்த வேண்டும். இதுவே கடைசியாக நாட்டு மக்க ளுக்கு மகாத்மா விடுத்த வேண்டுகோளாகும். இதில் நாம் ஈடுபட்டுப் பணியாற்றினால் மகாத்மாவுக்கு நம் கடமையைச் செய்தவர்களாவோம்.

அறிஞர் திரு. வி. க.

(தொழிலாளர் கூட்டத்தில்)



அமரத் தன்மை வாய்ந்த மகாத்மா காந்தியைப்பற்றி அறியாதார் உலகில் எவரும் இல்லை. அவரைப்போல் உயிர் நீத்த பெரியோர் உலகில் ஒருவரும் இல்லை என்று சொல்லலாம். அப் பெரியார், வகுப்பு வெறி - மத வெறி பிடித்த ஒருவனாற் சுட்டுக் கொல்லப்பட்டது நாட்டிற்கே அவமானமாகும். கொன்றவனின் மதத்திற்கே அது அவமானம். மகாத்மா குண்டுகளைக் கொண்டு சுதந்திரம் பெறவில்லை! அகிம்சைப் போராட்டத்தினால்தான் பெற்றார். உலகத்தில் "இன்னாசெய்யாமை" அறத்தினால் விடுதலை பெற்றவர் அந்த மகான் ஒருவரே.

இந்து முஸ்லீம் ஒற்றுமையை அவர் நாடியதற்காக ஒரு பாதகன் அவரைச் சுட்டுக் கொன்றான். உலகம் முழுதும் இப்பொழுது துக்கத்தில் மூழ்கிக் கிடக்கிறது. அவர் இறந்துவிட்டாலும் அவருடைய ஆவி நம்மைச் சுற்றிக்கொண்டிருக்கிறது. அவருடைய ஆவி சாந்தி பெற வேண்டுமானால் நாம் எல்லோரும் இந்து-முஸ்லீம் ஒற்றுமையை வளர்க்கவேண்டும். இனி மதவெறி இருக்கக்கூடாது. இந்து முஸ்லீம் ஒற்றுமை யில்லாவிட்டால் நாம் பெற்றிருக்கும் விடுதலை போலி விடுதலையாகும். தொழிலாளராகிய நீங்கள் இந்த விரதத்தை மேற்கொள்ள வேண்டும். நீங்கள் ஒற்றுமையை வளர்க்கவேண்டும். மகாத்மா தொழிலாளருக்காகப் பிறந்தார்; வாழ்ந்தார்; உயிர்நீத்தார். நீங்கள் அந்த மகானுக்கு நன்றி செலுத்த வேண்டுமானால் அவருடைய தொண்டை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பெரியார் ஈ. வே. இராமசாமி :

(திராவிடர் கழகத் தலைவர்)



உலகமக்கள் எல்லோராலுமே போற்றப்படும் பெரியார் காந்தியார் முடிவெய்திய செய்தியானது எல்லா மக்களுக்குமே துக்கம் கொடுக்கக் கூடியதாகும். அவரது முடிவு இந்த நாட்டுக்கு ஈடுசெய்ய முடியாத நட்டம் என்பதோடு இந்த நெருக்கடியான சமயத்தில் அவர் மறைய நேரிட்டது எவ்விதத்திலும் சகிக்க முடியாத நிகழ்ச்சியே! அவர் உலகில் வாழும் மாபெரும் பெரியார்கள் வரிசையில் ஒருவராக இருந்தார். அவரைப்போல் பொதுத் தொண்டையே தமது வாழ்நாள் தொண்டாகக் கொண்டவர்களையும், தமக்கென எதுவும் இன்றி ஒரு லட்சியத்திற்கே வாழ்ந்து வந்தவர்களையும் காண்பது அரிது. தென்ஆப்பிரிக்காவில் அவர் பெற்ற வெற்றியே இந்திய மக்களின் மதிப்பையும் பின்பற்றுதலையும் அவருக்கு வலியக் கிடைக்கச் செய்தது.

கால் நூற்றாண்டுக்கு மேலாக ஒரு லட்சியத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வருவது என்பதும் அதில் ஏற்படும் எப்பேர்ப்பட்ட துன்பங்களையும் வெற்றி தோல்விகளையும் லட்சியம் செய்யாமல், மற்றவர்கள் என்ன சொல்வார்கள் எப்படி நினைப்பார்கள் என்பதைப்பற்றியும் கவலையில்லாமல் தொண்டாற்றுவது என்பதும் எல்லோராலும் ஆகும் காரியம் அல்ல. இப்படிப்பட்ட ஒருவருக்கு இந்தக் கோரமான முடிவு ஏற்பட்டது இந்த நாட்டின் மதிப்பைக் கெடுக்கக் கூடியதும் இயற்கைக்கு விரோதமானதுமான செய்தி என்பதில் சிறிதும் ஐயமில்லை. அதிலும் காந்தியார் யாருக்காக எந்த மக்களுக்காக உயிர் வாழ்ந்தாரோ, அல்லும் பகலும் இடையின்றிப் பாடுபட்டாரோ அவர்

களாலேயே இந்த முடிவு ஏற்பட்டதென்றால் இது மிகவும் வெறுக்கத்தக்க செயலல்லவா ? இத்தகைய இழிவான காரியத்துக்குச் சுட்டவன் ஒருவனே பொறுப்பாளி என்று என்னால் கருத முடியவில்லை. பொதுவாகவே இந் நாட்டில் பொது ஒழுக்கம் மோசமான தன்மை அடைந்து விட்டதை இந் நிகழ்ச்சி காட்டுகிறது..........

இப்படிப்பட்ட பரிதாபகரமான முடிவானது நமக்கு ஒரு படிப்பினையாகி, இப் படிப்பினை மூலமாவது இந்த நாட்டில் அரசியலின் பேராலும் இன இயலின் பேராலும், கருத்து வேற்றுமைக்காகக் கலவரங்களும் கேடுகளும் நாசங்களும் மூடநம்பிக்கைப் பிடிவாதங்களும் ஏற்படுவ தற்குச் சிறிதும் வாய்ப்பு இல்லாமல் அறிவுடைமை யோடு, வாழ்பவர்களாக மக்கள் நடந்துகொள்வார்களே யானால், அதுவே அப் பெரியாருக்கு நாம் காட்டும் மரி யாதையும் நன்றியறிதலு மாகும்.

டாக்டர் ராம. அழகப்பச் செட்டியார் :

(வானொலியில்)



மக்களினத்தையே துக்கத்தில் ஆழ்த்தும் மிக இரக்கமான செய்தி சென்னையிலிருந்த எனக்கு உடனே கிடைத்தது. அடிகள் மறைந்த முதல்நாளே டில்லியிலிருந்து திரும்பி னேன். நாட்டின் தந்தையான காந்தி யடிகளுக்கு இறுதி வணக்கஞ் செலுத்த என்னுள்ளந் துடித்தது. காலை நான்கு மணிக்குச் சென்னையி லிருந்து புறப்படும் வானவூர்தியை எங்ஙனம் பிடித்தேனென்பது இப் போதும் நம்பமுடியாததா யுள்ளது. அழிவிலாப் பெரியாருடைய உடலின் இறுதிப் பயணத் தைக் காணச் செய்த இந்த வானப் பயணமே மிகவுஞ்

சிறந்ததாயிற்று. என்னுடன் சென்னை அரசியலார் சார்பாக டாக்டர் சுப்பராயனும், சகதீசன், இராமசாமி நாயுடு ஆகியோரும் வந்தனர். நாங்கள் அந்த வானவூர்தியிலே காலத்துடன் போட்டியிட்டுச் சென்றோம்.

இறைவன் அருளாற் சரியாக 11.50 மணிக்கு நாங்கள் வில்லிங்டன் விமான நிலையத்தினை அடைந்தோம். இந்தியாவின் தலைநகரான டில்லியிலுள்ள அந்த நிலையம் எப்போதும் சுறுசுறுப்பாக இருக்கும். ஆனால், அன்று வெறுங்களமாகக் காணப்பட்டது; பொலிவிழந்திருந்தது. வழியின் இருபுறங்களிலும் அலைமோதிக்கொண்டிருந்த மக்கட்கடலின் நடுவே நடந்து சென்றோம்.

பிர்லா மாளிகையில் நுழைந்ததும் மலர்களால் அணிந்திருந்த—நாட்டுக்கொடிகள் துக்கத்தாலே துடித்துக்கொண்டிருந்த தேரைப் பார்த்தோம். தூய யமுனையாற்றங்கரையை நோக்கி—மக்களின் துயர்க்கண்ணீர்க் கடலை நீந்தி ஏழு மைல்கள் எடுத்துச் செல்லவேண்டியிருந்த நாட்டின் செல்வத்திற்காக அந்தத் தேர் காத்துக்கொண்டிருந்தது. முன்னேற்பாடு செய்யப்பட்டிருந்தும் மிகவும் அமைதியுடன் துயிலும் அடிகளின் அருகே நாங்கள் செல்ல முடியவில்லை: திருவாட்டி சுசேதா கிருபளானியின் துணையாலே எவ்வாறோ அடிகளின் அருகே சென்றுவிட்டோம். எல்லோருடைய உள்ளத்தையும் உருக்கிக் கண்ணீரைப் பெருக்கும் இரங்கத்தக்க காட்சி அது. ஒவ்வொருவருடைய கண்ணீரையுந் துடைத்த அடிகள் பேச்சு மூச்சின்றி—ஒவ்வொருவர் கண்ணிலும் நீரைப் பெருக்கியவாறு கிடந்தார்.

இந்திய மந்திரிகள், தூதர்கள், கவர்னர்கள், இலட்சாதிபதிகள் அனைவரும் ஏழை எளியவரின் நண்பரும் ஒற்றுமைத் தூதருமான அடிகளின் முன்பு தலைகுனிந்து நின்றிருந்தனர்.

அடிகளை நாங்கள் வணங்கியவுடனே அவருடைய உடலை யெடுத்துச் செல்ல, மாளிகையின் கதவுகள்

திறக்கப்பட்டன. அடிகள் இனி இம் மாளிகைக்கு எங்கே திரும்பப் போகிறார்?

அடிகளின் உடல் தேரில் வைக்கப்பெற்றதும் மக்களின் கண்களிலிருந்து நீராறு பெருகியது. அப்போது அடிகளுக்கு மவுண்ட் பேட்டன் பிரபு தம் இறுதி வணக்கம் புரிந்தார். தம் ஆசிரியரின் காலடியிலே இருக்க எழுந்தார் சர்தார் பட்டேல். தம்மால் இயன்றவரையிலே இந்த இடியைத் தாங்கிக்கொண்டு கற்சிலைபோல் துயரமே வடிவெடுத்தாற்போல் நின்றுகொண்டிருந்தார் பண்டித நேரு. மேலைப் பஞ்சாபிலிருந்து அப்போதுதான் வந்த சுசிலா நாயர் தேரில் ஏறி ஒரே மூச்சாகக் கதறிவிட்டார்! மக்களெல்லோரும் அப்போது கதறிய காட்சியை எப்படிப் பொறுப்பது? தேர் புறப்பட்டது.

ஈமச் சடங்குகள் நடப்பதற்கும் தேர் சென்று கொண்டிருந்ததற்கும் இடையேயுள்ள காலத்தை வீணாக்காமல், கல்கத்தாவிலிருந்து வரும் அன்புமிக்க இராசகோபாலாச்சாரியாரை வரவேற்க விமான நிலையத்திற்கு விரைந்தோம்.

திரு. இராசகோபாலாச்சாரியார் விமானத்திலிருந்து இறங்கியதும் கதறி அழுதுகொண்டே தம் புதல்வியைத் தழுவிக்கொண்டார். அந்நிலையிலே அவருடைய வேதாந்தங்களெல்லாம் விடைபெற்று விட்டன!

நாங்கள் மீண்டும் யமுனைக் கரையிலே அடிகளிருந்த இடத்திற்கு வந்தோம். அழிவற்ற பெரியார்களின் திருக்கூட்டத்துடன் சேரும் அடிகளின் கடைசிப் பயணத்தைக் காணக் கணக்கற்ற மக்கள் கண்ணீர் வெள்ளத்திலே கரைந்து நின்றனர். தான் விழுங்கிய ஆன்மாவால் ஒரு நாளும் நெருப்பு இத்துணைத் தூயதாக இருந்திருத்தல் இயலாது. ஒண்கதிர்களுடனும் தூய்மையுடனும் அந்தத் தீ விளங்கியது. அந்தக் காந்தியின் ஒளி இந்தத் தீயொளியுடன் கலந்துவிட்டது. நாட்டின் தந்தை நம்மைவிட்டு நடந்துவிட்டார். கோடிக்கணக்கான நாம் ஆதரவிழந்து நின்றுவிட்டோம்!

சர். சி. வி. இராமன் :

(அறிவியற் கலைஞர்)



சென்ற சில மாதங்களாக நடந்த கொடிய நிகழ்ச்சிகள் நம் நாட்டின் மீது வீசிய உக்கிரமான பனிப் புயலாகவே இருந்தன ! * * *

வரலாற்றின் தீர்ப்பை முன்கூட்டி அறிந்துகொள்ள முயல்வதிலும், மகாத்மா காந்தியவர்களது வாழ்க்கையின், அறிவுரைகளின் பயன் இதுதான் என்று நம் நாட்டின் அல்லது ஆசியாவின் அல்லது உலகத்தின் எதிர்காலத்துக்கு முன்கூட்டி அறிவித்து எச்சரிக்க முயல்வதிலும் ஏதாவது பயனிருக்கும் என்று நான் நம்பவில்லை! எல்லாம் வருங்கால மக்களது கையிலிருக்கிறது !

ஆனால் அவர் விட்டுச் சென்ற சுதந்திர இந்தியாவில் வாழ்கின்ற நாம், நமது ஊழ்வினையில் ஏதாவது நம்பிக்கை வைத்திருந்தால், இந்த மிதமிஞ்சிய துயரத்தில் வெற்றி கண்டு, சிறந்த எதிர்காலத்தை அமைக்கும் பலமும் திறமையும் நாம் பெற்றிருந்தால், நிச்சயமாக மகாத்மா காந்தியின் வாழ்க்கையும், இந்தியா மீண்டும் விடுதலை பெறுவதில் அவர் எடுத்துக் கொண்ட பங்கும் என்றும் நம் மனத்தை விட்டு அகலா!

அரசியல் விடுதலைக்காக நடந்த போராட்டத்தில் நான் தீவிரமான பங்கு கொண்டவனல்லன்; அதில் ஈடுபட்ட தலைவர்களோடு தொடர்பு வைத்துக்கொள்ள நான் விரும்பவுமில்லை! ஆனால் நான் மகாத்மாவைப் பார்த்த, சந்தித்த, அவரது பேச்சைக் கேட்ட, ஒவ்வொரு நிகழ்ச்சியும் அப்படியே என் நினைவிற் பதிந்து உணர்ச்சி ஒளியூட்டும்படியாக உள்ளது. ஆகவே நானறிந்த மற்றெவரையும் விட மகாத்மா ஒரு தனிப்பட்ட பெருமை வாய்ந்தவராக விளங்கினர்.

நான் மீண்டும் கூறுகிறேன். வரலாற்றின் தீர்ப்பை யாரும் முன் கூட்டி அறிய முடியாது!

யோகி அரவிந்தர் :

(வானொலியில்)

இப்போதுள்ள நிலைமையில் நான் மோனமாக இருப்பதையே பெரிதும் விரும்பி யிருப்பேன். ஏனெனில் நான் இப்போது எதைக் கூறினும் அது வெறும்பேச்சாகி விடும். எனினும், இதை மட்டும் இயம்புகிறேன்: உரிமைக்கு நம்மை அழைத்து வந்த ஒளி—அது இன்னும் கலந்து விடவில்லை—மங்கி விடவில்லை—ஒளி வீசிக் கொண்டே யுள்ளது. வெற்றி யடையும் வரையில் அந்த ஒளி குன்றாது.

வீழ்ந்த நம் தலைவர் தம் இறுதிக் காலத்தில் எதைக் குறித்துத் துடிதுடித்துக் கொண்டிருந்தாரோ அதை, எந்த ஆற்றல் நம்மைப் பல போராட்டங்கள்—இயக்கத்தின்—வாயிலாக உரிமைக்குக் கொண்டு வந்ததோ அது நிறைவேற்றி வைக்கும். அந்த ஆற்றல் நமக்கு உரிமை வாங்கித் தந்தது போலவே ஒற்றுமையையும் ஈட்டித் தரும். ஒற்றுமை இந்தியா தோன்றும். அன்னை தன் குழந்தைகளை ஒன்று சேர்ப்பாள். ஒரு வலிமை மிக்க நாட்டின் இனமாக்குவாள்.

ரெவரெண்டு ஹாலிஸ் :

(சென்னை பிஷப்)

உலகமும் இந்தியாவும் இரங்குகின்றன. அன்பு வாயிலாகவேதான் அமைதி பெற்று வாழ முடியும் என்று உலகம் கேட்டறிந் திருக்கிறது. கடவுள் காந்தியடிகளின் வாழ்க்கை வழியாக நமது கால மக்களிடம் பேசி விட்டார்! காந்தியடிகள் கொலையுண்டது எல்லா உலகத்தின் கருத்தையுந் திருப்பி விட்டது. அவரது பிரிவால் இந்தியாவிற்கும் உலகிற்கும் பேரிழப்பு.

காந்தியடிகளின் வாழ்க்கை—மரணம் ஆகியவற்றின் நோக்கம் வீணாகாதவாறு அவரது அன்பு நெறியைக் கடைப் பிடித்து நடப்பதாகக் கிறிஸ்தவர்களாகிய நாங்கள் மற்ற மக்களோடு சேர்ந்து உறுதி கூறுகிறோம்.

சர். ஏ. இலட்சுமணசாமி முதலியார் :

(சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்)



மகாத்மா காந்தி நாட்டின் தந்தை என்றும் இந்திய விடுதலைச் சிற்பி என்றும் பாராட்டப் பெறுவது மிகவும் பொருத்தமே. அவரை விட வேறு யாருக்கும் இந்த அடைமொழிகள் சரியாகப் பொருந்த மாட்டா!

* * *

காந்தியாரின் படுகொலைச் செய்தி இந்த நாட்டிலும் பிறநாட்டிலு முள்ள மக்களைத் துயரத்திலும் மனவலியிலும் தவிக்க விட்டுவிட்டது. இந்த அட்டூழியத்தைக் கண்டு உலகம் திடுக்கிட்டு விட்டது. இதைவிட மிகவும் வருந்தத்தக்கது என்ன வென்றால் உலகமே இதுவரை கண்டிராத படுகொலைக்கு அவர் பலியானதுதான்!

ஒரு பெரியார் மதிப்போடு வாழ்ந்த காலத்தில் ஏற்பட்ட இந்தக் கொலைக்குச் சமமான நிகழ்ச்சியை வரலாறு முழுவதிலும் காணமுடியாது. அவர் மனித இனத்திற்காகத் தம்மையே காணிக்கையாக்கினார். அனாதி காலந் தொட்டுச் சிறந்த பெரியோர்களின் வழிவழியாக வந்த சிறந்த செய்திகளைத் தம் நாட்டார்க்கு வழங்கி நாடு முன்னேறத் தம்மால் இயன்றதைச் செய்துகொண்டிருந்தார்.

இந்த எழுபத்தொன்பது வயதுக் கிழவர் அடக்கி வைத்திருந்த சக்தி யிருக்கிறதே அது கொஞ்சம் வியப்பாகத்தான் இருக்கிறது!

திரு. சி. என். முத்துரங்க முதலியார் :

காந்தியடிகள் இந்தியாவில் மீண்டும் பிறக்கவே விரும்புவார். ஒவ்வொருவர் உள்ளத்திலும் தெய்வீகமான உண்மையும் அதன் நடுவே அஹிம்சையும் பரவி நிலவ அனைவரும் முயலவேண்டும்.

திரு. ஜே. சிவசண்முகம் பிள்ளை :

(சட்ட சபைத் தலைவர்)

மகாத்மாவின் மரணத்தால் நாம் ஒப்புயர்வற்ற ஒரு பெருந் தலைவரை இழந்துவிட்டோம். தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சிறுபான்மை வகுப்பினர்க்கு, உற்ற உண்மையான நண்பர் அவர். தாழ்த்தப்பட்டோர் சம்பந்தமாக சாதி இந்துக்கள் மனமாற்றம் ஏற்பட்டதற்குக் காரணம் பெரியார் மகாத்மாதான் என்பதை நான் உங்களுக்குக் கூறவேண்டிய தில்லை.

நாம் காணும் துறவிகளைப்போல் உலகைத் துறந்து இமயமலைக்குப் போகாமல் உலக மக்களின் நன்மைக்காக உழைத்த பெரியார் அவர்.

திரு. முகம்மது இஸ்மாயில் :

(முஸ்லீம் லீக் தலைவர்)

நாட்டின் மாபெருந் தலைவர் மறைந்துவிட்டார்; அவருடைய ஆன்மா இதுவரை நாட்டுக்குச் செய்துவந்த நன்மைகள் நம் முன் நிற்கின்றன. ஏழைகள் பாலும் பொதுவாக மக்களினத்திடமும் அவர் கொண்டிருந்த அன்பு அளவு கடந்தது.

மனித இனத்தின் மன்னராக அவர் விளங்கினர். அப்பேர்ப்பட்டவரின் மரணம் மறக்கத்தக்க தல்ல; அவருடைய அறிவுரைகளைக் கடைப்பிடித்து நாம் நடப்போமானல் அதுதான் அவருக்கு நாம் செய்யும் மரியாதையாகும்.

பீகம் அமிருதீன் :

ஒரு வஞ்சகக் கொலைகாரனல் மகாத்மா பிரிவெய்திய தன் காரணமாகப் பெண்இனம் மிகவும் திண்மையுள்ள வெற்றிவீரனை இழந்துவிட்டது!

சிறந்த மகாத்மா போய்விட்டார்! ஆனல் அவரது ஆன்மா வாழ்கின்றது.

எல்லோருக்கும் சமூகப் பாதுகாப்பு, ஒப்புரவு, அமைதி ஆகிய அவருடைய திட்டங்களை நிறைவேற்றுவதும், குறிக்கோள்களை முன்னேற்றுவதும், அவரது ஆவல் ஒளிவிடச் செய்வதும், அவருடைய கொள்கைகளை மனத்திற் கொள்வதுந்தான், கொள்கைக்காக உயிர் நீத்துப் புகழ்பெற்ற அவரது நினைவாகச் செய்யக் கூடிய சிறந்த வழிபாடாகும்.

திரு. பஷீர் அகம்மது சயத் :

இக் காலத்தின் மிகச் சிறந்த பெரியாரின் மரணத்தால் இந்தியாவுக்கு நேர்ந்ததைவிடப் பெரிய துன்பம் வேறு எதுவும் இருக்க முடியாது. இன்று மக்கள் அனைவரும் திக்கற்ற அனாதைகளாகிவிட்டனர்!

திரு. அப்துல் ஹமீத்கான் :

ஓர் இந்தியனல் மகாத்மா காந்தி படுகொலையானது, உலகம் அனைத்திலும் இருள் உண்டாக்கி விட்டது! இக் கொடிய குற்றம் மிக வன்மையாகக் கண்டிக்கத் தக்கது! பலாத்காரக் கொள்கையை வேரறுப்பதுதான் மக்கள் எல்லோருக்கும் உறுதியான தீர்மானமாக இருக்க வேண்டும்

திரு. ஷாபீ முகம்மது :

(சென்னை ஷெரீப்)

நாட்டு விடுதலை, உலக விடுதலைக்காக மகாத்மா பிறந்தார்; உழைத்தார். அதற்காகவே தம் உயிரையும் தியாகம் செய்தார்.

முஸ்லீம்களின் நலத்திற்காகவும் அமைதிக்காகவும் பாடுபட்ட மகாத்மா அதே பணிக்காக உயிரையும் தியாகம் செய்திருக்கிறார். அவர் இறந்த நாளும், ஏசுநாதர் சிலுவையில் அறையப்பட்ட நாளும் ஒன்றாகும். மகாத்மாவின் மறைவால் உலகமே இன்று துக்கக் கடலில் மூழ்கிக் கிடக்கிறது.

சர். முகம்மது உஸ்மான் :

சுதந்திரச் சிற்பியும் அமைதி, அஹிம்சை, பொறுமை இவற்றின் தூதருமான மகாத்மா காந்தி நம் நாட்டான் ஒருவனாலேயே கொலை செய்யப்பட்டது இந்த நாட்டின் கெட்ட காலந்தான்; இந்த இழப்பு இந்தியாவுக்கு மட்டுமல்ல, உலகத்திற்கே ஈடுசெய்ய முடியாததாகும்.

மகாத்மா காந்தி இன்னும் சில்லாண்டுகள் உயிருடன் இருந்திருந்தால் அவர் உலகத்துக்கு வழங்கிய உயரிய குறிக்கோள்களினால் உலகத்தை எதிர்த்து நிற்கும் துன்பங்கள் ஒவ்வொருவருக்கும் திருப்திகரமான முறையில் தீர்க்கப்பட்டிருக்கும்.

திரு. பி. டி. ராஜன் :

(முன்னாள் அமைச்சர்)

காந்தியடிகளின் எதிர்பாராத கோர முடிவு எமக்குப் பேரதிர்ச்சியைத் தந்தது. இச் சிறந்த நாட்டின் விடுதலைக்காக அவரது தனிப்பட்ட உழைப்பினைப் பல கட்சிக்காரர்கள் பாராட்டுவதை அரசியல் வேற்றுமைகள் தடைசெய்யவில்லை. கால் நூற்றாண்டுக்கு மேலாக, அஹிம்சையின் வீரராகவும், தாழ்த்தப் பட்டோருக்காகவும் ஒடுக்கப் பட்டோருக்காகவும் பாடுபடும் வீரராகவும்,

பரந்த செல்வாக்கினை அவர் பெற்றிருந்தார். காந்தியார் இறந்தார். ஆனால் அவரது ஆன்மா வாழ்கின்றது. நமது வரலாற்றின் நெருக்கடியான இச்சமயத்தில் அவரது ஆன்மா நம் மக்களுக்கு வழிகாட்டுமாக!

ஸர். வி. டி. கிருஷ்ணமாச்சாரி :

மகாத்மா காந்தி இந்திய சுதந்திரத்தின் தந்தையாக விளங்கினார். நம் விடுதலைக்காக நாம் அவருக்கு—அவருக்கு மட்டுமே—கடமைப்பட்டிருக்கிறோம்!

காந்தியவர்கள் இந்தியாவின் மிக வுயர்ந்த ஆன்ம தத்துவத்தின் வடிவமாக விளங்கினார். நம்மிடையே அத் தத்துவங்களை ஒவ்வொரு விநாடியும் செயல் முறைக்குக் கொண்டு வந்தார்.

அவரது மரணம் பல நூற்றாண்டுகளுக்கு இந்தியாவின் முகத்தில் ஒரு களங்கமாகவே இருக்கும்! அவர் நமக்கு ஒரு பெரிய கடமையை விட்டுச் சென்றிருக்கிறார்; நமக்காக அவர் வாங்கித் தந்த நம் நாட்டின் சுதந்திரத்தை நிலைத்திருக்கச் செய்வதுதான் அந்தக் கடமை.

ஸர். எம். ஏ. முத்தையச் செட்டியார் :
(செட்டிநாட்டு இளவரசர்)



மகாத்மா, கொடுங்கோன்மை அநீதி கொடுமை ஆகிய எல்லாவற்றையும் எதிர்த்துப் போரிட்டார். வகுப்பு ஒற்றுமை, அமைதி, நல்லெண்ணம் இவற்றிற்காக அவர் இடைவிடாது உழைத்தார். உண்மையில் வாழ்வின் எல்லாவகையான உயரிய குறிக்கோள்களுக்கும் அவர் வாழ்க்கை வடிவமாகவே விளங்கினார்.

'உலகில் மீண்டும் தோன்றிய கிறிஸ்துவே அவர்' என்பது மிகவும் பொருத்தம். இதுவரை வாழ்ந்திருந்த, மனித இனத்தின் அன்பு நிறைந்த சிறந்த தொண்டர்

களில் அவர் ஒருவர். அவர் அகில உலகின் அன்பையும், மரியாதையையும், பாராட்டையும் பெற்றிருந்தார்.

ஒரு சிறந்த கொள்கைக்காக வீரமரணம் பெற்று மகாத்மா காந்தி அழியா நிலை எய்திவிட்டார்! எனவே அவர் என்றென்றும் வாழ்கின்றார். அவருடைய செல்வாக்கு வரப்போகும் மனிதத் தலைமுறைகளுக்கு உணர்வூட்டி அவர்களைச் சகிப்புத் தன்மையிலும் அமைதி நெறியிலும் கொண்டு செலுத்தும்!

டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு :

மகாத்மாவின் கொடிய முடிவு இந்தியாவில் என்றும் நிகழ்ந்திராத பெருந் துன்பமாகும்! அரசியல் இடர்ப்பாடுகள் மிகவும் சிக்கலாகவும் கொடூரமாகவும் ஆகிவிட்டன. குழப்பத்தை நீக்குவதற்கு அமைதியாக, பொறுமையாக, கவனமாகத் திட்டமிடப்பட்ட செயல் மிகவும் அவசியம். 1924-ல் காந்தியடிகள் என்னோடு படகில் வைக்கத்திலிருந்து எர்ணாகுளத்துக்குப் போகும்போது "நான் படுக்கையிற் சாகமாட்டேன்; ஆனால் தாக்கிவிடப்படலாம்; அல்லது கல்லெறியாற் கொல்லப்படலாம்!" என்று குறிப்பிட்டார். நோக்கம் என்னவாகினும், குற்றவாளி யாராயினும், புத்தருக்குப் பின் தோன்றிய உலக போதகரைக் கொன்றதன் மூலம் நாம் இந்தியாவின் மரபுக்கு எதிரான ஒரு குற்றத்தைச் செய்துவிட்டோம்!

திரு. எஸ். இராமநாதன் :

(முன்னாள் அமைச்சர்)

காந்தியடிகளின் பூதவுடலை அழிக்க முடிந்தது; ஆனால், அவர் எந்த இலட்சியத்திற்காக வாழ்ந்தாரோ, அதை அழிக்க முடியாது. அவரது பூதவுடல் அழிந்தாலும் இனி அவரது ஆன்மா நம்மிடையே பேசும். இந்த எண்ணந்தான் துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் இந்தியாவிற்கு ஆறுதலை ஏற்படுத்த வேண்டும்.

டாக்டர் சி. ஆர். ரெட்டி :

(ஆந்திரப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்)

மகாத்மா காந்தியின் மரணம் இந்தியாமீதும் உலகத்தின் மீதும் ஓர் இடிவிழுந்தது போலாயிற்று! நமது கால வரலாற்றில் அது மிகுந்த கலக்கந் தரும் நிகழ்ச்சியாகும். காந்தியார் நம் நாட்டின் வீரத் தலைவர். பருவுடல் கலைந்த போதிலும் அவர் வாழ்கிறார்; ஏனென்றால் அவர் அழிவற்றவர். காலப் புரட்சிகளுக்கும் கட்டுப்படாமல் அவர் வரலாற்றில் தொடர்ந்து இடம் பெறுவார். அவரைப் பற்றிய புராணம் வளர்ந்து கொண்டே போகும். அவர் என்றைக்கும் தொழக்கூடியவ ராவார் :

டாக்டர் பட்டாபி சீத்தாராமய்யா :

மகாத்மா காந்தி தம் பணியை முடித்து விட்டார். அகாலமானது மட்டுமல்ல இயற்கைக்கு மாறான அவரது பிரிவிற்காக உலகம் வருந்தி யழும்போது, தம் பணியை நிறைவேற்றி விட்ட அவதார மூர்த்திக்கு அவரது திருப்பணி நடந்த இடத்தில் இனிமேல் வேலையில்லை என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்! கலியுகத்தில் அறம் தழைத்தோங்குவதற்காகத் தோன்றிய பத்தாவது அவதாரம் அவர்!

பேராசிரியர் என். ஜி. ரங்கா :

புத்தரையும் கிறிஸ்துவையும்போல் இன்னும் ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்குக் காந்தியவர்களின் ஆன்மாவின் ஆற்றல் நம் நாட்டிற்கும் உலகிற்கும் உணர்ச்சியூட்டுவதாகவும், மேம்படுத்துவதாகவும், வழிகாட்டியாகவும் விளங்கும்.

நாட்டிற்கும் உலகிற்கும் பேரிழப்பு நேர்ந்த இந்தச் சமயத்தில் உலகிலுள்ள ஒவ்வொரு உயிர்க்கும் அன்பு செலுத்துவதும் மனித இனத்திற்குத் தொண்டு செய்வது

மான அவரது திருப்பணியை நிறைவேற்ற நாம் நம்மாலானதைச் செய்வோமென்று சபதம் செய்துகொள்வோமாக!

திரு. டி. பிரகாசம் :

அரசியல் விடுதலை யடைந்து விட்ட போதிலும் காந்தியடிகள் கருதியபடி பொருளாதார விடுதலை உருவாவதற்குள் அவர் பிரிந்து விட்டார். இவ்வளவு பெரிய மனிதர் நெடுங்காலமாக உலகில் தோன்றியதில்லை. இன்னமும் நெடுங்காலம் வரையும் இத்தகைய பேராசிரியரும் பெருந்தலைவரும் தோன்றமாட்டார்கள்.

திரு. வி. வி. கிரி :

(இலங்கையில் இந்தியத் தூதர்)

சொற்பொழிவுகள் ஆற்றுவதற்கோ, கண்ணீர் வடிப்பதற்கோ இது சமயமல்ல! நம் அன்பிற்குரிய தலைவருக்கு மரியாதை செலுத்துவதாயின் அவரது குறிக்கோள்களின்படி வாழ வேண்டும்.

இந்தியாவிற்கோ, ஒரு குறிப்பிட்ட நாட்டிற்கோ, இனத்திற்கோ அவர் பிரதிநிதி யல்ல; உலகம் முழுமைக்குமே அவர் பிரதிநிதி.

திரு. பி. வி. ராஜமன்னர் :

(தலைமை நீதிபதி, உயர் நீதிமன்றம்)

மகாத்மா காந்தியின் பிரிவால் இந்தியாவும் உலகமும் அடைந்துள்ள இழப்பின் ஆழத்தை அளந்தறிய முடியாது; நம் நாட்டின் மிகவும் நெருக்கடியான இச்சமயத்தில் அவரது மறைவு, சிறப்பாக இந்தியாவிலுள்ள நமக்குப் பெரியதோர் இழப்பே யாகும். அவர் ஒரு சக்தியாகவும், நம் நாட்டின் ஆன்மீகப் பரம்பரை வழக்கங்களின் வடிவமாகவும், நம் குறிக்கோள்களின் உருவகமாகவும் விளங்கினர்.

சர். சி. பி. இராமசாமி ஐயர் :



மகாத்மா காந்தி மறைந்துவிட்ட பிறகாவது இந்தியாவில் அமைதி நிலவட்டும்! இந்தியாவின் வரலாற்றில் மகாத்மாவும் அவரது மறைவும் முக்கிய நிகழ்ச்சிகளாக விளங்கும். திடீரென்று மழை பெய்வதைப் போல் இந்தியாவில் ஓர் உணர்ச்சி ஏற்படுமென்று நான் நம்புகிறேன். நிலைமையை உணருவதற்கு இந்திய மக்களை அது விழிப்படையச் செய்யும். அவர்களிடையே ஒற்றுமை ஏற்படும்.

திரு. டி. ஆர். வெங்கடராம சாஸ்திரி :

நாட்டுப் பிரிவினைக்குப் பின் மக்களுக்கு ஏற்பட்ட துன்பங்களைத் தவிர்ப்பதற்காகவே மகாத்மா அரும்பாடு பட்டார். மக்களிடையே வேற்றுமை அகன்று ஒற்றுமை ஏற்பட வேண்டும் என்ற ஒரே லட்சியத்திற்காகவே அவர் உயிர் வாழ்ந்தார். அவர் நமக்கு அறிவுறுத்தியுள்ளபடி நடக்க வேண்டியதுதான் ஒவ்வொருவருக்கும் உரிய கடமையாகும்.

திரு. பட்டம் தாணுப் பிள்ளை :

(திருவாங்கூர் முதலமைச்சர்)

காந்தியவர்கள் ஒரு பெரிய அரசியல் ஆசிரியர்; மத நெறிகளிலுங்கூட அவர் ஓர் ஆசிரியராகவே இருந்தார். இந்தியாவிற்கு ஏற்றதான அடிப்படைக் கல்வித் திட்டத்தைக் காந்திதான் தயாரித்தார். அவர் உலகப் பெரியார்; மனிதருள் மாணிக்கமாக அவர் விளங்கினார்.

டாக்டர் பூ. கிருஷ்ண ராவ் :
(சென்னை மேயர்)

காந்தியவர்கள் இந்த நாட்டை அடிமை நிலையிலிருந்து சுதந்திர நாடாக உயர்த்தினார். ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக அவர் இந்த நாட்டின் விடுதலைக்காகத் தன்னலமற்று ஒரே மன உறுதியுடன் ஈடுபட்டு உழைத்தார். இன்று இந்தியர்கள் உலகிலுள்ள எந்த நாட்டு மக்களோடும் தோளோடு தோள்உயர்த்தி நிற்கும் நிலைமையில் உள்ளார்களென்றால் அது அவருடைய அயராத முயற்சிகளின் பயனே யாகும்.

மேஜர் ஜெனரல் ச. சி. அழகப்பா :
(இந்திய தேசிய இராணுவம்)



எக்காலமும் மன்னுயிரைத் தன்னுயிராய் நினைத்து இவ்வுலகில் எல்லாத் திருப்பணிகளையும் நடத்திய மகாத்மா காந்தியடிகள் சிலரது சதிச் செயலால் மறைவுற்ற செய்தி மிகுந்த துன்பத்தில் ஆழ்த்தி விட்டது. அவர் தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களின் நல்வாழ்வுக்காக அறப் போர்—அகிம்சைப் போர்—நடத்திப் பின்னர்த் தாய்நாட்டின் விடுதலைக்காக ஏறக்குறைய முப்பத்தைந்து ஆண்டுகளாக அரும்பாடுபட்டார். 'நேதாஜி' சுபாஷ் சந்திர போஸ் அவர்கள், நமது நாட்டின் தலைவர்களிலெல்லாம் மகாத்மாகாந்தியடிகள் ஒருவரே அரசியற் கலைவல்லுநராகவும் சிறந்த பெரியாராகவும் வாழ்ந்தாரென்றும் அவர் ஒருவரே ஆங்கிலேயரின் மனப் பான்மையைச் செவ்வையாய் உணர்ந்திருந்தார் என்றும் பலமுறை குறிப்பிட்டதுண்டு. மகாத்மா காந்தியவர்களும், நேதாஜி போஸ் அவர்களும் கையாண்ட தூய்மையான கொள்கை

களையும், ஆர்வத்தையும், அயராத உழைப்பையும் நாம் எல்லோரும் பின்பற்றினால் நல்லதோர் புது வாழ்வு நாட்டில் மலரும் என்பதில் ஐயமில்லை.

திருமதி. இராதாபாய் சுப்பராயன் :

மக்கள் தங்களுடைய கடமையைச் சரிவரக் கடைப்பிடிக்க வில்லை. நாம் சரிவர நடந்திருந்தால் மகாத்மாவைக் கொல்ல வேண்டும் என்ற தீய எண்ணமே நம்மிடைத் தோன்றி யிருக்க முடியாது!

திரு. கே. ஆனந்த நம்பியார் :

ஏழைகளின் துன்பத்தை உண்மையாக உணர்ந்து அதை நீக்குவதற்குப் பாடுபட்டவர் மகாத்மா. அப் பேர்ப்பட்ட பெரியாரைத் தாக்கியவனுடைய மனப்பான்மை இனியும் நாட்டில் வளரவிடாமல் வேருடன் களையப்பட வேண்டும்.

திரு. வி. ஸி. வெள்ளியங்கிரிக் கவுண்டர் :

உலகத்தில் தீமை ஒழியவும், நன்மைகள் ஓங்கவும், நம் நாட்டில் எங்கும் அமைதி நிலவவும் எவ்விதக் கலகங்களிலும், எல்லாவகைக் கருத்து வேறுபாடுகளிலும், அமைதியும், நிறைவும், ஒற்றுமையும், துணிவும் உண்டாக்கும் வழியில் உடலின் ஆற்றலை முற்றிலும் பயன்படுத்தி நாட்டுப் பணியாற்றிய பெரியார் காந்தியடிகளை நாம் இழந்தோம்!

திரு. கே. எஸ். இராமசாமி சாஸ்திரி :

(த. நா. இந்து மகாசபைத் தலைவர்)

இந்து சமூகத்தையும் இந்து மகாசபையையும் சேர்ந்த ஒரு பாவி மகா புனித மூர்த்தியான மகாத்மாவைச் சுட்டுக் கொன்றது மிகக் கெடுதலான—அட்டூழியமான செயல். அத்தகைய செயலை எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவனும் வெறுத்துக் கண்டிப்பது முக்கியமான கடமை.

திரு. ஸி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் :



காந்தியடிகளின் பிரிவு இந்தியாவுக்கு மட்டுமன்றி, உலகம் முழுவதிற்குமே ஈடு செய்வதற்கு அரியதோர் குறை என்பதிற் சிறிதேனும் ஐயமில்லை. மகாத்மா காந்தியடிகள் ஒரு சமயத்தைச் சேர்ந்தவர் என்று சொல்வதைவிடப் பெரியதோர் தவறு வேறொன்றும் இல்லை. அவர் எல்லா மதங்களுக்கும் பொதுச் சொத்து. அவரது ஆன்மா அமைதியடைய நாம் செய்யவேண்டியதெல்லாம் அவர் எந்தெந்தக் குறிக்கோள்களுக்காகப் பாடுபட்டுத் தம் உயிரையும் தத்தம் செய்தாரோ, அந்தக் குறிக்கோள்கள் நிறைவேற நாம் இடைவிடாது அல்லும் பகலும் பாடுபட வேண்டியதே.

திரு. கே. இராமசாமிக் கவுண்டர் :

(தலைமை மாகாண மாஜிஸ்திரேட்டு)

பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் விடுதலைப்போரில் ஈடுபட்ட லட்சக்கணக்கான மக்களை மாஜிஸ்ட்ரேட்டுகள் சிறைக்கு அனுப்பியிருக்கின்றனர். நம் நாட்டை நமக்கு மீட்டுத்தந்த நாட்டின் தந்தை போலீசாரிடமும் மாஜிஸ்ட்ரேட்டுகளிடமும் சிக்கி எங்ஙனம் துன்புற்றார் என்பதை நாம் அனைவரும் நன்கு அறிவோம். கடந்த காலத்தில் நாங்கள் செய்த பாவத்திற்குப் 'பிராயச் சித்த'மே இல்லை என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

காந்தியடிகளின் கருத்துக்கள் எங்களுக்கு அறநெறிகளாக அமையும்.

திரு. அல்லாடி. கிருஷ்ணசாமி ஐயர் :

தற்சமயத்தில் உலகிலேயே தலைசிறந்தவரும், உலகில் தோன்றிய மாபெரும் புருடர்களில் ஒருவரும், இந்திய சுதந்திரச் சிற்பியும் இந்தியாவின் தந்தையுமானவர் மகாத்மா காந்தி.

திரு. டி. எம். கிருஷ்ணசாமி ஐயர் :

மகாத்மா காந்தியின் உடல் மறைந்து விட்டது! ஆனால் அவரது பெரும்பணியின் ஒளி ஒருநாளும் மங்காது!

திரு. ஜே. எல். பி. ரோச் விக்டோரியா :

எங்கள் தந்தை என்பதற்காக மட்டுமல்ல, சிறுபான்மையோர் எல்லோருக்குமே பாதுகாவலன், வெற்றி வீரன் என்பதற்காக, இந் நாட்டின் தந்தை மரணம் எய்தியது குறித்து நாங்கள் துக்கப்படுகிறோம். நாங்கள் ஆழ்ந்த துயரம் உறுவதற்கு இன்னொரு முக்கியமான காரணமும் உண்டு; கிறிஸ்துவின் போதனைகளிற் சிறந்த நிபுணர்களில் ஒருவராக அவரை நாங்கள் கருதுவதுதான் அந்தக் காரணம். அவர் மறைந்துவிட்டாலும் அவரது ஆன்மா என்றைக்கும் வாழும்!

திரு. ஜே. எம். குமரப்பா :

காந்தியடிகள் ஒரு பெரிய மேதை. ஏனெனில் அவரைத் தோற்றுவித்த நமது நாகரிகம் மிகவும் உயரியது. நாம் மீண்டும் அப் பண்பைக் கைக்கொள்வோமானால் நம்மிடையே மேலும் பல காந்தியடிகளைத் தோற்றுவிக்க அப் பண்பினால் முடியும்.

துன்ப மாலை



இறையே நீ எங்கொழிந்தாய் ?



'கவிமணி'
திரு. சி. தேசிகவிநாயகம் பிள்ளை

திடம்படைத்த கல்நெஞ்சம் திடுக்கிட்டு
நடுநடுங்கிச் சிதறிப் போக
மடம்படைத்த மாபாவி வஞ்சனையால்
சாந்திமகான் மடியச் சுட்டான் ;
உடம்பனைத்தும் வாயாக அழுதாலும்
உறுதுயரம் ஒழிந்தி டாதால்,
இடம்படைத்த உலகாளும் இறையே ! நீ
எங்கொழிந்தாய் இந்நாள் ஐடா !



ஒளிவளர் விளக்கு

'பண்டிதமணி'
திரு. மு. கதிரேசச் செட்டியார்

காந்தியடிகளின் பிரிவுபற்றி உலகமே கலங்குகின்றது! அரியவற்றுள் எல்லாம் அரிது, ஒருவன் தன் வாழ்க்கையின் குறிக்கோளைத் தனக்கென மேற்கொள்ளாமல், உலக நலத்திற்கு உரியதாக்குதல். இவ்வருஞ் செயலை முற்றுங் கடைப்பிடித்தவர் காந்தியடிகளே யாவர். உலக ஒற்றுமைக்கும், இந்தியத் தாயின் விடுதலைக்கும் தம் மன மொழி மெய்களைப் பெரிதும் ஈடுபடச் செய்தவர்; தோள்வலியாலும் படைத்துணையாலும் கருவிகளாலும் அடைய முடியாத வெற்றியை அருளறத்தால் அடைந்தவர்; அரசியலறிவில் நிகரற்ற திறமை படைத்தவர்.

அரசியற் செயல்களை மேற்கொண்டு செல்வோர் கடவுட் கொள்கையில் பின்னடைதல் இயல்பு. காந்தியடிகள் அரசியற் செயல்களில் எத்துணை முன்னேற்றம் அடைந்தார்களோ, அத்துணைக்கும் ஒருபடி மேலாகவே அவர்கள் கடவுட்கொள்கை சிறப்புற்று நிகழ்வதாயிற்று. நாட்கடனாக மேற்கொண்டு கடவுள் வழிபாடு நடத்திப் பல மக்களையும் அதன்கண் ஈடுபடச் செய்து, அரசியல் முறைகளையும் ஆங்கே உபதேசித்து வந்தனர்.

இவ்வொழுக்கம் அரிதினும் அரிதாகும். அன்பு, அருள், பொறுமை முதலிய உயர் குணங்களின் நிலையமாகிய காந்தியடிகள், இந்திய அரசுப் பிறப்புரிமையைத் தவங்கிடந்து பெற்ருர்கள். பெற்ற அரசியலில் மக்களுக்கு நலம் பயக்கும் சட்ட திட்டங்களைச் செம்மைபெற வகுத்து அமைதியை நிலைநாட்ட முயன்ற சமயத்தில், எதிர்பாராத நிலையில் எவரும் நடுக்கம் எய்தும்படி மறைந்துவிட்டார்கள். 'அந்தோ! சிறந்து திகழ்ந்த ஒளிவளர் விளக்கு அவிந்துவிட்டதே! பேரிருள் சூழ்ந்ததே! என் செயலாம்?' எனக் காந்தியடிகளின் வழித்தோன்றல்களாகிய நாமெல்லாம் கவலைக் கடலுள் மூழ்கலானேம்.

காந்தியடிகளின் உடலுயிரைப் பிரித்த கொடியவன், அப்பெருமான் உழைப்பின் பயனைப் பங்கிட்டுக்கொள்ளுதற்குரிய ஓர் இந்தியன் என்ருல் இதனினுங் கொடியது யாதாகும்? உடலெல்லாம் உயிரில்லாவெனத் தோன்றும் உலகத்தே மகாத்மாவின் பிரிவால் களிக்கும் நெஞ்சமும் இருக்குமோ? சாந்த மூர்த்தியாகிய காந்தியடிகளுக்குத் தீங்கிழைக்க எப்படித்தான் அக்கொடியவன் மனந்துணிந்தானே? இன்று ஆருத பெருந்துயரில் அனைத்துலகும் தவிக்கின்றதே! இத் துயர் எவ்வாறு ஒழிவெய்துமோ? அழிவில்லாத இறையருளின்பத்தில் அடிகளின் நல்லுயிர் தோய்ந்து இன்புறுகவென்று மக்களெல்லாம் வழிபடுகின்றனர். ஆயினும், நம் சமயக்கொள்கைப்படிப் பெரியார் நாட்டுக்குச் செய்யக் கருதியிருந்த செயல்கள் பல எஞ்சியிருத்தலால் அக்குறை முடித்தற்பொருட்டு மீண்டும் இந்தியத் தாயின் தவப்புதல்வராக ஏன் பிறப்பு எய்தலாகாது? இந்திய மக்கள் இத் துயர்க் கடலைக் கடக்க ஆண்டவன் எவ்வாற்ருனுவது ஒரு புணை தரல் வேண்டும் என்பதே நம் வேண்டுகோள் ஆகும்.



அவர் பெயர் வாழ்க !

'புரட்சிக் கவிஞர்'
திரு. பாரதிதாசன்

காந்தியார் இறந்தார் என்று கழறினர் கலங்கிற் றுள்ளம்!
எய்ந்தஇம் முப்பா ஞண்டில் எழுந்தஅவ் வுணர்வின் ஊற்றால்
மாந்தரின் வறண்ட நெஞ்ச வயலெல்லாம் விளைச்சல் கண்டோம்!
வீழ்ந்தநாட் டெழுச்சி கண்டோம்! வையகம் வியக்கக்கண்டோம்!

இறந்தனர் காந்தி யாரென் றியம்பினர் எரிந்த துள்ளம்!
சிறந்தனர் எவரும்.எத்தச் சிறந்தனர்! நாம் சிறக்கப்
பிறந்தனர்! வாழார் வாழும் பெருநெறி காணக் காட்டிப்
பறந்தனர்; இசை முழக்கப் பறந்தது வானம் பாடி!

வீழ்ந்தனர்; காந்தி யார்என் றுரைத்தனர் வெடித்த துள்ளம்!
ஆழ்ந்தநல் லுணர்ச்சி தன்னை அடக்கிடச் சிறைக்கோட் டத்தைச்
சூழ்ந்துள ஆள வந்தார் துணைஎன்பார்; இந்த வையம்
வாழ்ந்திடச், சிறையே வீடாய் மாற்றினர் வியக்கும் வண்ணம்!

வீடுற்றார் காந்தி யார்என் றுரைத்தனர் விம்மிற் றுள்ளம்!
நாடுற்ற பழிக்குத் தம்மை நலிவுக்குள் ளாக்கும் செய்தி
ஏடுற்ற கதையாய்க் கேட்டோம் இன்னார்பால் எளிதிற் கண்டோம்
ஆடுவார் நெஞ்சந் தோறும் அவர்பெயர் வாழ்க நன்றே!

நற்றவ முனிவர்!



'நாவலர்' திரு.
ச. சோமசுந்தர பாரதியார்,
எம்.ஏ., பி.எல்.

காந்தி அடிகள் சாந்த மூர்த்தி. அப் பெரியார் கயவன் ஒருவன் செயலாலே, 'முற்றிலும் பற்றிலாத் தூயவாழ்வின் ஒய்வு பெற்றார். அருள் ஒளியை மத வெறியன் இதய இருள் விழுங்கிற்று.

"இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு"

எனும் குறளறத்தை வாழ்ந்து காட்டிய பெருந்தகை காந்தி அடிகள். 'இனியவே செய்வார்க்கும் இன்னா இழைப்பது கயவர் இயல்' என்பதை வற்புறுத்தினன் கோட்சே என்னும் அற்பன். அடிகளின் முடிவு கேட்ட ஆங்கில நாடகாசிரியன் 'அளவிறந்த சீலமும் ஆபத்தாகும்' என்று கூறினன். அதிலும் ஓரளவு உண்மை உளது. 'மக்களும் விலங்கோ டொப்பர், மதவெறி மிகத்தின் மிஞ்சின்,' என்பது தெளிவாயிற்று.

அடிகளார், தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர் வரிசையில் தன்இணையின்றி முன்அணியில் முதலிடம் கொண்டவர். கடவுள் நெறியில் மடத்தொடு பொய்


மைக்கு இடமிலை என்று நடந்து காட்டினர்; இனத் தவர், ஏதிலர் என்று யாரையும் மனத்திலும் எண்ண வொண்ணு மாண்பு மிக்கவர். "ஒல்லும் வாயெல்லாம் ஓவாது அறவினை செல்லும் வாயெல்லாம்" செய்து வந்த வர்; கடமையை மறக்கும் மடமை துடைத்தவர்; உடைமை ஒன்றில்லாப் பெருநிதி உடையவர். இன்னும் அவர் அருளறப் பணிசெயப் பருவமும் இடமும் என்றும் யாண்டும் என்று கண்டவர். சமயப் பிணக்கை வேரொடு களைந்து நல்அமைதியை நாட்ட அயராது உழைத்தவர். எல்லாச் சமயமும் நல்லதே கூறவல்லதென்ற வாய்மை யின் தூய்மையை வற்புறுத்தியவர். தன்னல மறுப்பில் இன்புறும் இயல்பினர். "உற்றநோய் நோற்றுப் பிறர்க்கு உறுகண் செய்யாத" நற்றவ முனிவராய் நாட்டில் வாழ்ந் தவர். மெய்நெறி, துறைதொறும் பொய்யாதென்று வாழ்ந்து காட்டியவர்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று ஓதிய ஆன்றோர் மூதுரை கூறும் நீதில் மெய்அறம் திறம்பா வாழ்க்கையர்.

பிறப்பவர் இறப்பதுண்மை. இறப்பினில் என்றும் சாவாப் பிறப்பினை எய்தி மக்கள் அறத்தினுல் மறத்தை வெல்லும் அமரராய் அமர்ந்தவர் அடிகளாவர்.

"வாழ்க சால்பெலாம், வாழியர் காந்தியார்
தாழ்வில் மெய்ப்புகழ் சாந்தியும் ஓங்குக !"

உயிர் கொடுத்த பெருமை!



நாமக்கல் கவிஞர்

திரு. வெ. இராமலிங்கம் பிள்ளை

எப்படித்தம் உடல்வளர்த்து எதுசெய் தாலும்
என்னென்ன காயகற்பம் இழைத்துண் டாலும்
தப்பிடவே முடியாது தடையில் லாமல்
தலைசிறந்த மனிதர்களும் சாக வேண்டும்!
முப்பொழுதும் உலகநலம் மூச்சாய்க் கொண்டு
முறைதவறாத் தவவாழ்வே முடித்த காந்தி
இப்படித்தம் உயிர்கொடுத்த பெருமை யன்றோ
என்றென்றும் நின்றொளிரும் இரவி யாகும்!

உடலமென்ற சிறுகூண்டு ஒழிந்தா லென்ன?
உள்ளிருந்த ஒருபொருளுக் கழிவும் உண்டோ?
கடவுளென்ற ஒருமகிமை இறந்தா லன்றோ
காந்தியென்ற பெரும்பெயரும் இறந்த தாகும்!
திடமுறுவோம் தீரமுடன் நம்மைச் சூழ்ந்த
தீமைகளைத் திறமையுடன் தீர்க்கா விட்டால்
அடிமையச்சம் நம்மைவந்து அழுத்திக் கொள்ளும்
அண்ணலையும் அவமதித்த அதம ராவோம்!

வள்ளுவரின் வழிவளர்ந்த தமிழா! நீதான்
வாய்மையுடன் தாய்மைஅறம் வளர்த்த வள்ளல்
தெள்ளுதமிழ் நூல்களெலாம் தெளிவாய்ச் சொல்லும்
தெய்வநிறை கருணையையே செய்தார் காந்தி;
கொள்ளைகளும் கொலைவெறியும் குமுற வாடும்
குவலயத்தில் கொடுமைகளைக் குறைக்க நீதான்
அள்ளியெங்கும் தமிழ்மொழியின் அறிவை வீசி
ஐயனெங்கள் காந்திவழி அகிம்சை காப்பாய்!



அவர் இறந்தவரா ?

பேராசிரியர், திரு.
ரா. பி. சேதுப் பிள்ளை, பி.ஏ., பி.எல்.

இவ்வுலகில் இறந்தவர் எல்லாம் இறந்தவர் அல்லர்; இருந்தவர் எல்லாம் இருந்தவர் அல்லர். இறந்தவருள்ளும் இருந்தவர் உண்டு என்ற உண்மையை இருபதாம் நூற்றாண்டில் விளக்க வந்தவர் காந்தியடிகள். மாநிலத்தார் உள்ளத்துள் எல்லாம் உள்ள ஒருவரை—அறிவறிந்த உலகத்தை இயக்கும் அவிரொளியை—தம்மையே தமர்க்குத் தந்த தனிப்பெருங் கருணையை—இறந்தவர் எனக் கருதுதல் ஏழைமைப்பாலதன்றோ? தொன்றுதொட்டு இந்நாட்டிலே தோன்றிய ஆன்றோர் அறிவுறுத்திய அருளறத்தின் திருவுருவாய் விளங்கினார் காந்தியடிகள். அறப்படையாகிய ஆன்மவலிமையால் ஆங்கில நாட்டு அடக்குமுறை யாட்சியை வென்றார்; உரிமை பெற்ற பாரதத்தின் உயரிய தலைவராய் நின்றார். "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்" என்ற திருவாக்கை நிறைவேற்றிச் சென்றார்.

இனத்தின் பெயரால் பிணக்கமுறுவது ஈனம்; மதத்தின் பெயரால் மாறுபடுவது மடமை என்று மூச்சுள்ள மட்டும் பேசினார். இன வெறியும், மத வெறியும், பிற வெறியும் உடைய பேதை மாந்தரை அன்பளாவிய அறவுரையால் திருத்தி நெறிப்படுத்த முயன்றார். கல்லைப் பிசைந்து கனியாக்கும் கருணைப் பணியிலே தெய்வ மரணம் எய்தினார்.

"நந்தா விளக்கனைய நாயகனே! நானிலத்தோர்
தந்தாய்! தனியறத்தின் தாயே! தயாநிதியே!"

என்று பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. வாழ்க காந்தி! வாழ்க காந்தீயம்! என்று வாழ்த்துவோமாக!

இந்தியாவின் கண்ணீர்!



யோகி திரு.
சுத்தானந்த பாரதியார்

துடிக்குதெம் ஆவி அந்தோ! துயர்மனம் இரத்தக் கண்ணீர்
வடிக்குதெம் உளம் வெதும்பி வாடுதுன் பிரிவை எண்ணி
இடிக்கும்வெம் புயலி னுக்கும் இடர்ப்படா தெம்வி லங்கை
ஒடிக்குநல் லன்பு வீர! உனக்குமோர் சாவும் உண்டோ?

உண்மையின் உரிமை காட்ட உலகினுக் கொருவன் ஆனாய்;
திண்மன உறுதி யாலே தியாகத்தீ குளித்து நாங்கள்
கண்மனங் களிக்க நாட்டின் கட்டுகள் அவிழ்த்தாய் எங்கள்
புண்மனம் புழுங்கு தையா! காந்திநீ போக லாமோ?

தந்தைதாய் இறந்திட் டாலும் தரணியை இழந்திட் டாலும்,
சொந்தநல் லுயிர்போ னாலும் துயர்ப்பட மாட்டோம் ஐயா!
இந்திய நாட்டைக் காத்த இணையிலாக் கருணை வாழ்வே!
இந்தியப் பதகன் சுட்டான்! இதயமும் வெடிக்கு தையா!

மறங்கொண்ட மிருக சக்தி வாட்டிடும் உலகைக் காக்கத்
திறங்கொண்ட தெய்வ சக்தி தேர்ந்தெதிர் பகைக்கு லத்தைப்
புறங்கண்டு, பொய்யிலாத பொதுநலம் பொலிய வேநல்
அறங்கண்ட வடிவ மானாய்! அமரநீ வாழ்க! வாழ்க!!

மன்னுயி ரெல்லாம் வாழ, மறவலிக் கொடுமை வீழத்
தன்னுயிர் கொடுத்தாய்! புத்த தருமமே உருவெ டுத்தாய்!
கன்னத்தில் அடித்த வர்க்கும் கருணைசெய் கிறிஸ்து போன்றாய்!
மண்ணுல கெல்லாம் போற்ற மகாத்மநீ வாழ்க! வாழ்க!!

அணையா ஒளி !



வித்துவான்
திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்
எம்.ஏ., பி.எல்., எம்.ஓ.எல்.

முப்பது ஆண்டுகளாக இந்திய வானத்தில் ஒளிவீசிய பேரொளி; பலருக்கும் வழிகாட்டிய அன்பொளி; நாற்பதுகோடி மக்களுக்கும் புத்துயிர் அளித்துத் தன் மதிப்பும் தன்நம்பிக்கையும் கொடுத்துத் தட்டி எழுப்பித் தன்னரசு கேட்க வாயும் தந்து உரிமை வாழ்வினையும் வாங்கித் தந்த அருள் ஒளி; பகைத்துக் கிடந்தோரை உடன்பிறந்தார் எனத் தெளிய முயன்ற ஒற்றுமை ஒளி; அடக்குமுறையாலும் வழக்க ஒழுக்கத்தாலும் தயங்கிப் புழுங்கிக் கிடந்தாரைத் தீண்டாமைப்பேய் ஒழியக் கோயில்கள் எல்லாம் அனைவருக்கும் தந்தையாம் இறைவன் நிலையமாய் எல்லோருக்கும் இடந்தருமாறு செய்த கடவுள் ஒளி; பெண்களின் பெருமையைத் தாய்மையின் சிறப்பாகப் பாராட்டி. உலகப் பெருமணிகளாக வாழவைத்த தாயொளி; "உழைப்பின் பெருமையை உணர்வதே கல்வி; செயல் வழியே அறிவு வளரும்" என்றெல்லாம் காட்டிச் சிறுவருக்கும் விடுதலை காட்டிய தந்தை ஒளி; உலக முழுதினையும் குடும்பமாகக்கொண்டு வாழ்ந்த உண்மை ஒளி; ஆ! அது மறைந்தது! அழியுமா அந்த ஒளி! கதிரவன் மறைவான்; ஆனால் அழியான். அன்றாடம் நாம் அறியும் உண்மை இது! புற இருளை ஓட்டுகின்ற இந்தக் கதிரவன் ஒளியே மறையவில்லை என்றால்

அவனிலும் பல வகையில் சிறந்து நம் மன இருட்டை எல்லாம் போக்கிப் புத்துயிரும் புத்துணர்வும் தந்து தூங் காமலே உழைத்து வாழ்ந்து மக்களைக் கடவுளாகக் காணும் பார்வையும் கொடுத்துப் புழுவாய்க் கிடந்த நம்மை இந்திய நாட்டுப் பழைய பண்பாட்டிற்கும் இந் நாளைய முன்னேற்றத்திற்கும் ஏற்பப் பொதுமக்களாக்கிய இந்தக் கடவுட் பேரொளியோ மறையும்?

சாவு என்பது உலகின் இயல்பு. 'ஆறிலும் சாவு நூறிலும் சாவு' என்று பாட்டியும் பாடுகின்றாள். சாக் ரடீஸ் மறைந்தார்; கண்ணபெருமான் மறைந்தார்; சிக்கிய குரவர் பலர் மறைந்தனர். பிறர் கொடுமைக்கு இரை யாகியே மறைந்தனர். இந்தப் பேரொளியும் இந்நாளைய துப்பாக்கிப் புகையில் மறைந்து நிற்கின்றது. எந்த வகையாலோ ஒருவகையால் சாவு வந்துதான் தீரும். சாவாதிருத்தலும் தக்கதன்று. சாவதிலும் வாழ்வு உண்டு, பெருவாழ்வு உண்டு. இந்தப் பேரொளியின் வழியே நாம் அந்த உண்மையைக் காணவில்லையா? அத னால் அன்றோ நம்மில் ஒருவன் அதனை மறையச் செய்தான்! நாம் இன்னும் மிகப்பேர் ஆழத்தில் புழுங்குகின்றோம் என்பது தெளிவாகவில்லையா? அப் பேர்ஒளியில் மிகமிக உயர்ந்தோம். ஆனால் இன்னும் எவ்வளவோ உயரவேண் டும்! புறத்தே அந்த ஒளி இருக்கும் வரை அதன்மேல் அனைத்துச் சுமையையும் போட்டுவந்தோம். அதனாலேயே அந்த ஒளி மறையவேண்டியதாயிற்று. இனி அந்த ஒளியை மனத்தில் வைத்து மறவாது அந்த ஒளி நிழலில் நடையாடவேண்டும்.

வாழ்க நீ எம்மான் காந்தி! உன்வழியே செல்ல முனைந்து நிற்கும் அறிவிலா மக்கட்கு வழிகாட்டு! அழி யாத அண்ணலே, வாழி! வாழி!! வாழி!!!



பெருங்கொடுமை கண்டோம் !

சேலம் தோரமங்கலம்
ஆசிரியர் புலவரேறு
திரு. அ. வரதநஞ்சைய பிள்ளை

இந்தியத்தா யேஉனது பெருந்த வத்தால்
ஈன்றஅரும் பெறற்புதல்வன் எங்கே யம்மா?
வந்தசுதந் தரமேபல் காலுண் ணாமல்
வருந்திமிக நினைத்தந்த தந்தை யெங்கே?
எந்தவுயிர்க் குமிரங்கும் அஹிம்சை யேநின்
இணைப்பிரியாப் பெருந்துணைவன் எங்கே யெங்கே?
அந்தமில்சீர் மகாத்மாவாங் காந்தி எங்கே?
அறைகவென உலகமெலாம் அலறிற் றம்மா!

அருட்கடலே! குணமலையே! அத்தா! எங்கள்
அன்னையரி னுஞ்சிறந்த அன்பின் செல்வா!
பெரியோரோ பேச்சறியாச் சிறுவ ரேனும்
பேர்சொன்னா லறியமிகும் புகழ்பெற் றோனே!
உருவெடுத்தார் யாவரையா வுனைப்போ லிந்த
உலகமுற்றும் அறிந்திடவே வாழ்ந்தார் காணோம்!
பெருமானே. நினைத்தொடர வழிகா ணாமே
பேதையரேம் படுந்துயரம் தீர்வ தென்றோ?

சண்டாளன் துணிந்துன்மேல் வீசுங் குண்டு
தாக்கியது பலகோடி மக்கள் தம்மை!
துண்டாக மனம்பிழந்தார்; கண்ணி ழந்தார்;
தோளற்றார்; மதிமறந்தார்; சோர்ந்து வீழ்ந்தார்;

கண்டாரோ கேட்டாரோ நினைக்கின் றாரோ
கண்ணீராம் பெருங்கடலில் உடலம் மூழ்க
அண்டாத பெருந்துன்பக் கடலில் ஆவி
அமிழ்ந்தனர்கண் பாராயோ, உறங்கு வாயோ ?

பொன்னைஇழந் திடினும்மிகப் போக வின்பம்
போயிடினும் சுற்றத்தார் பலர்மாண் டாலும்
நன்மைமிகும் நாட்டுரிமை கைவிட் டாலும்
நமனார்வந் தெம்முயிரைக் கொடுசென் றாலும்
முன்னைவினை யால்வாரா தவைவந் தாலும்
முடிசூடா மன்னா ! எம் கண்காண் தேவே !
உன்னையிழந் துறுதுயர்க்கு நிகராம் இன்னல்
உலகத்தில் வேறொன்று மில்லை யந்தோ !

வெள்ளையரே போங்களென்ற வீரா ! நின்னை
விண்ணவர்கள் காண்பதற்கு விரும்பி னாரோ ?
தள்ளியிம்சை தனைப்பகைத்த பாவந் தானோ
தக்கோனே நினக்கொருகூற் றாயிற் றையோ !
கள்ளமற்ற அஹிம்சைநின்னைக் காவா தென்னே !
கடும்பாவம் நகைக்கஅறம் அழுமாம் என்றால்
வள்ளல்மகாத் மாவே,நின் வாழ்நா ளோடே
மாண்டதோ தருமம்அரு ளாதி யெல்லாம் !

நன்றிக்கு மதிப்பெங்கே ! பொது நலத்தின்
நாட்டத்தின் விளைவென்னே ! நல்லோர் கொள்ளும்
வென்றிக்குக் குறிதுப்பாக் கிக்குண் டேயோ !
மேல்கீழாய் நீதிநெறி புரண்ட தேயோ !
கன்றைவிட்டுத் தாய்ப்பசுவைப் பிரித்தா லென்னக்
கருதாத பெருங்கொடுமை கண்டோம் ! இன்றே
என்றைக்கும் நின்புகழிவ் வுலகைச் சூழும்
இதுபோதும் எனக்கருதி ஏகி னையோ !

துக்கக் கண்ணீர் !



'அறிஞர்'
சி. என். அண்ணாத்துரை, எம்.ஏ.

'இந்தியா என்றோர் நாடுண்டு; அங்கு ஏலம், கிராம்பு பெறுவதுண்டு; பொன்னும், பொருளும், மிக உண்டு. போக்கறியாதார் நிரம்ப உண்டு!' என்ற அளவில் பதினாறும் நூற்றாண்டிலே உலகம் அறிந்திருந்தது. பிறகு படிப்படியாக இந்தியா 'பிரிட்டிஷ்' பிடியிலே சிக்கிவிட்டது. அப்போது, 'இந்தியா என்றோர் நாடுண்டு. அது ஆங்கிலருக்கு நல்ல வேட்டைக் காடு!' என்று உலகம் இழித்தும் பழித்தும் பேசிக்கொண்டது. திலகர் காலத்திலே விடிவெள்ளி தோன்றுவது போல விடுதலைக்கு முயற்சி செய்யப்பட்டது என்றபோதிலும், காந்தியார் காங்கிரசுக்குள் புகுந்த பிறகே 'இந்தியா என்றோர் நாடுண்டு. அங்கு விழிப்பும் எழுச்சியும் உண்டு' என்று உலகம் அறிந்து கொள்ள முடிந்தது. காந்தியாரின் புகழொளி மூலமே, உலகம் இந்தியாவைக் கண்டு வந்தது. தன்னலமற்ற விளைவுபற்றிய கவலையற்ற போராட்ட மனோபாவத்தை நாட்டிலே காந்தியாரால்தான் உண்டாக்க முடிந்தது. அதற்கு முன்புவரையில் விடுதலை கோரி மனுச்செய்யும் மேதாவிகளிடமே நாடு இருந்தது. அவருடைய உருவமோ, உடல்மைப்போ, பேச்சோ, நடவடிக்கையோ, ராணுவ மனப்பான்மையை ஏற்படுத்தக் கூடிய விதமாக இல்லை.—ஆனால் அவரால், ராணுவங்களையும் எதிர்த்து நிற்கக்கூடிய வீர உணர்ச்சியை இலட்சக் கணக்கானவர்களுக்கு உண்டாக்க முடிந்தது. எத்தனை எத்தனை போராட்டங்கள்! அவைகளிலே கலந்துகொண்ட வாலிபர்கள் எத்

தனை எத்தனை இலட்சம்! எத்தகைய வீரச்செயல்கள் தியாகச் செயல்கள் அவர் காலத்திலே நேரிட்டன! இவ்வளவையும் தந்த தலைவருக்கு அந்தத் துரோகி தந்தது மூன்று குண்டுகள்! காக்கை கழுகும் நாய் நரியும் அந்த மாபாவியின் உடலைத் தின்னக் கூசும்! அவ்வளவு பெரிய துரோகச் செயலை அந்த வாலிபன் செய்துவிட்டான். அந்த வெறியன் செயலால் இருள் சூழ்ந்து கிடக்கும் நேரம் இது. எவரும் எதிர்பாராதது நடந்துவிட்டதால் எவ்வளவு பேசிப் பேசிப் பார்த்தாலும் ஆற்றிக்கொள்ள முடியாத விதமான நிலை ஏற்பட்டு விட்டது. இந்தத் துக்கத்தை எளிதில் துடைத்திட முடியாது. ஒரு நாட்டிற்கே பெரியதோர் நெருக்கடி ஏற்பட்டுள்ள நேரம்.

இருள் கலந்துகொண்டு இதயம் துடித்துக்கொண்டு, கண்களிலே நீர் கொப்பளித்துக் கொண்டுள்ள இந்த நேரத்தில், நாம் ஆறுதல் பெறுவது கடினமான காரியம். ஆனால் என் செய்வது?

* * * *

உலகை நோக்கி நமது உள்ளத்தை நோக்கி, "உத்தமரை வீழ்த்திவிட்டான் ஓர் உலுத்தன்! அவருடைய உடலை நாங்கள் இழந்து விட்டோம். அவருடைய உத்தமக் கொள்கைகளின் மூலம், அவர் இனி என்றென்றும் வாழ்வார். இந்தத் துக்க நாளன்று அவர் எங்கள் ஒவ்வொருவருடனும் கலந்து விட்டார்! இனி அவரை எங்களை விட்டுப் பிரிக்க முடியாது. யமுனைக் கரையிலே அவருடைய சடலத்தைக் கொளுத்தினோம்! ஆனால் வீடு திரும்புமுன் எங்கள் உள்ளங்களிலே அவர் இடம் பெற்றிருப்பதைக் கண்டோம்! அவர் இதோ இருக்கிறார்! எங்கள் நற்குணத்திற்கும் நல்ல நடத்தைக்கும் காரணமாக விளங்கி வருகிறார்" என்று கூறவேண்டும்—சொல்லால் மட்டுமல்ல செயலால் அனைவரும்!




உலகுயிராய் நின்றார்!

'குலசைத் திருவள்ளுவரகம்'
ப. இராமநாத பிள்ளை

மண்டிணிந்த நிலவுலகில் மாமன்னர் குடிகள்
மற்றுயிர்கள் எல்லாமும் வயிறார வுண்டே
அண்டினர்க்கும் பேருதவி அன்புழைப்பா லாக்கி
அகம்புறமும் அடிமையின்றி உரிமையொடும் வாழத்
தொண்டியற்றி நாடெல்லாம் தொழுகையொடும் பரப்பித்
துணையுயிரை யீந்துபுகழ்த் தோற்றமெனச் சொல்ல
எண்டிசையும் ஏங்கியழ எமைப்பிரிந்த காந்தி
எனும்அடிகள் உலகுயிராய் நிற்குமிசை வெண்ணே.

எண்ணரிய உலகுயிர்கள் என்றுநன் றாக
இராட்டினத்தில் நூல்நூற்க இயற்றுவித்தார் முன்
தண்ணளியோ டேறுசெயாத் தவம்வாய்மை பூண்டு [போல்
சான்றவராய்த் தீமைபுறம் கண்டுவெற்றி யோங்க
வண்ணமொழி ஒத்துழையா வன்மைப்போர் ஆற்றி
வல்லாட்சி ஆங்கிலரைத் தலைவணங்க வைத்து
விண்ணமைமா வலந்தீவாம் இந்தியநாட் டுரிமை
வீறுபெறப் பெற்றளித்தார் ஆளும்வழி சொற்றார்.

சொற்றவழி யுற்றுநாம் தூயவராய் யார்க்கும்
துணைவர்களாய் ஒற்றுமையாய் ஏழைநிலை செல்வம்
பெற்றநிலை எனும்வேறு பாடொழித்துக் கல்வி
பேருழைப்பு வாழ்க்கைச்சிக் கனம்பெற்றுவாழ்வோம்!
நற்றவராய் அடிகள்புத்தர் கிறித்துநபி வீரர்
நற்சாக்கி ரட்டரா பிரகாம லிங்கர்
வெற்றிமெய்ப் பொருளாரோர் உருவாக மேவி
விளங்கினர்பல் லூழ்வாழ்க அவர்வழிவா ழியவே!



பொய்யா விளக்கே விளக்கு !

திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார்
பி.ஏ., பி.எல்.

சனவரி 30உக்குப் பத்து நாளைக்கு முன்னால் ஒருவன் மகாத்மா காந்தியின் உயிரை வாங்குவதற்காக வெடி குண்டைப் போட்டான்; குண்டு தப்பிவிட்டது. ஆனாலும் குண்டு எறிந்தவனைப் போலீசார் கைது செய்து விட்டார்கள்.

காந்தியடிகள் என்ன சொன்னார்? "விட்டு விடுங்கள் கைதியை!" என்று சொன்னார். அவர் சொன்னபடியே அவனை விடுவித்துவிட்டார்கள்.

குண்டு எறிந்தவனிடத்தில் யாதொரு கோபமும் இல்லை மகாத்மாவுக்கு; அவனை விடுவித்தார்; வாழச் செய்தார்.

அரிய ஒரு உண்மையை, அரிய ஒரு சாதனத்தை, நாம் கண்கூடாகப் பார்த்தோம். அப்படிப் பார்ப்பதற்கு நமக்குக் கொடுத்து வைத்திருந்தது.

தமிழ் நாட்டில் பண்டைய காலத்தில் ஒரு வார்த்தை: அதாவது சால்பு.

சால்பு என்றால் உடல்பற்றியும் உயிர்பற்றியும் கடவுளைப் பற்றியுமே ஆராய்ந்து ஆராய்ந்து ஆனந்த நிலையிலே நிற்கும் உன்னதமான பண்பு. அந்தப் பண்பு உடையவர்கள் சான்றோர்.

சால்பு என்னும் உன்னத நிலையை அடைவது எல்லாருக்கும் எளிய காரியம் அன்று. எவ்வளவோ பிரயத்தனப் பட்டு அடையவேண்டும். அப்படிப் பிரயத்தனப்பட்டு அடைந்த பிற்பாடும், அந்த நிலையை அடைந்திருப்பது உண்மைதானா என்று சோதனை செய்து பார்த்துக் கொள்ளவேண்டும். அவ்விதம் சோதனைக்கு உள்ளாக்காமல் இருந்துவிட்டால் ஏமாந்துபோன காரியமாக முடியலாம்.

எப்படிச் சோதனை செய்து பார்த்து அந்த உண்மையை அறிய வேண்டும் என்பதைத் திருவள்ளுவர் சொல்லுகிறார்.

> "இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
> என்ன பயத்ததோ சால்பு!"

மனிதப் பிறவியால் அடைய வேண்டிய ஆனந்தத்தைப் பூரணமாக அடைய வேண்டியது சால்பு என்னும் உன்னதப் பண்பின் இலட்சியம். நமக்குக் கேடு செய்தவர்களுக்கும் (நமது உயிரையே வாங்க எண்ணியவர்களுக்கும்கூட) நன்மையைத் தொடர்ந்து செய்தால் அல்லாமல் வேறு எப்படி அடைய முடியும் அந்த ஆனந்தத்தை?— என்று கேட்கிறார் குறள் ஆசிரியர். 'சால்பு' என்னும் உயர்நிலையை ஒருவர் அடைந்தது உண்மைதானா என்று அறிவதற்குக் குறளாசிரியர் கூறும் சோதனை இது.

காந்தியடிகள் அந்தச் சோதனையில் தேறியவர்; தமது வாழ்க்கையெல்லாம் தீங்கு செய்தவனுக்கு நன்

மையே செய்துவந்தவர்; சால்பிற்கு உரிய பயனை வாழ்க்கையில் அனுபவித்த மகான்.

தீங்கு செய்தவர்க்கும் நன்மை செய்வதாகிய அரிய சாதனத்தைக் கைக்கொண்டு ஆனந்தத்தை அடைந்தார் மகாத்மா என்றோம். அந்தச் சாதனத்துக்கு வழிகாட்டியாய் நின்று ஒளி கொடுத்து வந்தது எது? சத்தியத்தில் உறுதியாக நிற்கும் நிலைதான், சகல விதமான சாதனங்களுக்கும் ஒளி கொடுத்து நம்மை நடத்துகிறது என்கிறார் காந்தியடிகள். திருவள்ளுவரும் அந்தத் திசையையே சுட்டிக் காட்டுகிறார்.

"எல்லா விளக்கும் விளக்கல்ல : சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு!"

சால்பிற்கு, அதாவது அறிவிலும் ஒழுக்கத்திலும் இதயப் பண்பாட்டிலும் சிறந்து நிற்கும் சான்றோரின் தன்மைக்கு விளக்கம் கொடுப்பது சத்தியந்தான். "பொய்யாமை என்னும் விளக்குத்தான் உண்மை விளக்கு; மற்ற விளக்குகள் எல்லாம் விளக்கு அல்ல!" என்று திருவள்ளுவர் சொன்னார். திருவள்ளுவரின் வாக்கைக் காந்தியடிகள் செயலில் நடத்திக் காட்டினார்.

காந்தியடிகளின் சகாப்தத்தில் வாழக் கொடுத்து வைத்தோம் நாம். நம் முன்னோர்க்கும் அந்தப் பேறு இல்லை; இனிவருவோர்க்கும் அது இல்லை.

"இருபது ஆண்டுகட்கு முன்னரே யான் தமிழ் பயிலத் தொடங்கியதற்குக் காரணம் திருக்குறள் மூலத்தையே நேராகப் படித்தல் வேண்டுமென்று என் உள்ளத் தெழுந்த அவாவே யாகும்."

—காந்தியடிகள்.



பெருங்கருணை விளக்கு

கவிஞர்
திரு. புத்தனேரி ரா. சுப்பிரமணியன்

எங்குகிறோம்! காந்திமகாத் மாவுடலைச் சாய்த்தோன்
இழிதகவை எண்ணிமனம் எரிகின்றோம்! யார்க்கும்
தீங்கறியாத் திருவுள்ளம்; தியாகத்தின் சின்னம்;
சிரிப்பின்கண் கருணையெலாம் தெரிவித்தோன்; மெய்மை
நீங்கவிடா நெறிநின்றோன்; நீங்கினதே நாட்டின்
நெடுநாளைப் புகழெல்லாம் இமைப்போதில் நீங்கித்
தாங்கவொணாப் பழிநாட்டைச் சார்ந்திட்ட தையோ!
சதிசெய்யும் மதவெறியைத் தவிர்க்கும்நாள் என்றோ?

தெய்வத்தின் பெயராலே பலியீதல் அன்பைச்
சிதைப்பதனால் தவறென்று செப்பியசீ ராளன்;
வையத்தா ரெல்லோரும் மணிக்குறளைக் கற்று
மதிநுட்பம் பெறுகவென வாழ்த்தியதோர் வாணன்;
செய்ந்நன்றி மறவாமல் தமிழ்நாட்டின் சேவை
சிறந்ததெனப் போற்றியவன்; காந்தியெனும் சீலன்;
மெய்வைத்த பெருங்கருணை விளக்கொளியால் நாட்டில்
மிடிமையிருள் மறைவதொடு வேற்றுமையும் போமோ;

அகங்குழையக் கருணைமகான் காந்தியருள் வேண்டி
ஆலயங்கள் அமைத்திடவும் துணியுமடி யார்கள்
மிகவாழும் இந்நாட்டில் மேலோனின் மேனி
வீழ்த்திவிடும் வீணர்களும் உண்டென்று கண்டோம்!
மிகக்கொடிது! இந்நிலைமை மிகக்கொடிது!! நாட்டில்
மெய்வருத்தம் பாராத தலைவர்களைக் கொல்லும்
பகற்கொள்ளைக் கூட்டத்தார் திருந்துகிற மட்டும்
பயனில்லை! விடுதலையின் பண்பல்ல வாமே!!

(வேறு)

அறிவொளியாம் சாக்கிரட்டீஸ், ஏசு நாதர்,
ஆபிரகாம் லிங்கனிவர் அங்க மெல்லாம்
வெறிகொண்டோர் வீழ்த்தினர்போல் காந்தி யண்ணல்
மேனியையும் வீழ்த்தியதே வீணர் கூட்டம்!
பொறுமையிலே கருணையிலே புத்த னாகிப்
பொதுமறையில் வள்ளுவனார் போற்றும் உண்மை
நெறிநின்ற காந்தியைநம் நெஞ்சில் வைத்து
நீளுலகில் வாழ்வியலை நிகழ்த்து வோமே!

(வேறு)

கலங்கரை விளக்கம் அணைந்தது; கல்விக்
களஞ்சியம் மறைந்தது; நாட்டின்
விலங்கினை அறுத்தே விடுதலை கண்ட
வீரனை வீழ்த்தினன் வீணன்!
கலங்கிட யமுனைக் கரையினில் நீறாய்க்
காந்தியின் உடல்மறைந் தாலும்
இலங்கிடுங் கருணை வடிவினை என்றும்
இதயமாங் கோவிலில் வைப்போம்!



மாலையில் மறைந்த மாச்சுடர்!

திரு. வி. ஆர். இராமச்சந்திர தீட்சிதர்
[illegible] எம்.ஏ., எல்.டி.

" அகிம்சை அல்லது இன்னா செய்யாமை " என்னும் கொள்கையினை இரவு பகலாக ஆதரித்து அதன் பயன்களை உலகத்திற்குக் கண்கூடாகக் காட்டிவந்த மகாத்மா காந்தியடிகள் அசதியில் தோன்றிய பேரிடியால் மின்னல்போல மாய்ந்தார். இம் மறைவு இந்தியாவை—ஏன் உலகத்தையே—அதிரும்படி செய்துவிட்டது. இன்னும் அவ்வதிர்ச்சி தீரவில்லை. எல்லோருடைய மனத்திலும் அன்பையும் அருளையும் விதைத்த அவ்வுழவன் மாய்ந்துவிட்டான். அதனை யார் அறியார்? நீர் அறியும்; நெருப்பறியும்; உலகினர் அறிவர். உலகில் துன்ப இருள் நிறைந்துவிட்டது! பிறந்தன இறக்கும்; இறந்தன பிறக்கும்; தோன்றின மறையும்; மறைந்தன தோன்றும் என்பது உண்மையாயினன்றி இத்துன்பம் நம்மில் நீங்குவதேது? இவ்வுலகில் இறைவன் கருத்தின்றி எதுவும் நிறைவேறுவதில்லை யென்றாலும் இந்நிகழ்ச்சி—அகால நிகழ்ச்சி—எதிர்பாராத நிகழ்ச்சி—எவரைத்தான் அசைத்தாட்டி விடவில்லை?

மாலையில் மறைந்த மாச்சுடர் காலையில் எழுந்து கனவிருள் போக்கி, மனவிருள் துடைத்து மலர்தலை உலகத்தை மாண்புறச் செய்வதாக!

கருணையந் தருவே !



'இசைக்கவியரசு'
தி. இலக்குமணப் பிள்ளை

உலகினர் போற்றுங் கருணையந் தருவே,
ஒப்பிலா அமைதிக்கோர் அரசே,
இலகிய ஆத்ம வொளிசுடர் விளக்கே,
ஈறிலா உண்மைகொள் உயிரே,
கலகமும், போரும், வறுமையும் அகற்றக்
கங்கணங் கட்டிய மாந்தர்
திலகமே, காந்திப் பெருந்தகைத் தலைவா,
சென்றனையோ செகந் துறந்தே ?

வன்மைசெய் யாமை மனிதருக் குணர்த்த
வந்ததே சிகனை, அவ் வன்மைத்
தன்மையே உருக்கொண் டதுவென, ஒருவன்
தாக்கியே உயிர்கொளல் தகுமோ ?
நன்மையே யுருவாந் தெய்வமும் அந்த
ஞானியைக் காக்கவா ராமல்
கன்மன முடனே கண்டிருந் ததுவோ ?
கருணைக்கி தழகென லாமோ ?



அறத்தின் திருவுரு

வித்துவான்
திரு. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை

அகிம்சையை இம்சை வெல்லாது; மெய்மையைப் பொய்மை வெல்லாது; அருளொளியை இருள் கொல்லாது; அறத்தைப் பாவம் அழிக்க இயலாது என்றெல்லாம் அறவோர் உரைத்தனர்; உரைக்க நாமும் கேட்டோம்; பல நிகழ்ச்சிகளிலும் அவை உண்மையாவதையும் கண்டோம். இன்று அம் மெய்யுரை பொய்யாயிற்றே என எண்ணற்கு இடமுண்டாகிவிட்டது. "அகிம்சையின் மூர்த்தியை", மெய்ம்மையின் உறையுளை, அருளொளி பரப்பும் ஞாயிற்றை, அறத்தின் திருவுருவாகிய காந்தியடிகளை, இம்சையின் தோற்றமும் பொய்ம்மையின் வடிவும், இருள் நிறைந்த உள்ளீடும் உடைய ஒருவன் கொன்றுவிட்டான். இதனை நினைக்குந்தோறும் நெஞ்சு கலங்குகிறது; உடல் நடுங்குகிறது; உளம் துளங்குகிறது; உரை குழறுகிறது; கண்ணீர் பெருகுகிறது. ஊரும் நாடும் தேசமும் உலகமும் எல்லாம் அவலக் கடலுள் ஆழ்கின்றன. "அருணனெடும் ஒளிக் கதிர்கள் சென்றுலவும் அவனியிலும் அதற்கப்பாலும், மருணெறிசேர் சுயநலமாம் மாயவிருள் இரிந்தோட மதிக்கவொண்ணுக், கருணையெனும் அளிக்கதிர்கள் தமைப்பரப்பிப் புகழ்நிறுவும் காந்தியேந்தல்" நம்முடைய மனத்தின்கண் புகழுருவில் தோன்றித் திகழ்வது கண்டு ஆறுதல் பெறுகின்றோம். அவரமைத்த உரிமை தழைத்து அரசியற் பெருவேலி அறப்பயிர் வளர்த்து இன்பக்கனி விளைவிக்குமாக!

ஏழையர் தோழன்



'புலவர்'
திரு. ஞா. தேவநேயப் பாவாணர்

தாவு

ஆயிரநூற் றாண்டுகளுக் கொருமுறையிவ் வகலிடம்
மாயிருநல் லகவொளிசெய் மலர்கதிரோன் எழும்வகை
தாயகமே கரம்சந்த்ர மோகன்தாஸ் காந்தியாய்
ஏயும்வகை கீழ்த்திசையில் எழுந்தருளி நாவலந்
தேயமிதில் அயலாட்சித் திறம்புலர்ந்து விடியவும்
தீயதொரு தீண்டாமை எனுமயக்கம் தீரவும்
நேயமிகும் அருளாழி நீணிலத்தில் உருட்டியும்
நாயமாய்க் கதிரொளியை நடுநிலையிற் பரப்பியும்
மாயமென மேல்வானில் மறைந்தபெரி யான்மமே!

தாழிசை

முந்தியுரை செய்தபடி யுன்வாணாள் முடியுமுனம்
இந்தியாவை மீட்டெமக்கே இணையில்லாத் தந்தையெனத்
தந்தையினி மெய்யுரிமை அமைதியுடன் தருவையெனும்
சிந்தையெரித் தழித்திட்டீ சென்றனையே! என்செய்வேம்!

நூற்றுநாற்ப தாண்டிருப்பேன் என்றேநீ நுவன்றனையாம்
நோற்றபெருந் தவநோக்கி மகிழ்ந்திருந்தேம் எமையேமுன்
னேற்றுவகை இந்துமுசி லீமிவரின் ஒற்றுமையை
ஆற்றுநிலை இடுமென்றே அகன்றனையே! என்செய்வேம்!

டில்லிமுசி லீமர்க்குத் தீங்கிழைப்ப திலையென்று
பல்லவரும் உறுதிமொழி பகர்ந்ததற்பின் உண்ணுநோன்
பில்லையென்று போனதென இன்பமுட னிருந்தேமை
எல்லையறு துன்புறவிட் டேகினையே! என்செய்வேம்!

எனவாங்கு,

குலமும் மதமும் நிலமும் பருவமும்
பாலும் கட்சியும் பற்றா துலகில்
எல்லா மக்களும் எங்கட் சென்றனை!
உன்றன் உடலோ உணரா தெரிந்தது
எந்தம் உளமோ என்றும் எரியும்.
உயிருடல் பொருளை ஒப்புவித் தெமக்கே
இரவு பகலாய் இரத்தங் கொதிக்க
உழைத்து வருந்திய உழுவல் தந்தாய்!
காந்தி வீசுமுன் சாந்த வடிவினை
என்றினிக் காண்பேம்! எங்ஙனம் ஆற்றுவேம்!
என்புந் தருஉம் அன்பின் முதிர்ந்து
மன்றுக் கண்ணே மாசில ஞகித்
தனக்கென வாழாப் பிறர்க்குரி யாள!
ஏழையர் தோழ! இந்நிலத் தேசீ
திருவாய் மலர்ந்த திருமொழி யெல்லாம்
உருவாய் என்றும் உளங்கொண் டதன்வழி
குலமத வெறியைக் குடிபோல் ஒழித்தே
இந்திய ரெல்லாம் இசைந்தோ ரினமாய்
இருந்திட லன்றி யாறுதல்
தருந்தகை யுண்டோ தந்தையா முனக்கே!

தமிழ் அன்பர் காந்தி !



— கா. அப்பாத்துரைப் பிள்ளை —
எம்.ஏ., எல்.டி.

காலம் இடம் கடந்த உலகப் பெரியாருள்ளும் முதல் வரிசையில் வைத்தெண்ணத் தக்கவர் பெரியார் காந்தியடிகள். அவரை ஈன்றளித்த பெரும்புகழ் பெற்ற இந்தியாவுக்கு அவர் பருவுடல் போக்கிய கறையும் மதியிடை மறுப்போல் ஏற்பட்டுவிட்டது.

காந்தியடிகளின் உள்ளார்ந்த பெருமையையும் அவருக்கு அடுத்தபடியாக இந்தியாவின் தன்மதிப்பை நாட்டிய பெரியார் தலைவர் பெருந்தகை சுபாசு போசு அவர்களின் உள்ளார்ந்த பெருமையையும் உலகறியச் செய்த வண்மை தமிழகத்துக் குரியது. பட்டை திட்டப்படாத மணி போன்ற தமிழினத்தின் உளப் பண்புகளைச் செயல் துறைக்குக் கொண்டுவந்த இரு பெரியார்களின் புகழும் காந்தம்போல் தமிழகத்தை ஈர்த்தது வியப்பன்று.

காந்தியடிகள் தமிழராய்ப் பிறக்காவிடினும் தமிழ் கற்கவும் தமிழ்ச் சிறுவர்க்குத் தமிழ் கற்பிக்கவும் தமிழில் கையொப்ப மிடுவதில் பெருமை கொள்ளவும் துணிந்தார். அது மட்டுமோ ? தமிழ்ப் பண்பைப் புறக்கணிக்கும் தற்போதைய இந்தியச் சூழ்நிலையிடையேயும் அவர் தமிழ்

மொழியின் இயற்கைப் பெருமை கண்டு 'தமிழே இந்தியாவின் பொதுமொழியாதற் குரியது' என்று வருங்கால நிலையறிந்து கூறினர்.

"தமிழ் மொழியைப் பயிலப் பயில அதன் அழகை உணரலானேன். அது மனங் கவரும் ஓர் இனிய மொழி. தமிழ் மக்களுள் பண்டை நாளிலும் இந் நாளிலுங்கூட அறிஞர் பலர் இருந்தனர்—இருக்கின்றனர் என்பது அம் மொழியின் அமைப்பாலும் பயிற்சியாலும் அறியக்கிடக்கின்றது. இந்தியாவில் ஓரினம் ஏற்பட வேண்டுமானல் சென்னை மாகாணத்துக்கு அப்புறமுள்ளவரும் தமிழுணரல் வேண்டும்"

என்று அடிகள் தென்னப்பிரிக்காச் சிறையநுபவத்தில் எழுதியுள்ளது குறிப்பிடத்தக்கது.

காந்தியடிகள் எச்சமயத்துக்கும் எக்கட்சிக்கும் எந் நாட்டுக்கும்கூட உரியவரன்று. எல்லாக் கட்சிகளுக்கும் உயர்வுதரும் அடிப்படைக் குறிக்கோள்களாலும், ஆழ்ந்த மனிதப் பண்புகளாலும் பெருமை யுற்றவர். உலக மறை வகுத்த ஒண் தமிழ் வள்ளுவனும் இயேசுவும் புத்தர் பிரானும் நபிநாயகமும் அன்றி அவருடன் எவரையும் ஒப்பிட யாரும் எண்ணுவதில்லை. தமிழகமும் தமிழ்ப் பண்பும் நேரடியாக அவர் பணியி லீடுபட்டிருந்ததுவரை வட இந்திய மாய அரசியல் வலை அவர் பெருமையை மாசுறச் செய்யவில்லை. மறு பிறப்பு ஒன்று உண்டென நம்பலாமானல், காந்தியடிகள் பிறந்து புத்துலகைப் படைக்கத் தக்க திருநாடு தமிழகமே என்னலாம்.

பட்டைபிடாப் பல சிறு காந்திகளை உட்கொண்ட தமிழகம் காந்தியார் புகழில் நின்று நிலைக்குமாக !

வாழ்க தமிழ் ! வாழ்க காந்தி எம்மான் ! !

உலகிற்கு ஒருவர் !



திரு. பேராசிரியர் மு. வரதராசனார்
எம்.ஓ.எல்.

"ஒன்றாக நல்லது கொல்லாமை
மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று"

என்றார் திருவள்ளுவர். இந்த இரண்டனையும் இன்னாசெய்யாமை, உண்மை எனக் கொண்டு அறநெறி தவறாமல் வாழ்ந்து உயர்ந்த பெரியார் காந்தியடிகள். அவருக்கு அன்பு நெறியே சமயம்; உண்மையே கடவுள். அரசியல் மேடையே ஆயினும், சீர்திருத்த மேடையே ஆயினும், கோயிலே ஆயினும், குடும்பமே ஆயினும் இந்த இரண்டனையும் அவர் மறந்த நாழிகை இல்லை; நொடியும் இல்லை.

வாழ்க்கையை எல்லா உயிரும் வாழ்ந்து கழிக்கின்றன. மக்களே வாழ்க்கையை உணர்ந்து வாழ்தற்கு உரிய சிறப்பு உடையவர்கள். அச் சிறப்பை முற்றிலும் பயன்படுத்திக்கொண்டு, ஒழுக்கம் என்னும் வேலி இட்டு, அன்பு என்னும் ஒளி விளக்கு ஏற்றி, உண்மை என்னும் குறிக்கோள் மறவாமல் வாழ்ந்த பெருவாழ்வே காந்தியடிகளின் வாழ்வு. இத்தகைய வரையறையும் விளக்கமும் குறிக்கோளும் இருந்தமையால்தான், அவர் உலகிற்கு ஒருவராக வாழ்ந்தார்; எங்கும் புகழ் பெற்றுத் திகழ்கின்றார்.

அடிகளின் வாழ்க்கையில் மந்திரம், தந்திரம், மருட்டல், அற்புதம் ஒன்றும் இல்லை. எளிமை, இனிமை, நேர்மை, தூய்மை இவைகளே அடிகளின் ஒவ்வொரு சொல்லிலும் செயலிலும் கண்டோம். அதனால்தான் அவர் உலக மக்களின் உள்ளமெல்லாம் கோயிலாக விளங்குகின்றார்.



தனிப்பெருந் தந்தை !

தமிழ்க் கவி
திரு. சி. து. கன்னிசாமி, கண்டறச்சேரி

உலகெனு மகர யாழி னுறுநரம் பறுந்த தென்னக்
கலைகெழு புலவ ரேந்துங் காந்தியெம் அண்ண லெம்மை
அலகிலாத் துயரி னாழ்த்தி யகன்றிடக் கண்ட பின்னும்
நிலையிலா வாழ்க்கை யின்ப நினைப்பரோ அறிஞ ரம்மா!

வாய்மையும் பொறையுந் தேசும் வளர்ந்திட உலக மெல்லாம்
தாய்மையு மன்புங் காத்த தனிப்பெருந் தந்தை நற்சீர்
வாய்மலிந் தமுத மூறும் வாசகப் பொருள்க ளாருந்
தூய்மையு மெண்ணி நெஞ்சந் துளங்குறு கின்ற தையோ!

என்றினி முறுவல் காண்பேம்! என்றருட் காந்தி யெம்மான்
நன்றறி யுரைந யப்பேம்! நாட்டினி லமைதி யென்றும்
நின்றிட உஞற்று மெந்தை நீத்திட வென்கொ லீண்டு
நன்றியு மறந்து வாழ்வில் நனிநயந் திருக்கின் றோமே!

சாதியுஞ் சமயப் பேயுந் தாழ்ந்தொழிந் திடமு ரட்டு
வாதமிங் கொழிக வென்று வகுத்துரை செய்த வெம்மான்
வீதலிவ் வணங்கொ லென்றவ் வெய்யவன் செயலை யுன்னி
ஆ!தகா தென்று மாழாந் தம்மநா மழுங்கு வோமே!

கண்ணினுள் மணியின் மாந்தர் கருத்தமர் காந்தி யண்ணல்
புண்ணிய வகல முற்ற புகையழற் குண்டெ லாமுந்
தண்ணுளப் பெரியர் நெஞ்சந் தாக்கியூ டுருவி நாட்டில்
எண்ணமு மிகுவ தாக்கி எரிபரந் துலவு மன்றே?

தனிப்பெருந் தலைவர் !



திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை
பி.ஏ., எல்.டி.

மகாத்துமா காந்தியின் மரணம் மக்கட் பண்புடையார் அனைவரையுமே திடுக்கிடச்செய்து துன்பத்தில் ஆழ்த்தியுள்ளது. ஒரு பெரியாரின் பிரிவு கருதி, ஐந்து கண்டங்களிலும் பலகோடி மக்கள் வருந்தித் தம் அன்பையும் வணக்கத்தையும் தெரிவித்தது சரிதத்தில் இதுதான் முதல் தடவை என்னலாம். காந்தியடிகள் "உள்ளத்தால் பொய்யாது ஒழுகிய" சீலர். அதனாற்றான் இங்ஙனம் அவர் "உலகத்தார் உள்ளத்துள் எல்லாம்" குடிகொண்டுள்ளார். வாய்மையே இறைவன் வடிவமெனக் கொண்டு அதில் உறைத்து நின்றதோடு அதனுடன் அன்பையும் அஞ்சாமையையும் "தனக்கெனவாழாப் பிறர்க்குரியாள" னும் ஒப்புரவுத் தன்மையையும் இயம நியம ஒழுக்கத்தையும் உடன் சேர்த்துச் சிறந்த கருமயோகியின் வாழ்க்கையை நடத்திவந்தார். ஈசனுக்கு ஆத்தும நிவேதனம் பண்ணி இறைபணி நிற்கும் உண்மையடியவராய்த் திகழ்ந்தார். அரசியற் போரில்தானும் சத்தியத்தைக் கைவிடலாகாதென்றும் வற்புறுத்திவந்தார். இம் முறையில்

போராடி இந்தியாவுக்கு அரசியல் சுதந்திரம் என்னும் அரிய பேறு கிடைக்குமாறு செய்தார்.

காந்தியடிகள் தீண்டாமை விலக்குத் துறையில் செய்து முடித்திருக்கும் செயல் செயற்கரிய தொன்றென்பது வெளிப்படை. இவர்க்கு முன் இத்துறையில் சீர்திருத்தம் பண்ண முயன்ற அவர்கள் காலத்தில் இவ்வளவு விரிந்த அளவு வெற்றி காண இயலாது போயிற்று. மாதர் முன் னேற்றத்திற்கும் கல்விச் சீர்திருத்தத்திற்கும் கிராமச் செழுமைக்கும் சாதி சமயத் தடைகளைக் கடந்து மக்க ளுள் அன்பொற்றுமை வளர்த்தற்குமாகக் காந்தியடிகள் செய்து முடித்துள்ள பணிகள் அளவிடற்பாலன வல்ல. ஒருவர் இவற்றுள் ஒரு துறையில்மட்டும் இவ்வளவு முன் னேற்றம் விளைவித்திருப்பினும், அவரை உலகம் பெரியா ரெனப் போற்றும். காந்தியடிகளோ வாழ்க்கையின் பல துறையினும் பல்கோடி மக்கள் வாழ்விற் புகுந்து நற் புரட்சி செய்துள்ள தனிப்பெருந் தலைவராய் விளங்கி னர். இவர் மரணத்தைத் தம் இல்லத்து நிகழ்ந்ததோர் சாவினும் துயரந்தரத் தக்கதொன்றென்று எண்ணிலா மக்கள் உணர்ந்து துயரடைந்தது கன்னெஞ்சை யுருக்க வல்லதும் காண்டற்கரியது மாகியதோர் தெய்வீகக் காட்சியாம்.

மகாத்துமா காந்தியடிகள் சாக்கிரடீசு, புத்தர், இயேசு, திருவள்ளுவர், மெய்ப்பொருள் நாயனர், அப்பர், இராம கிருஷ்ணர், இராமலிங்கர் முதலிய தலையாய பெருமக்க ளின் பண்புகளிற் பல ஒருங்கு திரண்டன்ன ஒப்பரும் தலைவராய் மக்கள் வானில் நிறைமதி யென விளங்கு கின்றார்.

நந்தா விளக்கு !

"கோவை கிழார்"



அந்தோ, அவலம்! அந்தோ, அவலம்!! எழுபத்தொன்பது ஆண்டுகளாக உலகில் பல இடங்களையும் தூய்மைப் படுத்திச் சேவைசெய்தருளிய திருவடிகளை இழந்தோம்! ஐம்பது ஆண்டுகளாக அருமை பொருந்திய நல்லுரைகள் கேட்டு அமுது என மகிழ்ந்து போற்றிய செவிகள் அச்சொற்களைக் கேட்கும் வாய்ப்பை இழந்தன! இருபது ஆண்டுகளாக எந்தத் தூய நெஞ்சு வகுப்புக் கொடுமையால் வருந்திய ஏழை மக்களுக்குத் தண்ணளி என்ற அமிழ்தை ஊட்டியதோ அந்த நெஞ்சு இனி உலகில் இயங்காது.

வடநாட்டில் தோன்றிய வள்ளலெனினும் எந்நாட்டினரையும் தம் உரிமை மக்களைப்போல் எண்ணி ஒழுகிய பெரியாரை இனி எங்குக் காண்போம்? சென்ற ஏழு நூற்றாண்டுகளாகப் பிற நாட்டாரின் அடிக்கீழ் அலமந்து நொறுக்கப்பட்டு வாழ்ந்த தமிழ் மக்களுக்கும் தமது நெஞ்சில் ஒரு பங்கைக் கொடுத்து அவர்கள் ஈடேறுமாறு தூய தமிழ் எழுத்தைக் கற்றுணர்ந்து தமது பெயரையும் தெள்ளிய தமிழில் பொறித்தருளிய பெரியார் இனி எங்கு உதிக்கவல்லார்?

பண்பு நிறைந்த பெரியார் இனி உலகில் வாழா வண்ணம் ஒரு தீய வெறியன் தொலைத்துவிட்டான்! நந்தா விளக்கு நைந்து போகுமோ? காந்தி உருவான சோதி பருவுடலில் இனிக் காணாவிடினும் நுண் உடலில் நாட்டு மக்களுக்கு ஒளி தந்துகொண்டே இருக்கும்.



காந்தி முனிவர் !

'தணிகைமணி' திரு.
வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம்.ஏ.

ஆறு படை வீடுகளுள் ஒன்றாகிய திருவாவினன்குடியில் முருகவேளைத் தொழப் பலரும் வருகின்றனர். யார் யார் வருகின்றனர் ? என்ன வரிசையில் வருகின்றனர் ? என விளக்குகின்றார் பாவலர் ஏறாகிய நக்கீரர். முதலணியில் முனிவர்கள் ; அவர்கள் பின் யாழ் நன்றாக வாசிக்கும் மகளிர் ; அவர்கள் பின்னரே திருமாலாதிய தேவர்கள் என அடுக்கிச் சொல்கின்றார். இறைவனை முன் அணியில் வந்து வணங்குதற்குரிய பெருமை வாய்ந்த முனிவர்களின் இலக்கணத்தை நக்கீரர் பின்வருமாறு கூறுகின்றார் :

"சீரை தைஇய உடுக்கையர், சீரொடு
வலம்புரி புரையும் வானரை முடியினர்,
மாசற இமைக்கும் உருவினர், * * மார்பின்
என்பெழுந் தியங்கும் யாக்கையர், நன்பகற்
பலவுடன் கழிந்த உண்டியர், இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தினர், யாவதுங்
கற்றோ ரறியா அறிவினர், கற்றோர்க்குத்
தாம்வரம் பாகிய தலைமையர், காமமொடு
கடுஞ்சினங் கடிந்த காட்சியர், இடும்பை
யாவதும் அறியா இயல்பினர், மேவரத்
துனியில் காட்சி முனிவர் முற்புக"

என்றார்.

மரவுரி உடை, நரை முடி, அழுக்கற விளங்கும் வடிவு, மார்பெலும்பு தோன்றும் உடம்பு, எளிய உணவு, பகைமை இடம் பெருத நெஞ்சம், கற்ருேர் அறியாத அறிவு, கற்ருேர்க்குத் தாம் எல்லையாகிய தலைமை, ஆசையையும் சினத்தையும் ஒழித்த தோற்றப் பொலிவு, துன்பங்களுக்குச் சலியாத மன இயல்பு, யாரையும் வெறுக்காத பெருந்தன்மை இவை விளங்கும் முனிவர் என்கின்ருர். இத்தகைய நல்லிலக்கணங்கள் யாவும் சிறந்து விளங்கும் ஒரு ஆண்டகையை இக்காலத்தில் நாம் காணுதற்கியலுமோ எனின் இயலாது, இயலாது எனத் தானே கூறுவோம்! 'அஞ்சற்க! இதோ அத்தகைய நம்பி ஒருவரை யான் அனுப்புகின்றேன். அவர் காட்டும் நல்வழியை நீங்கள் பற்றி உய்யுங்கள்!' என இறைவனுல் அனுப்பப்பட்ட முனிவர் காந்தியடிகள் என்பதை நாம் நன்கு உணர்ந்து இந்நாள் வரையும் உளங் களித்திருந்தோம். "புவிதனில் எனக்குண்டாகு பணிவிடை கணக்குண்டாதல் திருவுளம் அறியாதோ?" என அருணகிரியார் கூறியபடி அடிகள் இவ்வுலகிற் செய்யவேண்டிய பணிவிடைக் கணக்கு முடிந்தது. இறைவன் அவரை அழைத்துக்கொண்டான். நாம் அவர்தம் பிரிவாற்ருது துயர் உறுகின்ருேம். அவர் தம் பணிவிடை முடிந்து தனக்குவமை யில்லா தான் தாள் சேர்ந்து களிப்புறுகின்ருர். "தோன்றிற் புகழொடு தோன்றுக" எனத் திருவள்ளுவர் கூறியபடித் தோன்றி, "மலரவன்செய் வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா மற்றிவர் புகழ்கொண்டு செய்யும் உடம்பு" எனக் குமரகுருபர முனிவர் கூறியவண்ணந் திகழ்கின்ருர் "காந்தி முனிவர்."



சாந்த குணக் குன்று !

வித்துவான்
திரு. பு. சி. புன்னைவனநாதன்

உலகமெலாம் போற்றும் உயர்தேவ அம்சம்
நிலவுயிர்கட் கின்பம் நிகழ்த்தும்—புலவனெனும்
காந்திமகாத் மாவெள்ளி காணமார் பிற்குண்டு
போந்திறந் தானப் பொழுது.

மன்னன் உயிர்கவர மாவேடந் தாங்கியறை
துன்னுமுத்தி நாதன் சுழல்வாளால்—முன்னவனை
மாய்த்தான் அவன்மான நாதுராம் மாபாவி
சாய்த்தொழித் தான்குண்டால் சார்ந்து.

வாழ்வாரும் இந்தியர்கள் வையகமெங் கும்மதிக்கும்
வாழ்வார்ந் தின்பமுறும் வண்ணஞ்செய்—ஆழ்வாராம்
காந்தி அரிசனத்தைக் காசினியில் போற்றிநின்ஞர்
காந்திமதங் கொள்வீர் கனிந்து.

மதங்களின் உண்மை மகிதலத்தோர் காணும்
விதமன்பு மெய்ம்மை விளக்கிப்—பதவியடை
வேந்தற்கு மக்கள் விரும்பியமை நற்சின்னம்
சாந்தமெய் அன்புநெறிச் சார்பு.

காந்தியே காசினியிற் காசறுசீர் மன்னென்றும்
சாந்தகுணக் குன்றென்றும் சாற்றுதிறல்—வேந்தருரை
பொய்யா தொளிரப் புகழ்க்காந்தி பொன்மொழியை
மெய்யாகக் கொண்டொழுகு வேம்.

தமிழறம் பேணிய தகைமையாளர்!



டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார்,
எம்.ஏ., பி.எச்.டி.

உண்மை, பிறர்க்கின்னா செய்யாமை ஆகிய பேரறங்களைக் கடைப்பிடித்து உலகிற்கு வழிகாட்டிய காந்தியடிகள் மறைந்தமை கேட்டுத் திடுக்கிட்டேன். எவ்வுயிருந் தம்முயிர்போல் எண்ணி இரங்கும் அருளறம் பூண்ட உரவோருடைய உயிரைத் தொழுத கையினுள் ஒடுங்கிய படையினால் ஒருவன் போக்கினான் என்பது இந்தியர் அனைவரும் நாணத்தக்க செய்தி.

"பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று"

என்றும், "அறவினை யாதெனிற் கொல்லாமை" என்றும் திருவள்ளுவர் மொழிந்தார். பொய்யாமை, கொல்லாமை ஆகிய இருபேரறங்களைக் குறிக்கோளாகக் கொண்டு, தமக்கென வாழாது பிறர்க்கெனவே முயன்று உழைத்து வாழ்ந்த உத்தமர் காந்தியடிகள் தமிழறம் பேணிய தகைமையர் ஆவர். ஒவ்வொருவரும் அவரவர் உழைப்பினால் வந்த கஞ்சியைக் குடிப்பது அமிழ்தத்தினும் இனியது என்ற தமிழ்ப் பண்பிற்கேற்ப, காந்தியடிகள் வாழ்க்கையை நடத்தி வழிகாட்டியவர். "பிறப்பினால் உயர்வு தாழ்வில்லை" என்பதைத் திசையெல்லாம் முழங்கினவர். நடமாடுங் கோயில் நம்பர்க்கு வழங்காது படமாடுங் கோயிற்

பரமர்க்குக் கொடுப்பது ஒவ்வாது என்பதை வற்புறுத்தி வந்தவர். அற்ருர் அழிபசியைத் தீர்க்கவேண்டும், அதுவே பொருளேச் சேமித்து வைக்கும் நெறியாகும் என்று இயம்பியவர். மனத்துக்கண் மாசு அற்றவராய், இன்ன செய்தார்க்கும் இனியவே செய்யும் இயல்பு உடையவராய், இடர் உற்றவழி உண்ணு நோன்பொடு உயிர் பதிப் பெயர்க்குந் துணிபுடையவராய் வாழ்ந்த காந்தியடிகளின் உள்ளத்தே தமிழ் மணம் வீசக் கண்டிருக்கிறேன். தமிழை நன்ருக அறியவேண்டும் என்ற பேரவா அவருக்கு உண்டு.

இல்லறத்திலிருந்தே உள்ளத் துறவினே மேற்கொண்டு வாழ்ந்த இப்பெரியார் வாழ்க்கை,

"காமஞ் சான்ற கடைக்கோட் காலே
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

என்ற தொல்காப்பியப் பகுதியை நினைவூட்டுகிறது. காந்தியடிகள் பெயர் என்றும் நிலைத்திருக்கும் என்பதில் ஐயம் இல்லை.

"தமிழ் மக்களேப்பற்றி அவர் (காந்தியடிகள்) சொல்லும்போது 'தமிழ் மக்கள் எனது இரத்தக் கலப்புற்ற உடன்பிறந்தவர் போலத் தோன்றுகிருர்கள்' என்று சொல்லியிருக்கிருர். அவர் கூர்ஜரத்தில் பிறந்த ஒருவராயினும், அவரது வடிவ அமைப்புத் தமிழ் மகன் வடிவம் போல் தோன்றியதும் உன்னத்தக்கது."

—திரு. வி. க.

பதைக்குதே நெஞ்சு !



சென்னை லயோலாக் கல்லூரிக்
கணக்காயனார்
திரு. இ. கே. நடேச சர்மா

மோகன தாச கரம சந்திர
காந்தி யென்னும் கலியுக முனியே,
உடலால் உளத்தால் உரையால் வலியை
பகல்தான் இருளினும், பரவைமீ தெழினும்,
கலங்கா வுளத்தினை ; இலகுறு ஒளியினை.
“ நீயே ஆத்துமா ; நின்னின் வேறலை,
மறந்தனை மாய்ந்தனை, ஆதலின் மறவேல் ”
எனவே காட்டிய எருளம் உடையாய்,
இழிந்தோ னில்லை யிந்நில வரைப்பில்
தட்டில் லாமல் முட்டினை யொழிக்க,
தீய கருத்தினைத் தீயிற் படுக்க,
சிங்கம் போலச் சிறந்திரு துணிவால்,
உன்னுடல் ஒள்ளிய உயிருக் குறையுள்,
அழியும், கிழியும். அப்பொருள் நிலையிலை,
உயிருக் கிடர்தான் ஒருவர் செய்வரோ ?
வளரொளி வாய்மையில் வாழ்க, வருந்தலை,
உடலின் பற்றினை ஓம்பலை விடுக,
விட்டனை யாயின் விளங்கும் நின்னுயிர்,
தனித்திரு, தணவேல் மலர்தலை உலகினை,
நமர்தாம் நம்மை நனியும் ஏசிய
போதும் பகைத்த போதும் பேசலை,
கூம்பி யிருந்தே ஒத்துக போழ்தினில்,—
நாட்டினர்க் குற்ற நன்மைக் காயின் !”
என்றெலாங் கூறி யெம்மைத் தணந்தனை,

இனியை, அன்பினை, அருளினை, இல்லாச்
சினத்தை, சேர்வை, பிரிவை செகத்தை,
திங்களில் மோனம் தீயவை தீய,
உண்ணு நோன்பினை உவந்தனை பலகால்,
எந்த ஞான்றினும் எவர்தம் உளத்தும்
அகலா திருந்தே அன்பினை ஆக்கினை,
தொண்டு கிழவனுய்த் தொண்டே செய்தனை,
அமைதியின் உருவும், அளப்பில் மகிழ்ச்சியின்
உருவும் ஆயினை, உரையி றந்தனை.
புலவரை இறந்தோய், புகலுவன் இன்னும்
கன்னித் தமிழில் கைந்நாட் டிடுவை,
ஒருமையே நினைக்கும் ஒள்ளிய உளத்தோய்,
ஒத்தா ரிடையே ஒன்றிய நட்பும்,
மிக்கா ரிடையே மிகைபடு நட்பும்,
இழிந்தா ரிடையே 'இவர் நமர்
உயர்தற் குரியர் உரையால் அன்பால்
என்னும் பூட்கையும் என்றும் கொண்டனை.
'அறத்தினுட் பெரிதே அகிம்சைக் கொள்கை
மறந்தும் விடலிர் மாநில மக்காள் !'
என்றனிர் ; என்றும் ஆற்றியும் வந்தீர்.
ஒவ்வா யாவுள உம்முடைச் செயலுள் ?
கண்ணீர் வடித்தும், கரைந்தும், நெகிழ்ந்தும்
வாடியும் வற்றியும் வதங்கியும் வருந்தியும்
அச்சோ, அந்தோ, ஆவா, தெய்வமே !
எனவருஞ் சொற்களை என்றும் உரைத்தும்
பயனிலை யெனினும் பதைக்குதே நெஞ்சு !
பொறுக்கு திலையே பொல்லாக் கொலைதான் !
வகுத்தான் வகுத்த வகைப்பா ! வாழ்ந்தது !
மாய்ந்தன ரல்லீர், மாயா திருந்தனிர்.
மாய்க்கவும் வலரோ மாப்புக ழுடலை ?
மாய்நீர்த் துருத்தியே மாய்ந்தது தழலில்.
இனிநமக் குளது இவன்வழி நிற்றல்
நின்றால் சிறப்பம் ; இன்றெனின் வீழ்குவம் !
அன்றெனச் சொல்ல ஆருளர் ஐயா !
கங்கை எமுனை காவிரி கிருட்டினை
எக்கர் எண்ணில் மணலினும்
மோகன தாசன் மொய்புகழ் வாழியே !



அருள் மாண்டது!

'பெருஞ்சொல் விளக்கனர்'
திரு. அ. மு. சரவண முதலியார்

"உள்ளத்தாற் பொய்யா தொழுகின்
உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்"

என 2000 ஆண்டுகட்கு முன் திருவள்ளுவர் தெளியக் கூறிய பொய்யாமொழியை நூற்றுக்கு நூறு பொய்யாத மொழியாகச் செய்த புனிதர்; அற வடிவினர்; பொறை யுருவினர்; அடக்கத்தை அணிகலமாகக் கொண்டவர்; தமக்கென வாழாத் தகைமையர்; பிறர்க்கெனவே வாழ்ந்த பெற்றியர்; சலியாத உழைப்பினர்; அலையாத உள்ளத்தர்; விருப்பத்தை ஒறுப்பவர்; சினத்தைச் சினந்தவர்; கலங்காத கடவுட் பற்றுடையவர் ஆகிய காந்தியடிகளை இழந்தோம். நடுக்கடலுள் நள்ளிரவில் மரக்கலங் கவிழப் பெற்ற மக்களைப்போல அவலக் கடலுள் அழுந்திக் கரை காணாது கலங்குகின்றோம். பல ஆண்டுகளாகத் தனி வாழ்விலும், அரசியல் வாழ்விலும் ஒளி காணாது இருள் சூழ்ந்து கிடந்த இந்தியாவுக்கு அவ்விரு துறைகளிலும் நல்லொளி காட்டி, அல்லல் ஓட்டி, வாய்மையும் அஞ்சாமையும் ஊட்டிய மாணிக்கத்தை இழந்தோம். தீவினையாளர் சிலருக்கு "வறியனொரு பிறவிக்குருடன் கையில் வந்த பெருவிலை மணிபோல், மழலை தேருச் சிறியனொரு மதலை கையிற்கொண்ட செம்பொன்மணி வள்ளம்போல்"

அடிகள் ஆனார். அவருள் ஒருவன், ஐயகோ! நினைக்கவுந் தகாத செயலைச் செய்தான்!

அடிகளையோ சுட்டான்? அந்தமா பாவி
படியும் அருள்சுட்டான் பாரில்—விடிகின்ற
காலத்தைச் சுட்டான்! கண்ணனைய இந்தியத்தாய்
சீலத்தைச் சுட்டான் சினந்து!

காந்தியோ மாண்டார்? கரையில் பொறைமாண்ட(து)
ஆண்ட அருள்மாண்டதையகோ!—பூண்டுநின்ற
பண்பனைத்தும் மாண்டதினிப் பாருலகம் நில்லாது
மண்புக்கு மாய்வது மன்!

அத் தீயோன் மேற்காட்டிய பல நற்பொருள்களைச் சுட்டானாயினும், மக்கள் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் நண்ணுடலாக வீற்றிருந்து காட்சி யளிக்கும் அடிகளைச் சுட முடியாததுமட்டுமல்ல, பின்னும் உரம் பெறுமாறும் செய்துவிட்டானாதலால், அப்பெருமான் காட்டும் வழியில் நாட்டை நடத்தி உய்வோமாக!

"மனித அறிவுக்கு எட்டாத ஒரு சக்தி இருக்கிறது. அஃது எங்கும் நிறைந்து நிற்கிறது. அதைக் காண்டல் இயலவில்லை. ஆனால், அதன் இருப்பை உணர்கிறேன். நீங்களும் நானும் இவ்வறையில் அமர்ந்திருத்தல் உண்மை. இதுபோன்றது கடவுள் இருப்பு. காற்றும் நீரும் இன்றி யான் வாழினும் வாழ்வேன். ஆனால் கடவுளின்றி என்னால் வாழ்தல் இயலவே இயலாது. என் கண்களை நீங்கள் பறியுங்கள்; என் மூக்கை உடையுங்கள். இச் செயல்கள் என்னைக் கொல்லமாட்டா. என்மாட்டுள்ள கடவுள் நம்பிக்கையை நீங்கள் பறித்தால், அஃது உடனே என்னைக் கொன்றுவிடும்!"

—காந்தியடிகள்.



மணிவிளக்கு மறைந்ததே!

வித்துவான், திரு.
பாரிப்பாக்கம் - கண்ணப்ப முதலியார்.

எல்லா மக்களும், எவ்வகை வேறுபாடுமின்றி, அறிவும் அன்பும் உடையராய், சுதந்திர உணர்ச்சியுடன் இன்புற்று வாழ்தற்கு வேண்டும் தொண்டாற்றுதலே தம் வாழ்க்கைக் குறிக்கோள் எனக்கொண்டு திகழ்ந்தவர் மகாத்மா காந்தி அடிகளாவார். 'எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன் றறியேன்' என்ற தாயுமானார் திருவுள்ளம் நம் காந்தியடிகளிடத்தில் ஒளிவிட்டு இலங்கியது.

"வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம்
ஈண்டு முயலப் படும்"

என்ற தெய்வப் பாவலர் திருவாக்கின் வண்ணம் 'உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை' ஆகிய தவவொழுக்கத்தை அவர்கள் மேற்கொண்டிருந்தார்கள். 'தூய்மை யென்ப தவாவின்மை' யாதலின் அவர்கள், ஆரா வியற்கையதாம் அவாவின் நீங்கிப் பேரா வியற்கைப் பேரொளியிலே திகழ்ந்திருந்தார்கள். அடிகளது வாழ்க்கை வரலாறனைத்தும் நம் தெய்வத் திருக்குறளோடு ஒத்துத் திகழ்தலைக் காணலாம்.

தம்மீது வெடிகுண்டு வீசிய ஒருவனை யாதும் ஏதும் செய்யாது விட்டிடச்செய்த இவர் செயல், மெய்ப்பொருள் நாயனார் திருவருட் செயலை நமக்கு நினைப்பூட்டுகின்றது.

உலகின்கண் நம் நாட்டின் புகழ்பரப்பும் மணிவிளக்காக விளங்கிய காந்தியடிகள் உருக்கரந்த செய்தி அனைவர் உள்ளங்களையும் என்றும் உருக்குவதாக உள்ளது.



ஒப்பற்ற துயரம்!

வித்துவான்
திரு. எஸ். மன்னமுத்துக் கவுண்டர்

தீண்டாமை யெனும்பேயைத் துரத்திமது
வரக்கனெனும் தீயோன் மாளக்
கூண்டோடு தொலைத்தருளிக் குவலயத்தை
வளர்க்குமருங் கொள்கை பூண்டோய்!
தீண்டாத மணிவிளக்கே! செகமெலா
முய்யவந்த திவ்ய மூர்த்தி!
மாண்டாய்நீ எனக்கேட்டு மாநிலத்தில்
மறுகாத மாந்தர் உண்டோ?

பொன்னையிழந் திட்டாலும் புவியையிழந்
திட்டாலும் போற்றிக் காத்த
அன்னையிழந் திட்டாலும் அப்பனிழந்
திட்டாலும் அகிலம் காக்கும்
மன்னையிழந் திட்டாலும் வருதுயர
மத்தனையும் ஒருங்கு கூடி
உன்னையிழந் திடுதுயருக் கொப்பாமோ?
உரைத்திடுவாய் ஒப்பிலா தோய்!

சருவசித்துத் தைத்திங்கள் சார்ந்தபதி னேழில்
பெருமைசேர் வெள்ளி பிறங்குநாள்—அருமைமிகு
காந்தி மகானுயிரும் கர்த்தன் திருவடியிற்
சாந்தி யடைந்ததுவே தான்.

கருணைக் காவலன்!



வித்துவான்
திரு. ஜி. சுப்பிரமணிய பிள்ளை
எம்.ஏ., பி.எல்.

ஓர் அரைத்துண்டுப் பக்கிரி அரண் மனையுட் புகுவதா? என்று ஒரு காலம் சர்ச்சில் ஆர்ப்பரித்தார். சிற்றறிவுடை மனிதர்களால் அரசனையும் ஆண்டியையும் எவ்வாறு அளவிட்டறிய முடியும்? ஆண்டி இறக்கும்பொழுது வால் உடுக்கள் முளைப்பதில்லை. உண்மை அரசன் ஒருவன் மடிந்திடின் திசை யிரு நான்கும் அதிர்ந்திடும்; கதிரை யிருள் விழுங்கும்; கொடி வில்விடும்; கடுங்கதிர் மீன் வீழும்; வாலுலகமே எரிந்து கொதித்திடும்; சர்ச்சிலின் கூற்றை வறிதாக்கவே வால் நட்சத்திரம் ஒன்று சென்ற திங்களில் தோன்றி யெழுந்தது போலும்! அத் தீக்கோள் மகாத்மா காந்தி யடிகளை மறைக்க எழுந்தது என்பதை யார்தான் நினைத்தார்கள்? அந்தோ! உண்மையை உணராது நாம் கண்மூடித்தனமாய் இருந்துவிட்டோம்! நம் அருந்தனப் பொருளை இழந்துவிட்டோம். ஐயோ! மாரி பொய்த்தது! வாரி குன்றியது! இயற்கை யல்லன செயற்கையில் தோன்றின. வாக்கின் வேந்தன், வாய்மை மன்னன், செயலிற் சேரன், பண்பிற் பாண்டியன், சோர்விலாச் சோழன், ஆண்மைக் கரசன், கருணைக் காவலன், தனக்கென வாழாப் பிறர்க் குரியாளப் பெருந்தகைத் தோன்றல், புவி யுயிர்ப் புரந்த புன்னகைப் புரவலன், செம்மையேயாய செல்வக் கோமகன் காந்தியடிகள் என்பதைப் பூதங்கள் ஐந்தும் உலகிற்கு உரைப்பதுபோல் வால் வெள்ளி வந்தது. ஆண்டி யிறக்க வால் வெள்ளி பிறக்குமா?

"When beggars die, there are no comets seen;
The heavens themselves blaze forth the death of princes!"—ஷேக்.

கண்டார் உளங்கவரும் அவருடைக் கருணைத் திருவுருவும், மோகனப் புன்னகையும், முகிழ்த்தெழுந்த குமிழ் நாசியும், ஒளிவீசு கண்களும், ஏறின நெற்றியும், விரித்த செவிகளும், சிரித்த முகமும், பரந்தெடுத்த பகட்டெழில் மார்பும், நீண்ட கரங்களும் கண்கொள்ளாக் காட்சியாகி நம் மனத்தைவிட்டு என்றும் அகலாதாகும். களங்கமற்ற அவர் பார்வையின் முன்னர், கண்டார் கை தலைமேற் குவிப்பதன்றிக் கறுத்துவரும் கயவர்களும் வெறுப்பொழிந்து விழைந்து நிற்பர். தொண்டாண்டு கொண்ட காந்திப்பிரானைத் தொழுதுகொண்டே மீண்டாய செய்கைச் சிறுமதி யுடையோன் ஒருவன் தீங்கு விளைக்கச் செற்றம் உண்டாயின வன்னம் எவ்வண்ணமோ ?

காந்தியடிகள் இவ்வையத்து வாழ்வாங்கு வாழ்ந்த ஓர் இலக்கிய மனிதர். மனிதன் அமரனாய் இவ்வுலகில் எவ்விதம் வாழலாம் என்பதை எடுத்துக்காட்டப் பிறந்தவர். அவருடைய மனம் சொல் செயல்கள் ஒன்றுபட்ட பண்பும், ஒழுக்கமும் அன்புமே அவரை மனிதர்களுள்ளே தலையான மனிதராய் விளங்கச் செய்தன. நிரந்தினிது சொல்லும் நேர்மையைப் பெற்றார். ஞாலமும் விரைந்து அவர் உரைக்குச் செவி சாய்த்தது. பல்வகை நற்குணங்களும் பரந்து வந்து அவரைச் சார்ந்தன. குணமென்னுங் குன்றேறி நின்றார். அவர் நின்ற எல்லையை மக்கட்பண்பாகிய மலையின் கொடுமுடி என்னலாம். மேலே எஞ்சிய இடமெல்லாம் இறைவனின் அருள் ஒளியே சூழ்ந்திருந்தது. கீழே உலகின் சிறுமை இருள் பின்னிச் சீறியது. வா என்று அழைத்தது வானுலகம். வானிற்கலந்து வண்புகழ் வாரிக்கொண்டார் உலகின் முடிசூடா மன்னர். அவர் பிரிவுக்குத் துயருறாதோர் மாநிலத்தில் இல்லை.

பொய்யில் புலவன்—தமிழ்முனி—வள்ளுவனார் வகுத்த பொய்தீர் ஒழுக்க நெறியே காந்தியடிகள் கடைப்பிடித்த நெறி. திருக்குறளுக்கு இலக்கியமாக விளங்கிய அடிகளின் புகழ் வாழி!

காந்தியடிகளார் நிறைவு !



'கரந்தைக் கவியரசு'
திரு. அரங்க வேங்கடாசலம் பிள்ளை

குளிர்மருவி நின்றுலகோர் குவியுமுளத் திருளோட்டி
அளிமருவச் செய்வாரே அடிகள்எம் காந்தியரே!
அளிமருவச் செய்வாராம் அடிகள்எம் காந்தியரை
வெளியிருளே ஓட்டுகின்ற வெஞ்சுடரே! ஒப்பாயே!

தோய்ந்த உலகினர்தம் தொண்டேதம் வாழ்வாமென்(று)
ஆய்ந்த நிலைஅகலார் அடிகள்எம் காந்தியரே!
ஆய்ந்த நிலைஅகலா அடிகள்எம் காந்தியரை
தேய்ந்து வளர்ந்துமறை திங்களே! நீ ஒப்பாயே!

தெருளாம் கடல் நீரைச் சேர்ந்துலகோர் வெப்பொழிய
அருளாம் மழைபொழிவார் அடிகள்எம் காந்தியரே!
அருளாம் மழைபொழியும் அடிகள்எம் காந்தியரை
இருளோ டிடிகொள்ளும் எழிலீ! நீ ஒப்பாயே!

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குருவென் றறைஅடிகள்
கற்றோர்கள் கண்டுமகிழ் கவிஞர் உரைகாட்டி
மற்றோர் உருவாகி வந்ததுவே நம்அடிகள்!

உண்மைநிலை காண்மொழிசேர் உள்வாய்மெய் இம்மூன்றும்
திண்மைநிலை வாய்ந்தமையால், தெய்வத்தாய் ஆமூவர்
வண்மை யுடனங்கு வாழ்ந்திடலால், தம்தொண்டை
எண்மை யுறப்புரிந்தார் எம்அடிகள் காந்தியரே!



காந்தியடிகள் மறைவும் விழிப்பும் !

திரு. இளவழகனர்

1

தூயவர், இனியவர், தொண்டர், வீரர், எளியவர், அரியவர், தலைவர் என்று உலகமுழுதும் பெயரெடுத்து விளங்கியவர் காந்தியடிகள்.

குணநலத்தால் ஒருவர் உலக மக்களின் உள்ளத்தைக் கவரலாம், ஓங்கி விளங்கலாம், செல்வாக்காக இருக்கலாம், அரசறிய அது பணிய வாழலாம் என்பதற்கு எடுத்துக் காட்டு, காந்தியடிகள். எனவே, அவர் அறம் வளர்த்த பெரியார். உலகியல் (சமூகவியல்), தொழிலியல், அரசியல் முதலிய எல்லாத் துறைகளிலும் 'தொண்டு' என்பது அறம் வளர்த்தலே. திருவள்ளுவர் கருத்தும் இது. பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாகவும் தலைமுறை தலைமுறைகளாகவும் இந்திய நிலத்தில் ஓங்கி வந்த 'தமிழ்ப் பண்பு' என்பதும் இதுதான்.

குணநலம் சொந்த நலம்; உயிர் நலம். ஒருவர் தருவதோ அல்லது பறிப்பதோ இயலாதது. பிற வல்லமைகள் எவற்றாலும் எந்நிலையிலும் வெல்லப்படாதது; எதிர்ப்பே இல்லாதது; சூழ்ச்சிகள் திறமைகள் முதலிய உலக வல்லமைகள் முழுதும் தன்வழி இயங்க, தான் அவையனைத்திற்கும் மேலாய் உயர்ந்து உரிமையோடு நிகழ்வது. காந்தியடிகள் இக் குணமென்னுங் குன்றேறி நின்ற பெரியார்.

2

'குணம்' என்பதை ஒரே கருத்தாகக் கூறினல், 'உண்மை கடைப்பிடித்தல்' என்று சொல்லிவிடலாம்.

சிறிது விளக்கிச் சொன்னால், 'நன்மை கடைப்பிடித்தல்' என்று வேறொரு வகையாகவுங் கூறலாம். ஆகவே, எண்ணங்கள் இயற்கை யுண்மையோடு பொருந்தி, செயலினும் வாழ்க்கை நெடுகக் கடைப்பிடிக்கப்படுதல் 'குணம்' எனப்படும். வாழ்க்கையிற் கடைப்பிடிப்பதாயின், அது, உலகியல் அரசியல் முதலிய பல துறைகளிலும் ஈடுபட்டு நிகழ்தல் இயல்பு. வாழ்க்கை விளக்கமாக எழுந்த திருக்குறள், இத்துறைகள் பலவும் விளக்கிச் செல்லுதல் கொண்டு இதனைத் துணியலாம்.

இனி, உண்மை கடைப்பிடித்தல் (சத்யாக்கிரகம்) என்னுங் குணம் (அறம்), அகத்தில் மறைவில் நிகழ்கின்ற எதிரற்றதொரு பெரும் புரட்சி இயக்கம். புறத்தில் அதன் அடையாளமாக இருவகை அலைகள் தோன்றும்; ஒன்று, அனைவர்க்கும் அன்பு செய்தலாகிய இனிமை அலை (அகிம்சை); மற்றொன்று, அனைவர்க்கும் அருள் செய்தலாகிய, தனக்கென வாழாது பிறர்க்குரிமையாய் ஒழுகுந் துறவு அலை (தியாகம்).

உண்மை கடைப்பிடித்து ஒழுகுவோர்க்கு இவையிரண்டுந் தாமாகவே நேர்ந்துவிடும். இந்த இருவகை அலைகளும் உலகத்தில் ஆற்றலாக இயங்குங்கால், உலகமும் அதனோடு இயங்குதல் இயல்பு. வாழ்வாங்கு வாழ்தலாகிய இப் பெருவாழ்க்கை நிலையில், தலைமையிடமாகிய இவ் விடுதலை உரிமை நிலையில், காந்தியடிகள் நம் காலத்தில் வாழ்ந்து விளங்கினர். அதனால், நம் நாடும் விடுதலையாயிற்று, வேறு நாடுகளும் விடுதலை யடைந்தன, அனைத்துலகமும் விடுதலை வீறு பெற்றது!

அறவாழ்க்கையில் (உண்மையில்), அன்பும் (அகிம்சை) அருளும் (தியாகம்) உற்று, ஒருவர் வாழ்ந்ததற்கே இவ்வளவு பயனுள்ள வகையில் உலகம் இயங்கிற்றென்றால், அவர் பலராயின், எவ்வளவு பெரும்பயன் இருக்கும்! எவ்வளவு பேரியக்கங்களைக் காணலாம்! இத்தகைய வளர்ச்சிக்கே காந்தியடிகள் தம் வாழ்நாள்

முழுதும் உழைத்தார். பலரை அறவோராக்க முயன்ருர். முன்னோர்களும் இத்தகைய அறவளர்ச்சிக்கே உழைத்தனர். திருவள்ளுவர் அறத்துப்பாலும், அன்பு அருள் என்னும் தன் இருவகை நோக்குகளால், நாளும் உழைத்து வருகின்றது. திருக்குறள் ஒரு நூல்; அதற்கு எடுத்துக் காட்டு, ஏனைச் சங்கச் சான்ருேர்களின் வாழ்க்கையை ஒத்த காந்தியடிகளின் நாகரிக வாழ்க்கை!

3

அடிகள் வாழ்க்கை இவ்வாறு உலகத்தோடும் அதன் அடிப்படை உண்மைகளோடும் பொருந்திப் பயன் விளைப்பதொரு பெருவெள்ளமாய் நிகழ்ந்ததனுலேதான், அவர் மறைவினுல் உலக முழுதும் மண்ணும் உருகிற்று, மரமும் உருகிற்று! எப்படி பிறந்தார், எப்படி இருந்தார், எப்படி மறைந்தார் என்பது பொருளன்று; எப்படி வாழ்ந்தார், எப்படி விளங்கினுர், எப்படி பயன்பட்டார் என்பதே எப்போதும் அறிஞர்க்குப் பொருள்.

பிறத்தலும் இருத்தலும் மறைதலும் முன் வினைவழி நிகழும்; அதில் மகிழ்வதற்கோ மயங்குவதற்கோ வருந்துவதற்கோ இடமில்லை. வாழ்தலும் விளங்குதலும் பயன் படுதலுமே இப் பிறவியில் நிகழும் வாழ்க்கைப் புது முயற்சிகள். இவற்றிலேதான் மதிப்பதற்கும் இணங்குதற்கும் பின்பற்றுதற்கும் இடமுண்டு.

பெரியோர் வரிசையிற் சேர்ந்த நன்மக்கள், ஏனையோரைப்போல் நோயுற்றுக் கிடந்து இறப்பவரல்லர்; குற்றங்கள் புரிந்து சட்டப்படி தண்டிக்கப்பட்டு மாய்வாருமல்லர்; பிறரோடு பகையுங் கலாமும் விளைத்து அதனுல் நேருந் தாக்குதலிற் சிக்கி அழிந்தொழிவாருமல்லர்; புல்லறிவாண்மையாய்ப் பொருந்தாச் செயல் பல புரிந்து அச் செருக்கினுல் உயிர் நீப்பவருமல்லர்; இடி வீழ்தல், கலங் கவிழ்தல், புலி பாய்தல் முதலிய தற்செயல் நேர்வுகட்கு இரையாவாருமல்லர்; இடுக்கண்கள் எதிருங்கால், அவற்றைக் கடந்து வீறுங் கடமையிற் கருத்தின்றி, உள்ள

முடைந்து தற்கொலை புரிந்துகொள்வாரும் அல்லர்; மற்று இரண்டே வழிகள் சான்றோர் பிரிவுக்குரியன.

ஒன்று, தமக்கு வினையொழிவு நேர்ந்தமை அறிந்து, நல்லோர், பாம்பு தோலுரிப்பதுபோல் தமதுடம்பை இடரின்றி விடுத்தோ அல்லது அதனை நுண்பொருள்களாக மாற்றி மறைத்தோ தாமே நீங்குவது. இவர்கள், பிறர் கைகளுக்கோ கருவிகளுக்கோ அகப்படாதவர்கள்: மீண்டும் பிறவியில்லாதவர்கள்; மேலான அருட் சான்றோர்கள்; அப்பர், சம்பந்தர் முதலான அடியார்கள் இவ் வகையிற் சேர்ந்தவர்கள்.

மற்றொன்று, உலகத்திற் செயற்கரிய செயல்களைச் செய்யும் பெருவீரர்களாகத் திகழ்ந்து, தம் உடலையும் பொருளையும் அவற்றிற்காக இழத்தலோடு தம் ஆவியையும் இழக்க நேருமென்றறிந்தும் அதற்கஞ்சாது தங் கடமை புரிதலிற் கருத்தாயிருந்து, அச் செயல்முகத்தில் உண்டாகும் இறப்பை விருப்பத்துடன் ஏற்பது.

பண்டைக் காலத்துச் சங்கச் சான்றோரிற் பெரும்பாலோரும், நன்றி குன்றாப் போர்வீரர் தலைவரும், இவ் வகையிற் சேர்ந்த நல்லோராவர். பிசிராந்தையார், கோப்பெருஞ் சோழன், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், அச் செழியன் பெருந்தேவி, சேரமான் கணைக்காலிரும்பொறை, பூதப்பாண்டியன் தேவியார், கண்ணகி போன்றார் எய்திய பல்வேறு வகையான வீர முடிவுகள் இத்திறத்தில் அடங்குவன. காந்தியடிகள் இவ் வீரருள் வீரராவர்!

காந்தியடிகளின் செயற்கரிய செயலாவது உண்மை கடைப்பிடிக்கும் போர் (சத்தியாக்கிரகப் போர்); அதாவது, நன்மையல்லாதவைகளோடு போராடும் புரட்சிப் போர். அதன் செயல் முறைகள்: அருள் தன்மையால் உற்றநோய் நோன்றல் (தியாகம்), அன்பினால் உயிர்க்கு உறுகண் செய்யாமை (அகிம்சை) என்பன. இத் தவநிலையில் நின்று நாளும் அவர் அயலவரோடு போர் தொடுத்து

வந்தார். உயிர்க்குச் சற்றும் அஞ்சாது செயற்கரிய செய்து வெற்றிமேல் வெற்றி எய்தினர்.

ஆகவே, அறமுறையில் அவரை எதிர்ப்பாரும் வெல்வாரும் உலகத்தில் இலராயினர். 'தமக்கு உற்ற நோய் பொறுத்தல்' 'பிறர்க்குத் தீங்கு செய்யாமை' என்னும் அவருடைய மெல்லிய ஆயுதங்களைத் தகர்க்கும் வலிய படைகள் எங்கும் எவரிடமும் இலவாயின. உலகத்தின் பேரரசு பெரும்படை என்பனவெல்லாம் முற்றுந் தணிந்து, அடிகளின் அறத்தில் நட்புறவு கொள்ளத் தொடங்கின. அடிகள் முடிமன்னர்க்கும் ஒரு மன்னர் போல் ஓங்கி, அருளாட்சி செலுத்தி விளங்கினர்.

4

காந்தியடிகளின் இறுதிப் போர்க்களம் அவரது வழி பாட்டுப் பேரவையாயிற்று. இது, வகுப்பு வெறிகளோடு போர்; அயல் போரன்று, உட்போர்; எதிர்க்கும் போரன்று, தன்னடக்கப் போர்; பிறரை அடக்குதல் எளிது தம்மை அடக்கிக் கொள்ளல் அரிதாகலின், இது, 'பெரியதொரு செயல்!

அயலரசை வீறி எதிர்த்த விடுதலைப் போராட்டங்களில், இடையிடையே சிறிது சிட்டங்கள் கட்டினும், எதிர்ப்பக்கத்திலும் அறிவுச் சுடர் மங்காமல் விளக்கம் பெற்றிருந்தது. அவ்வரசினர் நற்பெயர் பெற்றுவிட்டனர். ஆனல், இவ் வகுப்பு வெறியிலோ அதற்கு முற்றும் மாருக அறியாமைப் பேய் தன் முழு வன்மையுடன் தலை விரித்தாடுகின்றது. ஆயினும், இம் முயற்சியிலும் அடிகள் முடிந்தமட்டும் வெற்றி கண்டார்.

அறியாமையை முற்றும் நலிப்பதென்பது அருள் வல்லமை யொன்றினல் மட்டும் நிகழ்தற்குரிய மாபெருஞ் செயல்! அதற்குப் பேர் அருள் வீறு வேண்டும். காந்தியடிகள் அதனைப் பெறுதற்குரிய நிலையில் நாளும் வழி பாட்டுப் பேரவையிற் பயின்றுவந்தார். முழுமுதற் கடவுள் துணை பெற்று அது முற்றுதற்கு, இன்னும் வேருெரு

நற்பிறவி வேண்டும்போலும்! தமது போர்க்களத்திற் செயல்முகத்தில் தம் மார்பிற் குண்டு பட்டு வீர இறுதி எய்தினர்.

ஈண்டும் அறமுறையால் அவர் எதிர்க்கப்பட்டு வீழ்ந் தவரல்லர். காந்தியடிகளை முறையாக எதிர்த்து வெற்றி யுறல் வேண்டுமாயின், அஃது எளிதன்று; உறுதியும் வலிவு மிக்க மெய்த்தொண்டராய் ஓங்கி, உலகறியத் தம் அறநெறி இன்னதெனத் தெருட்டி, அதனல் நாட்டவர் உள்ளத்தைக் கவர்ந்து, அடிகள் செல்வாக்கை நிலைகுலையச் செய்து, வேறல் வேண்டும். அச் செயல் இமயம் போன்ற தொன்ருகலின், அது செய்திலர். எத்தனையோ காலங் கள் கடந்தும் உலகம் இன்னும் இந் நாகரிகப் பண்பை எட்டவில்லை. கிறித்துவின் காலத்திலிருந்த விலங்குணர்ச்சி அதே நிலைமையில் இன்னும் உள்ளது. கற்றென்ன பயன், கேட்டென்ன பயன்? ஆரவாரப் பிற வாழ்வுகளைப் பெற் றென்ன பயன்? தெரியாத் தன்மையால், கரவால், பிள்ள மைப் பண்பால், வீரம் இன்னதென்றறியாக் கோழை மைச் செயலால், கிடைத்தற்கரிய தொன்றை, இந் நாட்ட வர், தாமே இழந்துபோயினர். இரங்கத் தக்கதோர் அறி யாமைக்கு இதனினும் வேறென்ன எடுத்துக் காட்டு வேண்டும்!

காந்தியடிகள் தூய வீரராகலின், புறப்புண் பெற்றி லர்; அதனல், முன்ஞெருகால் எறியப்பட்ட குண்டு பய னற்றதாயிற்று. கரவேயாயினும், இக் குண்டு எதிர்நின்று எறியப்பட்டமையின், தப்பாது வாய்த்தது போலும்!

காந்தியடிகட்கு நேர்ந்த இவ் வீர இறுதியினல், நாடு பேருணர்ச்சியும் விழிப்பும் பெற்றுள்ளது. இவ்வுணர்ச்சி, அவர் எண்ணத்தை நிறைவேற்றுஞ் செயல் முறைகட்கு உதவுமாயின், அதனினுஞ் சிறந்த நினைவுக்குறி அவருக்கு வேறில்லை. அடிகள் இயற்றிய வீர நிகழ்ச்சிகள் என் ஞான்றும் மறப்பரிய நந்தா மணி விளக்கங்கள்! அவை, இமயத்தின் உச்சியில் நின்று, உலக முழுமைக்கும் நிலங் கரை விளக்கமாய் நீடு மிளிரும்.



அருளறம் பூண்ட அறிஞர்

வித்துவான்
திரு. மு. இராசாக்கண்ணனுர் பி.ஓ.எல்.

உலகு விளங்கு அவிர் ஒளி; உயர்ந்தோர் தொழ விளங்கும் உறவோர்; உண்மைக்கே உழைத்த மறவர்; தாழ்ந்தோர் வாழ வழி வகுத்த வண்மையாளர்; "அருளறம் பூண்ட அறிஞர்" என்று எவ்வளவு கூறினும் கூறி முடியாத மாண்பினர் மகாத்மா காந்தியடிகள். இவ்வரும் பெரும் பொருளினை இழந்தோம்! இவர்தமை இழத்தற்குத் துணைபுரிந்த இழிசினர் எல்லாத் தீமையும் செறிந்த சிறியரே! அந்தோ! இப்பேரறிஞர் பிரிவினை எண்ணுதற்கும் இயலவில்லை.

அறவழி அன்றிப் பிறவழி அறியா அந்தண்மை நிறைந்த அடிகளை இழந்து அவலம் உற்றேம். அன்பு நெறிபற்றி அருளறச் செல்வராகத் திகழ்ந்த அடிகளார் நமக்கு நல்கிச் சென்ற ஈரொளிகளாகிய அன்பு உண்மை என்னும் இரு சுடர்களையும் நம்முன் நிறுத்தி அவற்றின் ஒளியில் வாழ உறுதிகொள்வோம் ஆகுக. அடிகளாரின் திருவடிகளில் வணக்கம்.

அருள் வடிவத் திருமேனி!

திரு. ராய. சொ.

அடிமையெனும் விலங்ககற்றி அன்னைதனை
அரசாள அமைத்த ஐயா!
மிடிமைபிணி பகையனைத்தும் வீழ்த்துதற்கு
வீறுகொண்டு நின்ற மேலோய்!
கடிதினில்நீ மறைந்தனையே! நின்கருணைக்கு
இதுதகுமோ காந்தி வள்ளால்!
படியில்நிகர் இல்லாநின் அருள்வடிவத்
திருமேனி பார்ப்ப தெங்கே?

அன்புதவழ் முகம்எங்கே? அருள்சுரக்கும்
விழிஎங்கே? அமுதம் ஊறி
இன்பொழுகும் திருவாயில் இனிக்கின்ற
பேச்செல்லாம் எங்கே? எங்கே??
பொன்புரையும் திருமேனிப் பொலிவெங்கே?
மோகனப்புன் சிரிப்பும் எங்கே?
என்புருக்கும் திறம்எங்கே? எழில்உருக்கும்
பெருங்காந்தி எங்கே? அந்தோ!

ஆயிரமாண் டுக்கொருகால் அவதாரம்
செய்திடுவர் பெரியார் என்ப
நீயவருள் ஒருவனெனல் நிறைமதிநேர்
மின்மினியென் றுரைப்ப தொக்கும்
மாயிருஞா லத்தினிலே நின்போல
வாழ்ந்திட்டான் ஒருவன் உண்டோ?
தாயனையாய்! தண்ணளியே! சத்தியமே!
தவப்பழமே! தன்னேர் இல்லாய்!



உலக ஊழியர்!

வித்துவான்
திரு. தி. பொ. பழனியப்ப பிள்ளை,
பி. ஓ. எல்.

ஆழி யன்ன அன்பும் மெய்ம்மையும்
ஊழி முற்ற உழைத்த காந்தி
வாழி! வாழி! வைய மெல்லாம்.

எல்லா உலகும் என்றும் ஏத்தும் பெரியார் ஆகிய காந்தியடிகள் தம் இளம்போதில் தென் ஆப்பிரிகா சென்று வாழ்நாளில் நம் தென்னாட்டு மக்களுக்கு அந் நாட்டு மக்களிடை அமைந்த இழிவு நிலையே முதன்முதலாக அவர் அறிவில் பதிந்தது. இத்தென்னாட்டு மக்கள் கொடும்பாடுகளைக் களைய முற்பட்ட அவர்க்கு அங்கு "கூலி வழக்காளி" என்ற பெயர் பெருவழக்காயிற்று. இந்தத் தமிழ்த் திருப்பெயரே அவரை உலக ஊழியராகச் செய்வித்தது. அவர் வாழ்க்கையில் உயிர்க்கொள்கையாகிய மெய்ம்மைப் பொறை எதிர்ப்பினை அவர் இயக்குவித்த நாளில் ஒரு தமிழிளநங்கை காட்டிய ஈரம் செறிந்த வீரமே, தம் முள்ளத்தில் என்றும் இடம் பெற்றதெனத் தமிழக முழுதும் அறியச் சொன்னார். உலகப் பேரரசினை எதிர்த்து ஒத்துழையா இயக்கத்தினைப் பரப்பிய நாளில் நமது தென்னாட்டிற் சுற்றிய அடிகள் தமிழ் மக்களின் எளிமையைத் தம் கண்ணாற் கண்டு அன்றுதொட்டு அரையாடை யுடுத்து அவருடன் எளியராகியே இருந்தார்.

ஆண்டார் தாமும் வேண்டாரென வெறுத்து ஒதுக்கிய தீண்டாதார்க்குத் திருக்கோயில்களைத் திறந்திடுமாறு அவர் ஆற்றிய பணியின் பெரும்பயனை இத் தமிழ்நாட்டுத் தீண்டாதாரே பெரிதும் பெற்றார்கள். ஒத்துழையாமை ஆகிய உயரற எதிர்ப்பினை எத்திசையும் போற்ற இத்தமிழ் நாடே முதற்கண் முயன்று முற்றுவித்ததெனை அடிகள் அருளியுள்ளார்கள். ஆகவே காந்தியடிகளின் உலக ஊழியத்தின் ஊற்றமும் உயர்வும் ஒப்பற்ற பங்கும் நமது தமிழ் நாடே பெற்றதெனத் தமிழகத்தார் நன்குணர்வர். எவ்வுலகினரும் எச்சமயத்தவரும் எம்பெரியார், எம்மவர் என்று போற்றுற்ற காந்தியடிகளை நம்பெரியார், நம்மவர் என்று போற்றி வாழ்வோமாக. அரையுடை யுடுத்து அகன்றோள் வீசி அன்பு மலர இன்பக் கூத்தினை என்றும் இயற்றும் இறைவன்போன்ற காந்தியடிகளார்க்கு நாற்பெருந் தோளாக நால்வர் இன்றுள்ளார்கள். பண்டித ஜவஹர்லால் நேருவும், சர்தார். பட்டேலும், இராஜேந்திர பிரசாத்தும், இராஜகோபாலாச்சாரியாரும், இந்நாற்றோள் வீசி நின்றுடிய இறைவராகிய காந்தியடிகளின் நாற்றோள் களும் நாற்பெருந் திசையுடைய நம் நானிலங் காக்க வாழி! வாழி!

மாபெரும் புண்ணியர்!

திருமதி. ஆர் இராசாமணி அம்மையார்,
பி.ஏ. (ஹானர்ஸ்,) எல்.டி.

காட்டிற்குச் சென்று கடுந்தவ மியற்றாது, நாட்டிலே யிருந்து நற்றொண்டு புரிந்து, ஊனுடல் நீத்து வான்புகழ் கொண்ட வள்ளலார் மகாத்மா காந்தியடிகள்.



ஞாயிறு மறைந்ததே !

திரு. பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார்,
எம். ஏ.

ஞாயிற்றின் ஒளி ஞாலம் முற்றும் பரவியுள்ளது போல் காந்தி அடிகளாரின் புகழ்ஒளி ஞாலம் முற்றும் பரவியுள்ளது. ஞாயிற்றின் ஒளியால் பொருள்கள் தூய்மை பெறுவதுபோல் அடிகளாரின் அறவுரையாகிய ஒளி மக்கள் உள்ளத்தைத் தூய்மைப்படுத்தி அன்னவரை நல்லாற்றுப்படுத்தியது. அந்தோ ! ஞாயிறு மறைந்ததே ! அடிகள் பிறப்பாலும் வாழ்க்கையாலும் இந்தியா தனிச் சிறப்பு எய்தியது. தமது பொறையுடைமை என்ற பண்பால் ஒரு துளி இரத்தமும் சிந்தப்படாமல் அடிகளார் இந்தியாவுக்குக் குடியரசு ஆட்சி வாங்கித் தந்தனர். அவர் ஓர் ஒப்புயர்வற்ற அரசியல் தலைவர். அடிகளார், அன்பு, வாய்மை, மனத்தூய்மை, கொல்லாமை, அருளுடைமை பொறையுடைமை, அஞ்சாமை, சான்றாண்மை முதலிய பண்புகளுடன் விளங்கினர் ; வள்ளுவர் வாய்மொழிநின்று இல்லறத்தை நல்லறமாக நடத்திக் காட்டினர் ; இல்லறத்திலிருந்தும் துறவு உள்ளம் படைத்திருந்தனர்.

“ இன்னா செய்தாரை யொறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல் ”

என்ற பொய்யா மொழிக்கு அடிகள் இலக்காவர். அவரைத் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர் என்னலாம். இத்துணைக் குணநலம் படைத்த அடிகளே ஒருமையனுள்ள மகன் சுட்டுக்கொன்று நம் நாட்டிற்குத் தீராப் பழியை உண்டாக்கினுன். உண்மையை அஞ்சாது எடுத்து விளக்கும் உத்தமர்க்கு இவ்வுலகத்தில் இடம் இல்லே என்பது சாக்ரடீஸ், கிறித்து பெருமான், ஆப்ரஹாம் லிங்கன் முதலியோர் வரலாற்ருல் அறியக்கிடக்கின்றது. காந்திப் பெருமானின் அறவுரைகள் புத்த பெருமானின் அறவுரைகளே நினைப்பூட்டுகின்றன. சைவ சமயாசாரியருள் ஒருவரான திருநாவுக்கரசரின் வாழ்க்கை முறையில் விளங்கிய, அரசனுக்கு அஞ்சாமை, ஒரு குறிக்கோள் முடியப் பெறுதற்கு உண்ணுவிரதம் இருத்தல், மக்களுக்கு அறவுரை பகர்தல், தீண்டாமை ஒழித்தல் முதலிய இன்னேரன்ன பண்புகள் காந்தி அடிகளாரிடத்திலும் விளங்கியிருந்தன. நம்மனேர்க்கு வழிகாட்டும் ஒான்பொருளாக விளங்கிய காந்தி அடிகளாரின் அடிச்சுவட்டினேப் பின்பற்றி அவரது குறிக்கோளினேக் கடைப்பிடித்து வாழ்ந்து நாம் பிறந்ததின் பயனேப் பெறுவோமாக! அடிகளாரின் ஆன்மா அமைதி யுறுவதாக!

"என்னேப் பின்பற்றும்படி நான் யாரையும் அழைக்கவில்லே. ஒவ்வொருவரும் அவரவர் அந்தராத்மாவின் குரலேக் கேட்டு அதன்படி நடக்கவேண்டும். அது முடியாவிட்டால் தம்மால் முடிந்தவரை எல்லாம் செய்யவேண்டும்; பிறரைப்போல் நடிக்கக்கூடாது."

—காந்தியடிகள்.



காந்தி மறைந்தது !

திரு. புலவர் 'அரசு'

அந்தோ ! கொடுமையீ தந்தோ ! கொடுமையீ
தந்தோ ! கொடுமையீ தாகுமே !—அந்தோ!நம்
காந்தி மறைந்தது ! காந்தி மறைந்தது !
காந்தி மறைந்தது, காண் !

நாட்டின் பெருகொளி நாட்டின் உயிர்நிலை
நாட்டின் அருளெழில் நைந்ததே !—நாட்டின்
கலையொழிந்த தந்தோ ! கதிரருள் காலும்
மலையொழிந்த தேகொசுகால் மாய்ந்து.

அடிமை யிருளை யகற்றியிந் நாட்டை
வியவித்த ஞாயிற்றை மெய்ம்மை—வடிவைப்
பழிகொண்டா னேகொடிய பாவி ! மயக்கச்
சுழிகொண்ட திந்தியா சூழ்ந்து.

உள்ளமிவ் வுண்மையை ஒப்பவிலை யேயந்தோ !
தெள்ளு முலகத் திருவையோர்—கள்ளன்
விழித்திருக்கும் போதெடுத்து விட்டானே ! எங்கும்
பழித்திடவிந் நாட்டினைப் பார்த்து.

உள்ளங் கலங்கி யுணர்விழந்து மேயவல
வெள்ளத்தில் வீழாதே மேன்மேலும்—வள்ளல்நம்
சீரமைந்த காந்தி சிறிதுமக லாருன்னைப்
பாரதநா டே!துணையாய்ப் பார்த்து.

புகழ் வாழும் !



பண்டித, திரு.
லெப. கரு. இராமநாதன் செட்டியார்.

தலைசிறந்த உலகப் பெரியாராகிய மகாத்மா காந்தியடிகளின் பிரிவு நமக்கு ஆற்றொணாத் துயரந் தருவதாகும். அவர்களின் பூதவுடல் மறைந்தாலும் புகழுடல் இவ்வுலகம் உள்ளளவும் நின்று நிலைபெறும்.

இறையன்பு, உண்மை, பொறுமை முதலிய உயர் குணங்கட்கு உறைவிடமாய், அருள்வடிவாய், தீண்டாமை ஒழிப்பு மதுவிலக்கு இவைகட்குக் காரணராய் விளங்கிய அடிகளாரை நம் உள்ளத்தைவிட்டுப் பிரிக்க முடியாது. இவர்கள் மறப்போரால் அன்றி அறப்போரால் இந்தியாவிற்கு விடுதலை தேடித்தந்த செயல் பிறர் எவராலுஞ் செயற்கரிய வியக்கத்தக்க செயலாகும்.

பூதவுடல் அழியும் இயல்புடையது என்பதை நினைத்து நாம் ஆறுதல் அடையலாம். ஆனால் அடிகளார் முழுவெற்றி காணாது வருந்துதற்குக் காரணமாய் நம்மிடை உள்ள ஒற்றுமையின்மை அழியாவிடின் அவர்கள் ஆறுதல் அடையமாட்டார்கள். ஒற்றுமையை எங்கும் நிலைபெறுத்துவதே, தமக்கென வாழாப் பிறர்க்குறியாளராகிய அவர்கள் கைம்மாறு கருதாது நமக்குச் செய்த உதவிக்கு நன்றி செலுத்துவதாகும். அவர்கள் சொல்லிவைத்த பொன்மொழிகள் நமக்கு என்றும் வழி காட்டுவனவாகும்.



குன்றின்மேலிட்ட விளக்கு !

திரு. க. வச்சிரவேல் முதலியார், பி.ஏ., எல்.டி.

திருவருட் பான்மையை உணர்ந்து நந் தாய்நாட்டின் விடுதலைக்கு வழிவகுத்த பெரியார், காந்தியடிகள், சடக்கெனப் பிரிந்தமை இந்திய மக்கள் அனைவரையும் துயர்க் கடலில் ஆழ்த்திவிட்டது. உலகத்தையே திடுக்குறச் செய்துவிட்டது. பிரிவைவிட, அவர்தம் பிரிவின்வாயிலே நம்மைப் பெரிதும் வருத்துவதாகின்றது. அருள் தந்தையை, கண்மணி அனைய ஆசிரியனை இழந்து எங்ஙனம் வாழ்தும் !

ஆயினும், அடிகளின் மறைவு இறப்பன்று ; மீள உயிர்த்தெழலேயாம் ! அவர்தம் தவ வாழ்க்கையும், வாய்மொழியும், குன்றின் மேலிட்ட விளக்கைப் போன்று என்றென்றும் சுடர்விரிந்து உலக மக்கட்கு வாழ்க்கையின் ஆழ்ந்த அடிப்படை யுண்மைகளை உணர்த்தா நிற்கும் என்பதில் ஐயமின்று. அடிகளிடத்து இணைந்து தோன்றும் புத்தர்தம் துறவுள்ளமும், இயேசு கிறிஸ்துவின் அன்பின் மாட்சியும், மெய்ப்பொருள் நாயனரின் மெய்யுணர்வின் திட்பமும் நம்மனோர் உணர்ச்சியில் தங்கிநின்று நம்மை நல்வழிக்கண் உய்க்குமாக.

புண்சுமந்த பொன்மேனி !



திருமதி.
வ. பா. தாமரைக்கண்ணி அம்மையார்.

வழியென்றும் குழியென்றும் வகுத்திட்டு மக்கள்தமை
முழுநெறியிற் செலுத்தினமை மிகப்பெரிய குற்றமெனப்
பழிக்கஞ்சாப் பாதகர்கள் சிலுவையினி லறைந்திடவே
எழிலார்ந்த மேனிமிசை ஏசுவுந்தான் புண்சுமந்தான்!

'அல்லாவே தெய்வம் ; அவர்க்குநான் ஒருதூதன் ;
நல்லாற்றைக் கடைப்பிடிமின்' என்றுரைத்த நன்மைக்கா
பொல்லா அராபியர்கள் கல்லா லடித்ததனுல்
நல்லான் நபியுந்தன் நன்மேனிப் புண்சுமந்தான்!

மக்களுக்கு மாந்தர் அடிமையாய் வாழ்ந்திடுமெவ்
வெக்கக்கேட் டைநீக்கி வெற்றிபெறு வேளையிலே
அக்கொடிய அமெரிக்கன் அருந்தலையிற் சுட்டதனுல்
மிக்கபுகழ் ஆபிரகாம் லிங்கனுந்தான் புண்சுமந்தான்!

மைத்திகழுங் கண்டன் மதுரைவாழ் சொக்கேசன்
மெய்த்தலத்தில் பட்டஅடி மேதினியில் எல்லோர்க்குங்
கைத்தலத்தில் பட்டதென்ருல் 'கண்டதுயார்? கேட்டதுயார்?
பொய்க்கதைஈ தாம்'என்று புகல்வதுவும் புல்லறிவே !

இன்றந்த உண்மையினைக் கண்டோம் ; எழில்குணமே
குன்றனைய காந்திப் பெருமான் ! மகாத்மா !உன்
பொன்றிகழு மேனிப் புகுந்தவ் வெடிகுண்டே
இன்றெம் முடல்புகுந்தே இடுக்கண் விளைக்குதையா !



சாய்ந்தது இமயம் !

வித்துவான்
திரு. அ. மு. பரமசிவானந்தம்
பி.ஓ.எல்.

செல்வத்தில் பிறந்து, சீரும் சிறப்புமுற்றுப் பாரிஸ்டர் ஆகிப் பணம் கொழிக்கும் பான்மை பெற்றும் அச் செல்வ வாழ்விலே சிந்தை வையாது, அல்லும் பகலும் ஏழைகள் வாழ்வே தம் வாழ்வு என்று எண்ணி அவர்களோடு, அவர்களுக்காகவே வாழ்ந்த அண்ணல் காந்தி அடிகளார் கடந்த சனவரி முப்பதாம் நாள் மறைந்தார். யாருக்காகப் பாடுபட்டாரோ, எந்த இந்தியர் வாழ்வை வளமாக்கினரோ, எந்த அடிமை நாட்டை உரிமை நாடாக்கித் தலைநிமிரச் செய்தாரோ—அந்த நாட்டவர் ஒருவராலேயே—இந்தியன் ஒருவனாலேயே சுட்டுக் கொல்லப்பட்டார். யாரால் இந்தியா விடுதலையுற்றுப் பெருமை பெற்றதோ, ஆம்! அவரைத்தான் அதே நாடு சுட்டு வீழ்த்திற்று. சாய்ந்தது இமயம்! சரிந்தது பெருமை! வீழ்ந்தது அன்பு! விளிந்தது அமைதி!

அடிகளார் வாழ்வு எவ்வாறு மற்றவர்களுக்காக அமைந்ததோ, அதைப்போன்றே அவர்தம் ஆருயிரும் மற்றவர்களுக்காகவே பிரிந்தது. வாழ்வில் செந்நெறி கண்ட செம்மல் மறைவிலும் செந்நெறி கண்டார். உழைப்பினைக்கொண்ட மக்களுக்காகவே உயிரையும் கொடுத்தார். கொடுத்த மான்பு உலகம் உள்ளளவும் மறக்க முடியாது.

அவரது மறைவிலே புத்துலகம் பூக்கவேண்டும். அன்புலகம் தோன்றவேண்டும். அவர் தம்மையே அந்த அன்புலகத்துக்கு—அன்பின் விளைவுக்கு விதையாகத் தந்தார்.

இயேசு அன்பு உலகில் படிந்தவர். அவர் ஒருகால் 'கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து அழுகிச் சாகாவிட்டால் முளைக்காது. செத்ததேயாகில் மிகுந்த பயனைக் கொடுக்கும்'—(யோவான். 124-24) என்ற உண்மையை விளக்கிச் சென்றார். அந்த உண்மை—அறவுரை அடிகளார் மறைவினால் மெய்ப்பிக்கப்படவேண்டும். கோதுமை இருக்கும் காலத்தும் மற்றவரை வாழ்வித்தது. நிலத்தில் வீழ்ந்து நிலைகெட்டு மாய்ந்த காலத்தும் பயிராக முளைத்துச் சிறந்த பயனைக் கொடுத்தது. கோதுமை வீழ்ச்சி—அதே கோதுமையின் பயனைக் கொடுத்தது. எனவே, அடிகளார் மறைவில் அவர்தம் அன்புப்பயிர் ஓங்க வேண்டும். உலகம் அவர் மறைவின் பெரும் பாடத்தைக் கற்றுக்கொள்ளவேண்டும். வாழ்வில் அவர் வகுத்துக் காட்டிய செந்நெறிகளைப் பின்பற்ற வேண்டும். மனத்தாலும் மற்றவர்க்குத் தீங்கெண்ணா மாண்பினைக் கைக்கொள்ள வேண்டும். வாழும் வாழ்வு மற்றவர்களுக்கு என்பதை, வாக்கிலல்ல—வாழ்விடை வாழ்ந்து காட்ட வேண்டும். காட்டினார் அண்ணலார்—வாழ்ந்தார் அண்ணலார். ஆம்! தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாகவே தரையில் சாய்ந்தார். அவர்தம் மறைவின் உண்மையில் அனைவரும் ஒன்றுகூட வேண்டும். வெறும் ஆடம்பர விழாக்கள் நடத்தி நாம் அடிகளாருக்கு ஆற்றவேண்டிய கடமையை முடித்துவிட்டோம் என எண்ணாது அவர்தம் அருங் கொள்கைகளை—வாழ்க்கை முறைகளை—நம்முடைய தனி வாழ்வில்—பொது வாழ்வில்—புற வாழ்வில்—புத்துலக வாழ்வில் மேற்கொள்ள வேண்டும். அவர்தம் அன்புவழி உலகில் முகிழ்க்குமானால் உலகம் ஓங்கும்—இந்திய நாடு ஏற்றமுறும். அந்த உயர்வை நாடி அனைவரும் வேறுபாடு நீங்கிக் கலந்து பணியாற்றுவோமாக! வாழ்க! அடிகளார் அன்புநெறி வாழ்க!



அடிகட்கு ஒவ்வாத செயலை ஒழிப்போம்!

'புலவர்' திரு.
முத்து சு. மாணிக்கவாசக முதலியார்.

காந்தியடிகள், மண் முதலியவற்றின் மாற்றத்தாலாய உடம்பாற் பிரியினும், நம் உணர்விற்கு அடிகள் ஒழுகிக் காட்டிய நெறியாற் பிரிந்திலர். அறத்தாற்றொழுக்கம், உள்ளத் தூய்மையை ஆக்கும். அது நல்வினையைத் தோற்றுவிக்கும்; அது மெய்யுணர்வையூட்டும். இந்நெறியே காந்தியடிகள் ஒழுகிக் காட்டியது. இஃது என்றுமுளது. அழியாதது. அடிகள் வேறு; அந் நெறி வேறன்று. ஆதலின், நாம் அந்நெறி நின்றொழுகின் அவர் நம்மிற் பிரிந்தவராகார். அவரை மறவாதிருக்க, அகில இந்திய காங்கிரசு சபையைக் காந்தி மண்டலம் என்று குறித்தல், காந்தியாண்டு எக என வழங்கல் முதலியன சிறந்தன. காந்தி மதம் என்று குறித்தல் அடிகள் நெறிக்கு மாறுகும். காந்தி திருமாலைப் பொதுநெறியில் வணங்கி எங்கும் நிறைந்தநிலை (விஷ்ணு) எய்தினர். அந்நிலையை வைணவம் என்பர். சிவம் சைவம் என்றல் இத்தகையதே. அடையடுநிலையாற் பெயர்பெற்றவை இவ்விரண்டும். இவற்றையே காந்தியடிகள் ஆட்சியிற் கொண்டார். கிறித்தவம் முகமதியம் முதலியன வழிகாட்டியோராற் பெயர் பெற்றவை. காந்தியடிகள் அவ்வாறு புதுவழியொன்றுங் காட்டினரல்லர். தொன்னெறியிற் பொதுமையை எடுத்துரைத்தும் ஒழுகியும் வந்தார். அவர் இராம நாமபாராயணத்தாலெய்தியது தொல்லைநெறியான வைணவமேயாகும். ஆதலின், வைணவம் என்பதைக் காந்தி மதம் என மாற்றக் காரணமில்லை. மதபேதத்தால்

மக்கள் பல்வகை வேறுபாடுகளைத் தோற்றிப் பகை கொண்டு பிணங்குதல் ஒழிந்து இணங்குதல் இயலும் என்னும் நல்லெண்ணத்தால், காந்தி மதம் வேண்டும் என்னும் நல்லறிஞர் பெயர் மாற்றத்தால் உளமாற்றம் உண்டாகாது என்பதை நினைத்தும் இருக்கலாம். சட்டம் உள்ளத்தைக் கட்டுப்படுத்தாது. காந்தியடிகள் காட்டிய தொன்னெறியை அழிக்க எவராலும் இயலாது. அதை உயிர்ப்பித்த அடிகள் உடம்பாற் பிரிந்தும் உணர்வாற் பிரியாதிருப்பதால் அவர்க்கு ஒவ்வாத செயலையொழித்து, ஒத்த செயலைப் புரிவதே அவரை மறவா வழி.

மாணூர் விளக்கு !

திரு. ஆ. முத்துசிவன், எம்.ஏ.

பொல்லா நிலையகற்றிப் பொற்பார் சுதந்திரத்தை
எல்லார்க்கும் வென்றுதந்த எந்தலே, எம்மானே,
கல்லாக் கசடனுடைக் கடைகெட்ட கீழ்ச்செயலால்
நில்லாது நீங்குமொரு நிலையுனக்குத் தக்கதுவோ !

நெஞ்சு பிளக்குதைய, நினைவுதடு மாறுதைய,
விஞ்சுங் கவலையினல் மேனி தளருதைய ;
பஞ்சை நிலையடைந்தோம் ! பாரதத்து மக்களெலாம்
வஞ்சன் காத்சேயின் மாண்பிழந்த வன்செயலால்.

காணுங் கண்ணும்நீ, கருதுங் கருத்தும்நீ,
பேணும் அறமும்நீ, பேசும் பொருளும்நீ,
பூணும் அணியும்நீ, போற்றுகின்ற தெய்வம்நீ,
மாணூர் விளக்குநீ வையத்து வாழ்வும்நீ.

வண்ணத் திருமேனி மறைந்தாலும் எங்களுயர்
எண்ணத்துள் காந்திநீ என்றும் இருத்தியைய,
உண்மைக்கும் அன்பிற்கும் உறைவிடமாய் உள்ளவுனைக்
கண்ணிமைக்குங் காலத்தும் கருத மறப்போமோ !



தமிழ்ப் பண்பினர் !

வித்துவான்
திரு. ந. சேதுரகுநாதன்.

திருவள்ளுவரின் திருக்குறட்கு நடைமுறையாக ஒரு திருவுருவம் உலாவிக்கொண்டிருந்தது. அதுவும் நாம் வாழுகின்ற இக்காலத்திலேயே என நினைக்கும்போது நம் மனத்தில் தோன்றும் எண்ணங்களுக்கு உருவங் கொடுக்க முடியுமா? அத் திருவுருவந் தாங்கிய பெருமானே மகாத்மா காந்தியடிகள். "உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார், உள்ளத்துள் எல்லாம் உளன்" என்று திருவள்ளுவ தேவர் அருளிய திருக்குறட்குக் காந்தியடிகளைப் போன்று எடுத்துக்காட்டாய் அமைந்தவர் இனி யாருளரோ அறியோம்; ஆனால் இதற்கு முன்பு இல்லை என்றே கூறிவிடலாம். "தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாகி, நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்று கருதும் தமிழ்ப் பண்பினைக் காந்தியினிடமே கண்டோம். இன்னா செய்தார்க்கு நன்னயஞ் செய்தும், பிறிதின் நோய் தன்னோய்போற் கருதிப் போற்றியும், இன்சொற் கூறியும், பொய்யாமை ஆற்றியும், கொல்லாமை மேற்கொண்டும், ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்ற கொள்கையில் நிலைத்து நடந்தும்

அரசியல் தலைவராய், வழக்கறிவின் சிகரமாய் ஒப்புயர் வற்று இலங்கினர். இவரது புகழ் வையகமும் வானகமும் போர்த்து விழுங்கிக்கொண்டது. இவரை அறியாதார் எவருமில்லை. இத்தகைய குணக்குன்றினை என்னென்ன வகையாகவும் போற்றி எழுதலாம்.

"செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து."

"உள்ளிய தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின்."

என்ற அருமைத் திருக்குறளின் நிரம்பிய பயனுக இலங்கியவர் காந்தியடிகள். அந்தோ! இத்தகைய பெரியோரை—கீழ்மகற் கயவன்—இழி தொழிலன்—சுட்டுக் கொன்முன். எல்லோர்தம் உள்ளமும் சுடப்பட்டன. உடம்புகள் சுடப்பட்டன. உரைகள் சுடப்பட்டன. தாங்கொணுத் துன்பம். உலகம் கதறிற்று. மண்ணும் அழுதது. மரமும் அழுதது. புள்ளும் பூவுங் கல்லும் புல்லுங் கரைந்து உருகின. "கோளுமுவை யன்ஞற்குக் குன்றமுநின் றழுதனவே" என்று திருத்தக்கத்தேவர் கூறியது போன்று வானமும் இடித்து அலறிக் கண்ணீர் மழை பொழிந்தது! உலகம் உயிரிலா உடலம்போ லாகியது. என்னென்றுரைப்பது? ஆற்ருெணுத் துன்பம். வருங் காலத்தில் தமிழ், உலகப் பொது மொழியாகும். அது போழ்து கற்பதற்குப் பொதுக் காவியமாக இலங்குவதற்குக் காந்தியடிகளின் திருவரலாற்றுக் காவியந் துணை செய்யும்? வாழ்க அவர் புகழ்! வாழ்க அவர் கொள்கை! மக்கள் மனம் மொழி செயல்கள் அவர் மனமொழி செயல்களைப்போல் ஆவனவாகுக!



நமது காணிக்கை !

புலவர்
திரு. மயிலை. சிவ. முத்து.

காந்தி அடிகளார் உலகில் இதுகாறும் தோன்றி மறைந்த உலகப் பெரியார் இரண்டொருவருள் ஒருவர் ஆவர். அத்தகைய பெரியார் காலத்தே நாம் உடனிருந்து அவர்தம் திருவுருவை நேரில் கண்டு மகிழவும் அவர்தம் பொன்னுரைகளைக் கேட்டு நலனுறவும் பெற்றது நமக்குப் பெருமையே. அப்பெரியார் சமய நூல்கள் பலவற்றிலும் உள்ள நுண் பொருள்களை வெறுப்பு விருப்பின்றி நுணுகி அறிந்து பாராட்டினர்; தமக்கு நன்றெனத் தோன்றிய நெறியினில் நின்று பலரையும் அவ்விதம் ஒழுகும்படி வேண்டினர்; உண்மையை உயிரினும் பெரிதாய்ப் போற்றினர்; 'சாத்விக' எதிர்ப்பு என்னும் புது முறையால் பிறர் தவறுகளைத் திருத்தினர். ஆ! அத்தகைய பெரியார் ஒருவரை நாம் இழந்தது நம் நாட்டின் தவக்குறையே ஆகும். நிகழ்ந்தது குறித்து வருந்துவதால் ஆம்பயன் இல்லை. அவர் நம்மை நீத்தனர் எனினும் அவர்தம் அருளுரைகள் திருக்குறள்போல் என்றும் நின்று நிலவத் தக்கன. தாம் கூறிய வண்ணம் எவரும் நடக்க இயலும் என்பதை அவர்தாமே அவ்விதம் ஒழுகி நிலைநாட்டியுள்ளார். உடல் பொருள் உயிர் இம்மூன்றினையும் நாட்டின் நலனுக்காகவே உவந்தளித்த அப் பெரியாரின் அடிச்சுவடுபற்றி நாமும் அவ்வாறு ஒழுக முயல்வதே நாம் அவருக்குச் செலுத்தும் காணிக்கையாகும்.

ஒப்பரும் பேரொளி !



வித்துவான் திரு.
மே. வி. வேணுகோபாலப் பிள்ளை.

இந்தியத் தாயின் இணையிலா மைந்தன்
நொந்தவர்க் கருந்துணை நோன்பிற் பகீரதன்
உலகிருள் நீக்கிய ஒப்பரும் பேரொளி
அலகிலா நலங்கள் ஆற்றிய பெரியோன்
அன்பும் அருளும் அரும்பெறல் வாய்மையும்
இன்புற ஞாலத் தியங்கிய அறிஞன்
பகைவரும் போற்றும் பண்பார் சீலன்
நகைமுகத் துடனே நன்மதி பகர்வோன்
எம்மான் காந்தி எழுபத் தொன்பதாண்
டிம்மா நிலத்தில் ஈடெடுப் பின்றிப்
பற்றிலா வாழ்வினிற் பயின்றிந் நாட்டவர்
ஒற்றுமைக் கெனத்தன் உயிர்வழங் கினனே !
நாட்டவ ரே! அவன் காட்டிய வழியில்
ஈட்டிய சுதந்தரம் என்றும் நிலைக்கக்
கோட்டமில் முயற்சி கொண்டிவர் காந்தி
நாட்டின ரென்றிந் நானிலம் புகழ
வேற்றுமை அகற்றியவ் வித்தகன்
சாற்றிய நெறியைச் சார்ந்துயர் வீரே !



சான்றாண்மைக்கு ஓர் ஆழி !

திரு. அ. ச. ஞானசம்பந்தம்,
எம்.ஏ.

உலகம் போற்றும் உத்தமரான மகாத்மாவின் வாழ்க்கையை அறிந்த பிறகே, பல குறள்களுக்குப் பொருள் விளங்குகிறது. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர்த் தமிழ் நாட்டில் தோன்றிய ஒரு நூலுக்கு இலக்கியம், நமது காலத்தில் இலங்கக் கண்டோம். அடிகளார் 'சத்தியாக்கிரகத்தால்' வெற்றி பெற்ற பின்னரே,

"ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை"—(குறள், 985)

என்ற குறள் எவ்வளவு உண்மையானது எனக் கண்டோம். எழுபத்தொன்பது ஆண்டுகள் வாழ்ந்து, பூத உடலை நீத்துப் புகழை நிலை நிறுத்தின அப் பெரியாரின் வாழ்க்கையை இரண்டு வரிகளில் கூறவேண்டுமானால், அதற்கும் ஒரு குறளே துணை செய்கிறது.

"அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு
ஐந்துசால்(பு) ஊன்றிய தூண்"

இக்குறள் மகாத்மாவின் வாழ்க்கையில் எவ்வளவு பயன்பட்டது என்பதை நினையுந்தோறும் மருட்கையே பிறக்கிறது.

"இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு"

என்று குறள் கட்டளை யிட்டதைக் கண்டவுடன் இது இயலக்கூடியதா என்ற ஐயம் தோன்றத்தான் செய்கிறது. பெரிதும் வாழ்க்கைக்குப் பயன்படக் கூடியவற்றையே பாடிச்சென்ற வள்ளுவப் பெருந்தகை, அநேகமாக யாரும் பின்பற்ற முடியாதது என்று கூறக்கூடிய இக்குறளை ஏன் கூறினார்? அதிலும் இனியவே என ஒரு தேற்றேகாரம் தந்து கூறல்பொருத்தமா? என்று கேட்டுக்கொண்டிருந்த உலகிற்கு விடை கூறுவார் போன்று ஒரு மகாத்மா தோன்றினார். இவ்வொரு குறளின் விரிவுரையாக அமைந்தது அப் பெரியாரின் வாழ்க்கை. அவர் தென்னாப் பிரிக்காவில் இழந்த இரு பற்களும் அன்றோ இக்குறளுக்கு உரை கூறின.

இமயமலையை ஒத்த இடுக்கண் வந்த காலத்தும் கலக்கம் அடையாமல், அவ் விடுக்கணுக்கே இடுக்கண் செய்த ஒரு பெரியாரை இவ்வுலகம் என்று பெறப் போகிறது? நற்பேறு இல்லாத உலகமே! நினக்கு என்றும் நன்மை செய்த பெரியோரைத் தவறாது நீ கொலைக்கே ஆளாக்கினாய்! ஆனால் அதனால் நன்மை பெற்றவர்கள் அவர்கள்; தீமை யடைந்தது நீ. ஆன்மா அழிக்கப்படுவதில்லையாதலின் அவர்கள் சாவிற்கு அஞ்சுவதில்லை. மகாத்மாவின் பூதவுடல் அழியினும், அவர் பண்புகளும் புகழும், கொள்கைகளும் அழிவனவல்ல.

" ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப் படுவார்." —(குறள், 989)



மகாத்மாவும் பொய்யா மொழியும்!

வித்துவான்
பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம்
பி.ஏ. (ஹானர்ஸ்) பி.ஓ.எல்.

தமிழ் மக்களுக்கு, காந்தியடிகளை நினைந்தருகும் பொழுதும், அவருடைய வாய்மை, அன்பு, அகிம்சை எனுங் குறிக்கோள்களை ஆராயும்பொழுதும் வள்ளுவருடைய திருக்குறளைப்பற்றிய நினைவே பெரும்பாலும் வரும். வள்ளுவருடைய நூலைப் பொய்யாமொழி என நாம் தலைமுறை தலைமுறையாகச் சொல்லளவிலே போற்றி வருகிறோம். ஆனால், வள்ளுவருடைய கூற்றுக்கள் பொய்யாமொழியே என்பதையும், அக்கூற்றுக்களின்படி வாழ முடியும் என்பதையும் நமக்கும் உலகத்துக்குங் காட்டிவைத்த வித்தகப் பெரியார் காந்தியடிகளே யாவார். திருக்குறளில் ஈடுபட்டு அதனைத் தமிழிலே படித்தறிவதற்காகக் காந்தியடிகள் தமிழ் கற்ற செய்தியை யாவரும் அறிவர். காந்தியடிகளுடைய வாழ்க்கை மாத்திரமன்றி அவருடைய மரணமும் திருக்குறளுக்கு இலக்கியமாக விளங்குகின்றது.

மகாத்மா சுட்டுக் கொல்லப்பட்டார், என்ற செய்தியை அறிந்ததும் இப்பூவுலகிலுள்ள மக்கள் யாவரும் திகைத்தார்கள்; மயங்கினார்கள். அச்செய்தி பொய்யாகப் போகவேண்டுமென்றும் விரும்பினார்கள். பொய்யன்று, மெய்தான் என்பதை உணர்ந்தவுடன் "மகாத்மாவுக்கு வந்த முடிவு எங்களுக்கு வந்திருக்கக்கூடாதா!" என்று எண்ணினார்கள். "உண்மையின் உருவமாகவும்,

அன்பின் பெருக்கமாகவும், அகிம்சையின் தோற்றமாக வும் விளங்கிய காந்தியடிகளா இவ்வாறு இறப்பது?'' என்று துடித்தார்கள் "இஃது என்ன உலகம்'' என்று, உலகத்தை வெறுத்தார்கள். துக்கம் தாங்க முடியாமற் கண்ணீர் பெருக்கினார்கள்.

"காந்தியடிகள் தமக்குத் தீமை செய்த பகைவருக்கும் நன்மையே செய்து யாவருடைய அன்புக்கும் உரியவராக வாழ்ந்த பெரியார். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உண்மையை உலகத்துக்கு எடுத்துரைத்த உத்தமர். தாழ்த்தப்பட்டோர் ஒடுக்கப்பட்டோர் முதலியவர்களுக் காக உழைத்த கருணைக் கடல். பலகோடி மக்களுடைய உள்ளத்திருளைப் போக்கி இன்பமாக வாழும் முறையை அவர்களுக்குக் காட்டிவைத்த அறிவொளி. சத்தியமே என்றும் வெல்லும் என்பதை உலகுக்குக் காட்டியவர். தீமைகளை வெல்லும் ஒப்புயர்வற்ற முறையாகிய அகிம்சையை இரத்தவெறி பிடித்த மக்கள் யாவர்க்கும் போதித்த தியாக மூர்த்தி. சுதந்திர இந்தியாவின் தந்தை. கண்கண்ட தெய்வம் என்று மக்கள் யாவராலும் போற்றப் பட்ட பெரியார். இத்தகையவர் ஒருவனால் சுட்டுக் கொல்லப்பட்டாரே! பயங்கரமான கொலை, பொருத்த மற்ற செயல், நினைக்க முடியாத காரியம், நிகழ முடியாத நிகழ்ச்சி; இது எப்படி நிகழ்ந்தது!'' என்று, யாவரும் எண்ணிக் கலங்கினார்கள். 'அறத்தை மறம் வென்று விட்டதோ; அன்பினைப் பகைமை முறியடித்து விட் டதோ!' என்று பலர் ஐயுற்றனர். 'இந்த நிகழ்ச்சி உல கில் நடக்கப்போகும் தீமைக்கு அறிகுறியாகலாம்' என் றுஞ் சிலர் பயந்தனர்.

> " நத்தம்போற் கேடும் உளதாகுஞ் சாக்காடும்
> வித்தகர்க்கு அல்லால் அரிது ''

என்றார் வள்ளுவர். பூதவுடம்பைத் தியாகஞ் செய்து என்றும் நிலைத்த புகழுடம்பைப் பெற்றுக்கொண்ட வித் தகப் பெரியாராக இப்பொழுது காந்தியடிகள் விளங்கு கின்றார். அவர் புகழ் என்றும் நின்று நிலவுக!



மனத்துளெழுந்த மணிவிளக்கே!

புரிசை.
திரு. முருகேச முதலியார்.

மகாத்மா காந்தி யெனவுலகம்
எல்லா மதிக்குந் தவமணியே!
மகாத்மா! பராத்மா வாகியெங்கள்
மனத்து ளெழுந்த மணிவிளக்கே!
மகாத்மா! உன்னைக் கொல்லவொரு
மதியில் பாவி தோன்றினனோ?
அகாத்மா துராத்மா சனியன்போல்
அந்தோ! உன்னை அடர்த்தனனோ?

மறப்ப தெதனை வைசியரில்
மண்போல் பொன்னை மதித்ததையோ?
மறப்ப தெதனை யுலகவர்க்காய்
மயங்கா துழைத்த வுழைப்பினையோ?
மறப்ப தெதனை பட்டினியால்
வாங்கிக் கொடுத்த அரசினையோ?
மறப்ப தெதனை பிறர்வாழ
மாண்பா ருயிரைத் தந்ததையோ?

நீதிக் கொருவன் சாந்தமெனும்
நிறைவுக் கொருவன் நடைக்கொருவன்
சோதிக் கொருவ னெனவிருந்த
தோன்று லுன்னைச் சுட்டனனே?
வாதிக் கொருவன் ஒருகோடி
மடையர்க் கொருவன் வையமழும்
சேதிக் கொருவன் வசைக்கொருவன்
செகத்தி லேன்தான் செனித்தனனோ?

அவர் வழி நிற்றல்!



திரு. ஆ. சண்முக வேலன்,
பி.ஓ.எல்.

காந்தி அடிகள் இம் மண்ணுலக வாழ்விலிருந்து நீக்கப்பட்டார் என்ற செய்தியைக் கேட்டபொழுது, 'ஆ! அறத்திற்கும் அழிவு வந்ததோ'—என்ற எண்ணத்தில் உலகமே பேரிருளில் மூழ்கிவிட்டதாகத் தெரிந்தது. அப்பொழுதுதான் தமிழகத்தின், வள்ளுவர்தம் அறம் விளங்கும் தமிழ் மண்ணின் தனிப்பெருமை, 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்', 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற தமிழன் கொள்கை,—என் உள்ளத்தில் மின்னொளிபோல் பாய்ந்து நின்றது. என்னே? தமிழ் மண்ணில் காணப்படும் நஞ்சுமிழும் நாகமும் அத்தகைய பெரியார் ஒருவருக்குத் தீங்கு நினைக்கவும் அஞ்சி நிற்குமன்றே! இக்கால விஞ்ஞான உலகில், நம் கண்முன் வாழ்ந்து போந்த அடிகளை—மனிதப் பண்பில் மாண்புற்று விளங்கிய அடிகளை—இயேசு பெருமான் வாழ்க்கையோடு ஒப்பிட்டுக் காண்பது, அடிகள்தம் புகழைக் குறைப்பதாகும். அடிகளை 'அறியாமை என்னும் மதம்' கொன்றது. அடிகள் பெயரால் ஊரையும் பேரையும் மாற்றியமைப்பதுமட்டும் அவரைப் போற்றுவதாகாது; அடிகள் காட்டிய 'அன்பு' மதத்தை அடிப்படையாகக் கொண்டு ஒற்றுமைத் தளையை உறுதிப்படுத்த விழைவோரே உண்மையில் அவர் வழிநிற்பவராவர்.



மகாத்மாவின் மாண்பு !

திரு. பொ. திருகூடசுந்தரம் பிள்ளை,
எம்.ஏ., பி.எல்.

மகாத்மா காந்தியடிகள் மறைந்து விட்டார். அவர் பிரிந்த செய்தி கேட்டு உலக மக்கள் அனைவரும் துயரக் கடலில் ஆழ்ந்து போனார்கள். மக்கள் அனைவரும் ஒரு முகமாகக் காந்தியடிகளைப் போற்றுவதற்குக் காரணம் யாது ?

" உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்தில் எல்லாம் உளன் "

என்று நமது தமிழ் மறை கூறுகின்றது. வாயாற் பொய் கூறுமலும் மெய்யாற் பொய்யான காரியங்களைச் செய்யாமலும் கவனமாக நடந்து கொள்ளலாம். அப்படி நடந்து கொண்டால் மக்கள் நம்மை உண்மையானவர் என்றே எண்ணுவார்கள். இப்படி மொழியாலும், செயலாலும் பொய்யாது ஒழுகினும் உள்ளத்தில் பொய்யனாக இருக்கலாமல்லவா ? ஆகவே புறத்தே பொய்யாமை நிகழ்ந்தால் மட்டும் போதாது. அகத்திலும் பொய்யாமை நிகழ வேண்டுமென்று வற்புறுத்துகிறார் வள்ளுவர்.

ஆனல், புறத்து நிகழ்வதைத்தானே நாம் அறிய முடியும் ? அகத்தே நிகழ்வது யாருக்குத் தெரியும் ? காந்தியடிகள் பொய் கூறவில்லை ; பொய்யாக நடக்கவில்லையென்று தைரியமாகக் கூறலாம். ஆனல் அதுபோலவே

அவர் உள்ளத்திலும் பொய்யில்லாதவர் என்று தைரியமாகக் கூற முடியுமா? உள்ளத்து நிகழ்வது அனைத்தையும் அணுவளவும் ஒளியாமல் உரைத்தால்தானே உள்ளத்தால் பொய்யாதவர் என்று உரைக்க இயலும்?

காந்தியடிகள் அவ்வாறு உள்ளத்து நிகழ்வதெல்லாம் அணுவளவும் ஒளியாமல் உரைத்திருப்பதையும் காண்கிறோம். அவர் தமது வாழ்க்கையில் நாணக்கூடியதாகவுள்ள நிகழ்ச்சிகளையெல்லாம் வெளிப்படையாகப் பச்சை பச்சையாகத் தமது 'ஆத்ம சோதனை' என்னு நூலில் கூறியிருக்கின்றார்.

சென்னையில் பாதிரியாராக இருந்த டாக்டர் ஒயிட்ஹெட் என்பவர் அந்த நூலைப் படித்துவிட்டு, "ஆஹா! இப்படி உள்ளத்திலுள்ள கறைகளையெல்லாம் ஒளியாமற் கூறக்கூடியவர் வேறு யாருளர்? இவரை மகாத்மா என்று கூறுவதற்கு இந்தப் பண்பு ஒன்றே போதும்!" என்று 'இந்து' பத்திரிகையில் எழுதினார்.

ஆம்; அதனால்தான் காந்தியடிகளை மகாத்மா என்று கூறுகின்றோம். அதனால்தான் அவர் உலக மக்கள் அனைவருடைய உள்ளத்திலும் அரியாசனம் பெற்றுவிட்டார்.

'சத்தியம்' என்பது தமிழில் மூன்று சொற்களால் உணர்த்தப் பெறும். உள்ளத்தில் நிகழ்வதை உண்மை என்றும், வாயில் நிகழ்வதை வாய்மை என்றும், மெய்யில் நிகழ்வதை மெய்ம்மை என்றும் நம் ஆன்றோர் வகுத்துள்ளனர். இந்தச் சிறப்பு வேறு எந்த மொழியிலும் கிடையாது என்றே நம்புகிறேன்.

சத்தியத்தின் இந்த மூன்று பண்பிலும் இணையற்றவராக இருந்தார் மகாத்மா காந்தியடிகள். இச் சிறந்த பண்பினையே நாம் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும். அதுதான் மறைந்த அப் பெரியாருக்கு நாம் செய்யக்கூடிய நன்றியாகும். அதற்குரிய ஆற்றலையும் அறிவையும் ஆண்டவன் அருள்வானாக!



மதவெறியை மாய்ப்போம்!

திரு. ம. பொ. சிவஞானம்,
(தமிழரசுக் கழகத் தலைவர்)

கேட்டதைத் தருங் கற்பகத் தருவைக் கதையிற் படித்தோம். அருள் பொழியுங் காமதேனுவைக் காவியத்திற் பார்த்தோம். ஆனல், அரசியலிலே வியத்தகு செயல் புரியுங் கற்பகத் தருவாய், தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் புகலளிக்கும் காமதேனுவாய் அண்ணல் காந்தி நம்மிடையே வாழ்ந்து வந்தார்; 'வாழ்கின்றார்' எனக் களிப்படைந்தது உலகம். 'வாழவேண்டும்' எனத் தவம் புரிந்தது இந்தியா! '125 ஆண்டுகள் வாழ்ந்தே தீருவேன்' என்று வாக்குறுதி தந்தார் அடிகள். ஆனல், அறக்கொடியோன் ஒருவன் எல்லோரது நம்பிக்கையையுந் தகர்த்துத் தவிடு பொடியாக்கிவிட்டான்.

காந்திய நெறியைக் கடைப்பிடித்து மதவெறியை எதிர்த்துப் போராடுவோம்!

"மதம் என்பது சாத்திரங்களைப் படிப்பதன் மூலம் அடைவதல்ல; வெறும் மூளை பலத்தால் மட்டும் அதைக் கிரகித்துவிட முடியாது. நல்ல இதயத்தால் மட்டுமே முடியும்."

—காந்தியடிகள்.

தியாகத்தின் சிகரம்!



திரு. சா. குருசாமி, பி.ஏ.

உலக உத்தமர் தோழர் காந்தியார் கொல்லப்பட்டார்! அவருக்கும் பிறருக்கும் எத்தனையோ கருத்து வேற்றுமைகள் இருக்கலாம். ஆனால் இந்தியத் துணைக்கண்டத்தின் மக்கள் மனத்தில் உரிமை வேட்கை என்னும் விதையை ஊன்றியவர் தோழர் காந்தியாரே யாவர் என்பதை எவரும் மறுத்துக் கூற முடியாது.

காந்தியார் தியாகத்தின் சிகரம். முழுநேரப் பொது வாழ்விற்கே தம்மைக் காணிக்கை யாக்கிக்கொண்ட 'கர்ம வீரர்'. அவருடைய லட்சியங்களிலும் முறைகளிலும் மாறுபட்ட கருத்துடையவர்கள் இருக்கலாம். ஆனால் அவரது தன்னலமற்ற இடைவிடா உழைப்புக்குத் தலை வணங்காத மனிதப் பிறவியே இருக்க முடியாது. அவருடைய அஞ்சா நெஞ்சையும் மன உறுதியையும் பாராட்டாத மனிதன் கிடையாது.

காந்தியாரின் மரணம் பொது வாழ்விலுள்ள எவரும் பொறாமைப்படக் கூடியது என்றே கூறுவோம். தம் லட்சியத்திற்காக, அதை எதிர்க்கும் வெறிக் குணத்திற்கு இரையாகி, உயிர் நீத்தலைவிடச் சிறந்த மரணம் வேறெதுவுமில்லை. காந்தியார் நோய்வாய்ப்பட்டுத் துஞ்சியிருந்தாரேயானால் அவர் மரணம் இவ்வாறு உலக மக்களின் உடலையும் உள்ளத்தையும் உலுக்கியிருக்க முடியாது. "மரணத்தின் வாயிலாகவும் என் குறிக்கோளை வளர்ப்பேன்" என்று கூறாமற் கூறிவிட்டு மறைந்துவிட்டார் மாபெருந் தியாகி!



நன்றி கெட்ட உலகம்!

திரு. கி. ஆ. பெ. விசுவநாதம், திருச்சி.

புத்தர் பெருமான், இயேசு பெருமான், வள்ளுவர் பெருமான், நபிகள் பெருமான் ஆகிய தெய்வத்தன்மை வாய்ந்த பெரியவர்களுடையவும், சாக்ரடீஸ், ஆப்ரஹாம்லிங்கன் முதலிய மனிதத்தன்மை வாய்ந்த பெரியார்களுடையவும் போதனைகளையும் செய்கைகளையும் ஒருங்கே செய்து காட்டிய பெருமை பெரியார் காந்தியடிகள் ஒருவருக்கு மட்டுமே உண்டு. அகிம்சையில் அழியாத நம்பிக்கை கொண்டு வாழ்ந்தவர்கள் அடிகள். குத்தீட்டி ஒருபக்கம் குத்தினாலும், கோடரி மறுபக்கம் வெட்டினாலும், தடியடியால் தலைமண்டை உடைந்திட்டாலும், தளராது பதறாது சகிக்க வேண்டும் என்ற கொள்கையைத் தம் ஆவி பிரியும் வரை அடிகள் அழிய விடவில்லை.

குடிவெறி ஒழியவும், குடிசைத் தொழில் வளரவும், ஏழை மக்கள் இனிய வாழ்வு வாழவும், இந்துமதம் புனிதமடையவும், இந்த நாடு விடுதலை பெறவும், படுத்தும், இருந்தும், பட்டினி கிடந்தும், எழுந்தும் நடந்தும் எத்தனையோ முறை சிறை புகுந்தும் அடிகள் செயற்கருஞ் செயல்களைச் செய்து தம் வாழ்நாளிலேயே வெற்றி கண்டவர்கள்.

இத்தகைய பெரியாருக்கு இந்த நன்றிகெட்ட உலகம் தந்த பரிசு துப்பாக்கிக் குண்டுகள்! இக் குண்டுகளால் தாக்குண்டதும் அடிகளின் வயிறு எவ்வாறு எரிந்திருக்குமென்பதை எண்ணும் பொழுதே நம் அடிவயிறெல்லாம் பற்றி எரிகிறது! கண்ணிலிருந்து வழியும் கண்ணீராலும் அத்தீயை அணைக்க முடியவில்லை.



அன்பு வாழ்க!

வித்துவான் திரு. அன்பு கணபதி

உண்மைக்கும் அன்புக்கும் உலகில் இடம் இல்லை என்பது காந்தியடிகள் மறைவு நமக்குக் கற்பிக்கும் பாடம். உண்மை, அன்பு, ஒழுக்கம்: இவற்றை நிலைநிறுத்த உலகில் அவ்வப்போது எவ்வளவோ பெருமக்கள் தோன்றினர். விலங்கு நிலையிலுள்ள மக்களைத் தெருட்டி அன்பு நெறி வாயிலாக மக்கள் நிலையை உணரச் செய்தனர். மக்களை மக்களாக்க மிகப் பாடுபட்டனர். இத்தொண்டுகட்கு அவர்கள் பெற்ற பயன் சூழ்ச்சி, சிலுவை, கல்லடி, நஞ்சு! இன்று காந்தியடிகள் பெற்றது மூன்று குண்டு!

எவ்வளவோ துறையில் ஏற்றம் பெற்றுவரும் இன்றைய உலகம், உண்மைத் துறையில், அன்பு வழியில் உயர்வு பெறாதது ஏன்? மேற்கூறிய பெரியார்களை மக்கள் மகான்களாக்கினர்; மாதேவர்களாக்கினர். மலர் தூவி வழிபட்டனர்; கண் பெற்ற பயன் என்று கூறி களிப்புக் கடலில் மூழ்கினர். ஆனால், அப்பெரியார்கள் வகுத்த வழி சென்றார்களா? சென்றிருந்தால் இந்த இழிநிலை, உலகில் இன்னும் இருக்குமா?

எனவே, இத்தகைய பெரியார்களுக்கு வந்தனை வழிபாடு செய்வது என்பது, உலகை—ஏன்—தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்வதாகும். அவர்கட்குச் சிலை வைப்பது, படம் திறப்பது எல்லாம் உண்மையாக அவர்களைப் போற்றி மதிப்பது ஆகாது.

உண்மையாகவே காந்தியடிகளைப் போற்றுவது என்பது, அவர் கூறிய—நடந்து காட்டிய—அன்பு நெறியை, உண்மை வழியை நாம் அனைவரும் கடைப் பிடிப்பது—உலகில் அவற்றைப் பரப்புவது—இவையே ஆகும்.



அமரன்

திரு. வல்லிக்கண்ணன்.

ஒளி அணைந்தது—அணைக்கப் பட்டது! இந்தியாவின் இதய தீபம், ஆசிய ஜோதி, உலகத்தின் துருவதாரகை அணைந்து விட்டது. மதம் பிடித்த மக்கட்பதடி ஒருவனால் மண்ணோடு மண்ணாக்கப்பட்டு விட்டது! இருள்—நாட்டிலே, மக்களின் உள்ளத்திலே, உலகின் வரலாற்றிலே, உயிர்க்குலத்தின் மனிதத் தன்மையிலே, இருள் படிந்து விட்டது. களங்கம்—அழிக்க முடியாத கறை—இந்திய நாட்டின் அரசியல் ஏட்டில், இந்து மதத்தின் மீது; மனிதப்பண்பின் மீது.

காந்தியையா கொன்றான் கயவன்? இல்லை. தர்மத்தைத் தீய்த்தான். மனிதப் பண்பின் உயர் லட்சியத்தை ஒழித்தான். மனித மாணிக்கத்தை அழித்து விட்டான். மண்ணோடு மண்ணாய்க் கிடந்த மக்களை, மனித நிலைக்கு உயர்த்தப் போராடிய உத்தம உயிரைக்கொன்றுவிட்டான்.

மகாத்மா பலியானார்—மனித வர்க்கத்தின் பாவத்துக்கு. மனிதப்பண்பை அழித்துவிடும் வெறித்தனத்துக்கு. வெறித்தனத்தை வளர்க்கும் மடமைக்கு. இவற்றின் கருவூலமான மதத்துக்கு.

இத்தகைய மரணத்தால் உத்தமர் இந்தியாவின் இணையற்ற உயிர்ப்பு ஆனார். மனித குலத்தின் மங்காத பேரொளி அவர். மக்களின் இதயக் குகையில் ஒளிர்கிற அணையாத ஜோதியாகிவிட்டார். காலவானிலே, உயிர்க்குலத்தின் பெருவெளியில், என்றும் மின்னக்கூடிய நட்சத்திரமாகிவிட்டார். அவர் அமரன்.

அமரர்க்கும் அமரன்!



வித்துவான், திருமதி
மேரி. மாசிலாமணி அம்மையார்,
எம்.ஏ., எல்.டி.

உலகம் தழைக்க வந்த உத்தமப் பெரியார் காந்தியடிகள் மறைந்தார் என்று கூறுவது எங்ஙனம் பொருந்தும்?

கோடிக்கணக்கான ஏழை மக்கள் கூக்குரலைக் கேட்டு, அவர் குறையை நீக்கவந்த புண்ணியப் புனிதன் போய் விட்டார் என்று கூறுவது பொருந்துமா?

சாத்வீக முறையால், சுதந்தர தாகத்தைத் தீர்த்துக் கொள்ளலாம் என்று இந்திய மக்கட்கும் உலக மக்கட்கும் எடுத்துக் காட்டிப்போன உயர் பிறப்பாளன் ஒழிந்தார் என்ற கூற்றில் உண்மை உண்டா?

சாதி மத நிற வேற்றுமை யகற்றி, சோதிமயமாய் விளங்கும் அப் பரம்பொருள் பாதத்தைக் கண்டடைகிற வனே உண்மைத் துறவியென்று உலகினுக்கு விளக்கிய அறநெறியாளர் அழிந்தார் என்று அறையவும் நமது வாய் கூசுமே! தமக்கென வாழாப் பிறர்க்குரியாளரான அவர் உலகில் தோன்றி, உலகினர்க்கு உய்யும் வழி காட்டியதாலேயே இவ்வுலகம் நீடூழி காலம் நிலைபெற்று வாழுமன்றோ!!

வாய்மையைக் கடைப்பிடித்து, வாழ்க்கை முறையைச் சீர்திருத்தி, அரசியலிலும், சமூகத்திலும், பொருள் செய்யும் முறையிலும், அருளுடன் காட்சியளித்த அமிர்த வாசகன் அழிந்தாரிலர்; அமரர்க்கும் அமரரானார் என்றே கூற வேண்டும்.



நாட்டின் உயிரே!

வித்துவான்
திரு. மு. அருணாசலம் பிள்ளை.

இந்திய நாட்டின் உயிரே! இருகண்ணே!
கண்மணியே! இணையில் லாத
இந்திய நாட்டின் முடியே! அம்முடியின்
முதல்மணியே! இதய மென்னும்
இந்திய நாட்டின் துடிப்பே! அத்துடிப்பின்
செந்நீரே! எங்கள் தாயாம்
இந்திய நாடே! காந்தி யெம்மானே!
எங்குற்றாய்? இயம்பி டாயோ?

உண்மை வடிவே! பொறையின் ஒருருவே!
அருளறத்தின் ஊற்றே! உள்ளத்
திண்மை வடிவே! நினைவு செயல்மொழியென்
றிவைமூன்றுந் திறம்பா வாழ்க்கைத்
தண்ணளிசேர் திருமுகத்தாய்! தனக்கெனவா
ழாதபெருந் தன்மை யாள!
பெண்மை யுலகம்ஓங்கும் பெற்றியுரைத்
துலகுய்யப் பிறந்தாய் நீயே!

விடுதலையே யெம்நாடு வேண்டுவதென்
றுரைத்துமிக முயன்று பெற்றாய்!
விடுதலையால் நீயடைந்த பயனென்னே?
வெறியன்ஒரு சிறியன் நின்னைச்
சுடுதலையே, உன்னுடலம் சோர்தலையே,
யமுனையின்பால் சுட்டெ ரிக்கப்
படுதலையே பார்த்திருந்த பாழுலகம்
இனிவாழும் பரிசென் ஞமோ?

அன்பின் ஊற்று!



திருமதி
இராஜரத்தினம் அம்மையார்,
எம்.ஏ., எல்.டி.

மாநிலம் மதிக்கும் உத்தமர் மகாத்மாவின் மறைவு உலகில் இருள் சூழச் செய்தது. அவர் எளிய வாழ்க்கையின் ஏற்றங் கண்டு குடிசைத் தொழிலின் குணத்தையுங் கூறியதன்றி, அவற்றைப் பின்பற்றியுங் காட்டினர். நலம் நிறைந்த சான்றோராய் உலகினுக்கு நண்பராய், நம்நாட்டுச் சித்தர்களைப்போல் அற்புதஞ் செய்து விடுதலை பெற்றார். பாரெங்கும் உய்யப் பட்டினி கிடந்தார்; மக்கள் வாழ மனையைத் துறந்தார்; துன்பந் துடைக்கத் துறவைப் பூண்டார்; கொடுமை யகற்றக் கோபங் களைந்தார்; நவகாளிக்கு நடந்தே சென்றார்; அரிசனங்களின் அன்னையானார்; அல்லாவின் பெயரைச் சொல்லியே துதித்தார்; எம்மதமும் சம்மதமென நல்லுரை கூறினர்.

கல்விக் களஞ்சியமாய், அன்பின் ஊற்றாய், ஒற்றுமையின் உயிராய் இருந்த அவர் படுகொலைக்கு ஆளானர்; அகிம்சைக்காக உயிரையே தந்தார்; ஆத்திரமின்றி அமைதியாய்த் தொழுது, அரிநாமத்தைக் கூறித் துதித்தார். அவருடைய கொள்கைகளைப் பின்பற்றினல் இவ்வுலகம் உய்யுமென்பது திண்ணம். காந்தியம் வாழ்க! சாந்தி நிலவுக!



அறிவொளி அகன்றது!

திரு. ஆலங்குடி, முத்தையன்.

அந்தோ! உலகப் பேரொளி மறைந்தது. அறிவொளி அகன்றது. உலகொடு மக்கள் உள்ளமும் இருண்டது. இந்தியா இணையற்ற அறநெறி வீரனை, அன்பு வழி கண்ட ஆசானை இழந்தது. உலகமோ தனது ஒப்பற்ற நண்பனை, ஒரு தனிப் பேரறிஞனை இழந்தது. இத்துயரம் ஆற்றுதற்கரிதே!

மத வெறியாம் மலையரவே! நின் சதி இருந்தவாறென்னே! அன்று பௌத்த சமணரைப் பாழாக்கினையென்று ஏடுகளிற் படித்தோம். மேனாட்டு அறிஞர்களை அழித்தொழித்ததையும் அறிந்தோம். இன்றோ உன் நய வஞ்சகத்தை, செய்ந்நன்றி கொன்ற தன்மையைக் கண்கூடாகக் கண்டோம். பாம்பென்றும் பாராது பாலூட்டி நாளும் போற்றிய புண்ணியனையே மாய்த்தனையே! சிந்தனைச் சிற்பியைச் சிறிதும் இரக்கமின்றிச் சிதைத்தனையே! இன்னும் என்னென்ன எண்ணமிட்டுள்ளாயோ? யாரே அறிவார்!

இவ்வுலகினின்றும் அடிகளார் மறைந்தார் என்றெண்ணுதல் வேண்டா. ஏன்? அவர் இன்று எல்லா மக்களுடைய உளக் கோயிலிலும் இடம் பெற்றுவிட்டார். அணையாத விளக்கு ஆயினார். இனி நம் கடனென்ன? அப் பெரியார்தம் அடிச்சுவட்டைப் பின்பற்றி, அறவழியிற் பணியாற்றி இன்புலகைக் காணுவோமாக! அதுவே அவர்தம் அன்புநெறி தழைக்கவும், பெயர் நிலைத்திருக்கவும் ஏற்றதொரு வழியாகும்.

அறத்தினைப் பாவம் வெல்லுமோ ?



வித்துவான்
திரு. எல். நாகராஜன், பி.ஓ.எல்.

நாட்டவர் தந்தை யாகி
நலமெலாம் பிறர்க்கே யீந்த
எட்டினி லடங்காப் பண்பின்
எந்தலே ! எம்மை இந்த
நாட்டிலே கதறி வாடி
நலிந்துபின் சோர்ந்து வீழ
வீட்டினை யடைந்தாய் அந்தோ !
வேறினிப் புகல்தாம் யாரே ?

அறந்தனைப் பாவம் வெல்லல்
ஆகுமோ என்னும் ஐயம்
அறந்தரு வள்ள லாய
அண்ணலுன் வாழ்க்கை இன்று
திறம்பட ஓதிற் றென்ன
திசையெலாம் மக்கள் நைந்து
கறவைநற் பசுவை நீத்த
கன்றெனக் கதறு கின்றோம் !

அண்ணல்எம் காந்தி சொன்ன
அரும்பெரும் கொள்கை யெல்லாம்
எண்ணமும் செயலு மொன்றாய்
இருத்தலில் காட்டி மேலாம்
புண்ணியன் நாமந் தன்னைப்
புவிதனில் நிலைக்கச் செய்தல்
நண்ணிய கைம்மா றாகும்
நண்பரீர் ! எழுமின் இன்னே !



காந்தியம் பெருமான் !

' மங்கல கிழார் '
திரு. குப்புசாமி முதலியார்.

வாழ வழிகண்ட பெருமக்களுள் காந்தியம் பெருமான் ஒருவராவர். அவர் நம் கண்முன் தோன்றிப் புகழொடு விளங்கினார்—விளங்குகின்றார்.

அவர்தம் ஏது நிகழ்ச்சியானது அவரை இந்திய நாட்டினின்றும் அகற்றித் தென்னாப்பிரிகாவிலுள்ள நந்தம் தமிழ் மக்களிடம் கொண்டுய்த்தது.

இயற்கையிலேயே அமைவுடைய அவர்தம் உள்ளம் தமிழரின் கூட்டுறவால் விளக்கங் கொண்டது. பொருள் தேடச் சென்ற அவர் மனம் திரிந்து, அருள்தேடி ஆன்ம உணர்ச்சி பெற்றது. அங்கேதான் உலகப் பொது மறையாம் உயர்பேர் திருக்குறள் என்னும் தெய்வம் ஆங்கில மொழி வடிவுகொண்டு அவரை ஆட்கொண்டது; அவர் தம் உள்ளத்தை மேலும் கனிவித்து ஒளிரச் செய்தது. தெய்வ நூலின் மூல உருவைக்காண அப் பெருந்தகையார் தமிழைக் கற்றார்; தமிழரொடு கலந்து தாமும் தமிழரானார். காந்தித் தமிழர், தமிழக் காந்தியானார்.

அவர் தம் தமிழ் உள்ளத்தால் சாதி சமயச் சிக்கறுத்துத் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளரானார்; அங்குத் தமிழர் பட்ட—படுகின்ற இன்னலுக்கு இளகித் தம்மையே உவந்தளித்தார்; சொல்லொணாத் துன்பமெல்லாம் பட்டுச் சுடச் சுடரும் பொன்போல் ஒளி பெற்றார். இவ்வாறு இருபது ஆண்டுகளுக்குமேல் அவர் தம் வாழ்க்கையின் வகை கண்டு விறுகொண்டு விளங்கினார்.

ஒரளவில் மலர்ந்த அவர் உள்ளம் இந்திய நாடு முழுவதும் பரவியது. பரவவே, அவர் இங்குள்ள அரசியல்

போராட்டத்திலும் முனைவுகொண்டு வெற்றி பெற்றார்; மக்களின் அடிமைத் தளையை அறுத்தெறிந்து விடுதலை கண்டார். அவர் தம் புகழொளி உலகமெல்லாம் பரவியது. அவர் வாழ்ந்த வாழ்க்கை அருமை பெற்றது.

காந்தியம் பெருமான் தங்குறை தீர்வுள்ளாது, தளர்ந்து பிறர்க்குறாஉம் வெங்குறை தீர்த்து விழுமியோரானார். கைம்மாறு வேண்டாக் கடப்பாட்டின் மாரியேயன்றிப் பாரியுமானார். தம்மைக் குறைக்குந் தனையும் குளிர் நிழலைத் தந்து மெய்யன்பரானார். இறுதியில், பெயக்கண்டு நஞ்சுண்டும் அமைந்தார். என்னே வித்தகரின் நாகரிகம்!

கோயில் எடுத்தலும், குறியீடு வைத்தலும் கண்மூடி வழக்கம். அவர் வாழ்ந்த வாழ்க்கை வழிகண்டு வாழ்வதே காந்தி வழிபாடாம்.

காந்திப் பெயரரசே!

புலவர். திரு. கா. ர. கோவிந்தராஜ முதலியார்.

பொன்னே! மணியே! நல்லியல்சேர்
பொருவில் வாய்மைக் குறைவிடனே!
தன்னே ரில்லா அருளென்னும்
தண்ணென் கதிரார் மாப்பரிதீ!
அன்னே! அப்பா! எனவுலகோர்
அரற்றி யேங்கி மனந்தளர
என்னே பிரிந்து சென்றனை நீ
இணையில் காந்திப் பெயரரசே!

கண்ட கண்கள் புனல்பாயக்
கருது முள்ளம் தளர்ந்துருக
அண்டம் விண்ட தெனமக்கள்
ஆர்த்துச் சூழ்ந்து பெரிதாற்ற
அண்டர் பெற்ற அமுதினுஞ்சீர்
அமைந்த நீதி யாமமுதம்
கொண்டிங் குலகை அருத்தியநீ
குறையென் உலகைப் பிரிந்ததற்கே?



கவுந்தியடிகளும் காந்தியடிகளும் !

"உயிர் உறவோன்"
திரு. டி. எஸ். ஸ்ரீபால்.

சத்தியம் அஹிம்ஸை என்ற இரு பேரறங்களும் மகாத்மா காந்தியடிகளின் உத்தமமான அழகிய குரலின் வாயிலாக நாள்தோறும் உலகெலாம் ஒலித்துக்கொண்டிருந்தன. அப்பெருமகன் திருமொழி, அனைத்துயிர்க்கும் அரண் செய்வதாய் அமைந்திருந்தது. அத்தகைய சிறந்த அறவுரைகளின் குரலை இனி எந்நாளும் கேட்க முடியாமல் செய்துவிட்டான் பாவி கோட்ஸே. மகாத்மா காந்தியடிகளுடன் அவ்விரு பேரறங்களும் மறையவில்லையாயினும் இவ்வுலகம் எவர் வாயிலாக அவ்வுரைகளைக் கவனமாகக் கேட்டு இன்புற்றதோ, அத்தூயோனின் குரலால் ஒலிக்க இயலாமற் போனது ஒரு பெரும் இழப்பேயாகும்.

வாய்மையையும் கொல்லாமையையும் மற்றெல்லா அறங்களைவிடச் சாலச் சிறந்ததெனும் அடிகளின் தூய வாழ்க்கைக்கு 'ராய்சந்த்' என்ற சமண அறிஞரின் கூட்டுறவுந் துணைசெய்தது.

"யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற"

"ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று"

என்ற இரு குறள்களும் மகாத்மா காந்தியடிகளின் கொள்கைகளுக்கு எவ்வளவு தூரம் அரண் செய்கின்றன வென்பதை எண்ணிப் பாருங்கள் !

"குயவரான ஆண்டவன் கரத்தில் நான் ஒரு பிடி மண்ணே தவிர வேறென்றுமில்லே. முக்கியமானது சத்தியமும் அஹிம்சையுந்தான். இவை எங்கு இருக்கின்றனவோ அங்கு முடிவில் எல்லாம் சரியாகவே முடியும். இது தவறவே முடியாத நியதி" எனவும், "என்னேப் போல் நூற்றுக்கணக்கானவர்கள் அழியட்டும்; ஆனால் சத்தியமும் அஹிம்சையும் நிலே நிற்கட்டும்" எனவும் அடிக்கடி அடிகள் வற்புறுத்தி வந்தார். இவ்விரு அறங்களால் அடையாத பொருளும் இன்பமும் இல்லே என்பது அவரது உறுதியான எண்ணம்.

நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தில் ஒரு காட்சி! கவுந்தியடிகள், கண்ணகி, கோவலன் ஆகிய மூவரும் மதுரையை நோக்கிச் செல்கின்றனர். வழியில் ஒரு பிராமணனேச் சந்தித்து மதுரைக்கு வழி கேட்கின்றனர். அவனே புண்ணிய சரவணம், பவகாரணி, இட்டசித்தி ஆகிய மூன்று பொய்கைகளின் பெருமையைக் கூறி, அவைகளில் நீராடி அதனுலுண்டாம் பயனேப் பெற்று அதன் பின்னர் மதுரைக்குச் செல்லும்படி குறிப்பிடுகின்றன். இதனேக் கேட்ட கவுந்தியடிகள்,

"நலம்புரி கொள்கை நான்மறை யாள,
பிலம் புகும் பெற்றி ஈங்கில்லே!
வாய்மையின் வழாது மன்னுயி ரோம்புனர்க்கு
எய்தா அரும்பொருள் உண்டோ?"

எனப் புண்ணியப் பொய்கைகளில் நீராடும் போலிக் கொள்கையைக் கண்டித்து, சத்தியம், அஹிம்சை ஆகிய இரு அறங்களின் மாண்பினேப் பகர்ந்துவிட்டு வழி நடக்கின்றனர். எனவே பண்டையத் தமிழர் கண்ட உண்மையை இளங்கோவடிகள் கவுந்தியடிகளின் வரலாற்றின் வாயிலாக வாய்மையையும் மன்னுயிரோம்பும் அஹிம்சையையும் உலகிற்கு அறிவுறுத்தியுள்ளார்கள். இன்றைய உலகம் அவ்விரு அறங்களாலுண்டாம் பயனேயும் பெருமையையும் மகாத்மா காந்தியடிகளின் வாழ்க்கையில் கண்டு களிக்கின்றது.

திருவள்ளுவனாரும், காந்தியடிகளும் !

திரு. ரா. விசுவநாதையர், எம்.ஏ.

உயர்ந்த உண்மையான மானிடப் பொது இயல்பைக் கண்டு, அதனை எல்லா மக்களும் வேற்றுமையின்றி விளக்கிக்கொள்ளும் வண்ணம் கூறிய பெரியோர்கள் சிலர் உண்டு. அவர்க்கு 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்'. அவரை இடமும் காலமும் பாதிக்கவில்லை. ஒரே உண்மையை அவர்கள் கண்டு கூறினர். அத்தகைய சான்றோர்களுள் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னே தமிழகத்தில் வாழ்ந்த திருவள்ளுவரும் இன்று நம் கண்முன் நின்று மறைந்து சென்ற காந்தியடிகளும் கொள்கையில் ஒருமைப்பாடுடையோர்.

குறளில் 'இன்னா செய்யாமை' என்பது ஓர் அதிகாரத்தின் தலைப்பு.

> " எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானும்
> மாணா செய்யாமை தலை "

> " இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
> நன்னயம் செய்து விடல் "

இவை வள்ளுவரின் மணிமொழிகள். இச்சிறந்த பண்பினையே காந்தியடிகள் அஹிம்சை என்றார்.

அடிகள் இவ்வறத்தை அரசியல் கிளர்ச்சிகளுக்கும் சமூகப் பிளவுகளைத் தீர்க்கவும் கருவியாகக் கொண்டு செயல் முறையில் சாதித்துக் காட்டினர்.

இவ்விரு சான்றோர்களும் ஒருமுறையையே பின்பற்றி ஒருண்மையையே உலகுக்கு அருளினர் என்பதை அஹிம்சை என்னும் பண்பு அறிவிக்கின்றது புலனாகும். இவர் போன்ற மகான்கள் யாவரும் ஒரே பரம்பொருளின் உண்மைத் தோற்றங்களே யாதலால் இவர்களின் கொள்கைகளில் ஒற்றுமை காண்பதில் வியப்பேயில்லை.

அன்பு வடிவினர்!



வித்துவான்

திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை.

காந்தியடிகள் மக்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட மாபெருந் தலைவர்—உலகத் தலைவர். அவரை அத்துணைப் பெரியராக்கியது எது? அவரது அருளிரக்கமே. அவர், மக்கள் நலம் பெறவும், நாடு நலமடையவும் பன்முறை அறப்போரில் ஈடுபட்டு வெற்றி கண்டார். எத்துணை இடையூறு வரினும் தாம் கொண்ட நல்லறத்தை நழுவ விடாத நலத்தகுவீரர் காந்தியார். அவர் பெருமுயற்சியினாலேயே நம் இந்திய நாடு உரிமை பெற்றது.

பின்னும், அன்பு வடிவினரான காந்தியடிகள் தம் உயிரையும் மதியாது, உண்ணாவிரதமிருந்து இந்து முஸ்லீம் ஒற்றுமைக்காகப் பாடுபட்டார்! 'இன்னா செய்தார்க்கும் இனியவே செய்க' என்று உபதேசித்தார்.

அந்நெறி நிற்பவர்க்கல்லவோ அவ்வுரை பயன் தரும்? அவரது மாண்பறியா மூடன் அவரைச் சுட்டுக் கொன்று விட்டான்!

"கிள்ளையொடு பூவை யழுத கிளர்மாடத்(து)
உள்ளுறையும் பூசை யழுத உருவறியாப்
பிள்ளை யழுத பெரியோரை யென்சொல்ல
வள்ளல் அருட்காந்தி வானடைந்த செய்தியினால்"

உலகமே துக்கக் கடலில் மூழ்கிவிட்டது! காந்தியடிகளார் அன்புநெறி உலகை உய்விப்பதாக!



இணையில்லாத் தலைமகனார் !

வித்துவான்
திரு. மறை. திருநாவுக்கரசு.

எல்லா உயிர்களுக்கும், பொருள்கட்கும் முதற் காரணனும் கடவுளை யடைதலே பிறப்பின் பெரும் பயன் என்றும், அவனை இடைவிடாது வழிபடுதல் இன்றியமை யாததென்றும், நல்லொழுக்கங்கள் எல்லாம் இறைவனைச் சார்ந்தே உள்ளன என்றும், கொல்லாமை, உண்மை என்ற இரு பேரறங்களாலேயே உலகம் அமைதிபெறும் என்றும் உணர்த்தி ஒழுகிப் பகைவனையும் அன்பால் நேசிக்கும் நம் இணையில்லாத் தலைமகனார் மறைந்தனரோ ! அருள் வடி வினராய நம் மகாத்மா காந்தி நம் பண்டைய இந்துசமய மெய்ஞ்ஞானிகள் அனைவரும் அறிந்துணர்த்திய மெய்ந் நெறி நின்ற பெரியோராவர். கடவுளை மறந்து பெருந் துய ரில் ஆழும் இவ்வுலகில் தம் மனத்தாலும், சொல்லாலும், செயலாலும் தெய்வ வாழ்வு வாழ்ந்து காட்டிய மகாத் மாவின் அறநெறியைக் கடைப்பிடித்துத் தொண் டாற்றுவோமாக.

“வேறொரு மொழியைக் கற்க விரும்பித் தாய் மொழி யைப் புறக்கணிப்பது எந்த மாகாணத்திற்கும் நன்மை யன்று.”

—காந்தியடிகள்.

ஒரு பெருந் தத்துவம்!



திரு நாரண. துரைக்கண்ணன்

காந்தியடிகள் மறைவுற்றதை இயற்கை என்று கருதி மனச்சாந்தி கொள்ள முடியவில்லை. ஆனாலும், நாம் வலிந்து மன அமைதி செய்துகொள்ள வேண்டியதைத் தவிர வேறு வழியில்லை.

காந்தியடிகளிடம் நாம் உண்மையில் அன்பும் மதிப்பும் கொண்டிருக்கிறோமென்றால்—அவரை உண்மையில் மறக்கவில்லையென்றால், அவர் மனிதகுலத்துக்குச் செய்து வந்த மகத்தான சேவையை நாம் தொடர்ந்து செய்ய முயலவேண்டும்.....பகைவர்களுக்கும் அருள் புரிந்த பண்புள்ள நெஞ்சம் படைத்தவர் காந்தியடிகள் என்பதைக் கடைசிக் காலத்திலும் அவர் காட்டிவிட்டார்.

காந்தியடிகளைப்போல், உலகில் இதற்குமுன் யாரும் பிறந்ததில்லை; இனிப் பிறப்பார்களோ என்பதும் சந்தேகம். காந்தியடிகளின் போதனைகளும் சாதனைகளும் உலக மக்களின் உள்ளங்களில் அழியாத இடம் பெற்றுவிட்டன; இந்தியாவின் பெருமையை உலக நாடுகளிடையே உயர்த்திக் காட்டியிருக்கின்றன. இந்தியா என்றால் காந்தியின் பெயர்தான் மற்ற நாட்டவர்களின் நினைவுக்கு முன்பாக வரும். இந்தியாவைவிடக் காந்தியடிகளுக்கு நிலையான நினைவுச் சின்னம் வேறு இல்லை. ஏன்? ஒவ்வொரு இந்தியனும்கூடக் காந்தியின் நடமாடும் நினைவுச் சின்னம் தான். காந்தி சாதாரண மனிதரல்லர்; இந்தியாவின் ஒரு பெருந் தத்துவம்.



நந்தா ஒளி விளக்கே!

புலவர் திரு. குழந்தை

நந்தா ஒளிவிளக்கே! நாட்டுரிமைப் போர்புரிய
வந்தாய்! உடைந்த மனவுறுதி யைமீட்டுத்
தந்தாய்! ஒருவன்கை தன்னால் மடிந்தனையே!
அந்தோ! இனியமைதிக் காருளரே இந்நாட்டில்!

பேருலக மேயுன் பிரிவாற்றா தேயழுத,
ஊருடனே அவ்விரவும் உறங்கா திருந்தழுத,
நேருபடே லும்புலம்பி நின்றழுதா ரென்றாலக்
காரறிவா ளன்மனது கல்லோ! இரும்போகாண்!

கொன்னே யுனைச்சுட்டுக் கொன்றொழித்த வக்கொடியன்
என்னே இரக்க மெனும்பொருளில் லாதவனோ?
அன்னே! அலாதுநீ அவனுக் கிழைத்ததென்னே!
இன்னாசெய் யாமைக் கினியாரிப் பேருலகில்?

நல்லோய்! உனதுடலைச் சூழ்ந்துநம் நாட்டினரப்
பொல்லோனை வைது புலம்பியதைப் பேசுதமிழ்
அல்லாத இந்திமொழி யாயினுங்கேட் டேதமிழர்
எல்லோருங் கூடி யிரங்கிப் புலம்பினர்காண்!

ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்கும் பொருளொன் றிலையென்றே
அன்றோது வள்ளுவனார் ஆய்மொழிபோல் எம்மடிகாள்!
நின்று நிலவுகவிந் நீணிலத்துன் நீள்புகழே!



பெருந்தன்மை வாழ்க!

புலவர்
திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளை

தமிழ் மக்களுடைய மிக்குயர்ந்த நாகரிகத்தை எடுத்தியம்பும் உலக முதல்நூலாகிய திருக்குறளிலே வகுக்கப்பெற்றுள்ள ஒப்பற்ற பண்புகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கிய காந்தியடிகளின் மறைவு மறக்கமுடியாத துன்பம் தருவது. கொடிய பகைவரையும் நண்பராக்கி மகிழ இடைவிடாது முயன்ற அவர் பெருந்தன்மை யாவராலும் கைக்கொள்ளப் பெற்ருல் துன்பம் மறையும், இன்பம் ஓங்கும். கடவுள் அருள்புரிவாராக!



புகழார்ந்த காந்தி!

நெற்குப்பை
திரு. இராமசுப்பிரமணியன்

உத்தமனை இழந்ததனல் உலகெல்லாம் தவிக்கிறதே! உண்மை அன்பின்
புத்தனைப்போல் நபியினைப்போல் ஏசுவைப்போல் புகழார்ந்த காந்தி
[யின்சொல்
அத்தனையும் தித்திக்கும் அமுதமென நாம்கண்டோம்! அண்ணலாரின்
சத்தியமும் நல்லறமும் தழைத்திடநற் பணிசெய்வீர் தரணியோரே!



மனத்திட்பம் வாய்ந்த மாவீரர்!

பண்டிதை, திருமதி
எஸ். கிருஷ்ணவேணி அம்மையார்.

உலகிற்கு ஊன்றுகோலெனத் திகழ்ந்த நம் காந்தியடிகள் தூய உள்ளம் வாய்ந்த ஓர் அறச் செல்வர்; பொறுமைப் பணிபூண்ட புண்ணியர்; தன்னலங் கருதாத் தகைமையர்; மனத்திட்பம் வாய்ந்த மாவீரர்.

அறம் என்பது என்ன? மனத்துக்கண் உண்டாகும் மாசுகளை நீக்கி, தூய எண்ணங்களை எண்ணுதல்தானே! அவர் நெஞ்சில் என்றேனும் வஞ்சனை குடியேறியதுண்டா? பகைவருக்கேனும் தீங்கிழைக்க அவர் கருதியதுண்டா? அறப்போரன்றி மறப்போரை அவர் மேற்கொண்டதுண்டா? அவர் சென்ற அறவழியன்றோ, ஏதிலரையும் அவர்பால் ஈர்த்தது!

தாழ்த்தப்பட்டவரை உயர்த்தல், வறுமைக் கடலில் வீழ்ந்தவரைக் கரையேற்றல், அடிமை விலங்கால் கட்டுண்டவரை விடுவித்தல் முதலியவற்றில் நம் அறிஞர் கொண்ட முயற்சியும் அடைந்த அல்லல்களும் அளவிடற்பாலனவோ!

அவர் மனத்திட்பம் குண்டுக்கு அஞ்சினதா? பகைவருக்குப் பதுங்கி நின்றதா? தம்மை மறைத்து ஒளித்ததா?

இணையற்ற சான்றாண்மையாளரை நாம் ஓர் இமைப் போதில் இழந்துவிட்டோம். இது பெரிதும் வருந்துதற்கிடமானதேயாகும். ஆயினும், நாம் அவருடைய உயர்ந்த கொள்கைகளுள் சிலவற்றையேனும் கடைப்பிடித்து நாட்டிற்கு நன்மை செய்ய முயல்வதே அவருக்குச் செலுத்தும் நன்றியாகும்.

தயை பொறை சேர் அண்ணல்!



'செல்லூர்க் கிழார்'
திரு. செ. ர. இராமசாமி பிள்ளை

காந்தியெனும் பெயர்கொண்டே உலகிலொளி
காட்டிவந்த கருணைக் குன்றே!
மாந்தரிலே நின்போல உலகெங்கும்
தேடிடினும் வாய்ப்பர் கொல்லோ?
ஆய்ந்துணரா முழுக்கயவன் நின்பாலே
அணுகிவந்து குண்டால் நின்னைச்
சாய்ந்திடவே செய்தனனே! தயைபொறைசேர்
அண்ணலெனத் தானென் றோதே!

தண்டியாத் திரைசெய்து உப்புவரிச்
சுமையொழித்த தாள்கள் எங்கே?
லண்டனிலே நமதுரிமை உரைவழங்கி
வந்ததிரு நாவு மெங்கே?
கண்டவர்கள் வியந்தேத்தும் பொக்கைவாய்ச்
சிரிப்பெங்கே? காம்சந் தீந்த
பண்டிதனே! இவையெல்லாம் எங்குகொண்டு
பறந்தாயோ? பகரு வாயே!



தூண்டாத சுடர் விளக்கு!

திருமுருக
கிருபானந்தவாரியார்

அறந்தனையே உலகமெலாம் அறிந்து நாளும்
அகிம்சையடைந் தல்லலற அவனி மீதிற்
பிறந்தனையே மோகனதா சென்னுங் காந்திப்
பெருந்தகையே! பூதவுடல் பொருந்தா தென்று
துறந்தனையே மதவெறியைக் காணேன் என்று
தூண்டாத சுடர்விளக்காய் விளங்கி எம்மை
மறந்தனையே உயிர்பிரியும் போதும் ராம
மந்திரத்தை மறவாத மகாத்து மாவே!

அருளொழுகு மலர்க்கண்ணும் அமல இன்ப
அன்பொழுகுந் திருமுகமும் அரிய ஞானப்
பொருளொழுகு மலர்வாயும் கருணை வாய்மை
பூண்டொழுகுந் திருவுளமும் கீதை யோதுந்
தெருளொழுகுந் தேன்மொழியும் தெய்வத் தன்மை
சேர்ந்தொழுகுந் திருவுடலுங் காண்ப தென்றோ?
இருளொழுகு மனத்தினரா யுலகம் ஏங்க
எங்கொளித்தாய்? காந்தியெனும் எந்தாய்! எந்தாய்!!

இதழ்கள் பாடின

நியூஸ் கிரானிகிள் [லண்டன்]

மகாத்மா காந்தி கொலை செய்யப்பெற்றது ஏனைய அரசியற் கொலைகள் எல்லாவற்றையும்விட மிகக் கொடியதாகும்.

நம்மை நடத்திச் செல்ல ஓர் ஆளும், வழிகாட்டச் சுடர் விளக்குகளும் வேண்டும். நாமிருக்கும் இக்காலத்தைப் போல் இவ்வளவு அமைதி யிழந்து அல்லற்பட்ட காலம் வேறு எதுவும் இல்லை. இக் காலத்திலே மேலே குறிக்கப்பட்டுள்ள இரண்டும், இந்தியர்களிலே சிறந்தவரான இந்த மகான் உருவிலே நமக்குக் கிடைத்தன.........கீழ்த்திசையிலே தூண்டி விடப்பட்ட பேரொளி அணைக்கப்படவில்லை. ஆனால் ஒளி வடிவினனான கடவுளுடன் அஃது ஒன்றுபட்டுக் கலந்திருக்கிறது என்பதைக் காண்கிறோம்.

லண்டன் டைம்ஸ்

ஒரு விளக்கு அணைந்துவிட்டது! மலைகளிலும் சமவெளிகளிலும் மட்டுமல்லாமல் உலக முழுவதிலும் காந்திப் பெரியாரை நினைவில் வைத்துக்கொண்டிருப்பார்கள். 'பைபிள்' புதிய ஏற்பாட்டில் சொல்லி யிருப்பதுபோல் அவர் தம்முடைய பகைவர்களையும் நேசிக்க முயன்றார்.

அவர் தமது ஆன்ம வலிவைப் பரம்பரைச் சொத்தாக விட்டுச் சென்றிருக்கிறார்.

நியூயாக் ஹெரால்ட் ட்ரிப்யூன்

அவருடைய அரசியல் நடவடிக்கைகள் ஆன்மீகத்தில் ஆழமாக வேரூன்றி யிருக்கின்றன. அவருடைய கொலையை வெறும் துக்க நிகழ்ச்சியாக மட்டும் கருதாமல் 'லட்சிய சித்தி' யாகவும் செய்யலாம். மறைவிற்குப் பிறகும் அவருடைய செல்வாக்கு நீடித்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

ட்ரிப்யூன் [அமெரிக்கா]

குருதி தோய்ந்த கைகளுடன் அதிகாரம் தாங்கியவர்களான ஹிட்லர், ஸ்டாலின், ரூஸ்வெல்ட் ஆகியோர் என்ன நினைத்தார்களோ அதற்கு எதிராகவே தம் கருத்தைத் தெரிவித்து வந்தவர் காந்தியார். ஒரு குறிக்கோள் நிறைவேறுவதற்குப் பலாத்காரம் பயன்படுவதை எதிர்த்தவர் அவர். அவரது கருத்தும், நல்லுரையும் சரியா தப்பா என்பது இனிக் காலப்போக்கில் தெளிவாகத் தெரியும்.

நியூயார்க் டைம்ஸ்

ஒளி மறைந்துவிட்டது; அவரது அழிவில்லாத ஆன்மா இன்று இந்தியாவோடு நில்லாமல் உலக முழுவதையும் அளாவி நிற்கிறது.........நாம் நாள்தோறும் பார்த்த மகான் இன்று வரலாற்றிலேயே இடம் கொண்டுவிட்டார். அவர் விட்டுச் சென்றுள்ள அறநெறிகளின் ஆற்றல் காலப்போக்கில் பலாத்காரக் கொள்கைகளையும் ஆயுத சாதனங்களையும் வென்று ஓங்கி நிற்க வேண்டும்.

லைப் [அமெரிக்கா]

பெரியோருடைய குற்றங் குறைகளை ஆராய்ந்து அவருடைய பெருமையைக் குறிப்பது மேனாட்டு வழக்கம். ஆனால் இவரைப் பொறுத்தமட்டில் அவ்வாறு நடத்தலாகாது. காந்தி ஒரு பெரியார் என்பது மட்டுமெல்ல; அவர் எல்லா மக்களுக்கும் பொதுவான ஒரு தூய சான்றோரே ஆவார். பல நூற்றாண்டுகளாக மேனாட்டில் தோன்றாத ஓர் உத்தமர். அவரே அமைதியையும் உடன்பிறப்பியலையும் அறிவுறுத்திய மகான்களில் தலைசிறந்தவர்.

லாரோர் [பிரஞ்சு]

பலாத்காரத்தைவிட சகோதரத்துவத்தில் நம்பிக்கை கொண்டதால்தான் காந்தியார் பலாத்காரத்துக்கு இரையானார். உணர்ச்சி வயப்பட்டு நிதானத்தை இழக்கக் கூடாதென்று போதித்ததன் பயனாகப் பைத்தியக்காரன் கைகளில் அவர் முடிவுற்றார். நாட்டுக் கிளர்ச்சிகளையும் தாண்டி அவர் ஓங்கி நின்றார்.

பிராங் டிரூர் [பிரஞ்சு இடதுசாரி வெளியீடு]

இனி உலகில் மற்றொரு காந்தி தோன்றுவது மிகவும் அரிது. இந்த மனிதரின் நினைவை உலகத்தினர் என்றும் போற்றி வளர்ப்பர்.

லாப் [பிரஞ்சு]

நாள் செல்லச் செல்லக் காந்தியார் சிந்திய குருதி அவருடைய கடைசித் திட்டங்களை முழுவதும் நிறைவேற்றிவிடும். பலாத்காரத்தின் வெற்றி முதலில் பளபளப்பாகத்தான் இருக்கும். ஆனால் மகாத்மா எந்த அறத்தை மக்களுக்கு அறிவுறுத்தினாரோ அதுவே கடைசியில் ஒளிதந்து நிற்கப்போகிறது.

டெலிகிராப் [ஜெர்மனி]

அவரது சிறந்த ஆன்மா மக்களிடையே நின்று நிலவும்.

ஸ்வோபாட்னி நாவினி [செக்கோஸ்லாவிகியா]

அரசியல் சூழ்ச்சிகளின் விளைவாக அடிமைப்படுத்தப்பட்ட மனித இனத்தின் நிலையான எடுத்துக்காட்டுகளைப் போன்று அவரும் இறந்தார்.

லாசூசே [சுவித்சர்லாந்து]

இந்திய மாநிலத்தில் புதிதாகத் தோன்றிய இரு பிரிவுகளிலும் பெருந் தவறுகள் நேராதபடி கட்டுப்படுத்தும் ஆற்றல் படைத்தது மகாத்மாவின் ஆன்மபலம் ஒன்றுமட்டுமே யாகும்.

ஸ்டாக் ஹோம் பிரஸ் [சுவிடன்]

இந்தியாவின் ஆன்மா பிரிந்துவிட்டது !

டெமாகிரடிக் ஈரான் [பெர்சியா]

இந்த உலக இழப்பு நெடுநாட்களுக்கு மறக்க வியலாதது.

நிப்போன் டைம்ஸ் [ஜப்பான்]

வெறி பிடித்த ஒரு கொலைகாரனின் துப்பாக்கிக் குண்டு களால் இந்தியாவின் தலைவரான பெரியார் கொல்லப்பட்டார். அமைதியான முறையில் சுயாட்சி பெற்று முன்னேறத் துடித் துக்கொண்டிருக்கும் ஆசிய மக்கள் அனைவருக்கும் காந்தியடி களின் மரணம் இடியைப்போன்றதா யிருக்கின்றது. பர்மியத் தலைவர்கள் மிருகத்தனமாகக் கொலை செய்யப்பட்ட அதிர்ச்சியி லிருந்து உலகம் மீள்வதற்குள் இதுவும் நேர்ந்திருக்கிறது. பலாத்காரமற்ற வகையில் தங்கள் விவகாரங்களைத் தீர்த்துக் கொள்ளத் தகுதி யுடையவர்கள் என்பதை ஆசிய நாட்டினர் விளக்கிக் காட்டவேண்டும்.

தினசரி [சென்னை]

இந்தியாவின் கண்களுக்கு ஒளியாயும், கருத்துக்களுக்கு ஆதாரமாயும், சிந்தைக்கு ஜீவனும், சிறப்புக்குச் சிகரமாயும், உயிருக்கு உயிராயும், உள்ளத்திற்கு விளக்காயும் பிரகாசித்து வந்த மகாத்மா மறைந்தார் !

தினமணி [சென்னை]

கடவுளின் தத்துவத்தை ஆராய்பவர்கள் 'ஜீவன் முத்தன்' என்ற சொல்லுக்கு என்ன இலக்கணம் கூறியுள்ளார்களோ அத்தனை இலக்கணங்களும் அமைந்தவராக மகாத்மா விளங்கினர்.

'மகாத்மா ! மகாத்மா !!' என்று அலறுவதைத் தவிர வேறு எதற்கும் யார் மனத்திலும் இந்த நிமிடத்தில் தைரியம் இருக்க முடியாது.

விடுதலை [சென்னை]

உலகத்தின் விலைமதிக்க முடியாத மாணிடச் சிப்பிக்குள் முத்துப்போன்ற......காந்தியாரின் படுகொலையை நினைக்க நினைக்க நெஞ்சம் குமுறிக்கொண்டே யிருக்கிறது.

கலைமகள் [சென்னை]

காந்தியடிகள் உண்மையாகவே நம்மைவிட்டுப் பிரிந்தார் என்ற செய்தியை உணர்ந்தபோது நாம் செயலற்றுப் போனோம். காற்றே நின்று போனால் எப்படி யாவரும் திகைத்துப் போவார்கள்? அப்படித்தான் யாவரும் தம்பித்துப் போனார்கள். ...விஞ்ஞானி எப்படித் தன் சோதனையினால் கண்டு பிடித்த ஒன்றை உலகத்தார் எளிதிலே பயன்படுத்திக்கொள்ள வழங்குகிறானோ, அப்படி விஞ்ஞானிகளிலெல்லாம் சிறந்த விஞ்ஞானியாகிய இந்த மெய்ஞ்ஞானி தம்முடைய சத்திய சோதனையிலே கண்டதை உலகுக்கு அருளியிருக்கிறார்.

சக்தி [சென்னை]

உலகின் நாலா பக்கங்களிலும் உள்ள பெரியவர்களெல்லாம் 'ஞான விளக்கு அணைந்துவிட்டதே' என்றும் 'உலகம் அனாதையாகிவிட்டது' என்றும் துக்கித்தார்கள். உண்மையில் ஞான விளக்கு அணையவில்லை. மகாத்மாவின் பூதவுடலுடன் மறையக்கூடியனவா அவருடைய சொத்துக்களாகிய அகிம்சையும் சத்தியமும்?

கல்கி [சென்னை]

எந்தையே! இந்தியாவின் தந்தையே! என்ன காரியம் செய்துவிட்டீர்கள்! புதிதாகக் கிடைத்த சுதந்திரத்துக்கு நாலா புறமும் அபாயங்கள் சூழ்ந்திருக்கும் இந்தச் சமயத்திலா தங்களுடைய இறுதிப் பயணத்தைத் தொடங்க வேண்டும்? அடிகளே! சொர்க்கத்துக்குப் போக அவ்வளவு அவசரமா? இந்திய நாடே தங்களுடைய சொர்க்க பூமி என்று பலதடவை சொன்னீர்களே! அந்த வாக்கு இப்போது என்ன ஆயிற்று?

காலச் சக்கரம் [கோவை]

நூற்றைம்பது ஆண்டுகள் மண்ணில் வாழ்ந்து மக்களுக்குச் சேவை செய்வேன் என்ற மகான் மறைந்தார்! அவா சாகவில்லை! அன்புக் கொள்கைக்காக அவர் தமது கடைசித் தியாகத்தையும் செய்து விட்டார். அவர் ஆருயிரைப் போக்கிய பாதகத்தை—தீராப் பழியை, உலகமுள்ள மட்டும் மறையாக் கறையை மறைக்க வாரீர் உலகீரே!

காண்டீபம் [சென்னை]

இந்தியாவின் தலையில் பேரிடி விழுந்திருக்கிறது!.........அமெரிக்காவுக்கு ஆபிரகாம் லின்கன், பர்மாவுக்கு அவுங் சான், இந்தியாவுக்கு மகாத்மா என்று வரலாறு கணக்கிட நாம் விட்டு விட்டோம்!

போர்வாள் [சென்னை]

அன்பின் திருவுரு—வண்மையின் கொடுமுடி—அஞ்சாமையின் அடையாளம்—புரட்சி பல கண்ட போர்க்களத் தலைவர் மோகனதாஸ் கரம்சந்த் காந்தி. மக்களினம் எனும் கலத்திற்கு ஒரு கலங்கரை விளக்கமாய், திக்குத் தெரியாத காட்டில் தேம்பித் திரியும் மக்களுக்குக் கிடைத்தற்கரிய வோர் வழிகாட்டியாய், சுற்றி நிறைந்த முகிற் கூட்டத்தைக் கிழித்தெறிந்து கொண்டு வெளியேறிய விண்ணிலவாய் விளங்கினார் மறைந்த அம் மாவீரர்!

சுதேச மித்திரன் [சென்னை]

மங்கிக் கிடந்த பாரத நாட்டை மலரச் செய்த பெரியார் மறைந்து விட்டார். வெறியு னொருவன் உளத்திலே புயலென வீசிய கீழுணர்ச்சியிலே உரிமைச் சுடர் சிக்கி நொடிப்போதில் அணைந்து விட்டது. மக்கட் குழுவின் உளத்தைக் கூறுகூறாகப் பிளக்கக்கூடிய நிகழ்ச்சி இதைவிடப் பிறிதொன்றும் இருப்பதற்கில்லை. தூய பாரதநாடு சொல்லொணாத் தீவினை செய்திருத்தல் வேண்டும். வெண்ணெய் திரண்டு வரும்போதா தாழி உடைய வேண்டும்?

ஆனந்த விகடன் [சென்னை]

இனி அவர் இன்குரலைக் கேட்க முடியாது; மதுரமான சிரிப்பைக் காண முடியாது; துணை இருக்கிறார் என்று உணர முடியாது; அவர் காட்டிய வழிகளும், செய்துள்ள உபதேசங்களும் மட்டுமே நமது பலம். அந்தப் பலத்தைச் செவ்வனே பயன் படுத்திக் கொள்வதைத்தான் பொறுத்திருக்கிறது நம் நாட்டின் பிற்காலம்.

திராவிடன் [சென்னை]

தமக்கு ஒழுங்கெனத் தோன்றியவற்றைக் கூறக் காந்தியார் போன்றவர்களுக்கே உரிமை யில்லையெனில், இனி இந்நாட்டிலே எவருக்குத்தான், எதைக் கூறத்தான் உரிமை யிருக்க முடியும்? காந்தியாரின் இவ்வகைக் கொடுங் கொலையால் அவரது உடலை மட்டுந்தான் வஞ்சகர்கள் கொள்ளை கொள்ள நேரிட்டதே யன்றி அவரது தன்னலங் கருதாத—களங்க மற்ற—பொதுத் தொண்டின் வாயிலாக மக்களுக்கு ஏற்பட்டுள்ள மன எழுச்சியை, இவ்வகைக் கொலையிற் கொடியாரோ, அவர்களது குழுவோ அசைக்கவும் ஆகாது!

மன்றம் [சென்னை]

துவக்கத்திலிருந்தே காந்தியார் வகுப்பு ஒற்றுமைக்குப் பாடுபட்டார். வகுப்புக் கலவரங்களால் நாட்டுக்கு ஏற்படும் தீங்கை நன்குணர்ந்திருந்தார்.........மதவெறியை நீக்குவதற்குப் பாடுபட்டார். எந்த மதவெறியை ஒழிக்க நினைத்தாரோ, அதனாலேயே ஒழிக்கப்பட்டு விட்டார்!

தமிழர் நாடு [திருச்சி]

சாக்ரட்டீசுக்கு இவ்வுலகிற் கிடைத்தது அமுதமன்று; நஞ்சு! ஏசு நாதருக்கு இவ்வுலக மளித்தவை பொன் முடியும் நல்லணியுமல்ல; முள் முடியும் சுள்ளாணியுமே! தன்னலமற்று வாழ்ந்த அடிகளுக்கு இவ்வுலகந் தந்தவை மூன்று துப்பாக்கிக் குண்டுகளே! வன்கண்மையாலே அருளைக் கொல்லும் இவ்வுலகிலே வேறு எதைத்தான் எதிர் பார்க்க முடியும்?

சண்ட மாருதம் [சேலம்]

காந்தியடிகளை இழந்ததனால் நாம் ஒரு தளபதியை—தத்துவ ஞானியை—பேரறிஞரை—முன்னேற்ற வழிகாட்டியை இழந்துவிட்டோம்!

தாய்நாடு [புதுக்கோட்டை]

உலகம் போற்றும் உத்தமன் மகாத்மா மறைந்ததைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திகைத்து ஒன்றும் செய்யத் தோன்றாதவராய் மக்கள் துயரக் கடலில் ஆழ்ந்து திகைத்திருக்கின்றனர்.

லோகோபகாரி [சென்னை]

ஒரு காந்தி மறைந்து விட்டார்! நாம் ஒவ்வொருவரும் காந்தியடிகள் செய்த வேலைகளை நம்மால் இயன்றஅளவு செய்து நாமும் நமது திறமைக்கும் அறிவுக்கும் ஏற்ற முறையில் சிறிய காந்தியாகவோ பெரிய காந்தியாகவோ விளங்க முயல்வதே அவருக்கு நாம் நன்றிகாட்டும் முறையாகும்.

தமிழ் முரசு [சென்னை]

மறக்க முயலுகிறோம்; முடியவில்லை. ஐயனின் திருமேனி கணத்திற்குக் கணம் நம் அகக்கண்முன் தோன்றுகிறது. கதியற்ற 'ஹரிஜன' மக்களுக்கு நிதி தேடிய கைகள்; 'உப்பு வரியை உடைத்தே தீருவேன்' என்று தண்டி சோக்கி ஓடிய கால்கள்; பாட்டாளி மக்களுக்காகப் பரிந்து பேசிய வாய்; படைக்கஞ்சாப் பகைவனும் பார்த்தவுடனே நடுங்கும் வீரத் திருமார்பு; அறிவு—கருணை—அன்பு—அறம் அத்தனை நல்லியல்புகளும் கைகோத்துக் களிதுள்ளும் திருமுகம். இவற்றை நாம் மறந்தாலும் நம் மனம் மறக்கமாட்டேன் என்கிறது!

கதிரவன் [சென்னை]

காந்தியார் வீரர்; லட்சிய வாதி; அஞ்சா நெஞ்சம் படைத்தவர்; பிரிட்டிஷ் சிங்கத்தை எதிர்த்து நின்று பற்பல இன்னல்களுக்கிடையே தலைமை தாங்கி உரிமைப்போரை நடத்திச் சென்றார். நாட்டில் ஏற்பட்ட வகுப்பு வெறியினூடே சமரசப் பந்தம் தாங்கிச் சென்றார்; அகிம்சைக் கொள்கையைப் பரப்பினார். கடைசியில் இந்துமத வெறி பிடித்த மாபாதகனின் வஞ்சக பலாத்காரத்திற்குப் பலியானார்.

புது வாழ்வு [சென்னை]

போர்க்களத்திலே நின்று முன் வைத்த அடி பின்னிடாமல், விழித்த கண் விழித்தபடி, மாற்றார் தொடுக்கும் கணைகளை மார்பிலே தாங்கி, பின் சாயாமல் முன் சாயும் பெருவீரனைப் போல், தமது கடமை என்ற களத்திலே இறுதி வரையிலே கொள்கை பிறழாமல் நின்று இன் முகத்தோடே உயிர் துறந்த உத்தமர் காந்தியாரின் பெயரும் புகழும் இனி மறையா.

காவேரி [குடந்தை]

முடிசூடா மன்னர் பிடிசாம்பலானார். அகிம்சையை நிலை நாட்டப் பாடுபட்டவர் இம்சைக்கு இலக்கானார். வகுப்பு வாதத்தை ஒழித்து மக்கள் மனத்தைப் புனிதமாக்க உயிரைப் பணயம் வைத்து வெற்றி பெற்றவர் அதன் வெறியினால் உயிர் மாய்க்கப் பெற்றார்.

புதுமைப் பெண் [சென்னை]

அவரது திருமுகம் நம் ஊனக் கண்களுக்கு மறைந்து விட்டது. ஆனால், அவர் நமது இதயப் பீடத்திலே என்றென் றும் அமர்ந்து ஆட்சி செலுத்துவார். கனிவு நிறைந்த அந்தக் குரல் நம் செவிகளுள் ஒலிக்காவிடினும் இயற்கை முழுவதுமே அவருடைய பொன் மொழிகளை எதிரொலித்துக்கொண்டே இருக்கும்.

தாருல் இஸ்லாம் [சென்னை]

காந்தம் இரும்பை இழுக்கும்; காந்தியுள்ள தீபம் இருளைப் போக்கும். காந்தி என்ற பெயர்பெற்ற இவ் வீரத் தியாகி இன் றுள்ள உலகத்தை மட்டுமின்றி வரப்போகும் உலகத்தையும் ஈர்க்கவல்லார். இன்றுள்ள இருளைமட்டுமின்றி இனி எப்போ தேனும் வந்துவிடக்கூடிய இருளையே வாராது அவர் ஆவி அகற்றிவிடும்.

தமிழ்க் கலை [சென்னை]

மக்கள் இனம் இன்றும் அந்த இயேசு, சாக்ரடீஸ், லிங்கன் ஆகிய பெரியோர் வாழ்ந்த காலத்திலே இருந்த வாழ்வில்தான் இருக்கிறது. நாகரிகம்—வாழ்வு எல்லாம் பகற்கனவே! நம்மை நாம் கொல்கிறோம் நல்லவரைக் கொன்றதன்மூலம். அடிகளைக் கொன்றதன்மூலம் உலகக் கண்களில் இந்தியா தன் உயர்நிலையை இழந்தது! இதுதான் விடுதலை பெற்றதன் பய னேயோ ?

அணிகலம் [புதுக்கோட்டை]

உலகம் போற்றும் உத்தமர் காந்தி மகான் ஆவி சாந்தி யடைந்தது. மதத்தின் பெயரால் மதங்கொண்ட ஒரு சிலரின்

எண்ணம் நிறைவேறியது. எம்மதமும் சம்மதம் என்ற இணையிலாக் கொள்கை நிலவவேண்டு மென்பதற்காகத் தன்னையே தியாகம் செய்துகொண்டார் அண்ணல்!

திருப்புகழாமிர்தம் [சென்னை]

சாந்த சீலர்; கருணைக் கடல்; உலகிற்கு ஒப்பற்ற தந்தை; அருள் வெள்ளம்; அன்பின் வடிவம்; அறத்தின் ஆணிவேர்; அறிவுக் கதிர்; உலகிலே யுள்ள எல்லா மனிதர்களும் ஏங்க—உயிர் துடிக்க—கண்ணீர் பெருக—திடீர் என்று தமது புனிதமான பூதவுடம்பை விடுத்துப் புகழுடம்பு தாங்கி மறைந்தார்—எங்குமாகி நிறைந்தார்.

சினிமா உலகம் [சென்னை]

மதத்திற்கு, தனது இந்து-சமூகத்திற்கு மகத்தான நன்மை செய்கிறோம் என்ற மருளில் மந்த மதியினன் ஒருவன் மாபெருந் தியாகச் சுடரை, அகல் விளக்கை ஊதி அணைப்பதைப்போல நொடிப்பொழுதில் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இலக்காக்கி அணைத்துவிட்டான்!

பேசும் குரல் [சென்னை]

தான் பாடுபட்ட ஒரே நோக்கத்துக்காகத் தன்னைப் பலியும் இட்டுக்கொண்ட அந்த மகான் இன்றைக்கு நம்மிடையே ஓர் அவதார புருடனாகக் கருதப்படுகிறார். இன்றைய வரலாற்றில் அவர் வாழ்க்கை மங்காத ஓவியமாகத் தீட்டப்படும். நாளைய உலகிற்கு அவர் தெய்வமாகக் காட்சியளிப்பார்.

தமிழ் நாடு [மதுரை]

உலக மக்களை வேதனையோடு மோத விட்டுவிட்டு, காலக் காற்றில் கலந்து விட்டது காந்தியடிகளின் கடைசி மூச்சு!

உணர்ச்சியிலிருந்த கணகணப்பு 'ஜில்'விட்டுவிட்டது; உயிரோட்டத்தில் எழுந்த ஒப்புயர்வற்ற உன்னதக் குரல், கம்மிவிட்டது; எதிர்கால வெற்றியைத் தொட்டுக்கொண்டிருந்த நம்பிக்கை கன்னிப்போய்விட்டது; எந்த நொடியையும் எளிதாய்க் கடந்துகொண்டிருந்த அரசியல் தேரின் ஆரக்கால் முறிந்துவிட்டது!

பொன்னி [புதுக்கோட்டை]

ஐயகோ! உலகத்திற்கே வழிகாட்டியாய்த் திகழ்ந்த பெம்மான் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையானார். அன்பு நெறியையே தம் வாழ்நாளெல்லாம் பரப்பி வந்த அண்ணலின் முடிவு இவ்வாறு நேரும் என்று யாரும் எண்ணவில்லை.

அண்ணல் காந்தியாரின் மறைவு அவ்வளவு விரைவில் மறந்து விடுவதற் குரியதல்ல. உலகில் நாடோறும் எத்தனையோ பேர் பிறக்கிறார்கள்! எத்தனையோ பேர் சாகிறார்கள்! அப்படிப்பட்டதல்லவே காந்தியார் மறைவு! நேர்மையும் தாம் கொண்ட கொள்கையில் இடையறாத பற்றும் காந்தியாரிடம் காணப்பட்ட சீரிய பண்புகள்.

சிந்தனை [சென்னை]

காந்தி மகான் பெற்றது தெய்வ மரணம். "சரண் எமக்கு யார்கொல்?" என்று அழுது சாம்பிய மக்கள் அனைவர்க்கும் "அரண் உமக்கு ஆவேன்!" என்று சத்திய—அகிம்சைச் சிறை விரித்துப் புறப்பட்ட சடாயுவே காந்தி.

செந்தமிழ்ச் செல்வி [சென்னை]

அடிகள் இருக்கும் காலத்தும் நன்னெறி காட்டி நம்மை வாழ்வித்தார். இறக்குங் காலத்தும்,

"தன்உயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறி(து)
இன்உயிர் நீக்கும் வினை"

என்னும் பொய்யாமொழியை மெய்ப்பித்துக் 'கொன்றவனுக்கும் நன்றே செய்ம்மின் நானிலத்தீர்!' என்று தவநெறி காட்டினார்.

அடிகளை ஒத்த ஆன்றோர் முன்னும் இல்லை; பின் வருவதும் அரிது. அடிகள் பிரிவால் எல்லா வுலகமும் இடி ஏறுண்ட பாம்பென ஏங்கிற்று. அழுகையும் புலம்பலும் அடக்க வொண்ணா நிலையில் கடலெனப் பெருகிற்று.

அடிகள் அருள்மொழிப்படி எல்லாருடனும் குல மத கட்சிப் பிணக்குகளின்றி ஒற்றுமையாய், விடுதலை பெற்ற நாட்டை மேலும் மேலும் ஓங்கச்செய்து அன்பில் இன்பொடும் வாழ்வோமாக!

புகழ் மாலை

[மறைவிற்கு முன்பெற்ற புகழ் மலர்கள்]



முடிவிலாக் கீர்த்தி !

அடிமைவாழ் வகன்றிந் நாட்டார்
விடுதலை ஆர்ந்து செல்வம்
குடிமையில் உயர்வு கல்வி
ஞானமுங் கூடி ஓங்கிப்
படிமிசைத் தலைமை எய்தும்
படிக்கொரு சூழ்ச்சி செய்தாய் !
முடிவிலாக் கீர்த்தி பெற்றாய் !
புவிக்குளே முதன்மை யுற்றாய் !

—புதுமைக்கவி பாரதியார்.

இணையற்ற செல்வாக்கு !

இங்கே இந்தியாவில் காந்தி மகாத்மா என்ற மன்னர் ஒருவர் இருக்கிறார். அவருக்கு எந்தப் பேரரசுக்கும் இல்லாத செல்வாக்கு உள்ளது. புதுடில்லி அரண்மனைகளிலிருக்கும் இக்கால நாகரீக கவர்னர்களின் பெயர்களெல்லாம் மறைந்து நீண்ட காலம் ஆனபின்னரும் காந்தியடிகளின் பெயரை நாட்டுப்புற மக்களும் மறக்கவே மாட்டார்கள்.......ஏனெனில், அழியாப் பொருள்களைக் கொண்டு அடிகள் ஆன்மக் கோயிலொன்றைக் கட்டியுள்ளார். மக்களுயிர் ஒன்றுபட்ட அமைதியே அங்கு நிலவுகிறது. வகுப்பு நிற வேற்றுமைக்கு அங்கு இடமேயில்லை. அதன் அமைதியைக் கெடுக்க மதச் சிக்கல்களும் இல்லை. இதயமே அதன் பேரரசு.

—'தீனபந்து' ஆண்ட்ரூஸ்
(1924-ல் எழுதியது)

நல்லாண்மை !



மகாத்மா காந்தி விடுதலைப் பாதையைத் திறந்துவிட்டபோது அவர் கையில் எந்த வகையான அதிகாரக் கருவியும் இல்லை. எந்த விதமான அடக்குமுறைச் சக்தியும் கிடையாது. ஆனால் அவருடைய நல்லாண்மையிலிருந்து உதயமான சக்தியோ இசையைப்போல், அழகைப்போல் வருணிக்க முடியாதது. ...அவருடைய குணச்சிறப்பில் சத்தியமானது மிக எளிய தன்மையில் ஒளி நல்குவதையே மக்கள் பெரிதும் பாராட்டுகின்றனர்.

இதனாலேயே அவர் அரசியல் துறையிலேயே அதிகமாக ஈடுபட்டிருந்தபோதிலும், அவரை......மகான்களில் ஒருவராக எல்லா மக்களும் கொண்டாடுகின்றனர்.

—கவியரசர் ரவீந்திரநாத தாகூர்.

உருவத்தின் ஒளி !

உலக வரலாற்றில் அவருடைய பெயர் புனித நினைவுடன் போற்றப்படும். இந்தியப் பெருமக்களின் ஒற்றுமை உணர்ச்சியையும், அவர்களுடைய சக்தியையும், விடுதலை வேட்கையையும் பிரதிபலித்துக் காட்டும் 'கிரியா சக்தி' யாக அவர் விளங்குகிறார். உலகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் அவருடைய உருவத்தின் ஒளி வீசுகிறது. அவர் தோன்றியதை ஏதோ ஓர் அற்புதச் செயல் நிகழ்ந்திருப்பதாகவே மேனாட்டார் கருதினார்கள்.

—ரோமெய்ன் ரோலந்து.

நம்பமாட்டார்கள்!

இத்தகைய கொள்கையுடையார் ஒருவர் இவ்வுலகிலே நமது காலத்திலேயே உண்மையாகவே உயிருடன் உலவினார் என்பதை நம் பின்னோர்கள் நம்பவே மாட்டார்கள் என எண்ணுகிறேன்.

—பெருங்கலைஞர் ஈன்ஸ்டின்.

காந்தி கண்ட இயக்கம்!

காந்தி தம் நாட்டின் முப்பதுகோடி மக்களின் விடுதலைக்காக இப்போது ஓர் இயக்கத்தைத் தலைமை தாங்கி நடத்துகிறார். இந்த இயக்கம் பலம் பொருந்திய வல்லரசின் அடிவாரத்தையே தகர்த்துவிடும். அரசியலில் பங்கெடுத்துக்கொண்டு பணிபுரியும் இந்த முனிவர் பாடுபடுவதுபோல, எந்தக் 'கிராம்வெல்'லும், 'மாஜினி'யும் 'வாஷிங்டன்'னும் பாடுபட்டது கிடையவே கிடையாது. உலகிலேயே மிகச் சக்தி வாய்ந்த படைபலம் கொண்ட ஒரு நாட்டை இவரும் இவருடைய மக்களும் மெஷின் துப்பாக்கிகளோ, வானஊர்திகளோ, 'விஷவாயு'வோ இல்லாமல் எதிர்த்துப் போராடுகிறார்கள். அறியாமையில் மூழ்கிக் கிடக்கும் மக்களைக்கொண்டே—தட்ப வெப்ப மாறுபாடுகளாலும் நோய்களாலும் தாக்குண்ட மக்களைக் கொண்டே—சமூகப் பழக்க வழக்கங்களும் மாறுபட்ட உணர்ச்சிகளும் கொண்ட மக்களைக்கொண்டே, தாம் எடுத்துக்கொண்ட காரியம் வெற்றி பெறுமா, தோற்குமா என்பதையும் லட்சியம் செய்யாமல் காந்தி பாடுபட்டுக் கொண்டே இருக்கிறார்......அவர் சீலத்தில் புத்தர் பெருமானைப் போலவும், கொள்கை உறுதிப்பாட்டில் செயின்ட் பாலைப் போலவும், வீரத்தில் கரிபால்டியைப் போலவும், அன்பா யிருப்பதில் செயின்ட் பிரான்சிசைப் போலவும் இருக்கிறார்.

—கிர்பி பேஜ் (அமெரிக்கர்)

காந்தி சொன்னார்



[அண்ணலின் பொன்மொழிக் கோவை]

இந்தியாவில் ஓர் இனம் ஏற்பட வேண்டுமானால் சென்னை மாகாணத்துக்கு அப்புறம் உள்ளவரும் தமிழ் உணர்தல் வேண்டும்.

*

இருபது ஆண்டுகட்கு முன்னரே யான் தமிழ் பயிலத் தொடங்கியதற்குக் காரணம் திருக்குறள் மூலத்தையே நேராகப் படித்தல் வேண்டுமென்று என் உள்ளத்தெழுந்த அவாவேயாகும். (1927-ல் கூறியது.)

*

'சுயராஜ்யம்' என்பது ஒவ்வொருவரும் உரிமை பெறுவது.

*

'சுயராஜ்யம்' கடவுளாலும் கொடுக்கப்படுந் தகையதன்று. அதை நமக்கு நாமே முயன்று பெறல்வேண்டும். சுயராஜ்யம் என்னும் சொல்லியல்பே பிறர் கொடையிலில்லை என்பதைக் குறிக்கும்.

*

சத்தியாக்கிரகத்தைத் தன்னலத்துக்காகக் கொள்ளல் கூடாது. அதைப் பிறர் நலத்துக்கே கொள்ளல்வேண்டும். 'சத்தியாக்கிரகி' துன்பம் பொறுத்தலுக்கும் பொருள் நட்டத்துக்கும் எப்பொழுதுஞ் சித்தமாயிருத்தல் வேண்டும்.

*

மதம் மதம் என்று எல்லாவற்றையும் யான் கொள்ளேன். மதத்தின் பெயரால் செய்யப்படுங் கொடுமைகளை யான் ஏற்கமாட்டேன். பண்டை நூல்கள் தெய்விகமானவைகளே. ஆனாலும், அவைகளிலுள்ள பொருள்கள் என் அறிவிற்குப் பொருந்தியனவா யிருத்தல் வேண்டும். இல்லையேல் நூல்களின் கடவுள் தன்மையையும் யான் மறுப்பேன்!

*

மத ஒற்றுமையை நிலைநாட்ட வேலை செய்யவும் அதற்கான பணியில் உயிர் விடவும் எனக்குக் கடவுள் சக்தி அளித்திருக்கிறார்.

*

அரசியலைச் சமயத்தினின்றும் ஒதுக்கிவைக்க முடியாது.

*

உடற்பயிற்சிக்கும் கல்விக்கும் தொடர்பில்லை என்னும் ஒருவிதப் போலிக் கொள்கை அந்நாளில் (இளமையில்) என்னிட மிருந்தது. மனப்பயிற்சியைப் போலவே உடற்பயிற்சியும் பள்ளியில் இடம் பெறல் வேண்டுமென்பதை இந்நாளில் நன்கு உணர்ந்திருக்கிறேன்.

*

அஞ்சாமை வேண்டும்; அவசியம் வேண்டும். உடலுக்கு ஊறு உண்டாகுமே, பிணி பீடிக்குமே, மானம் நேருமே, பொருளெல்லாம் போகுமே, குடும்பம் குலையுமே, புகழ் பொன்றுமே என்று அஞ்சுதல் கூடாது.

*

பகைவன் என்னைத் தாக்குகிறான்; அப்பொழுது அவனை யான் தாக்குதலாகாது. தாக்குவதென்பது இம்சையின்பாற்படும். பகைவன் என்னைத் தாக்குங் காலத்தும் அவனை யான் நேசித்தல் வேண்டும். இஃது அகிம்சை.

உண்மையும் அகிம்சையுமே என்னல் விரும்பப் படுவன. தெய்விகத்தை யான் விரும்பவில்லை.

*

அகிம்சை கோழையின் ஆயுதமன்று; அது வீர னின் ஆயுதம். அகிம்சையில் உறுதியுடையவன் ஆண் டவனிடத்தில் உறுதியுடையவன்.

*

சிந்தும் இரத்தம் நம்முடையதாயிருப்பதாக! பிறரது இரத்தத்தைச் சிந்தாமல் பிறர் வாளால் நீ இறக்கத் துணி யும் வீரத்தில் அகிம்சை யுண்டு.

*

ஒவ்வொரு இல்லமும் ஒரு கல்லூரி; பெற்றோர்களே ஆசிரியர்கள்; இன்றைய இந்தியாவிலே இந்தத் தூய்மை யான கடமையைப் பெற்றோர் மறந்துவிட்டனர்.

*

சத்தியத்தில் நிற்பதென்பது பஞ்சணையில் படுத் திருப்பதல்ல. உண்மையைக் கடைப்பிடிப்பதற்கு எவ் வளவோ தியாகம் செய்யவேண்டியிருக்கிறது. வானமே இடிந்து தலையில் விழுவதாயிருந்தாலும் நாம் உண்மையைக் கடைப்பிடித்து ஒழுகவேண்டும்.

*

இன்னு செய்யாமையையும் உண்மையையும் கடைப் பிடிக்கிறதென்னும் பாதை நீண்டதெனத் தோன்றிய போதிலும் அதுவே குறுக்குப் பாதை என்பது என் கருத்து.

*

உறுதியோடு தம்மையே தியாகம் செய்யத்தக்க தொண்டர் படை யொன்று பெரிதாக, மிகமிகப் பெரி

தாக ஏற்படாத வரையில் பாமர மக்களிடையே உண்மையான முன்னேற்றம் ஏற்படுவது அரிதென்று நான் கருதுகிறேன்.

*

தியாகம் தியாகம் என்று சொல்லளவிலேதான் நாம் இன்னும் விளையாடிக்கொண்டிருக்கிறோம்; உண்மையான தியாகம் இனிமேல்தான் வரவேண்டும்.

*

கலிலேயோவின் கருத்தை ஏற்காமல் பூமி அசையாது அப்படியே நிற்பதென்றும், தட்டுப்போலத் தட்டை வடிவமுடையதென்றும் நம்பியவர்களே அறியாமை என்ற இருளிலே மயங்கி நிற்கிறார்கள் என்றும் நாம் அறிவோம்.

*

தாய் தந்தையர் கண்மூடித்தனமாக அறிவுக்குப் பொருந்தாத காரியங்களைச் செய்யச் சொன்னால் பிள்ளைகள் அதைக் கேட்கவேண்டியதில்லை.

*

ஆசிரியர் சொல்வதையெல்லாம் மாணவர்கள் அப்படியே கண்மூடித்தனமாகக் கீழ்ப்படிந்து பின்பற்றுவது மிகுந்த தீமையாகும்; அவர்களுக்கு ஏற்படுந் தீமைகள் யாவற்றிலும் இதுதான் மிகக் கொடிய தீமையாகும்.

*

மாணவர்கள் தங்களால் இயன்றவரையில் எல்லாக் காரியங்களையும் பகுத்தறிவைக்கொண்டு சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்பது மிக முக்கியமானது.

*

பெரிய மனிதர்கள் என்று புகழப்படுகிறவர்கள் சொல்வதை ஆராய்ந்து பாராமல் அப்படியே அவற்றை

நம்பிக் காரியங்களைச் செய்யலாகாதென்று தங்கள் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் அறிவுறுத்துவார்களென்று நம்புகிறேன்.

*

என்னைப்போல் நூற்றுக்கணக்கானவர்கள் அழியட்டும்! ஆனால், சத்தியம் நிலைநிற்கட்டும். தவறும் இழைத்துவிடக்கூடிய என்னைப்போன்ற மாந்தரின் செயல்களைச் சீர்தூக்கிப் பார்ப்பதற்காகச் சத்தியத்தின் உயர்வில் ஒரு மயிரிழையும் குறையும்படி நாம் செய்துவிடக்கூடாது.

*

ஏழைகளுக்குப் பணியாற்ற வேண்டுமென்பதே என் மனத்திலிருக்கும் ஆவல். இந்த ஆவல் எப்பொழுதுமே ஏழைகளின் மத்தியில் என்னை விட்டு, என்னையும் அவர்களில் ஒருவனாக உணரும்படி செய்திருக்கிறது.

*

என்னுடைய வேலைகளின் மீது தீர்ப்புக் கூறுவதற்குச் சரியான சமயம், நான் கண்களை மூடிய பிறகு இவ்வுடலம் தீயால் எரிக்கப்பட்டுவிட்ட பிறகுதான்.

*

நல்லவனுக்கு உலகம் முழுவதும் நல்லதாகவே இருக்கும் என்று சொல்லுகிறார்கள். அவனைப் பொறுத்தமட்டில் அது உண்மைதான். ஆனால், தீமை செய்தவர்க்கும் நன்மை செய்தால்தான் நல்லவன் என்பதற்குப் பொருள் உண்டு. நன்மை செய்தவனுக்கு மட்டுமே நன்மை செய்தால் அது வெறும் வியாபாரமேயாகும். அதனால் எவ்வகையான பெருமையுங் கிடையாது. ஆனால், தீமை செய்தவனுக்கு நன்மை செய்தால், அந்த நன்மையைக் கண்டதும் தீமை பயந்து ஒடுங்கி விடுகின்றது.

*

நான் உயிரோடு இருக்கும்பொழுது இல்லாவிட்டாலும் இறந்த பிறகாவது இந்துக்களும் முஸ்லீம்களும் நான் வகுப்பு வாதத்தை ஒழிக்கப் பாடுபட்டேன் என்பதை எடுத்துக்காட்டுவார்கள்.

*

ஆத்மா அழிவற்றதே! ஆனால் சேவையும் நல்ல காரியங்களும் செய்யும்பொருட்டு மேலும் மேலும் புதுப் புது உருவங்களை அது பெறுகிறது.

*

ஆங்கிலேயரது கத்தி மூலம் நாம் அடைந்த அடிமைத் தனத்தைவிட, ஆங்கில மொழி மூலம் அடைந்த அடிமைத் தனம் மிகக் கேவலமானது.

*

திருடர்களுக்கும் கொள்ளைக்கூட்டத்தாருக்கும் கொலைகாரர்களுக்குங்கூடத் தண்டனை கொடுப்பதை என்னுடைய அகிம்சைக் கொள்கை ஆதரிக்கவில்லை.

*

எல்லாக் குற்றங்களும் பலவகையான நோய்களைச் சேர்ந்தவையே. குற்றவாளிகளை நோயாளிகளாகக் கருதி அவர்களுக்குச் சீர்திருத்தக்காரர்கள் சிகிச்சை தர வேண்டும்.

*

தவறு செய்யக்கூடிய மனிதனைக் காணும்போதெல்லாம் நானும் தவறு செய்திருக்கிறேன் என்று எனக்குள்ளேயே சொல்லிக்கொள்வேன் : காமுகனைக் கண்டால் நானும் ஒருகாலத்தில் அப்படியிருந்திருக்கிறேன் என்று சொல்லிக்கொள்வேன். இப்படி நான் நடந்துகொள்வதன் காரணமாக உலகிலுள்ள ஒவ்வொருவனுடனும் நான் உறவு கொள்கிறேன். நம்மிடையே மிகமிகத் தாழ்ந்த

நிலையிலிருப்பவர்கள் மகிழ்ச்சி அடையாவிட்டால் நானும் மகிழ்ச்சியடைய முடியாது என்பதை உணர்கிறேன்.

*

என்னை முற்றுந் துறந்த முனிவர் எனக் கூறுவது தவறு. என் வாழ்க்கையை நடத்திச் செல்லும் கொள்கைகள் யாவும், மனித இனம் முழுவதற்குமே பொருந்துவனவாகும். சிறுகச் சிறுக வளர்ச்சி பெற்று அந்தக் கொள்கைகளை நான் கடைப்பிடித்திருக்கிறேன்.

*

அறம் என்ற ஆடையை உடுத்திப் பாவத்தை அழகு படுத்திக் காட்டி விட்டால் மனிதன் அதற்கு எளிதில் அடிமையாகி விடுகிறான்.

*

இந்தியாவில் உள்ள அனைத்தும் என் உள்ளத்தைக் கவர்கிறது; எவ்வளவு இயலுமோ அவ்வளவு உன்னதமான லட்சியங்களைக் கொண்ட ஒரு மனிதன் விரும்பத்தக்க அனைத்தும் இந்தியாவில் இருக்கின்றன.

*

நமக்குப் புறம்பான பேராற்றலை நான் அல்லாவென்றோ ஈசுவரனென்றோ அழைக்கவில்லை. அதை நான் 'சத்தியம்' என்றே அழைக்கிறேன்.

*

கடவுளோடு நம்மை இணைக்கும் நடத்தை என்பதே இதன் (பிரும்மசரியம் என்பதன்) ஆழமான பொருளாகும்.

*

மேல்நாட்டுப் பெண்களை நம் நாட்டுப் பெண்கள் காப்பியடிக்க வேண்டாம். அவர்களின் போக்கு அவர்களது நாட்டுக்கும் சூழ்நிலைக்கும் ஏற்றதாக இருக்கலாம். நம் நாட்டு நிலைக்கு அது ஒத்து வராது.

*

பெண் ஆணுக்குத் தோழி; ஆணைப் போலவே பெண்ணுக்கும் சமமான அறிவுத் திறன் உண்டு. அவனைப் போலவே அவளுக்கும் சமமான சுதந்திரமும் உரிமையும் உண்டு.

*

திருமணத்தினால் ஏற்படுகிற பிணைப்பு, உற்ற நண்பர்கள் என்ற முறையிலும் சமநிலை உடையவர்கள் என்ற முறையிலும் ஆகும். கணவன் தலைவனானால் மனைவி தலைவியாகிறாள். எண்ணம், செயல், சொல் ஆகிய அனைத்திலுமே உங்களிடையே முழு ஒற்றுமை நிலவட்டும். ஈருயிரும் ஒருயிராக விளங்கட்டும்.

*

எவள் தன்னலத்தையே முதன்மையாகக் கருதாமல் தன்னைக் காட்டிலும் எளியவர்களாகவும், நற்பேறில்லாதவர்களாகவும் இருப்பவர்களைப்பற்றி மிகுதியாகக் கருதுகிறாளோ அவளே கருணையுள்ள சோதரியாவாள்.

*

பொருள் தேடுவதற்காகக் கணவன் ஏதாவது ஒரு தொழிலில் ஈடுபட்டிருப்பதைப்போல் மனைவியும் ஏதாவது ஒரு தொழிலில் ஈடுபடவேண்டும் என்று நான் கருதவில்லை. பெண்களின் திறன் அனைத்தும் குழந்தைகளைப் பாதுகாப்பதற்கும் குடும்பத்தை ஏற்று நடத்துவதற்கும் சரியாகப் போய்விடும். நன்கு அமைக்கப்பட்ட சமுதாயத்தில் வருவாய் தேடிக் குடும்பத்தைப் பேணக்கூடிய பொறுப்பு பெண்களைச் சார்ந்திருத்தல் கூடாது.

*

தீண்டாமை சமயத்தின் விளைவன்று; சாத்தான் சூழ்ச்சியால் விளைந்தது.

*

கல்வி என்பதற்கு நான் கொண்ட பொருள் ஒழுக்கத்தைப் படிப்படியாக வளர்ப்பது என்பது. எழுத்திலக்கணம் பயிலுதல் கல்வியாகாது.

*

கடவுள் தொண்டு எது? உயிர்கட்குச் செய்யுந் தொண்டே. தொண்டாவது தூய அன்பு.

*

நீ ஒருத்தியை மணஞ்செய்துகொண்ட பின்னர் அவளை வெறுங் காமப் பொறி என்று நினையாதே; அவளை நட்புடையாளென்றும் பங்குடையாளென்றும் கூட்டுத்தொண்டுக் குரியாளென்றுங் கொள்வாயாக!

*

கற்பு உரிமையுடையது. அது நான்கு சுவர் சூழ்ந்த சிறைக்களத்தில்—வெம்மை வீட்டில்—கட்டுப்பாட்டில் வளர்வதன்று. அஃது உள்ளத்தினின்றும் வளர்ந்து ஓங்குதல் வேண்டும். அது பலவித வெளிச் சோதனைகளை எதிர்த்துக் கடந்து வளரும் இயல்பினது.

*

எந்த மதத்திலும் வரையறையான முன்னேற்றம் எதையும் நான் காணவில்லை. அப்படி ஏற்பட்டிருந்தால், உலகம் கொலைக்களமாகக் காட்சி தராது.

அண்ணலின் வாழ்க்கையில்

நினைத்தற்குரிய நிகழ்ச்சிகள்

(1869 — 1948)

காந்தியடிகளின் பிறப்பு : ... 2உ அக்டோபர், 1869.
திருமணம் ... 1883.
இங்கிலாந்து புறப்பாடு ... செப். 1888.
இந்தியாவுக்குத் திரும்பியது ... ஜூன், 1891.
தென்னாப்பிரிக்கா சென்றது ... ஏப். 1893.
இந்தியாவுக்குத் திரும்பியது ... 1896.
குடும்பத்துடன் தென்னாப்பிரிக்கா சென்றது ... நவ. 1896.
டிரான்ஸ்வால் ஆசியாச் சட்டத்தின் எதிர்ப்பு ... செப். 1906.
ஆசியாச் சட்ட எதிர்ப்பின் முடிவு ... 1907.
டிரான்ஸ்வால் நாட்டைவிட்டு நீங்காததற்காகச் சிறைசென்றது ... ஜன. 10, 1908.—விடுதலை ... ஜன. 30உ 1908.
பொறுமையான எதிர்ப்பு ... ஆகஸ். 1908; விடுதலை ... அக். 1908.
இங்கிலாந்திற்குப் பிரதிநிதியாகச் சென்றது ... ஜூன், 1909.
ஒருவார இரக்க நோன்பும், தினம் ஒருவேளை உணவு கொண்ட 4 மாத நோன்பும், 14 நாட்கள் நோன்பும் ... 1911—12.
ஐரோப்பிய உடை ஒழிப்பும், பழ உணவு ஆரம்பமும் ... 1912.
தலை வரியை நீக்க அறப்போர், சிறையும் விடுதலையும் ... நவ. 1913.
மீண்டும் சிறை சென்றது ... நவ. 9, 1913.
விடுதலை ... டிச. 18, 1913.
காந்தி—ஸ்மட்ஸ் ஒப்பந்தம், அறப்போர் நீக்கம் ... ஜன. 21, 1914.
இங்கிலாந்து சென்றது ... ஜூலை 1914.
இங்கிலாந்தில் இந்தியப் போர் மருத்துவப்படையின் எழுச்சி ... ஆகஸ். 1914.
இந்தியாவுக்கு மீண்டது ஜன. 1915.
சபர்மதி ஆச்சிரமத் தொடக்கம் ... மே. 1915.
மூன்றாவது வகுப்பில் இந்தியாவிலும் பர்மாவிலும் பிரயாணம் ... 1915—16.
பம்பாயில் நிலவரி விதியை நிறுத்த அறப்போர் ... ஜன. 1918.

'ரௌலட்' சட்டத்தை நீக்க அறப்போர் ... பிப்ர. 1919.
நாடு முழுதும் ஹார்த்தால்—கொந்தளிப்பு ... ஏப். 6, 1920.
தடையை மீறிப் பஞ்சாப் சென்றபோது சிறை ... ஏப். 1, 1921.
அமிர்தசரசில் ஜாலியன்வாலா படுகொலை ... ஏப். 13, 1919.
மூன்று நாள் விரதம் ... ஏப். 14, 1919.
அறப்போர் நீக்கம் ... ஏப். 18, 1919.
'நவஜீவன்', 'யங் இந்தியா' ஆசிரியர் .. 1919.
கிலாபத் பிரதிநிதித்துவம் இராஜப்பிரதிநிதியிடம்...ஜன. 1920.
நாகபுரி காங்கிரஸ் தீர்மானம், அமைதியால் சுயராஜ்யம்...1920.
பிறநாட்டுத் துணி ஒழிப்பு இயக்கம் ... ஜூலை 1921.
பர்டோலி சத்தியாக்கிரக இயக்க அறிவிப்பு ... பிப்ர. 1, 1922.
'சௌரி சௌரா' நிகழ்ச்சி, 5 நாட்கள் விரதம், சத்தியாக்கிரகத்தை நிறுத்தியது ... பிப்ர. 5, 1922.
அரசத்துரோகி என்று 6 ஆண்டுகள் சிறைத்தண்டனை ... மார்ச்சு 18, 1922.
இடையே விடுதலை ... பிப்ர. 5, 1924.
இந்து முஸ்லிம் ஒற்றுமைக்காக 21 நாள் உண்ணா நோன்பு... செப். 18, 1924.
பெல்காம் காங்கிரசின் தலைமை ... 1924.
அ. இ. நூல் நூற்போர் சங்கம் அமைத்தது .. செப். 1925.
ஆசிரமத்தில் நடந்த தீய செயல்களுக்காக விரதம்...நவ. 1925.
'சத்திய சோதனை' என்ற வரலாறு தொடங்கியது...நவ. 1925.
முழுவிடுதலை பெற லாகூர் காங்கிரசில் தீர்மானம் ... 1929.
ஒத்துழையாமை இயக்கம் ... பிப்ர. 1930.
உப்பு வரி எதிர்ப்பு ... மார்ச். 2, 1930.
தண்டி யாத்திரை ... மார்ச். 12, 1930.
விசாரணையின்றிச் சிறை ... மே 5, 1930; விடுதலை ... ஜன. 26, 1931.
காந்தி—இர்வின் உடன்பாடு ... மார்ச்சு 1931.
காங்கிரசின் பிரதிநிதியாக இங்கிலாந்து சென்றது ... ஆகஸ்டு 29, 1931.
இந்தியாவுக்கு மீண்டது ... டிசம். 28, 1931.
சிறையில் இறக்கும்வரை உண்ணாவிரதம் இருக்கத் தீர்மானித்தது ('ஹரிஜன்' தனித்தொகுதி நீக்கத்திற்காக)... செப். 20, 1932.
வேண்டுகோளின் நிறைவேற்றம், விரத முடிவு...செப். 26, 1932.
'ஹரிஜன்' வாரப் பத்திரிகையின் தொடக்கம்...பிப்ர. 11, 1933.
ஆத்ம சுத்தத்திற்காக 21 நாட்கள் விரதம் ... மே, 1933.
அரசியலிலிருந்து விலகியது ... செப். 17, 1934.

தமது முக்கிய வாழ்வகமாக சேவாக்கிராமத்தைத் தேர்ந்தது... எப்ர. 30, 1936.
அடிப்படைக் கல்வித் திட்டம் (வார்தா திட்டம்) ... அக். 22, [1937.
இராஜகோட்டையில் விரதம் ... மார்ச்சு, 1939.
போர்நிலையைக்குறித்து வைஸ்ராயைச் சந்தித்தது ...செப் 1940.
தனிப்பட்ட ஒத்துழையாமை இயக்கம் ... அக்டோ. 1940.
காங்கிரசிலிருந்து விலகியது ... டிசம். 30, 1941.
புது டில்லியில் சர். ஸ்டாபோர்டு கிரிப்ஸைச் சந்தித்தது ... மார்ச்சு 27, 1942.
ஆங்கிலேயரை இந்தியாவைவிட்டு வெளியேறுமாறு கேட்டது... மே, 1942.
பம்பாயில் அகில இந்திய காங்கிரசுப் பேரவையில் வெள்ளையர்களை இந்தியாவை விட்டு வெளியேற்றவேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது ... ஆகஸ். 8, 1942.
பூனு—ஆகாகான் மாளிகையில் சிறை ... ஆகஸ். 9, 1942.
சிறையில் 21 நாட்கள் விரதம் ... பிப்ர. 10, 1943.
ஆகாகான் மாளிகையில் கஸ்தூரிபாய் காந்தியின் மறைவு ... பிப்ர. 22, 1944.
அடிகளின் விடுதலை ... மே 6, 1944.
பாகிஸ்தான்பற்றி ஜின்னுவோடு பேச்சு ... செப். 9—27, 1944.
தமிழ்நாட்டுக்கு வந்தது ... ஜன. 21, 1946.
சென்னையில் பார்லிமெண்டரி தூதுக் குழுவைச் சந்தித்தது ... பிப்ர. 1946.
நவகாளி யாத்திரை ... அக். 1946.
அமைதியைப் பரப்பக் காந்தியும் ஜின்னுவும் கூட்டு முயற்சி ... எப்ரல் 16, 1947.
இந்து முஸ்லிம் ஒற்றுமைக்காக உண்ணு விரதம்...செப்.1, 1947.
73 மணி நேரம் கழித்து விரத முடிவு ... செப். 1947.
கால அளவு இல்லா விரத ஆரம்பம் ... ஜன. 13, 1948.
தலைவர்களின் ஒப்பந்தப்படி விரத முடிவு ... ஜன. 18, 1948.
வழிபாட்டுக் கூட்டத்தில் கோட்ஸேயின் குண்டுகளால் உயிர் நீத்தது ... ஜன. 30, 1948.